
# 10TH & 11TH THIRUMANDIRA MANATTU MALAR

JAN. 1964 & 65

# திருமந்திர மாநாட்டு மலர்



திருவாவடுதுறை ஆதீனம்

வெளியீடு எண் 184

உ

சிவமயம்

பத்தாவது

# திருமந்திர மாநாட்டு மலர்

[சுபகிருது - தை]

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

21 - வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகள் அவர்கள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம்

1964 - ஜனவரி] [சோபகிருது - மார்கழி

உ
சிவமயம்

# குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பதிப்புரை

ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகளின் திருவருள் துணைக் கொண்டு, அவர்கள் குருபூசைத் திருநாளாகிய மகரத்தலை நாளையொட்டி, வழக்கம்போல் சென்ற சுபகிருது ஆண்டிலும் பத்தாவது - திருமந்திர மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் சொற்பொழிவாளர்கள், தம் நீண்டநாள் அநுபவத்தைக்கொண்டு வேத ஆகம சாத்திர தோத்திர வரம்பிலேநின்று திரட்டிய பல கருத்துக்களை, மக்களனை வரும் புரிந்துகொள்ளத்தக்க எளிய இனிய நடையிலே பேசுகின்றார்கள். அக்கருத்துக்களை அனைவரும் கேட்டுத் தமது வாழ்க்கை அநுபவத்தோடு ஒட்டிப் பயன் எய்து கின்றார்கள். இந்த அநுபவத்தை மாநாட்டில் கலந்து கொள்ளாத ஏனையோரும் அடைந்து உய்யவேண்டும் என்ற கருணைநோக்காலும், ஆண்டுதோறும் எத்தகைய புதுமையான கருத்துக்கள் — சிவாநுபவச் செல்வங்கள் வெளிவந்துள்ளன என்று திருமந்திர ஆராய்ச்சியின் உணர்ச்சிப்பெருக்கை அறிந்துகொள்ளும் நோக்குடனும் வழக்கம்போல் மாநாட்டுச் சொற்பொழிவுகள் அனைத்தும் தொகுத்து, மலராக வெளியிடப்பெறுகின்றது.

சைவத் தமிழ் உலகம் இந்த வெளியீட்டைப் பெற்று, போற்றி மகிழுமாக.

சிவமயம்

## ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் தோத்திரம் :

இருதய நாப்பண் அஞ்செழுத் துருவின்
இறைவனை உயிர்க்கொலை செயாமை
அருள்பொறி அடக்கல் பொறைதவம் வாய்மை
அன்பு அறிவு என்னும் எண்மலர்கொண்டு
ஒருமையொடு அருச்சித்திடுக என்று அடியர்க்கு
ஒள்ளிய தீக்கைசெய்து உணர்த்தத்
திருஅமர் துறைசை உறையருள் குருவாம்
திருநமச்சி வாயர்தாள் போற்றி.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்


ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளுக்கு வணக்கம் கூறும் முறையில் ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகளால் பாடப்பெற்றது இச்செய்யுள். ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் திருவாவடுதுறை ஆதீனத்தை இன்றைக்குச் சுமார் ஐந்நூறு ஆண்டுகட்குமுன்னர்த்தோற்றுவித்த தெய்வீக அருளாளர் ஆவர். இவர்கள் கண்ட ஆதீனம், தென்னாட்டில் பலகோடி மக்களுடைய ஞானத்தையும் சமய உணர்ச்சியையும் நன்னெறியையும் நிலைபெறச்செய்வதற்கும் வளர்ப்பதற்கும் துணையாக இருந்துகொண்டிருக்கிறது. இவர்களால் கட்டளையிடப்பெற்ற நற்செயல்களும் இன்றுவரை நடைபெற்றுவருகின்றன.

நாட்டிலும் மக்கள் உள்ளத்திலும் எத்தனையோ மாறுபாடுகள் தோன்றினும், குருமூர்த்திகளுடைய கட்டளையும் திட்டமும் எள்ளளவும் மாறியன அல்ல. எடுத்துக்காட்டாகத் திருமடத்தின் திருமடைப்பள்ளியை மூர்த்திகள் அமைத்து, அதில் பொருத்திய நெருப்பு அணையாமல் நின்று என்றும் அடியவர்களுக்கு அமுதளிக்கவேண்டும் என அருளிய திருமொழி இன்றும் உண்மையாக இருந்துவருவது உலகம் அறிந்ததே. இந்த ஐந்நூறு ஆண்டுகளில் நிகழ்ந்த மாறுதல்களும், பஞ்சமும் எவ்வளவோ ஆயினும் இத்திருமடத்திலும் இதன் கிளைமடங்களிலும் இன்றுவரை பசிப்பிணி ஒன்று உண்டு என்பதை எவரும் அறியார். இத்திருமடம் எந்த நல்ல நோக்கங்களுடன் தோன்றியதோ அந்த நோக்கங்கள் இன்றும் இங்கே நிறைவேறிவருகின்றன.

ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள், சங்கரர் இராமாநுஜர் ஆகிய இவர்களுடன் வைத்து எண்ணக்கூடிய ஒரு பெரிய தத்துவஞானி ஆவார்; இந்தத் திருமடத்தின் தம்பிரான்களில் ஒருவரும் ஆவார்.




ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்



திருவாவடுதுறை ஸ்ரீ கோமுத்தீஸ்வரர் ஆலயம்

## தலச்சிறப்புக்கள் :

சிவபெருமானுடைய ஆணையால் பசுவடிவத்தைப்பெற்ற உமாதேவியார் இந்தத் தலத்துக்கு வந்து சிவபெருமானைப் பூசித்துப் பசுவடிவம் நீங்கப்பெற்றார். திருமூல நாயனார் மூவாயிரம் ஆண்டுகள் இத்தலத்திலே சிவயோகமிருந்து திருமந்திரமாலையை (மூவாயிரம் மந்திரங்களை) அருளிச்செய்தார். போகநாதசித்தருடைய மாணவராகிய திருமாளிகைத்தேவர், ஆசிரியருக்குத் தொண்டு செய்திருந்து அருள்பெற்றுச் சைவ ஸ்தாபனம் செய்து மேலும் பல அற்புதங்கள் செய்து விளங்கினார். தாம் தவஞ்செய்தமையினால் பிற்காலத்து நவகோடிசித்தபுரம் என வழங்கப்பெறும் இங்கு நவகோடி சித்தர்கள் சிவஞானம்பெறத் தவம் செய்தனர். சைவசமயாசாரியர்கள் நால்வருள் முதல்வரான ஆளுடையபிள்ளையார் தமது தந்தையார் யாகம் செய்யும்பொருட்டுத் தேவாரத்திருப் பதிகம்பாடி ஆயிரம்பொன் பெற்றனர். தமது கட்டளையின்படியே தேவர்கள் படரரசு மரங்களாக, சிவபெருமான் அம்மரநிழலில் எழுந்தருளினர். மகப்பேறுகருதி வந்து வழி பட்ட முசுகுந்தமன்னருக்கு இறைவன் இதனைத் திருவாரூராகவும், தம்மைத் தியாகேசப் பெருமானாகவும் காட்டிப் புத்திரப்பேறும் அளித்து, புத்திரத்தியாகர் என்னும் பெயருடன் வீற்றிருந்தருளினர். தருமதேவதை தம்மை வழிபட, பெருமான் அதனை இடபமாகக் கொண்டதன்றி, தம் சந்நிதியில் அரசமரநிழலில் கோயில்கொண்டிருக்கும்படி அதற்கு வரமும் தந்தார். தேவர்களும் முனிவர்களும் வேண்டிக்கொள்ள அந்த வேண்டுகோளை ஏற்றுப் போதியம்பலத்திலே சிவபெருமான் மகாதாண்டவம் புரிந்து அருளினர். சில முனிவர்களுக்குச் சிவஞானோபதேசம் செய்தருளினர். சில அந்தணர்களுக்கு வேதத்தை அருளிச்செய்தனர். போகநாத சித்தர் நவகோடி சித்தர் முதலிய சித்தர்கள் விரும்பிய வண்ணம் அவர்களுக்கு அட்டமாசித்திகளையும் பிறவற்றையும் அருளினர். இதுபோன்ற அற்புதங்கள் பல இத்தலத்திலே நிகழ்ந்தன. சித்தர்கள் பலர் இங்கே எப்போதும் வசிக்கின்றனர் என்ற ஐதிகமும் உண்டு.




திருவாவடுதுறை ஆதீன மடாலயம்

## நாட்டில் மடங்கள்:

அன்றுமுதல் நாள்தோறும் நாள்தோறும் அண்ணல்
அடியரள விறந்தபெயர் வந்தவர்கள் எல்லாம்
சென்றுறையத் திருமடங்கள் திருமடங்கள் தோறும்
திருவிளக்கு அங்கு அவர்சாத்த உள்ளுடை மேற்போர்வை
துன்றியசெந் நெலின்அடிசில் கன்னல்நறுங் கனிகள்
தூயஅறு சுவைக்கறிநெய் தயிர்திரண்ட பால்தேன்
நன்றுதிருப் பண்ணியந்தண் ணீரமுதம் அடைக்காய்
நரபதி ஏவலின் அமைச்சர் நாள்தோறும் நடத்த.

—ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் போற்றிவருகின்ற சித்தாந்த உண்மைகளை உலகினுக்கு உதவியருளிய சந்தானசாரியர்களுக்குள் நான்காமவராய் இன்றைக்கு அறுநூறு ஆண்டுகட்குமுன் எழுந்தருளியிருந்தவர் ஸ்ரீ உமாபதிசிவாசாரிய சுவாமிகள். பன்னிரண்டாம் நூற்றுண்டில் நிகழ்ந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் அருளிச்செய்த சேக்கிழார் புராணத்தில் உள்ளது இச்செய்யுள். சேக்கிழார் அருளிய பெரியபுராணம் சோழ அரசர்களின் உள்ளத்தை உருக்கிய காரணத்தால் சோழ அரசர்கள் சோழநாட்டில் பல திருமடங்களை நிறுவினுர்கள். அந்தத் திருமடங்களெல்லாம், தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற முனிவர்கள் தங்கும் இடங்களாக ஆயின. முனிவர்கள் தாங்கள் ஆராய்ந்துகண்ட உண்மைகளையெல்லாம், தமிழ்நாட்டிற்குத் தத்துவ சாத்திரங்களாகவும் சமயக்கோட்பாடுகளாகவும் வழங்கினுர்கள். அவைகளே, நாட்டில் அரசியல் மாறுதல்களும் அமைதி இன்மையும் ஏற்பட்டகாலத்து மக்கள் மக்களாக வாழ்வதற்குப் பெரிதும் உதவிபுரிந்தன.



திருமூலதேவர் உத்ஸவம்

கயிலாயத்து ஒரு சித்தராய் நந்திதேவர் திருவருளைப்பெற்ற சிவயோகி, தலயாத்திரையாகப் பொதியமலைநோக்கி வருகிறபோது, திருவாவடுதுறைக்கு வந்து பெருமானை வழிபட்டு அருகிலுள்ள சாத்தனூரை அடைந்தார். அங்கு இறந்துகிடந்த பசுமேய்ப்போனாகிய மூலன் என்னும் இடையனது உடலில் புகுந்து மூலராக எழுந்தார் என்பது வரலாறு. இப்படி மூலராக எழுந்தவுடன் எஜமான் இறந்த துக்கத்தால் கதறிய பசுக்கள், ஆனந்த மேலீட்டினால் மோந்தன; நக்கின; கனைத்தன; துள்ளிக் குதித்தன. எப்படி எப்படியோ சந்தோஷத்தைக் காட்டிக்கொண்டன. மூலராகிய சிவயோகியும் மகிழ்வோடு பசுக்களை மேய்த்தார். அவைகளைக் காவிரித்துறையிலே நீர் அருந்தச்செய்தார்; வெயில் நேரத்தில் நிழலுள்ள இடத்தில் தங்கச்செய்து பாதுகாத்தார். மாலைநேரம் வந்ததும் பசுக்கள் கன்றுகளை நினைத்துக்கொண்டே வீடுகளை நோக்கி நடந்தன. அவை தத்தம் வீடுகளை அடையும்வரை மூலரும் பின்னே தொடர்ந்து சென்றார். இப்படி மூலர் அன்று மேற்கொண்ட பசுப்பணியும் முடிந்தது.

இப்படியாக பசுப்பணி முடிந்தபிறகு, திருவாவடுதுறையில் அரசமரத்தின்கீழ் மூவாயிரம் ஆண்டுகள் யோகத்திலிருந்து, அருந்தமிழ் மூவாயிரம் அருளினார்; திருமூலதேவநாயனார் என்று சிறப்பிக்கப்பெற்றார். அருந்தமிழும் 'திருமந்திரம்' என்ற பெயருடன் திகழ்கிறது.

இத்தகைய மிகச்சிறப்போடுகூடிய திருமூலதேவநாயனாருக்கு, ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறுகிற மகோத்ஸவ இரண்டாந்திருநாளில், தனிச் சிறப்புச் செய்யப்பெறுகிறது. அன்றுகாலை திருவீதியுலாவில் பெருமானுடன் திருமூலதேவநாயனாரும் எழுந்தருளுகிறார். மூலர் மேற்கொண்ட பசுப்பணியின் நினைவாக அவருக்கு முன்பு ஒரு பசுமாடு கன்றுடன் கொண்டுசெல்லப்பெறுகிறது. திருவுலா முடிந்து ஆலயத்தை அடைந்ததும் சந்நிதியில் ஆதீன ஓதுவாமூர்த்திகளால் திருமூலர் வரலாறு படிக்கப்பெறுகிறது. உடனே கோபூஜை நடைபெறுகிறது. பிறகு தீபாராதனை தரிசனம். இப்படி நிகழ்கிற திருமூலர் உத்ஸவக்காட்சி இது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே.

திருச்சிற்றம்பலம்

—திருமூலர்.

# மலரின் மணம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே.

திருச்சிற்றம்பலம்

— திருமூலர்.

# மலரின் மணம்

உ

சிவமயம்

## திருவாவடுதுறை ஆதீனம்

# பத்தாவது திருமந்திர மாநாட்டு நிகழ்ச்சிகள்

திருத்தொண்டத்தொகையில் 'பிரான்' எனச் சிறப்பித்துப்பேசப்பெற்றவர்கள் இருவர். ஒருவர் 'எம்பிரான்'; அவர் திருஞானசம்பந்தர். மற்றொருவர் 'நம்பிரான்'; அவர்தான் திருமூலதேவர். திருத்தொண்டர்கள் வரிசையில் திருமூலதேவர் பின்னவராக எண்ணப்படினும் காலத்தால் எல்லாரினும் முற்பட்டவர். இவர் சிவனுவடுதண்டுறையில் சிவபோதி நீழலில் அரனடி நாடொறும் சிந்தைசெய்து சிவாகமங்களைச் செந்தமிழில் ஆக்கியவர். இச்செந்தமிழே பன்னிரு திருமுறைகளுள் பத்தாந்திருமுறையாகிய திருமந்திரமாக விளங்குகிறது.

திருமந்திரம் இருக்குமிடம் தெரியாமையால் இதை யாரும் அறிந்துகொள்ள முடியவில்லை. பல ஆண்டுகள் சென்றன. தலயாத்திரையாகத் திருவாவடுதுறைக்கு வந்த ஞானசம்பந்த சுவாமிகளுக்குத்தான் திருமந்திரம் இருக்குமிடம் தெரியவந்தது. ஸ்ரீ மாசிலாமணியீசர் பலிபீடத்தின் அருகில் வந்ததும் செந்தமிழ்மணம் வீசுவதை உணர்ந்தார்; பலிபீடத்தின் கீழ் மறைந்துகிடந்த மந்திரத்தை எடுத்து வெளிப்படுத்தினர். இந்த நிகழ்ச்சி ஏழாம் நூற்றுண்டில் நடந்ததாகப் பெரியோர் கூறுவர்.

இப்படித் திருமந்திரம் வெளிப்பட்டு ஒன்றிரண்டல்ல; சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குமேல் காலம் கடந்துவிட்டது. ஆயினும் இத்திருமந்திரத் திருமுறை வழிபாட்டுக்கு உரியதாக இருந்துவந்ததேயன்றி, திருமுறையுள் புகுந்து ஆராய்ந்து அறிந்து அநுபவித்துப் பிறரையும் அநுபவிக்கச்செய்வார் இதுவரையில் இவ்வுலகில் அரியராகவே இருந்துவந்தனர்.

'வளப்பில் கயிலை வழியில் வந்தேனே' என்று தன் வரலாற்றைச் சொல்லிக் கொள்ளுகிறுர் திருமூலர். ஆகவே அக்கயிலைபரம்பரையில் - மெய்கண்ட சந்தான உபதேசவழியில்வந்த அருட்குரவர் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள். இத்திருவாவடுதுறை ஆதீன ஆதிகுருமூர்த்திகள் அவர்களே. அவர்களுக்குப் பின்னே, இப்போது ஞான பீடத்தில் இருபத்தொராவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி, அருளாட்சி செலுத்தி வருகின்றவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள். இவர்கள் திருமந்திரத்தை அனைவரும் அறிந்து அநுபவித்து உய்யவேண்டும் என்ற திருவுள்ளம் கொண்டவர்கள். திருமந்திரம் நாடெங்கும் பரவப் பலவகையில் இவர்கள் பணி புரிந்து வருகின்றுர்கள் என்பதை இன்றைக்குச் சைவச்செந்தமிழுலகம் நேரில் கண்டு மகிழ்கிறது; திருமந்திரத்தைப் படித்து, நன்கு அறிந்து, அநுபவித்தும் வருகிறது.

திருமந்திரப்பணிகள் பலவற்றுள் மாநாடு நடத்துவதும் ஒன்றாகும். இம்மாநாடு ஆண்டுதோறும் மகரத்தலைநாட் குருபூஜைவிழாத் தொடக்கத்திலே முதல் மூன்று நாட்களிலும் நடத்தப்படுகிறது. அதுவும் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்பு நடந்துவருவது மிகமிகச் சிறப்புடையதொன்றாம். குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாணைவழிநின்று பேரறிஞர்கள் திருமந்திர அமுதத்தை அன்பர்கள் உளங்கொளள வாரி வழங்கி வருகிறார்கள். அந்தமுறையில் இவ்வாண்டு பதினொன்றாவது ஆண்டு திருமந்திர மாநாடு நடைபெறுகிறது.

பத்தாவது திருமந்திரமாநாடு சென்ற சுபகிருது ஆண்டு தைத்திங்கள் 9-ம் நாள் (22—1—1963) செவ்வாய்க்கிழமை தொடங்கி மூன்று நாட்களிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அடியார்கூட்டங் களுடன் எழுந்தருளியிருந்தார்கள். அன்பர்கள் பலரும் குழுமியிருந்தனர். ஆதீனத்துத் தேவார இசைப்புலவர்கள் திருமுறை ஓத மாநாடு தொடங்கியது.

பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் மாநாட்டுத் திறப்புரை நிகழ்த்தினார்கள். தொடக்கநாள் மதுரை திரு. V. சந்தானம் அவர்களும், இரண்டாம்நாள் சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார் அவர்களும், மூன்றாம்நாள் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் தலைமை வகித்துப் பேருரை நிகழ்த்தினார்கள். அவர்கள் எல்லோருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னாடைபோர்த்தி மலர்மாலைசூட்டி ஆசி அருளினார்கள், புலவர் பெருமக்கள் பலரும் குறித்த தலைப்புக்களில் நின்று, அவ்வத்தலைப்புக்களில் அடங்கியுள்ள திரு மந்திரப்பாடல்களின் கருத்தை விளக்கிப் பேசினார்கள்.

ஒன்பதாவது ஆண்டு திருமந்திரமாநாட்டுச் சொற்பொழிவுகள் அடங்கிய மலர், திருமந்திரக்கட்டுரை — மூன்றாந்தந்திரம் முதற்பகுதிக்குரியது. திருமந்திரம் ஐந்தாம் தந்திரம் உரை இம்மூன்றுவெளியீடுகளும் வழங்கப்பெற்றன.

*திருச்சிற்றம்பலம்.*

# தொடக்கநாள் பேருரைகள்

## திறப்புரை:

பேராசிரியர்

திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

அண்ணுமலைப்பல்கலைக்கழகம்.

நமது பெருமதிப்பிற்கு உரிய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு எனது வணக்கம் உரியதாகும்.

இப்பத்தாவது திருமந்திர மாநாட்டிற்குத் தலைமைதாங்க இருக்கும் அன்பிற்சிறந்த சந்தானம் அவர்களே! அவையில் குழுமி இருக்கும் பெரியோர்களே! இப்பத்தாவது திருமந்திர மாநாட்டினைத் தொடங்கிவைக்கும் பேறு எனக்குக் கிடைத்தது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இரண்டு ஆண்டுகளுக்குமுன், எட்டாவது திருமந்திர மாநாட்டினைத் தொடங்கி வைக்கும் பேறும் எனக்குக் கிடைத்தது; மீண்டும் இத்தகைய பெரும்பணி எனக்குக் கிடைத்திருப்பதற்குக் காரணம், நமது குருமகாசந்நிதானம் அவர்கள் என்பால் கொண்டிருக்கும் பேரருளே என்னலாம்.

ஒரு செயல் தொடங்கிப் பத்து ஆண்டுகள் ஆகும்பொழுது, அதனை ஒரு சிறப்பு விழாவாகக் கொண்டாடும் வழக்கம், நம் நாட்டில் சில இடங்களில் இருத்தலைக்காண்கின்றோம். அவ்வாறு இருந்தும், இந்தப் பத்தாவது மாநாட்டினை ஆரவாரம் இன்றி வழக்கம்போல் நிகழ்த்துவது, நம் குருமகாசந்நிதானம் அவர்கள், புகழை விரும்பாத செயல்வீரர் என்பதற்கு அறிகுறியாகும்.

திருமந்திரம், தமிழ்மொழியில் உள்ள ஞான நூல்களுள் முதன்மையானது; மிகப் பழமையானது; பன்னிரு திருமுறைகளுள் ஒன்று; அவற்றுள்ளும் காலத்தினுல் முற்பட்டது. இவ்வாறிருந்தும், சில ஆண்டுகளுக்கு முன்வரை இந்த நூலினைப் பலர் பயில்வதில்லை. காரணம், இதன்கண்உள்ள அரும் பொருள்கள் பலவும், மறைபொருள்கள் பலவும், பேரறிஞர்களாலும் தெளிவாக உணர்தற்கரியனவாய் இருத்தலேயாகும். ஆயினும், திருமந்திரமாநாடு தொடங்கப்பெற்று, இதுபற்றிய கட்டுரைகளும், உரைகளும், விளக்கங்களும் தோன்றத்தொடங்கிய நாள்முதல் திருமந்திரத்தினருமை பெருமைகளையும், அரிய பொருள்கள் சிலவற்றையும் ஓரளவு பலர் அறியத்தொடங்கினர் என்று கூறினுல், அது மிகையாகாது.

### அமைப்பு

இத்திருமந்திரத்தில் அமைந்துள்ள தந்திரங்கள் ஒன்பது. அதிகாரங்கள் இருநூற்று முப்பத்திரண்டு. செய்யுட்கள் மூவாயிரம். தந்திரம் என்பது பெரும்பிரிவு; அதிகாரம் என்பது சிறுபிரிவு; சிவாகமங்களின் உட்பிரிவுகளுள் சில, தந்திரம் எனப் பகுக்கப்பெற்றிருத்தல், இங்கு நினைத்தற்கு உரியது. இந்நூலின் செய்யுட்கள் யாவும் ஓரே வகையான யாப்பில் அமைந்தவை; இச்செய்யுட்களெல்லாம் கலி விருத்தம் என்பர். இச்செய்யுட்கள் பெரும்பாலும் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளன. இந்நூற் செய்யுட்களும், செய்யுட்களின் முறைவைப்பும் காலப்போக்கில் சிதைவு உற்றமையால், இந்நூற் செய்யுட்கள், இப்போது இடையிடையே அந்தாதித்தொடையின் தொடர்பு இல்லாதனவாகக் காணப்படுகின்றன.

இப்போது வெளிவந்திருக்கும் திருமந்திரப் பதிப்புக்களில், மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் உள்ளன. மேலும், உரை

ஆசிரியர்கள் பலரால், திருமந்திரம் என்ற பெயரால், எடுத்தாளப்பட்ட சில செய்யுட்கள், இம்மூவாயிரத்துள் காணப்படவில்லை. இவை, திருமந்திரப் பதிப்புக்களின் இறுதியில் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. திருமூலர் இயற்றிய பாடல்கள் மூவாயிரமே எனவும், மூவாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்கள் எல்லாம் பிற்காலத்தில் பிறரால் பாடப்பெற்று இடையிடையே சேர்க்கப்பட்டன எனவும் கருதுவோரும் உளர். இனி, திருமூலரே மூவாயிரத்திற்கு மேலும் சில பாடல்களை இயற்றிப் பேரெண்ணினால் பெயர் வைக்கும் முறைபற்றி, மூவாயிரம் எனப் பெயரிட்டிருக்கலாம் என்று எண்ணுதலும் பொருந்தும். இந்த இரண்டு கருத்துக்களும் ஆராய்தற்கு உரியன. இனி,

நவஆகமம் எங்கள் நந்தி பெற்றனே.

— திருமந்திரம், ஆகமச்சிறப்பு, 6.

எனவும்,

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே.

— திருமந்திரம், ஆகமச்சிறப்பு, 7.

எனவும், திருமந்திரத்தில் காணப்படுதலைக் கொண்டு, ஒன்றுமுதல் ஒன்பது இறுதியாக இந்நூலில் உள்ள தந்திரங்கள் ஒன்பதும் முறையே காரணாகமம் முதல் மகுடாகமம் இறுதியாக உள்ள ஒன்பது ஆகமங்களின் சாரமாகும் என்றும் கூறுவர். இது, ஆராய்தற்கு உரியது. காரணம் முதலாகச் சொல்லப்பட்டுள்ள ஒன்பது ஆகமங்களும் திருமந்திர ஆராய்ச்சியின் முடிவிற்கு இன்றியமையாதனவாகும்.

## சிறப்பு

வீடுபேற்றிற்குக் காரணமான மெய்யுணர்வினைப்பற்றிய தமிழ்நூல்களெல்லாம், இத்திருமந்திரத்தின் விளக்கமாய் இதன் பின்னர்த்தோன்றியனவேயாகும். அத்தமிழ் நூல்களின் உரைகள் பலவற்றிலும் மேற்கோளாக இத்திருமந்திரப் பாடல்கள் பல எடுத்துக் காட்டப்பட்டிருத்தல் இதற்கு ஒரு சான்றும். அவ்வாறு காட்டப்பட்ட நூல்கள்: சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், ஞானவர்ண விளக்கம், முத்திநிச்சயம், முத்திமுடிவு, சிவதருமோத்தரம், அவிரோத உந்தியார், கொலை மறுத்தல், வைராக்கிய தீபம், ஒழிவில் ஒடுக்கம், நிட்டானுபூதிசாரம், யாப்பருங்கலவிருத்தி, தக்கயாகப் பரணி, சிவப்பிரகாசப் பெருந்திரட்டு, குறுந்திரட்டு முதலாகப் பலவாம். எனவே, இத்திருமந்திரம், மேற்கோளாக எடுத்துக் காட்டுதற்குச் சிறந்த நூலாகப் பண்டை ஆசிரியர்களால், போற்றப்பட்டு வந்தமை தெளிவாம்.

அரிய கருத்துக்களையெல்லாம் எளிய நடையில் அமைத்து விளக்குவதில், இந்த நூல் தலைசிறந்தது. நூல் உணர்வால் அறிதற்கு அரிய நுண்ணிய உண்மைகளையும் திருமூலர், தம் தவயோக ஞான நிலைகளால் கண்டு கூறியுள்ளார்.

இத்திருமந்திரம், சாத்திரமாகவும், சரித்திரமாகவும், மிகச் சிறந்து விளங்குகிறது. இது, சாத்திரமாக விளங்குதலை, உபதேசம் இதோபதேசம், அத்துவாக்கள், ஆறந்தம், பதிபசுபாசம் வேறின்மை, மும்முத்தி முதலிய அதிகாரங்களிலும்; தோத்திரமாக விளங்குதலை, கடவுள்வாழ்த்து, தோத்திரம்முதலான அதிகாரங்களிலும்; சரித்திரமாக விளங்குதலை, குருபாரம்பரியம், திருமூலர் வரலாறு, அகத்தியம், இலிங்கபுராணம், பதிவலியில் வீரட்டம், தக்கன் வேள்வி, சக்கரப்பேறு, அடிமுடிதேடல் முதலிய அதிகாரங்களிலும் சிறப்பாகக் காணலாம்.

## நுதலிய பொருள்

பேரின்பத்தைத் துய்த்தற்குரிய வழிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய இந்த நான்கு நெறிகளே இந்நூல் நுதலிய பொருள் ஆகும் என்பர். இது,

'உள்ளுணர் வான ஞானம்
முதலிய ஒருநான்கு உண்மை
தெள்ளுதீந் தமிழால் கூறும்
திருமூலர்'

எனவும்,

ஊனுடம்பிற் பிறவிவிடந்
தீர்ந்துலகத் தோர்உய்ய
ஞானம்முதல் நான்குமலர்
நற்றிருமந் திரமாலை'

எனவும்,

" நலஞ்சிறந்த ஞானயோ
கக்கிரியா சரியையெலாம்
மலர்ந்தமொழித் திருமூலதேவர்

எனவும் சேக்கிழார் பெருமான் திருமூல நாயனார் புராணத்தில் எடுத்துக் கூறுதலால் நன்கு விளங்கும்.

திருமந்திரத்தில் அமைந்துள்ள இரு நூற்று முப்பத்திரண்டு அதிகாரங்களையும் நாம் உற்று நோக்கினால் அவை யாவும் ஞானம்முதலாக உள்ள நான்கு பிரிவுகளின் விரிவான விளக்கமே என்பது புலப்படும். இத்திருமந்திரத்தின் திரண்ட கருத்து, 'அன்பே சிவம்' என்பது, என்று ஆன்றோர் கூறுவர்.

## சித்தாந்த வேதாந்தம்

திருமூலர், சித்தாந்தமே வேதங்களின் முடிவு என்னும் கருத்துடையவர். இதற்குத் திருமந்திரத்தில் பல சான்றுகள் உள்ளன.

சித்தாந்த வேதாந்தம் செம்பொருள் ஆதலால்
சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே.

நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதமது என்பர் பெரியோர்க்கு அபேதமே.

ஒன்றான வேதாந்த சித்தாந்தம் உள்ளிட்டு.

—திருமந்திரம், ஆறந்தம், 25, 28, 31.

என்பன சில சான்றுகளாம்.

சித்தாந்தமே வேதாந்தம் என்னும்' இக்கொள்கைக்கு முதற்கண் மூலமாய் உள்ள இடம் இந்நூலேயாம். பின்னர்வந்த நூல்களில், இக்கொள்கை, அரும்பி அலர்ந்து தெய்வமணம் கமழ்தலைக் குமரகுருபரர், தாயுமான அடிகள் முதலியோர் திருப்பாடல்களில் காணலாம்.

'ஒரும்வே தாந்தம்என்ற உச்சியில் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரம் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே'

—பண்டார மும்மணிக்கோவை

என்பது குமரகுருபரர் வாக்கு.

'வேதாந்தம் சித்தாந்தம்
வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன
நலமே பராபரமே'

என்பது தாயுமானவர் கூற்றாகும்.

## மும்மைக்கும் பயன்தருவது

திருமூலதேவர், தம் திருமந்திர நூலில், உயிர்ப் பிணியையும், உடற் பிணியையும் போக்குதற்குக் காரணமாய் உள்ள யந்திர தந்திர மந்திர உபதேசங்களின் திறங்களையும் மணிமந்திர மருந்துகளின் இயல்புகளையும் குறிப்பிட்டுள்ளார்.

யாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை
நீவைத்துச் சேமி நினைந்தது தருமே.

—திருமந்திரம், புவனாபதிசக்கரம், 12.

மந்திரம் ஆவதும் மாமருந்து ஆவதும்
தந்திரம் ஆவதும் தானங்கள் ஆவதும்
சுந்தரம் ஆவதும் தூய்நெறி ஆவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே.

—திருமந்திரம், திருவடிப்பேறு, 15.

என்பன முதலியவற்றைப் பார்க்கும்போது, இத்திருமந்திரத் திருமுறையுள், யந்திரம் (சக்கரம்), தந்திரம் (கிரியை - செய்முறை), மந்திரம் (நினைத்து ஓதுதற்கு உரிய மறைமொழிகள்), மருந்து (இறப்பைப் போக்குவது) முதலிய இம்மை, மறுமை, வீடு ஆகிய மும்மை இன்பப்பேறுகளுக்கும் இன்றியமையாதனவாயுள்ள சிறந்த பொருள்கள் பலவும் பொதிந்திருத்தல் இனிது விளங்கும்.

இனி, மருந்துகளைப்பற்றித் திருமூலர் கூறியவைகளை எண்ணும்போது,

நூறு மிளகு நுகரும் சிவத்திநீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்கள்.

வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்.

— திருமந்திரம், அமுரிதாரணை 3, 6.

முதலிய பகுதிகள் நினைவிற்கு வருகின்றன.

அளக நன்னுத லாய்ஓர் அதிசயம்
களவு காயம் கலந்தஇந் நீரிலே
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளும் கபாலமே.

— திருமந்திரம், அமுரிதாரணை, 5.

என்னும் பாடல், யோகியர்க்கு உரிய பஞ்ச கற்பங்களை உணர்த்துகின்றது என்பர். பஞ்சகற்பம் என்பது ஐவகைப் பொருள் களால் ஆகிய மருந்து. மிளகு, நெல்லி, மஞ்சள், வேம்பு ஆகிய நான்கு பொருள் களே இந்தப் பாடலில் காணப்படுகின்றன. இவற்றுடன் கடுக்காயும் சேர்க்கப் பஞ்ச கற்பங்கள் ஆகும்.

அளக நன்னுத லாய்ஓர் அதிசயம்
களவு காயம் கலந்தஅந் நீரிலே
மிளகுமஞ் சள்கடு நெல்லியும் வேம்பிடில்
இளகும் காயம் இறுகும் கபாலமே'

என்னும் செய்யுள் ஒன்று, திருமூலர் திரு மந்திரம் கருக்கடை அறுநூற்றில் நூற்று அறுபதாம் செய்யுளாகக் காணப்படுகிறது. இதில் ஐந்து பொருள்களும் அமைந்துள் ளன. கடு=கடுக்காய். இந்நூலும் திருமூலர் வைத்தியம் ஆயிரம், திருமூலர் ஞானம் முப்பது, திருமூலர் உபதேசம் முப்பது, திருமூலர் மந்திரம் முந்நூறு முதலிய நூல் களும் திருமந்திரம் எண்ணாயிரத்தின் உட் பிரிவுகளாகும். "சாஸ்திரங்களில் சிறந்தது திருமூலர் தந்திரம்; இது மொத்தம் எண்ணா யிரம் பாடல் அடங்கியது; தோத்திரங்களில் சிறந்தது திருவாசகம்" என்னும் வடலூர் வள்ளலார் வாக்கும் ஈண்டுக் கருதத்தக்கது.

## முந்நூறும் மூவாயிரமும்

திருமூலரால் இயற்றப்பட்ட திருமந் திரம் முந்நூறு என்னும் நூல், வசியம் முதலான எண்வகைக் கருமங்களையும் விளக்கி, அவற்றிற்கு உரிய யந்திர மந்திர தந்திரங்களையும் எடுத்துக்கூறி, இவ்வுலக இன்பவாழ்விற்கு உரிய வழிகளைக் குறிப்பிடு வது. இது, திருமந்திரயாப்பே போன்று அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. இந்நூலிலும், திருமந்திர மூவாயிரத்திலும், ஒத்த பகுதிகள் பல உள்ளன. எடுத்துக் காட்டாகச் சிலவற்றைக் காண்போம்.

முந்நூறு

'இடும்பெயர் வசியம் மோகனம் தம்பனம்
அடும்பெயர் உச்சா டணம்ஆ கருணை
இடும்பெயர் ஏடணை பேதனம் மாரணம்
தொடும்பெயர் கன்மத்தில் சொல்லிய எட்டே

[மோகனம் – மயக்குதல். தம்பனம் – தடுத் தல். உச்சாடணம் – போக்குதல். ஆகருணை – அழைத்தல். ஏடணை – பகை உண்டாக்குதல்.]

மூவாயிரம்

கூடிய தம்பனம் மாரணம் வசியம்
மாடியல் பாக அமைந்து செறிந்திடும்
பாடியுள் ளாகப் பகைவரும் வந்துறூர்
தேடியுள் ளாகத் தெளிந்துகொள் வார்க்கே.

— திருமந்திரம், ஏரொளிச்சக்கரம், 33.

முந்நூறு

'உணர்ந்துகொண் டேன்உடல்
உள்நின்ற சத்தியைப்
புணர்ந்துகொண் டேன்சிவன்
புத்தியி னாலே.'

மூவாயிரம்

உணர்ந்துஒழிந் தேன்அவ
னும்எங்கள் ஈசனைப்
புணர்ந்துஒழிந் தேன்புவ
னபதி யாரை.

— திருமந்திரம், ஆதார ஆதேயம், 96.

முந்நூறு

'மந்திரம் தன்னை வகுத்தஇச் சக்கரம்
தந்திர மேகொண்டு சாத்தன்தன் கோயிலில்
வந்தார் அறியாமல் வைத்து.'

மூவாயிரம்

மந்திரம் சக்கரம் ஆனவை சொல்லிடில்
தந்திரத்து உள்எழுத்து ஒன்றுஎரி வட்டமாம்.

— திருமந்திரம், ஏரொளிச்சக்கரம், 27.

முந்நூறு

'உருவது வாக உரைத்தஇச் சக்கரம்
வரைவது பட்டோலை வான்செம்பு பொன்னே'

*மூவாயிரம்*

கண்டிடும் சக்கரம் வெள்ளிபொன் செம்பிடை
கொண்டிடும்.

— திருமந்திரம், நவாக்கரிசக்கரம் 5.

இவைபோலச் சொல்லும், சொற்றொடரும், பொருளும் ஓத்த பகுதிகள் மேலும் பற்பல உள்ளன.

திருமூலர் திருநந்திதேவரின் அருள் பெற்றவர்; அவரைப்பற்றி மூவாயிரத்தில் பல இடங்களில் கூறியுள்ளார். அவ்வாறே திருநந்திதேவரைப் பற்றிய செய்திகள், முந் நூற்றிலும், திருமூலர் பெயரால் வழங்கும் ஏனைய நூல்களிலும் காணப்படுகின்றன.

## திருமந்திரமும் திருக்குறளும்

மேலும், திருமந்திரத்திலுள்ள சொல், தொடர், பொருள் ஆகியவற்றில் சில, திருக் குறள் பகுதிகளுடன் ஒத்திருத்தல் குறிப் பிடத்தக்கது.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர்.

— நல்வழி 41

என்பது ஔவையார் வாக்கு. எடுத்துக் காட்டுக்களாகச் சிலவற்றைக் காண்போம்.

*திருமந்திரம்*

அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர்.

— அந்தணர் ஒழுக்கம், 11.

*திருக்குறள்*

அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வு
செந்தண்மை பூண்டொழுக லான். [யிர்க்கும்

*திருமந்திரம்*

காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்து
ஏமம் பிடித்திருந் தேனுக்கு.

முக்குற்றம், 2.

*திருக்குறள்*

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

*திருமந்திரம்*

பிறவா நெறிதந்த பேரரு ளாளன்
அறவாழி அந்தணன் ஆதிப் பராபரன்.

— திருவருள்வைப்பு, 12.

*திருக்குறள்*

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு
பிறவாழி நீந்தல் அரிது. [அல்லால்

என்பன காணலாம்.

## எளிமையில் அருமை

உலகியல் செய்திகளை எளிய நடையில் சொல்வதுபோலச் சொல்லி, அவைகளில் அரிய நுண்ணிய மெய்யுணர்வுக் கருத்துக் களை அமைக்கும் ஆற்றல், திருமூலருக்கு மிகச் சிறப்பாக உரியது. அத்தகைய பாடல் கள் சிலவற்றைக் காண்போம்.

ஆரியன் நல்லன் குதிரை இரண்டுஉள
வீசிப் பிடிக்கும் விரகுஅறி வார்இல்லை
கூரிய நாதன் குருவின் அருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந் தானே.

— திருமந்திரம், பிராணாயாமம், 2.

இத்திருப்பாடல், அடங்காத குதிரைகள் இரண்டனைக் குருவின் அருள்பெற்றால் அடக்கலாம் என்று பொருள்படுவதுபோல் தோன்றுகின்றது; ஆயினும், இடைகலை பிங்கலையாகிய மூச்சுக்காற்றுக்கள் இரண்ட னையும் குருவின் அருள்பெற்றால்அடக்கலாம் என்பது இதன் உட்கருத்து. மூச்சுக்காற் றினை அடக்குதல், நீண்ட நல்வாழ்விற்கு வழியாகும். ஆரியன் - ஆன்மா; குதிரை இரண்டு - இடைகலை, பிங்கலை ஆகிய இரண்டு மூச்சுக்காற்றுக்கள்; வீசிப்பிடிக்கும் விரகு - மூச்சுக்காற்றுக்கள் இரண்டனையும் வெளியேவிட்டு உள்ளேயிழுக்கும் உபாயம். இப்பாடல் யோக உறுப்புக்கள் எட்டனுள் ஒன்றாகிய பிராணாயாமம் பற்றியது.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துஉண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே.

— திருமந்திரம், சூனிய சம்பாஷணை, 18.

இப்பாடல், 'பார்ப்பனர் இல்லத்தில் பசுக்கள் ஐந்து உள்ளன; அவை, கட்டுக்கு அடங்காமல் திரிகின்றன; அவற்றை அடக்கினால் அந்தப் பசுக்கள் ஐந்தும் நிரம்பப் பால் சொரியும்' என்று பொருள் தருகிறது. இதன் உட்பொருள் இது அன்று; 'மக்களிடத்திலுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்துபொறிகளும் அவர்கட்கு அடங்காமல், அவை விரும்பியவாறு திரிகின்றன; அவற்றை அடக்கித் தம்வயப்படுத்தினால், அவை அனைத்தும் ஒருவழிப்பட்டு, பேரின்பப் பெருவாழ்வு பெறுதற்கு உதவியாகும்' என்பது இதன் உட்கருத்தாகும்.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதமே.

இப்பாடலின் முதல் இரண்டு அடிகள், *மரத்தினை யானை மறைத்தது; மரத்தினுள்* யானை மறைந்தது எனப் பொருள் தருகின்றது. இதன் உட்பொருள் இது அன்று; மரத்தால் ஆகிய யானையின் உருவத்தை நோக்கி, இது யானை என்றெண்ணுமிடத்து மரத்தின் தன்மை மறைந்துவிடும்; அவ்வாறின்றி இது மரம் என்று எண்ணுமிடத்து யானையின் தன்மை மறைந்துவிடும் என்பது இதன் உட்கருத்து. இது, இப்பாடலின் பின் இரண்டு அடிகளில் உள்ள மெய்ப்பொருட் கருத்தினை விளக்குதற்கு எடுத்துக்காட்டப் பெற்ற உவமையாகும். எங்கும் நிறைந்து உள்ள பரம்பொருளை நிலம் முதலாயுள்ள ஐம்பெரும் பூதங்களும் மறைத்துள்ளன. அவற்றைப் பூதவடிவங்களாக நோக்கும் போது பரம்பொருள் தோன்றுது; அவற்றைப் பரம்பொருளின் வடிவமாகக் காணும் போது அப்பூதங்களின் வடிவங்கள் தோன்றுது என்பது பின் இரண்டு அடிகளின் கருத்து ஆகும். பரம்-பரம்பொருள்-இறைவன்; பார்முதற்பூதங்கள் - நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பெரும் பூதங்கள்.

இத்தகைய வியப்பளிக்கும் பாடல்கள் இந்நூலில் பல உள்ளன.

## முடிப்புரை

இத்திருமந்திரப்பாடல்களின் உண்மைக் கருத்து அறிந்து ஓதுவோர், இறைவன் திருவருளைப் பெறுவர் என்று திருமூலர் கூறியுள்ளார். இதனை,

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே.

— திருமந்திரத்தொகைச்சிறப்பு, 1.

என்னும் பாடலால் அறியலாம். சித்தாந்த தர்சனம் என்னும் நூலிலும்,

திருமூலர் மாலையெனும் தெப்பத்தைப் பற்றிக்
கருவேலை யைக்கடப்போம் காண்.

என்னும் பகுதியில், பிறவிப் பெருங்கடல் நீந்துதற்கு இந்நூல் துணையாகுமென்னும் கருத்து அமைந்திருத்தலை நாம் காணலாம். பிறவிப் பிணி அறுத்து, இறைவன் திருவடி சேர்தற்கு உரிய நல்வழி கூறும் இப்பெரு நூலினை எல்லோரும் கற்று உணர்ந்து, பயன் பெறுதல் வேண்டுமெனக் கூறி, இம்மாநாட்டினை மகிழ்ச்சியுடன் தொடங்கி வைக்கிறேன்.

**தலைமையுரை:**

## திரு. V. சந்தானம் அவர்கள்,

பொறுப்பாசிரியர் 'தினமணி' மதுரை.

எங்கோ ஓரு மூலையில் கிடந்த என்னை இங்கே வரவழைத்து ஆசீர்வதித்த மகா சந்நிதானம் அவர்களுடைய திருவடிகளுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த இடமாகிய திருவாவடுதுறையை மிதிப்பது, இதைப்பற்றிக் கேள்விப்படுவது பெரிய புண்ணியம் என்று கருதுகின்றவன் நான். பத்திரிகைக்காரர்கள் இதிலெல்லாம் சிறிதும் விருப்பம் கொள்ளமாட்டார்கள். இதைப்பற்றி பத்து வருஷங்களுக்கு முன்பு பத்திரிகைக்காரர்களாகிய எங்களுக்குள்ளே தர்க்கம் நடக்கும். அப்போதே மத சம்பந்த மான செய்திகளையும் பத்திரிகையில் போட வேண்டும் என்பது என்னுடைய பேராசை.

மாதம் முப்பது நாட்களில் ஒவ்வொரு நாளும் எல்லாப் பத்திரிகைகளிலும் அரசியல், பொருளாதாரம், காதல் இவைபோன்ற செய்திகளுக்கு இடமளிப்பதைவிட, மாதத்தில் ஒரு நாளைக்கு ஒரு பத்தியிலாவது சிவனைப்பற்றியும், நாராயணனைப் பற்றியும் எழுதுவதற்கு இடம் இருக்கக்கூடாதா? உலகத்தில் கடவுள் எல்லாவற்றையும் எப்படிச் சகித்துக்கொள்கிருரோ, அதேமாதிரி இதுவும் இருக்கட்டுமே என்று சொல்லி அனுமதியும் வாங்கினேன்.

மதிப்பிற்கு உரிய திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள், இப்போது 'விளம்பரம் கூடாது, பிரசாரத்திற்கெல்லாம் நாங்கள் ஆசைப்படவில்லை' என்று சொன்னர்கள்.

முற்றிலும் வாஸ்தவம். சுயவிளம்பரம் கூடாதுதான். 'நான் பெரியவன்' 'நான் மகாஅறிவாளி' என்று சொல்லிக்கொள்வது போன்ற அப்பட்டமான பிரசாரம் கூடாது தான். அப்படிப் பிரசாரம் செய்யும்போது 'கெட்டிக்காரனுடைய புளுகு எட்டுநாளில் வெளிப்படும்' என்பது போல உண்மை வெளிப்படுகின்றபொழுது அதை யாரும் ரசிக்கவும் மாட்டார்கள்.

ஆனல் கண்டிப்பாகப் பிரசாரம் செய்ய வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. அது திருமூலர் ஆணை. அவர் 'ஓதுமின்' என்றும் 'கேண்மின்' என்றும் உலகத்தாரைநோக்கிச் சொல்லுகின்ற உண்மைகளை இங்கேயுள்ள புலவர் பெருமக்கள் அறிவார்கள். 'கேண்மின்' என்று சொல்லியிருப்பதால் ஓதுபவர்களும் இருக்கவேண்டும்; கேட்பவர்களும் இருக்கவேண்டும். கேட்கவேண்டும் என்றதனுல் சொல்பவர்களும் பலராக முன்வர வேண்டும். ஆகவே என்றும் மாருத உண்மைகளை எடுத்து நம் மக்களுக்குச் சொல்ல வேண்டியது - பிரசாரம் செய்யவேண்டியது நம்முடைய கடமை என்பதைத் திருமூலர் சொல்லியிருக்கிருர்.

அப்படிப்பட்ட சிறப்பான நற்பணியில் இந்த ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள் ஈடுபட்டிருப்பது நம்முடைய பெரும் பாக்கியமாகும். நம்மில் பலருக்கு அவர்கள் என்ன என்ன காரியங்களைச் சாதித்திருக்கிருர்கள் என்றே தெரியவராது. அதுவும் இவ்விடத்தைச் சுற்றி இருப்பவர்களுக்கு எல்லா விஷயங்களுமே சகஜமாகப் போய் விட்டதனுலே மிகச்சிறப்பான காரியங்களின் பெருமையை உணரமுடிவதில்லை. ஆனல் பல மைல் தொலைவில் இருப்பவர்களுக்கு இம்மாதிரி காரியங்களின் முக்கியத்துவம் என்ன என்பது தெரியும்.

குறிப்பாக எண்ணுயிரம்ஆண்டுகளுக்கு முன்பே இவ்வுலகத்திற்கு எது தேவையோ, இந்த உலகத்திற்கு எது நெறியோ, எது மதமோ அதைத் திருமூலர்அருளிச்செய்தார். நண்பர் கோபாலையர் போன்றவர்களுக்கு இது தெரியும். இவ்வுலகத்தவர்கள் பிரம்ம

மூர்த்தத்தில் எழுந்து ஜெபம் செய்யவேண்டும், ஜெப மாலைகளை உருட்டவேண்டும் என்று இந்தியாவிலிருந்து சென்ற மாக்ஸ் முல்லர் எழுதிவைத்திருக்கிறார்.

கடவுளை வழிபட எது வழி? எது மார்க்கம்? என்று முறையாக சாஸ்திரீகமாகச் சொல்லுகிற சைவசித்தாந்தம் தமிழ் நாட்டின் தனிச்சொத்து. அல்லது சைவத்தின் தனிச்சொத்து. இப்பேர்ப்பட்ட விஷயத்தை நாம் பிரசாரம் செய்யவேண்டும் என்ற கருணை குருமகா சந்நிதானத்திற்கு உண்டாயிற்று என்றால் அந்தக் கருணைக்கு நாம் என்ன ஈடு செய்யமுடியும்?

மலத்திலிருந்த புழு, ஏ, கடவுளே! நீ என்ன மகாப் பெரிய மனுஷனா? என்னை எங்கே போட்டிருக்கின்றாய்? பார்!' என்று சொன்னபோதிலும், அதற்கு அடுத்த ஜன்மத்திற்கு வேண்டிய அருள், அதற்கு இந்த ஜன்மத்திற்கு வேண்டிய ஆகாரம் அத்தனையும் கொடுக்கின்றாரே, அந்தக் கடவுளின் கருணைக்கு ஈடு இந்த உலகத்தில் என்ன இருக்கிறது! என்று காந்திஜி சொல்வார்.

அதேமாதிரி, புல்லாகிப் பூடாகிப் பின் புழுவாகிப் பலப்பல ஜன்மங்கள் எடுத்து வருகின்ற நம்மைக் காப்பாற்றி வருகின்ற கடவுளுக்கு நாம் செய்யவேண்டியது என்ன இருக்கிறது? அவருடைய பெருமையைச் சொல்லிச்சொல்லி நம்மை உயர்த்திக்கொள்வதும், அவர் புகழைப் பிறரும் கேட்கும்படியாகச் செய்து மற்றவர்களையும் உயர்த்துவதுமே நம்முடைய கடமையாகும்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற குறிக்கோளுடன் உண்மை நெறியினை இவ்வுலகுக்கு எடுத்துக்காட்டப் பிறந்ததுதான் திருமந்திரம். உலகமுய்யப் பிரசாரம் செய்வதற்கே திருமூலர் அவதாரம் செய்தார்.

திருமூலர் அவதாரத்தைப் பற்றிப் பலர் பலவிதமாகக் கொள்ளலாம். அவர் எப்படி,

> என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே

என்று சொன்னாரோ, அப்படியேதான், அவருடைய அவதாரம் உலகம் உய்வதற்காக ஏற்பட்டது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இந்த உலகத்தில் கடவுளின் கருணையால்தான் நாம் எல்லோரும் வாழ்கின்றோம்; இந்த மனித ஜன்மம் எடுத்திருக்கின்றோம். இதற்கு அடுத்த ஜன்மமும் உயர்ந்தஜன்மந்தான்; அல்லது மரணமில்லாப் பெருவாழ்வுதான். அதற்காகவே கருணையின் பிம்பமாகத் திருமூலர் அவதரித்தார். இல்லாவிட்டால், அகத்தியரைக் காணச் சென்ற முனிவர் எதற்காக இடையன் உடலில் புக வேண்டும்? அதுவும் மகத்தான கருணை! அக்கடவுளின் கருணைக்கு ஈடு, கடவுளின் கருணைதான் என்று சொல்லலாம்.

நம் கடவுளைப்பற்றி நமக்கு ஏதாவது தெரிந்தால் நாம் ஏதாவது உணர்ந்தால், அது கருணைதான். வேறு ஒன்றும் இருக்க முடியாது. கடவுள் அவதாரம் எடுப்பதே கருணைக்காக. வேறு எதற்காகவும் அல்ல. கடவுள் அசுரனை அழிப்பதற்கு அவதாரம் எடுத்தார் என்றால் அதற்குக் காரணம் நல்லவர்களைக் காப்பாற்றவேண்டும் என்ற கருணையாகத்தான் இருக்கவேண்டும். அருளாகத்தான் இருக்க முடியும். வேறு ஏதாகவும் இருக்க முடியாது. இறைவனுடைய திருவருளை உலக மக்களிடத்தில் பாய்ச்ச வேண்டும் என்ற கருணையால் பிறந்தவர் திருமூலர். அந்தக் கருணைக்கு நாம் செய்ய வேண்டியதொரு கடமை திருமந்திரத்தைப் பிரசாரம் செய்யவேண்டியதுதான்.

எத்தனையோ ஆண்டுகளாக அமுங்கிக் கிடந்த இந்தத் திருமந்திர நூலை ஏழாவது நூற்றாண்டில் திருஞான சம்பந்தர் கண்டுபிடித்தார். அதற்குப் பிறகு குருமகாசந்நிதானம் அவர்கள் மாநாடு நடத்திச் சிறப்பித்து வருகின்றார்கள். மற்றும் பல அரிய காரியங்களையும் செய்து வருகின்றார்கள்.

குருமகாசந்நிதானம் அவர்களுடைய பெருமை அவர்களுக்கே தெரியாது. இந்த ஆதீனத்தின் பெருமையெல்லாம் இங்கு

இருப்பவர்களுக்குத் தெரியாது. எவ்வளவு பணியை அவர்கள் செய்துகொண்டு வருகிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும் என்பதற்கு ஒன்று இரண்டு ஆதாரங்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இப்போது தமிழ்நாடுதான் எல்லாம் கண்டுபிடித்தது, தமிழிலேயே சகலமும் இருக்கிறது என்று நான் சொல்ல ஆரம்பித்தால் 'இது என்ன தமிழனுக்கு இப்படிச் சொல்லுவதே ஒரு வியாதியாய்ப் போய் விட்டது' என்று சிலர் நினைக்கலாம். தன்னைப் பற்றியும் தன் பாஷையைப் பற்றியும் பெருமைப்பட்டு, இங்கேதான் எல்லாம் இருக்கிறது என்று சொல்லிக்கொள்வதே பழக்கமாய்ப் போய்விட்டது என்று நினைக்கலாம். நம்மிலேயே கூட சிலருக்கு அப்படிப் பட்ட சந்தேகம் வரலாம். சமீபத்தில் இராமகிருஷ்ணர் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. அப்போது, "Culture and Heritage of India" என்று மூன்று பகுதிகள் வெளியிட்டிருக்கிறார்கள்.

அதில் இரண்டாவது பகுதியில் விஸ்வபாரதியில் ஆராய்ச்சி இலாகாவில் இருந்த ஒரு வங்காளி, 'இந்த உலகத்திற்கு இங்கேதான் எல்லா மார்க்கங்களுக்கும் வித்தினை இட்டோம்' என்று சொல்லுவதற்கு அவர் The Mystic saints of Northern India என்று எழுதியிருக்கிறார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே வடக்கே உள்ளவர்களுக்குச் சாமி எப்படிக் கும்பிடுவது என்பது தெரியாது. தவம் செய்யவும் தெரியாது. கடவுளைக் காண வேண்டும் என்பதற்காகப் பல குரூரமான வழிகளையெல்லாம் கையாண்டு, கடைசியில் கடவுளைக்காணாது நொந்துபோன அந்தக் காலத்தில், சுவாமி ராமானந்தா என்பவர் தென்னிந்தியாவுக்கு வந்தார். அவர் தென்னிந்தியாவுக்கு வந்தகாலம் நாயன்மார்கள், ஆழ்வார்கள், இராமானுஜர் ஆகிய இவர்களெல்லாம் மிகவும் பிரமாதமாகப் பிரசாரம் செய்த காலம்; கடவுளிடம் பேசின காலம். அப்போது கடவுளை அடைவது இவ்வளவு எளிமையா? இவ்வளவு சுலபமா? என்று நினைக்கும்படியாக இருந்தது ராமானந்தர் வந்த காலம். முஸ்லீம்கள் படையெடுப்பு; கிறிஸ்தவர்கள் படையெடுப்பு; அதனாலே நமக்கு மதம் உண்டா? நாம் ஹிந்துவா? நாம் சைவரா? என்பதில் நமக்கே குழப்பம் ஏற்பட்டு, 'மதமே வேண்டாம்' என்று நினைத்த நிலையிலே சில மகாத்துமாக்கள் நம்முடைய ஹிந்துமதம் தழைக்கவேண்டும், கடவுள் பக்தியும் தழைக்கவேண்டும் என்று கசிந்து மனமுருகியதற்காக இராமானந்தர் தென்னிந்தியாவுக்கு வந்து இந்த அற்புதமான பக்தியோகத்தைக் கண்டார். கண்டு 'பக்தியோகம் என்பது திராவிட நாட்டிலிருந்து முதலிலே வந்தது, ஈரேழு லோகத்திற்கும் பரவியது' என்று பாடிவிட்டார் சர்வசகஜமாக. அவ்வளவு தூரம் அவரைக் கவர்ந்துவிட்டது நம் தமிழகத்து நாயன்மார்கள் ஆழ்வார்களின் வாழ்வு.

இராமானந்தரினுடைய நோக்கமென்ன? முஸ்லீம் மதஸ்தர்கள் வந்து சில கோட்பாடுகளைப் பரப்பினார்கள்; கிறிஸ்தவ மதஸ்தர்கள் வந்து சில கோட்பாடுகளைப் பரப்பினார்கள். அங்கே சகோதரத்துவம் இருக்கிறது. பல தெய்வங்கள் இல்லை. இதெல்லாம் வாஸ்தவமா? இவ்வளவு தெய்வங்கள் இருக்குமா? என்று சிந்தித்து, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பதை ஸ்தாபிக்க ஏதாவது ஒரு ஆதாரமிருக்கிறதா என்று நாடிக்கொண்டு தெற்கே வந்தார். தெற்கேவந்த அவர் இப் பக்திமார்க்கத்தைப் பார்த்து, ஆகா! இது அல்லவா மார்க்கம்! என்று சொல்லி வியப்படைந்தார்.

அதற்குப் பின்புதான் மீராபாய், ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகாநந்தர் முதலியவர்களும் தோன்றினார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் இடத்து, அவர்களைத் தமிழ்நாட்டிலிருந்து போன வித்தில் மலர்ந்த புஷ்பங்கள் என்று சொல்லலாம். வட இந்தியாவில் அத்தனை மகாத்மாக்களும், மகாபுருஷர்களுந்தோன்றினார்கள். சங்கீதத்தின் மூலமாகவும், கடவுளுக்குத் தொண்டு செய்வதன் மூலமாகவும், துதி பாடுவதன் மூலமாகவும் தேகத்தோடு

ஐக்கியமான மகாத்மாக்கள் அங்கும் இருக்கின்றார்கள். அங்கே துக்காராம், இங்கே ஞானசம்பந்தர்; இப்படிப் பல மகான்கள். நாட்டிலுள்ள பக்திமார்க்கம் அத்தனைக்கும் அஸ்திவாரம் போட்டவர் திருமூலதேவர் என்று இராமநாதன் செட்டியார் அவர்கள் மிகவும் அருமையாகச் சொன்னார்கள்.

இன்றைன்று கூட அவர் துணிவாகச் சொன்னார். அதையும் அவராகச் சொல்லவில்லை. தேசத்தினுடைய ஆசாரம், சூழ்நிலை ஏற்பட்டு அவர் சொன்னார்.

அந்தந்தப் பிரதேசபாஷையில் சொல்ல வேண்டும் என்பது அவருடைய கருத்து. ஹிந்தி தெரிந்தவர்களுக்கு ஹிந்தியிலும், தெலுங்கு தெரிந்தவர்கட்குத் தெலுங்கிலும் தமிழ் தெரிந்தவர்களுக்குத் தமிழிலும் பக்தி மார்க்கத்தைப் பரப்பவேண்டும் என்ற ஒரு முறையில் அடிப்படையான மார்க்கங்களைப் பரவச் செய்தார்.

திருமூலர் இடையன் உடலில் புகுந்ததற்கு நான் ஒரு வேடிக்கையான வியாக்கியானம் சொல்வது உண்டு. அப்படித்தான் இருக்கவேண்டும் என்றும் நான் சில சமயம் எண்ணும்படியாகவும் இருக்கிறது. இந்த மாகாணத்தில் நூற்றுக்கு இருபது சதவிகிதத்தினர்தான் படித்தவர்கள். அவர்களில், சொன்னால் புரிந்துகொள்ளக் கூடியவர்கள் ஐந்து சதவிகிதத்தினர்; சொன்னால் புரிந்து கொண்டாலும் தம் செயலில் கொண்டுவரக் கூடியவர்கள் நூற்றுக்கு ஒருவர் வீதந்தான் இருப்பார்கள். பாக்கியுள்ள எண்பது சதவிகிதத்தினர் என்ன செய்வார்கள்? என்ற ஒரு மகத்தான கேள்வி போட்டுக்கொண்டு, அந்தக் கருணையினாலேதான் இராமானுஜர் கோபுரத்தின் மீது ஏறி 'என் ஒருவனுக்கு நரகம் வந்தாலும் பரவாயில்லை, இங்குள்ள அத்தனை ஜனங்களும் மோட்சமடையட்டும்' என்று குரு மந்திரத்தை உபதேசித்தார்.

உலகம் இயங்குதற்கு உலகத்திலுள்ள சகல தத்துவங்களும் உலகில் எங்கோ ஓர் மூலையில் இருக்கும் கடைசி பாமரனுக்கும் போய்ச் சேருதல்வேண்டும் என்பதற்குக் கருணைதான் அடிப்படை. அதைத் திருமூலர் இடையன் உடலில் புகுந்து, எளிய நடையில், எளிய பாஷையில் அருளியிருக்கிறார். திருமந்திரம் எளிய நடையாக இருந்தாலும், ஆராய்ச்சியாளர்கள் எத்தனை ஜன்மங்கள் ஆராய்ச்சி செய்தாலும், புதுப்புது உண்மைகள் புலனாகிக் கொண்டே இருக்கும். இப்படிக் கடைசி மனிதன் வரையிலும் கடவுளின் அருட்சக்தி பாயவேண்டுமென்ற பெரும் கருணையால் இடையனது உடலில் திருமூலர் புகுந்தார் என்று நான்சொல்வது உண்டு. மிக அருமையான, பெருமையான திருமந்திர நூலைப் பரப்பவேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

மதிப்பிற்குரிய திரு. கோபாலையர் அவர்கள் ஒரு மாநாட்டில் பேசுகையில் சரஸ்வதி மஹாலிலுள்ள பல புத்தகங்களில் ஆயுதங்களைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதை ஒருவரும் எழுதக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். கந்த புராணத்திலும் ஆயுதங்களைப்பற்றி வருகின்றன. அம்மாதிரி ஆயுதங்களையெல்லாம் பிரயோகித்து, அசுரர் யுத்தம்செய்தும் அது பிரயோஜனம் இல்லை. மரணமில்லாப் பெருவாழ்வுக்கு அது வகை செய்யவில்லை, வழி இல்லை என்று சொல்லிக் கைவிட்டு, கடைசியில் ஒரு வழி கண்டுபிடித்தார்கள். நிம்மதியான வழி, சாந்திக்கு வழி. கோரமான ஆயுதங்களினால் பிரயோஜனமில்லை, சாரம் இல்லை; சாரமான வழி இந்தியாவில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

பிரும்மஞான சங்கத்தார் நமது மதத்திற்குச் செய்த சேவை போல வேறு எவருமே செய்யவில்லை. அமெரிக்கர் ஒருவர். அவர் பம்பாயில் வந்து இறங்கினவுடனே, இந்நாட்டின் மண்ணை முத்தமிட்டார். காரணம், இந்தியாவில்மட்டுமல்லாமல் உலகத்திலுள்ள ஜீவன்கள் எல்லாம் மோட்சம் அடையவேண்டுமென்றால், அதுவே கடைசி ஜன்மாவும் ஆக வேண்டுமென்றால் - மரணமில்லாப் பெருவாழ்வு அடையவேண்டும் என்றால், இந்தியாவிலே ஜன்மம் எடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்குத் தமிழ்நாடு வித்து போட்டிருக்கிறது. அது திருமூலர் போட்ட அஸ்திவாரம் என்பதை

மறுப்பதற்கில்லை. அப்படிப்பட்ட திருமந்திர மாநாடு இங்கே நடைபெறுகிறது.

'சைவ சித்தாந்தம்' என்று சொல்கிறோம் 'சைவம்' என்கிற 'லேபிள்' போட்டுக் கொண்டு, அது ஏதோ தனிப்பட்ட நெறி என்றும், குறிப்பிட்டவர்களுக்கு உரிய ஒரு நெறி என்றும்சொல்லி, சிலர் குழப்பிக்கொள்கிறார்கள். 'சைவ சித்தாந்தம்' என்பதில் உள்ள 'சைவம்' என்பதை ஒருபுறம்வைத்து விட்டுச், 'சித்தாந்தம்' என்று வைத்துக் கொண்டு பார்ப்போம். அன்பே கடவுள் என்பதுதான் சித்தாந்தம். இதையேதான் ரிஷிகளும், சகல மத ஆராய்ச்சியாளர்களும் கடைசியில் கண்டுபிடித்துள்ளனர். 'அன்பே கடவுள்', 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' இதெல்லாம் சித்தாந்தங்கள். ஆதி சங்கரர் ஸ்தாபித்த அத்வைத சித்தாந்தத்தை இப்பொழுது அவரே வந்து எதிர்த்து வாதித்தாலுங்கூட, அந்த அத்வைதத்தை அழிக்க முடியாது.

எல்லா ஜீவன்களும் சிவமாக நடமாடுகின்றன என்ற பெருமையான ஞானத்தை 8000 வருஷங்களுக்கு முன்னால், அருமையான பாடல்களாகத் திருமூலர் சொல்லியிருக்கிறார். அதை மூலைக்கு மூலை பரப்ப வேண்டியது கற்றவர்கள் கடமை. அதனை இந்த ஆதீனந்தான் செய்ய முடியும். இந்த ஆதீனத்தின் பெருமையை எவ்வளவு புகழ்தாலும் போதாது. தமிழகம் மிகப் பெருமை வாய்ந்தது. பழந்தமிழர் நாம், வீரத் தமிழர் நாம் என்று சொல்லிக் கொள்ளுகிறோம். அதற்கெல்லாம் காரணம் இந்த ஆதீனத்திலிருந்து. புகழ் பெற்ற மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், மகாமகோபாத்யாய டாக்டர் சுவாமிநாதையர் போன்றவர்கள் எல்லாரும் செய்திருக்கும் படியான பலவித ஆராய்ச்சிகள்தாம். இந்த ஆதீனம் எல்லாத் துறைகளுக்கும் சிறந்த அறிஞர்களை வழங்கி இருக்கிறது. நான் சிறிய வயதினனாக இருந்த காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தில் நாதசுர வித்துவானாக இருந்த இராஜரத்தினம் பிள்ளை அவர்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். அவரைத் தமிழகத்துக்கு நல்கியது திருவாவடுதுறை ஆதீனந்தான்.

இன்றைய தினம் திருமந்திர நூலில் ஆராய்ச்சி செய்ய மும்மணிகள் இருக்கிறார்கள். உலகத்திலுள்ள மகா மேதைகள் அத்தனைபேருக்கும் சவாலாக இருக்கிறது இந்தத் திருமந்திர நூல். இந்த நூலைக் கற்றுக்கொள்ள ஒருவன் முன்வரும்போது, கற்றுக்கொள்ள வேண்டியது இன்னும் எத்தனை இருக்கின்றன என்று வியப்படைய வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட இந்த ஒரு அருமையான நூலினுள்புகுந்து ஆராய்ச்சி செய்பவர் தீரராகத்தான் இருக்கவேண்டும். அவர்தான் உலகத்திலேயே தீரராக இருக்க முடியும். பாக்கி எல்லோரும் அவருக்குப் பிறகுதான். ஆனால் அணுகியிருக்கிறார்கள். கரையில் நின்றுகொண்டே நீந்தக் கற்றுக் கொள்ளமுடியாது. 'கற்றுக்கொள்கிறேன்' என்று நீரில் எவன் ஒருவன் துணிந்து விழுகிறானோ அவன்தான் தீரன். அதுபோல் இந்தத் திருமந்திரநூலில் புகக்கூடிய தீரர்களை, புலவர் மும்மணிகளை இந்த ஆதீனத்தில்தான் காணமுடியும்.

இந்த இடம் அருமையான இடம். நவகோடி சித்தர்கள் வாழ்ந்த இடம். உலக வரலாறு படித்தவர்கள் அத்தனை பேர்களும் இங்கே இருக்கிறார்கள். இந்தத் தேசத்திலே தோன்றிய மகாத்மாக்கள் போல, இந்தத் தேசத்தில் இப்படிப்பட்ட மடங்களை ஸ்தாபித்த புண்ணியவான்களைப் போல வேறு எங்கேயும், எந்தத் தேசத்திலும் இருக்கமுடியாது. இந்தத் தேசத்திலே பிறந்தவர்கள் அத்தனை பேரும் தபஸ் செய்திருக்கிறார்கள்.

இந்தமாதிரி, உலகத்திற்கே மரணம் இல்லாப் பெருவாழ்வு வாழ வழிவகுத்தது இந்தப் புண்ணிய பூமி. குறிக்கோளில்லாது வாழ்ந்தவர்களே இந்த நாட்டில் இல்லை. அப்பர் மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிக்கோளுடன் வாழவேண்டும் என்று வற்புறுத்துகின்றார். 'குறிக்கோள் இலாது கெட்டேன்' என்று பாடியிருக்கிறார். வெறும் பாலனாய், யௌவனனாய், விருத்தனாய், நரை கூடிக் கிழப்பருவம் எய்தி இறப்பதை இந் நாட்டவர் விரும்பியதே இல்லை. ஆகவே, வாழ்க்கைக்கு ஒருகுறிக்கோளையும், கடவுளை அடைய ஒரு வழியையும் காண்பித்த இத் தமிழ் நாட்டில் பிறந்த மகாத்துமாக்களைப்

போல உலகத்தில் வேறு எங்குமே பார்க்க முடியாது. இதையெல்லாம் பார்க்கும்போது திருமூலர் மகிமை, அவர் நூலைப் பரப்பும் மகிமை, ஆதீனத்தின் மகிமை இவற்றுக்கு ஈடே சொல்ல முடியாது. திருமந்திரத்தைப் பரப்புவது கற்றோருடைய கடமை, சொல்ல வேண்டியது மானிடராய்ப் பிறந்தவர்களின் கடமை, கேட்கவேண்டியது தலையாயகடமை என்று நான் கருதி, மறுபடியும் இந்த ஆதீனத்திற்கும், நமசிவாய மூர்த்திகளின் திருவடிக்கும், அருளே திருவுருவமாக வீற்றிருக்கும், குருமகா சந்நிதானத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்றது போல, என்னுடைய மூதாதையர் என்ன புண்ணியம் செய்திருந்தார்களோ என்று நான் ஆச்சரியப்படும் வண்ணம் எனக்கு இவ்வாய்ப்புக் கிடைத்தது. இரண்டாம் தடவையும் என்னை அழைத்து, சிவப் பிரசாதமும், சிவஞானமும், சிவ அருளும் எனக்குக் கிடைக்குமாறு செய்த குருமகா சந்நிதானம் அவர்களுக்கும், மகா பெரிய சிவனடியார்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், சிறந்த புலவர்களுக்கும், நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து, என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்;
திருமந் திரமே சிவமாம்;—அருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்குந் தற்பரமே தான்.

—தனிப்பாடல்.

## மூவகை ஆருயிர்வர்க்கம்'

ஆதீன மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்,
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

ஞானத்தின் திருவுருவாக எழுந்தருளி, எமக்கெல்லாம் நல்லருள்வழி காட்டி நிற்கும் குருமகாசந்நிதானம் அவர்களுடைய திருவடிகளை அடியேனுடைய சிரமேல் தாங்கி, அறிவே உருவாக, அன்பே பிழம்பாக வீற்றிருக்கின்ற பெருமக்கள் அனைவருக்கும் அடியேனுடைய வாழ்த்தையும், வணக்கத்தையும் செலுத்தி, இங்கே எழுந்தருளியிருக்கும் முனிபுங்கவர்களுடைய திருவடிகளைச் சிரமேல்சூடி அடியேனுடைய பணியில் இறங்குகிறேன்.

முதற்கண் அருமையாக ஒரு தலைமையுரையைத் தலையுரையாகக் கேட்டோம். திறப்புரையை, திருமந்திரத்தோடு தொடர்புபடுத்துகிற தொடர்புரையாகக் கேட்டோம். இவ்விரண்டிலும் நாம் பெரும்பேறு அடைந்தோம். அவை அடியேனுடைய பேச்சுக்குப் பெருவாய்ப்பாக இருக்கும்படியமைத்த திருவருளுக்கு முதற்கண் வணக்கம் செலுத்தி, அதனையே அடியாகக்கொண்டு, சிலவற்றை இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

சற்றேறக்குறைய அடியேனுக்கு ஏதோ பலபல பிறவிகளில் ஈட்டிய புண்ணிய விசேடத்தின்வாயிலாக என்று சொல்லிக்கொள்ள ஆசைதான்; ஆயினும் ஆணவமல முனைப்பாக அது ஆகிவிடுமோ என்ற அச்சமுந்தான்; அந்த நிலையில் ஆறுமுக நாவலர் பள்ளியில் படிக்கும் வாய்ப்பைப்பெற்ற அடியேனுக்கு என்னுடைய ஐந்தாவது வயதிலிருந்து இன்றுவரை சமயத்தொடர்புக்குப் புறம்பான நூல்களையோ, சமயத்தொடர்புக்குப் புறம்பான பேச்சுக்களையோ பேசாத திருவருள் வாய்ப்பு எப்படியோ கிடைத்து வருகின்றது. அதைத்தான் இப்பொழுது அடியேன் நினைவுகூருகிறேன்.

கடந்த பல ஆண்டுகளாகத் திருமுறையைப்பற்றிய விரிவு, திருமுறையைப்பற்றிய ஆராய்ச்சி, திருமுறையைப்பற்றிய சிந்தனை அனுபவங்கள் எல்லாம் பல இடங்களில் ஏற்பட்டு வருவதைப் பார்த்து வருகிறோம். தெய்வச் சேக்கிழார்பெருமான் தன்னுடைய திருவருட்கண்ணைத் தந்து, நம்மையும் நம்முடைய ஊனக்கண்ணை எல்லாம் உளக்கண்ணாக ஆக்கித்தந்து பொருள் விளங்கச் செய்கின்றார். அவரது அருட்சிறப்பினாலே ஏழு திருமுறைகளைப் பலர் நன்றாகச் சுவைப்பார்கள். காரணம் என்ன? தெய்வச் சேக்கிழார் பெருமான் தம்முடைய வாக்கிலே, அங்கங்கே அந்தந்தத் திருமுறைகளாகிய பொற்பெட்டகங்களைத் திறக்கக்கூடிய சாவிகளை அமைத்துத் தந்துள்ளார்கள், அதைக்கொண்டு அனைவரும் முதல் ஏழு திருமுறைகளைச் சுவைப்பார்கள்.

அடுத்துத் தனியேயுள்ள திருவிளையாடலும், இன்னும் ஏனைய புராண இலக்கியங்களும் துணைசெய்ய, திருவருள் வாய்ப்பும் எவ்வளவுதூரம் துணை செய்கிறதோ, அனுபவம் சித்திக்கச் செய்கிறதோ அந்த அளவு எட்டாம் திருமுறையைச் சுவைப்பார்கள்.

ஒன்பதாம் திருமுறை, ஓடுகின்ற ஓட்டத்திலேயே - நடராஜப் பெருமானுடைய தேர் ஓட்டத்தின்பொழுதே, சேந்தனார் திருவிசைப்பா பாடப்பட்டது. அதனால் சொல்கிறேன் - அதனையும் சுவைப்பார்கள்.

அதன் பிறகு பத்தாந்திருமுறை. அது 'அறிவுக்கு அப்பாற்பட்டது; நுவல முடியாதது' என்றுதான் அப்படியே வைத்துப் பூசிப்பது வழக்கமாக இருந்துவந்தது. அந்நிலையிலிருந்து, இன்று எல்லார் கையிலும், எல்லார் எண்ணத்திலும் ஏறி - வாய்ப்பேச்சிற்கு மட்டுமல்ல - அனுபவமாகச் சித்திக்குமளவுக்குக்கூட இந்தத் திருமந்திர நூலுக்கு விளக்கம் தந்தது இத்துறைசை ஆதீனம். அதிலும் துறைசை ஆதீனத்தின் 21-வது குருமகாசந்நிதானத்தின் திருவருள் என்று

சொல்வது மிகையாகாது. விளம்பரத்திற்காக இது சொல்வது அல்ல. உண்மையில் உண்மையில் உண்மை.

இன்று திருமந்திரத்தைப்பற்றிய சிந்தனைகள், ஆராய்ச்சிகள், பேச்சுக்களெல்லாம் பல இடங்களிலே எழுந்திருக்கின்றன. திருமந்திரத்திற்கென்றே நமது அண்ணுமலைப் பல்கலைக்கழகமும் தனியே ஆராய்ச்சியாளர் ஒருவரை நிறுவி - என்னுடன் படித்த சிவப்பிரகாச தேசிகரை நிறுவி ஆராய்ந்து வருகிறது. இதை ஏன் சொல்லுகிறேன் என்றல் இத்திருமந்திர ஆராய்ச்சி தனி ஒரு பகுதியாக - தனித்து ஆராயவேண்டிய ஒருநூலாகச் சிந்திக்கப்பெறும் தகுதியை எங்கள் மகாசந்நிதானத்தினுடைய திருவருள் விலாசந்தான் தோற்றுவித்தது, இந்தப் பத்தாண்டுகளாக. இத்தனை பேரையும் வைத்துக் கொண்டு பொய் சொல்ல முடியாது. இதுதான் உண்மை. நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன். உண்மையைச் சொல்ல அஞ்ச வேண்டாம். இப்படி விளக்கத்தை அடைந்த திருமந்திரம் "முப்பதா முந்நூரு? எண்ணுயிரமா? மூவாயிரத்து நூற்று நாற்பத்து மூன்ரு? மூவாயிரத்து நாற்பத்து நான்கா? இன்னும் மூல நூலில் இடம் பெருது, உரை நூல்களில் ஆங்காங்கே மறைந்து கிடக்கின்ற அறுபத்தெட்டு பாடல்களையும் சேர்த்துக்கொள்வதா?' என்றெல்லாம் ஆராய்ச்சி எழும்புகிறது.

திருமுறைப் பெட்டகத்தைத் திறக்கச் சாவியைத் தந்த சேக்கிழார் பெருமானிடம் நமக்கு நம்பிக்கையிருக்குமானல் சேக்கிழார் பெருமான் அவதரிக்கவில்லையானல் - செந்தமிழ்ச் சைவ உலகம் செந்தமிழ்க் கருவூலத்தைச் சுவைக்கக்கூடிய நாவன்மையை, புலவன்மையை இழந்திருக்குமென்ற உறைப்பு நமக்கெல்லாம் இருக்குமானல், இத்தகைய உறைப்பைத் தரக்கூடிய ஆனந்தநடராஜப் பெருமானுடைய குஞ்சிதபாதம் நம் உள்ளத்தில் ஒரு கணமாவது விளக்கமாக இருக்குமானல், சேக்கிழார் பெருமான் சொல்லி வைத்த மூவாயிரத்தைத் தவிர ஏனையவெல்லாம் ஏதோ பல பல காரணங்களினலே அவ்வப்போது அறிவுடையார்போல - திருவருள்தோய்வு - உடையார்போல திருமூலரைப்போல் தாங்களும் ஆகவேண்டுமென்று எண்ணிய பொய்த்திருமூலர்களால் ஆக்கி வைத்தனவாக இருக்கவேண்டுமே அல்லாமல் வேறு ஒன்ருக இருக்க முடியாது என்ற உறைப்பு சைவன் மனத்திலே ஏற்படத்தான் வேண்டும். காரணம் எங்கள் பேராசிரியப் பெருந்தகையவர்கள் ஓத்தபகுதிகள் - எண்ணுயிரத்திற்கும் மூவாயிரத்திற்கும் ஓத்த சில பகுதிகள் - முந்நூறுக்கும் முப்பதுக்கும் மூவாயிரத்திற்கும் ஓத்த சில பகுதிகள் - சிலவற்றை எடுத்துக் காட்டினர்கள்.

எப்போதும் இந்தக் கலிவிருத்தத்தைப் போல எளிமையாக, இனிமையாகப் போகிற போக்கிலே பாடக்கூடிய பாட்டு வேறென்றுமில்லை. அடிக்கு நான்குசீர், நான்கடிக்குள் பதினறுசீர், பதினெட்டு வார்த்தைகளுக்கு உள்ளேதானிருக்கும். இவ்வளவு எளிமையாகப் பாடக்கூடிய அமைப்பைத் திருமூலதேவர் இறைவனின் திருவருள்தோய்விலே, மக்கள் எல்லார் மனத்திலும் எளிமையாக நிலவிக்கொண்டு இருக்கட்டும் என்ற நல்ல எண்ணத்திலே கையாண்டார்கள். அந்த நிலை என்ன ஆயிற்று? பின்னலே வந்த திருவருள் தோய்வு இல்லாத பலருங்கூடத் தங்கள் கற்பனைத்திறத்தாலாக்கப்பட்ட கலிவிருத்தங்களைச் சேர்த்து இதனேடு ஒருங்கு வைத்தெண்ணக்கூடிய நிலையை உண்டாக்கி விட்டார்கள். அது செந்தமிழ் செய்த பாவம் என்னலாம்.

எப்பொழுதும் திருமடத்திலே ஒரு மரபு உண்டு. பஞ்சபுராணங்களைப் பாடிமுடித்தாலன்றி - திருப்புகழைக்கூட - பஞ்ச புராணங்களைப் பாடுகின்றபோது, இடையிலே என் போன்ருேர் பாடிய, எளிய இனிய தேன் ஒழுகக்கூடிய தமிழ்ப்பாட்டாக இருந்தாலுங் கூட - கலந்து பாடுவது வழக்கம் இல்லை; அப்படிப் பாடுவது இங்கே மரபும் இல்லை என்று சொல்வார்கள். அப்படித் திருமுறையிடத்திலே தெய்வீகப் பொலிவை - சிவானந்த அனுபவத்தை அனுபவித்த நம் செந்தமிழ்நாட்டிலே தம்முடைய பாடல்களையும் இணைத்து எண்ணக்கூடிய போலிகளும் கலந்திருக்குமானல் அச்செந்தமிழனுபவம் எவ்வளவு பிறபட்டது? சைவ உறைப்பு

சமய உறைப்பு எவ்வளவுதாழ்ந்துவிட்டது? எண்ணிப் பாருங்கள். உயர்ந்த வைரத் தோடுகூட ஒளியற்ற பளிங்குக் கல்லேயும் வைத்து இது வைரமா, வைரமா, வைரமா என்று பலமுறையும் 'சிந்திப்போமானுல் அது நம் கண் செய்த பிழையா? அல்லது பளிங்கிடத்திலுள்ள நிறையா என்றெண்ணுங்கள். பளிங்கு எங்காவது நிறை ஒளியுள்ள வயிரமாகுமா? கண் செய்த பிழை தான். அதுபோலத்தான், திருமூலர் திருமந்திரத்திலே உண்மையான மூவாயிரத்துக்குள்ளே ஒத்த சொல் உடையனவும், ஒத்த அடி உடையனவுமாகவுள்ள பல பாடல்களைச் சேர்த்துக்கொண்டாலன்றி, திருமூலரால் எண்ணுயிரம் செய்யப்பட்டதாகாது என்ற கருத்திஞலே அவர்கள் அங்கெல்லாம் ஒத்த பகுதியுடையனவாக ஆக்கிக்கொண்டார்களேயல்லாமல், சேக்கிழார் பெருமான் வரையறுத்த பிறகு எண்ணுயிரம் இருந்தால் என்ன, நாலாயிரம் இருந்தால் என்ன, எங்களுக்கு எல்லாம் ஒன்றுதான். இந்த ஒரு அளவிலே அந்தத் திருமந்திர அமைப்பைக் கொண்டு திருமந்திர வளர்ச்சி, திருமந்திரம் என்றுமழியாத தன்மையோடு இருக்கின்ற பெருமை இவற்றை உங்களுடைய திருமுன்பு வைத்து என் பணியில் இறங்குகிறேன்.

திருமந்திரத்தைத் தொடர்ச்சியாக - ஒவ்வொரு பகுதியாக, ஒவ்வொரு தந்திரமாகக் கடந்த ஏழு ஆண்டுகளாகச் சுவைத்து வருகிரேம். கடந்த இரண்டு ஆண்டுகளாக முதல் தந்திரத்திலிருந்து ஒவ்வோரதிகாரமாக நாங்களே சுவைத்துச் சுவைத்து நுகர்ந்து நுகர்ந்து உங்களுடைய உள்ளங்களை நிறைவிக்கின்ற அளவிற்குச் சொல்லுகின்ற பயிற்சியை எங்களுடைய குருமகாசந்நிதானம் எங்களுக்கு உண்டாக்கியிருக்கின்ருர்கள். ஆசாரியன் நேரே பயிற்றுவித்தலும், ஆசாரியன் பிறரைக்கொண்டு பயிற்றுவித்தலும், இருந்து காட்டலுமாக, ஆசாரியன் உபதேசிக்கக்கூடிய வழிகள் பல உண்டு. அவற்றுள், எங்களைத் திருமந்திர நூலைப் படிக்கும்படியாகச் செய்து, ஆழ்ந்து பயிலும்படியாகச் செய்து அதனைக் குருமகாசந்நிதானம் எங்கள் மூலம் உங்களுக்கு உணர்த்துகிருர்கள். நாங்களும் ஆசாரியன் அருளினுல் உணர்ந்ததையே உங்களுக்கு உரைக்கிருேம். அவ்வளவே.

இவ்வாண்டு அடியேனுக்குக் கொடுக்கப்பட்ட 'மூவகை ஆருயிர் வர்க்கம்' என்ற தலைப்பு இருக்கிறதே அது இரண்டாந்தந்திரத்தில் மூவகைச் சீவவர்க்கம் என்று இடம் பெற்றுளது. குறிப்பாகச் சொல்லும் இந்த மூவகைச் சீவவர்க்கத்தைப்பற்றி மகாபாஷ்யத்தினுடைய துணைகொண்டு சிறிது சிந்தித்துப் பார்க்கின்றபோது பேசுவதற்கே இடம் இல்லை. அந்த மூவகைச் சீவவர்க்கத்தினுடைய அமைப்பு, அதனைத் தடுத்திருக்கின்ற தடைகளின் ஏற்றத்தாழ்வு, அவற்றை நீக்கிய அந்த ஆருயிர்கள் அடையும் பயன் ஆகியவற்றைப்பற்றி எத்தனை பக்கங்கள் இருந்தாலும்கூட எழுதிக் காட்ட முடியாது. அந்தநிலையை எப்படி அடியேன் விண்ணப்பித்துக் கொள்வது? பெரும் கருத்துகளைச் சிறிய அனுபவத்தில் வைத்துச் சொல்லும் போதுதான் நாம் அந்த அனுபவத்தைத் துணையாகக்கொண்டு பெரும் கருத்தாகிய உச்சி ஏணியை எட்டிப் பிடிக்கிருேம். அந்த நிலையில் மூவகைச் சீவவர்க்கத்தை அடியேன் சிந்திக்கின்றபோது எனக்கு என்ன என்னமோ தோன்றுகிறது.

நாமெல்லாம் தைரியசாலிகள். எடுத்தன எல்லாவற்றையும் தொடக்க நிலையிலேயே அறிந்துகொள்ளக்கூடிய பேராற்றல் வாய்ந்தவர்கள். வேறு யாருக்கும் இப்பேராற்றல் இல்லை என்று நாம் இறுமாக்கின்ருேம். அப்படி இறுமாந்து செம்மாந்து பேசுகின்ற நாம் தனித்து ஒரு மூலையிலே இருந்து 'நமக்கு அந்தத் தனித்தகுதி உண்டா? நாம் எங்கெல்லாம் முட்டினேம், மோதினேம், மண்டையை உடைத்துக் கொண்டோம், இடறிக்கொண்டோம்' என்று நாமே எண்ணிப் பார்த்தோமானுல் 'ஐயையோ நம்முடைய அறிவின் நிலை எத்தனை ஆயிரம் மடங்கு கீழ்ப்பட்டது, இதனைவிட அனுபூதி மகான்களுடைய அறிவு நிலை எவ்வளவு மேம்பட்டது, அதைவிடச் சிவயோகியராய் விளங்கிய திருமூலதேவருடைய திருவாக்கை உணரக்கூடிய வன்மை எவ்வளவு உயர்ந்தது, அதனையே அனுபவித்து அனுபவித்து

வந்த நமது ஆசாரிய பரம்பரை இருக்கின்றதே அது எவ்வளவு சிறந்தது' என்றெல்லாம் வியப்பெய்தி நிற்கக்கூடிய உணர்வு உண்டாகும். இந்த உணர்வைப் பெறுவதற்குத் தனித்திருந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேடையிலே பலர்காணக் கூடி, பலருடைய புகழுக்கும் இகழுக்கும் இலக்காக வாழ்கின்ற வாழ்விலே உணரமுடியாது.

இந்தத் திருமந்திர நூலில் மிகப் பெரியதொரு கஷ்டம் இருக்கிறது. எப்பொழுதும் 'எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான், பாடினவன் பாட்டைக் கெடுத்தான்' என்கின்ற பழமொழி ஒன்றுண்டு. அதுபோல் ஏடுகள் தோறும் பாடபேதங்கள், பிரதிபேதங்கள் மலிந்து கிடக்கும். இப் பிரதிபேதங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இக்கால ஆராய்ச்சி வல்லுநர்கள் தக்க முறையைக் கையாண்டிருக்கின்றார்கள். குறிப்பாகக் கிடைத்த ஏடுகளை எல்லாம் ஒழுங்குபடுத்தி, அவைகள் எழுதப்பட்ட காலத்தை ஒருவாறு ஊகித்துக் கொண்டு அந்தந்தக் காலத்திற்கேற்றவாறு தனித்தனியே பிரித்து, அதற்கு மேலேதான் இன்ன இன்ன காலத்திலே இன்ன இன்னாரால் இப்படி ஒரு பாடம் கொள்ளப்பட்டிருக்கிறது, இன்ன இன்ன பரம்பரையினரிடம் இன்னின்ன பாடபேதத்தோடு அது நிலவி வந்திருக்கின்றது என்று கண்டுபிடித்து, அதற்குமேலே உண்மையான - உயர்ந்த கருத்துடைய பாடம் எது என்று துணிந்து, அதற்குமேலே உரையைச் செய்துகொண்டு அனுபவிப்பது என்கின்ற ஒரு முறையைக் கையாண்டிருக்கிறார்கள். ஒரு பாடம் நமக்கு விளங்கவில்லை என்றால், உடனே அந்தப் பாடத்தை மாற்றிவிடுவது சரியான முறையாகாது. 'அந்த ஏட்டில் உள்ளது தப்பு; இப்படித்தான் இருக்கவேண்டும்' என்று மாற்றுவது சமயவரம்புக்கு, ஆசாரிய ஆசாரணைக்கு ஏற்றதன்று; இப்படி எண்ணிப் பார்க்கின்ற வழக்கம் இல்லவே இல்லை. முன்னே உரை எழுதினவர் என்ன பாடம் கொண்டார்களோ அந்தப் பாடத்திற்கே, நாம் வேறோர் உரையை புதுமையாகக் கண்டால் அது நமக்குச்சிறப்பு. முன்னே போனவன் காணாத ஒன்றை நாம் கண்டோமென்பதிலேதான் சிறப்பு இருக்கிறது. அப்படியின்றி, அபக்குவமல்லுடைய தன்மையிலே இருந்து, தனக்குப் புரியவில்லை என்பதனால் வேறு ஒரு பாடத்தைத் திணித்துவிடுகின்றோம். அது கூடவே கூடாது. திருமுறைத் தோய்வு உடையவர்கள் இந்தப் பன்னிரு திருமுறைகளிலேயும் இந்தக் கருத்து எவ்வாறு நிலவி வருகிறது என்று ஒரு சொற்சோதனை செய்து, எங்கு இச்சொற்றொடர் எப்படி ஆளப்படுகின்றது என்று கண்டு, அதன் பிறகு உரை துணிய முற்படவேண்டும். இதைவிட்டுச் சீக்கிரம் முடித்துவிட வேண்டும் என்று எண்ணி, அந்த அவசரத்தில் ஏதோ ஒரு பாடத்தைத் துணிந்துவிடக்கூடாது. இந்த முறையிலேதான் குரு மகாசந்நிதானம் அவர்கள் எங்களுக்குச் சொல்வார்கள் 'திருமந்திரம் அனுபவநூல்; இதைச்சீக்கிரம் முடித்துவிடவேண்டுமென்ற எண்ணம் வேண்டாம்; ஆண்டுக்கு ஒரு தந்திரம் வந்தாற்போதும்; கொஞ்சம் சிந்தித்துத் தெளிவான நேரத்திலே, தமோ குண ஆதிக்கமில்லாத வேளையிலே உன் மனம் கறுப்பாக இல்லாத நேரத்திலே சுத்த சாத்விகம் நிலவியிருக்கிறபோது சிவனருள் துணைக்கொண்டு காரியத்தைச் செய்வனே செய்க செய்க' என்று பணிப்பார்கள். அதனாலேதான் ஆண்டுக்கு ஒரு தந்திரம் வந்து கொண்டிருக்கிறது.

சைவ சித்தாந்த சாத்திரம் 'பதி பசு பாசம்' என்ற மூன்று பொருள்களைப்பற்றிக் கூறும். அவற்றுள் பாசம் தடை. நமக்கு மூன்று தடை இருக்கிறது ஆணவம் கன்மம் மாயை என. இதைப்பற்றி, சைவசித்தாந்திகள் சொல்வதைக் கேட்கவேண்டும் என்றே பலபேர் போவார்கள். அவர்கள் சொல்வது நமக்குப்புரியவில்லை என்பதற்காகப் போகாமல் இருக்கக்கூடாது. ஏனென்றால் அது தான் பேசவேண்டிய பொருளும், பல முறையும் கேட்க வேண்டிய பொருளும், பல முறையும் கேட்டுக் கேட்டுப் பயன் பெற வேண்டிய பொருளும் ஆகும். இன்றைக்குப் புரிகிறதோ இல்லையோ ஆசாரிய அனுக்கிரகமும், சிவத்திருவருளும் கைகூடும் காலத்தில் விளங்கும் என்ற நம்பிக்கையோடு படிக்க வேண்டியதைப் படிக்க வேண்டும்; கேட்க வேண்டும்.

அன்று 'அறஞ் செய விரும்பு', 'ஆறுவது சினம்' என்பதைப் படித்த மாணவன் தான், இன்று அதனுடைய முழுஆற்றலையும் தெரிந்து அறத்தைச் செய்கின்றான்; பிறர் கோபம் அடையத் தக்க நிகழ்ச்சி ஏற்படும் போதும் சினம் தணிந்திருக்கிறான். ஐந்து வயது, ஆறு வயது ஆக இருந்தபோது, அறம் - அறத்தை; செய - செய்ய; விரும்பு - ஆசைப்படு என்றுதான் படித்திருப்பான். அப்போது சொல்லுக்குப் பொருள் தெரிந்திருப்பானே அல்லாது அதன் உள்ளுறை அநுபவம் பெறமாட்டான். அதுபோலவே பதி, பசு, பாசம்பற்றிச் சொல்வோம் கேட்டுக் கொண்டிருப்போம். படிப்போம். அவற்றின் பயனைப் பின்னாலேதான் - சிவத்திருவருள் கூட்டுவிக்கின்றபோதுதான் உணருவோம்.

இப்படிச் சொல்லிவிட்டால் போதுமா? அதுவும் முடியாது. இது ஞான பீடம். ஞானபீடத்தின் முன்னே பேசுகிறேன். இப்பொழுது ஒரு கற்பனை எனக்குத் தோன்றுகின்றது. அதாவது ஒரு பெரிய மூன்று அடுக்கு மாளிகை. அந்த மூன்று அடுக்கு மாளிகையிலே மேல்மாளிகை மிகத் தூய்மையானது; கருமைக்கு அங்கு இடமே இல்லை. மேலும், அங்கே ஒரு பெரிய ஒளி ஒன்று உலாவிக்கொண்டிருக்கிறது. அந்த ஒளி விழுகின்ற இடங்கள் எல்லாம் விளக்கம் பெறுகின்றன. ஒரு புத்துணர்ச்சி அங்கே உலவுகின்ற மக்களுக்கு உண்டாகிக்கொண்டிருக்கிறது. தென்றற்காற்று வீசிக்கொண்டிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது நம்மிடத்திலே தெம்பும் தெளிவும் பிறக்கும். இதுபோல அந்த ஒளி படுகின்றபோது அங்கே உலவும் மக்கள் புதிய உணர்ச்சியோடு புத்தித் தெளிவோடு, செயலாற்றும் திறத்தோடு விளங்குகின்றார்கள். இந்த நிலை உயர்ந்தநிலைதான். ஆனாலும் அந்த ஒளி கொஞ்சம் சூழல் மாறி வேறு எங்காவது படுமானால் 'பழைய பெத்தான் பெத்தான்' என்பதுபோல அவர்களுக்கும் ஒருமறதி - மறைவு தெரியத்தான்செய்கிறது. நமக்குள்ளே, மூவகை ஆருயிர் வர்க்கத்திற்குள்ளே மிக உயர்ந்த நிலை இது. இப்படி விளங்குகின்ற ஆருயிர்களைத்தான் நாம் விஞ்ஞான கலர்கள் என்று சொல்லுவது. அதாவது ஒருமலமுடைய ஆன்மாக்கள்; ஆணவம் ஒன்றுமட்டுமே உடையவர்கள் இந்த விஞ்ஞான கலர்கள். வேதங்களுங்கூட எவனை விவாதித்து ஒளி அடைகின்றதோ அந்தப் பரம்பொருளின் அருள் விளக்கத்தின் ஒரு துளியை ஏற்கக்கூடியதான நிலையில் இருக்கின்றவர்கள் விஞ்ஞான கலர்கள். இவர்களைத்தான் திருமூலதேவர் நாம் இன்றுள்ள ஞானசாத்திரங்களில் காணப்படுகிற அளவிலல்லாது கொஞ்சம் பிரித்துக் காண்கின்றார்; ஆருயிர்களை நான்கு நிலையில் பிரிக்கிறார்.

இப்பொழுது ஒரு பதவி, ஒரு உத்தியோகம் என்று இருக்குமானால் அப்பதவிக்கு வரவேண்டும் என்று விரும்புகின்றவர்கள் பலராக இருப்பார்கள்; அந்த உத்தியோகத்தைவிரும்பிப் பலபேர் அடிவைப்பார்கள். பொருளாதார அரசியல் உலகத்தில் இது நன்கு தெரியும். ஆனால் ஒரு பதவிக்கு எல்லோரும் தகுதி உடையவர்களாகமாட்டார்.

இன்ன இன்ன பதவிக்கு இன்ன இன்ன தகுதி வேண்டுமென்று வரையறுக்கிறோம். ஞான உலகத்திலே சண்டேசுவரர் என்ற ஒரு பதவி உண்டு. அந்தச் சண்டேசுவரர் பதவிக்கு என்ன என்ன தகுதிவேண்டும்? அந்தத் தகுதிகளைப் பெற்று அப்பதவிக்கு வந்தவர் யார்? என்பதைப் பற்றி நமது பெரியபுராணம் பேசுகிறது. சண்டேசுவரர் பதவிக்குச் சிவபூசையினால் தன்னைத் தகுதி ஆக்கிக்கொண்டு அந்நிலையை அடைந்தவர் விசாரசர்மர் ஆகிய சண்டேசுவரர் என்று அங்கே பார்க்கிறோம். அதுபோல, மக்கட் கூட்டத்திலே உள்ள சிலர், தன்னுடைய உழைப்பினால் படிப்பினால் மேல் நிலையை அடைவதை நாம் பார்க்கின்றோம். படிப்பு இல்லை என்றால் இவர்களும் மற்றவர்களைப் போலத்தான்.

அதுபோல, ஆணவம் கன்மம் மாயை ஆகிய இம்மும்மலங்களுடன் பெரும்பாலும் மக்கள் பிறக்கின்றார்கள். இவர்களைச் சகலர் என்று சைவ சித்தாந்தம் கூறும். நாமெல்லாம் சகலர்தான். காரணம், மும்மலத்தில் கட்டுப்பட்டவர்களாக நாம் உலகை வளைய

வருகிறோம். தோற்றக்காலத்திலேயே ஆணவம் கன்மம் என்னும் இரண்டு மலமுடைய பிரளயாகலராகவும், ஆணவமலம் ஒன்று மட்டுமேயுடைய விஞ்ஞானகலராகவும் சிலர் பிறப்பது உண்டு. இப்படியாகப் பிறந்த மூவகைச் சீவ வர்க்கத்தினர்களுக்குள்ளே ஆணவமலம் ஒன்றுமட்டுமேயுடைய விஞ்ஞானகலர்களுக்கு ஞான பரிபாகம் முதிர முதிர, திருவருளும் உதவ, அதனாலே அவர்கள் சுத்தர்களாக ஆகிச் சிவமே ஆகும் தன்மையான, தானே ஆம் நெறியை அடைவர். இருமலமுடைய ஆன்மாக்கள் கன்மம் ஆகிய ஒரு மலம் விட்டவுடனே, விஞ்ஞான கலரது நிலையை அடைகிறார்கள். மும்மலம் உடையவர்கள் சகலரென்று சொன்னேன். சகலர் என்பது நீங்களும், நானும். நம்மில் மாயை என்ற ஒருமலம் மட்டும் அகன்றவர்கள் பிரளயாகலர் நிலையை அடைகிறார்கள். ஞானானுபூதிச் செல்வர்களாக விளங்குகிற - சிவநெறிச் செல்வர்களாக விளங்குகின்ற சிலரைத்தவிர, நாம் எல்லோரும் இழுப்பும், பறிப்பும், தடுப்பும், மறைப்பும் ஆகிய பல நோயோடு கூடிய 'பெரிய' நோயாளிகள். நமக்கெல்லாம் சகலர் என்று பெயர்; எல்லாவற்றுடன் கூடியவர்கள். சகலான்மாக்களுக்கு இடம் எங்கே? முற்கூறிய வீட்டின் கீழ்நிலை. அங்கே எல்லாம் ஒரே கருப்பாக இருக்கும். ஒரே வெள்ளையாக இருக்கும். எல்லாம் கலந்து கிடக்கும். துன்ப இன்பக் கூறுபாடுகள் கலந்திருக்கும். அழுகையும் மகிழ்ச்சியும் பொங்கிக் கொண்டிருக்கும். எல்லாம் கலந்த இடம். இது நாம் வாழ்கின்ற வாழ்வு. அதற்கு முன் நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்று உணரவேண்டும். ஆகவேதான் திருமூலர் மூவகைச் சீவ வர்க்கம் என்ற அதிகாரத்தில் ஆருயிர்களை இனம்பிரித்துக் காட்டுகின்றார். இது ஆன்மாக்களைப் பிரிக்கின்ற இடமே அல்லாமல் உபாயம் சொல்லிக் கடைத்தேற வைக்கின்ற உபதேச முறை அல்ல. குறிப்பாக இரண்டாவது பாட்டில் விஞ்ஞானகலர் நால்வர் என்றும், பிரளயாகலர் மூவர் என்றும், சகலர் மூவர் என்றும் ஆக இந்த மூன்று இனத்தில் பத்து வகையினர் உள்ளனர் என்று பிரிக்கிறார்.

பாடலைப் படித்துப் பொருளையுணர்த்துவதற்கு நேரம் இல்லை, காரணம் என்ன? பாடலைப் படித்துக் காட்டிக்கொண்டேயிருந்தால் பொழுது போய்க்கொண்டேயிருக்கும். அதனுடைய மொத்த, திரண்ட கருத்து இவ்வளவுதான். அடுத்த இரண்டு பாடல்களில், இந்த நால்வர், மூவர், மூவர் என்பவர்கள் யார் யார் என விவரிக்கிறார். பிரளயாகலருக்குள்ளே இருமலமுடையவர்கள்; அவர்களுக்கு இரண்டு நோய்; ஒரு நோய் கன்ம மலம், மற்றொரு நோய் அறியாமை விளைவிப்பதாகிய உயிரோடு என்று முளதாகிய ஆணவ மலம். இந்த ஆணவ மலந்தான் மனிதன் தன்னுடைய வியாபகத் தன்மையைக் குறைத்து, மனிதன் என்கிற பெயரோடு உலாவிவரும்படியாகச் செய்யக் கூடியது. அந்த ஆணவ மலமும் கன்ம மலமும் ஆகிய இரு மலம் உடையவர்களைத் தான் 'பிரளயாகலர்' என்று சொல்கிறோம். இந்தப் பிரளயாகலர் இருக்கிறார்களே இவர்களை இறைவன் ஆட்கொள்ளுகின்றபோது, எப்படி ஆட்கொள்வார்? விஞ்ஞானகலரை எப்படி ஆட்கொள்ளுகிறார்? என்றால், அடியேன் முதலில் தெரிவித்ததுபோல, இறைவனைப் பேரொளிப் பிழம்பாக அவர்கள் காணாது காண்கிறார்கள்; அதனாலே, அவர்களிடத்திலுள்ள மலம் நீங்காமல் நீங்கிக் கொண்டிருக்கிறது. அது பெரிய நிலை. அந்நிலையை இரண்டுமலம் உடையவர்களாகிய பிரளயாகலரால் அடையமுடியாது. ஆகவே இறைவன் கரசரணாதி அவயவங்களுடையவராக அவர்களுக்குக் காட்சி அளித்து ஆட்கொள்ளுகின்றான். அதனால் அவர்களுடைய மலமும் கன்மமும் தொலையும். அவர்கள் அடுத்தநிலையையடைவார்கள். சகலான்மாக்களாகிய நாமெல்லாம் இருக்கிறோமே; நமக்கு மூன்று தடைகள்; இயற்கையான தடை ஒன்று, அதுதான் ஆணவம். இறைவன் கூட்டும் தடை ஒன்று அதுதான்மாயை. அதற்குமேல், நாமாகத் தேடியும் குவித்தும் திளைத்தும் வைத்திருக்கின்ற கன்மம் ஆகிய தடை ஒன்று. ஆக இம்மூன்று தடைகளால் நாம் கட்டுண்டிருக்கிறோம். அதனால்தான் 'சகலான்மாக்கள்' என்று பெயர் பெறுகின்றோம். நம்மிலும் பக்குவரும், அபக்குவரும்,

பக்குவாபக்குவரும் என மூன்று வகையினர் உண்டு. விஞ்ஞானகலரில் இயற்கை விஞ்ஞானகலர், மலபரிபாக விசேஷத்தினுல் மூன்று தரப்பட்ட விஞ்ஞானகலர்கள் ஆக நான்கு பேர். பிரளயாகலரில் பக்குவர் அபக்குவர் பக்குவாபக்குவர் என்ற மூன்று தரத்தார்; ஆக மூன்றும் மூன்றும் ஆறு, ஆறும் நான்கும் பத்து என்று பத்துப்பேர் ஆருயிர்வர்க்கங்கள் என வகுத்தார்.

இறைவன் உள்நின்றுணர்த்த உணருகின்ற ஆன்மக் கூட்டங்கள்; முன் நின்று உணர்த்த உணருகின்ற ஆன்மக்கூட்டங்கள்; குருவாக வந்து அடித்து, திருத்தி, உபதேசித்து, நூலாலும் பார்வையாலும் தீண்டுதலாலும் உணர்த்த உணருகின்ற ஆன்மக்கூட்டங்கள். இதைத்தான் மூவகை ஆருயிர் வர்க்கம் என்ற பகுதி நமக்குக் காட்டுகிறது. இதிலே ஒரு திருப்பாடலை மாத்திரம் அடியேன் நினைவுகூருகிறேன்.

பெத்தத்த சித்தொடு பேண்முத்தச் சித்தது
ஒத்திட் டிரண்டிடை யூடுற்றார் சித்துமாய்
மத்தது மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத் தமிழ்ந்து சகலத்து ளாரே.

இது விஞ்ஞானகலர் முதலாயினோருடைய இயல்பைத் தெரிவித்து, அவர்களை இறைவன் ஆட்கொள்ளுமுறைமையை உணர்த்துவது. திருமந்திரத்திற்கு ஏற்கனவே நமக்கு அருந்துணையாகக் கிடைத்த விஸ்வநாத பிள்ளை என்ற யாழ்ப்பாணத்தார், வி. வி. ரமணசாஸ்திரி என்ற பேரறிஞரின் துணையைக் கொண்டும் உதவியைக் கொண்டும் பரந்து பட்ட அவரது நூலைத் துணைக் கொண்டும் அருமையான குறிப்பு ஒன்றை எழுதினார்கள் முதன் முதலில். அதன்பிறகு நமக்குச் சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகத்தார் இந்த இரண்டும் சேர்ந்த அருமையான உரை ஒன்று தந்தார்கள். அதன் பிறகு, துடிசைக்கிழார் சிதம்பரனார் என்று நம்மிடையே இருந்து வாழ்ந்து பிரிந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவர்கள் சிறந்த சைவச் செல்வர், விசுவநாதபிள்ளையினுடைய குறிப்புரைகளையே எடுத்துக் கொஞ்சம் விளக்கம் தந்துதவினார்கள். பஞ்சாக்கரதீபம் என்ற உரை இன்று ஆதீனத்திலிருந்து வெளிவருகின்றது. ஆதீன வித்துவான் ஸ்ரீநிவாஸாசாரிய சுவாமிகள் அவர்கள் கட்டுரைகளாக, ஓட்டத் தமிழிலே, மிகமிக அழகாக, தெளிவாக விளங்கும்படி எழுதிவருகிறார்கள்.

முன்னே வந்தவர்கள் அதற்கு முன்னே கருவி எதுவுமே இல்லாதபோது ஏதோ தான் கொண்ட கருத்தை எழுதுவதுதான் இயல்பு. அதன் பிறகு வருகின்றவர்கள் கிடைத்த சாதனங்களை வைத்துக்கொண்டு, இதற்குத் துணைசெய்யக்கூடியனவாகிய பிற ஆகம விசேஷங்களை வைத்துக்கொண்டு தான் சிந்திக்க வேண்டும். இந்த மூவகைச் சீவவர்க்கத்தைப்பற்றி மிக விரிவாகவும் இப் பஞ்சாக்கரதீபத்திலே உரைத்துப் போகிற திறத்திலும் அடியேனுக்கு உதவியாயிருந்து உரை வகுக்கத் துணை செய்த ஒரு அருமையான நூல் ஒன்று உண்டு. இன்றைக்குப் பத்தாவது மாநாட்டிற்கு ஒரு பெரிய சிறப்பு என்ன? சந்தானாசாரிய பரம்பரையில் வந்த தீட்சிதர் அவர்கள் வந்திருக்கிறார்கள். ஏன் என்றால் நடராஜப்பெருமான் என்றால் எங்களுக்கு - ஏன் உலகத்திற்கே - உயிர். அந்த தீட்சிதர்மரபிலே அவதரித்த உமாபதி சிவாசாரிய சுவாமிகள் பௌஷ்கர ஆகமத்திற்கு விருத்தி என்ற பேரால் 'பௌஷ்கரவிருத்தி' என்ற ஒரு பெரிய நூலைச் செய்திருக்கிறார்கள். அதில் பசுபடலத்தில் மூவகை ஆருயிர் வர்க்கத்தைப் பற்றிய குறிப்புக்கள் திருமூலர் சொல்லுகின்ற முறைமையிலே, இந்த உரை அதனை அழைத்துச் செல்லுகிற முறைமையிலே வியாக்கியானமும் அந்த மூலசூத்திரங்களும் அமைந்து இருக்கின்றன என்பதை இணைத்துக்காட்டவேண்டுமென்ற எண்ணமேதான். ஆனாலும் நேரம் கடந்துவிட்டமையினாலே, இதற்குத் திறவுகோல் உமாபதி சிவாசாரியசுவாமிகள் 'பௌஷ்கர விருத்தி' ஆகையால், இதிலிருந்து கருத்து மாற்றங்கள் இருக்குமானால், அவற்றைக் கண்டு தெளியவேண்டிய சிறந்த இடம் அது என்ற அளவிலே அடியேன் திருமுன்பு விண்ணப்பித்து அமைகிறேன்.

**'பாத்திரம்'**

ஆதீன வித்துவான்
## திரு. தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள்,
கடலூர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய மலரடிகளை மனத்தால், வாக்கால், சிரத்தால் வணங்குகிறேன். ஈண்டு எழுந்தருளியிருக்கிற முனிபுங்கவர்களுக்கும் அங்ஙனமே பணிவைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பெருமக்களாகிய உங்கள் அனைவருடைய பாத கமலங்களையும் வணங்குகிறேன்.

முன்னதாக நான் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டியது: 'பகவத்கீதை'யை வட நாட்டிலே ஒருவர் மிகச் சிரத்தையோடு பாராயணம் செய்துகொண்டே இருந்தார். அவரை ஒரு பெரியவர் அணுகினர். பகவத் கீதை கண்ணபிரானால் எப்போதோ சொல்லப்பட்டது; அதை உருக்கமாக ஓதுகிறீரே; கண்ணபிரானை நீர் பார்த்தீரா; பகவத் கீதையை இவ்வளவு உருக்கமாக ஓதுவதற்கு? என்று கேட்டதற்கு, அப்பெரியவர் சொன்ன விடை ஒன்றுதான். என்னவிடை? தாங்கள் கண்ணபிரானைக் காணவில்லை போலும்; நான் இதோ பார்க்கிறேன்; பகவத் கீதை வடிவத்தில் கண்ணபிரானைப் பார்க்கிறேன்; பகவத்கீதையே கண்ணபிரான்; கண்ணபிரானே பகவத்கீதை என்று அவர் விடையளித்தார். பெரியவரும் வெட்கினர்.

அதே வாசகத்தைத்தான் இங்கேயும் அடியேன் மேற்கொள்ள விரும்புகிறேன். 'திருமூலரை நீ கண்டாயா?', என்று கேட்டால், நம்முடைய தேசிகர் அவர்கள் வரையறுத்துச் சொல்லிய 3000 பாடல்களைக் கொண்டதாயிருக்கின்ற திருமந்திர நூலே தான் திருமூலர்; திருமூலரேதான் திருமந்திரம். இந்தத் திருமந்திரம், திருமந்திரமே வடிவமாக இருக்கின்ற திருமூலர் ஆகிய இவர்களை நாம் புறக்கண்ணினலே பார்க்க வேண்டுமென்ருல் திருமந்திர மாநாட்டிலே இந்தப் புனிதமான மூன்று நாளிலே நம் முன்னே எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமே திருமூலர் என்று அடியேன் மனம் சொல்லத்துணிகிறது. எனவே அவர்களையே திருமூலராக நான் ஸ்மரித்துக் கொண்டு பணியில் இறங்குகின்றேன்.

அடியேனுக்கு அவர்களாலே ஆக்ஞாபிக்கப்பட்டிருக்கின்ற விஷயம் 'பாத்திரம்' என்பது. 'பாத்திரம் அறிந்து பிச்சை இடு' என்பது அநேகமாக உலகத்தில் யாவரும் வழங்கிவருகிற ஒரு பழமொழி. அந்த மாதிரியான பழமொழியிலேயே 'பாத்திரம்' என்பதற்கு 'நல்லவர்கள்' என்பதுதான் பொருள். நீ நல்லவர்களுக்குக் கொடு என்பதுதான் அதிலே இருக்கிற பொருள். அப்பொருளை அப்படியே வைத்துக்கொள்ளுவோம்.

எனக்குமுன் இங்கே பேசிய அறிஞர் தேசிகர் அவர்கள், 'நாம் எல்லோருமே சகலர்' என்று எடுத்துக் காட்டினர்கள். என்ன என்னவோ கலக்கப்பெற்றிருக்கின்றவர்கள் நாம் என்றெல்லாம் சொன்னர்கள். ஆம். சரி. இந்த ஒரு விஷயத்தை நாம் சிந்தனை செய்து பார்த்தோமானல் 'நாம் சகலர்' என்பதில் எந்தவித மறுப்பும் இருக்காது. எந்த விஷயத்தில்? இதோ நான் நிற்கின்றேன். பேசுகின்றேன். எதனலே? எனக்கு உள்ளே இருக்கின்ற ஏதோ ஒரு வேகத்தினலே, உயிரினலே பேசுகிறேன். இப்படியே நான் எப்போதும் இருப்பேனு? இருக்கமுடியாது. என் கண்முன், எங்கள் வீட்டுத் தோட்டத்திலே கட்டியிருக்கிற மாடு ஈன்ற கன்று கிழமாகிச் சாவதைப் பார்க்கிறேன். ஆதலினலே, எனக்கு உள்ளே ஓர் உயிர் இருக்கிறது. எனக்கு வெளிப்புறத்திலே தேகம் இருக்கிறது. இந்த இரண்டையும் கலக்கவைத்திருக்கிறதே, இக்கலப்பைப் கொண்டிருக்கிற அடியேன் சகலன். உலகத்திலே 'சகலர்' என்று சொல்லுகிருர்களே, கல்யாணத்திலே சம்பந்தம் காரணமாக; அம்மாதிரி சகலருக்கும் இப்பொருள்தான்,

இந்தச் சகலராயிருக்கும் நாம், உயிர் என்றும் உடம்பு என்றும் இரண்டு பொருள்களைப் பெற்றிருக்கிறோம். இதில் யாருக்கும் ஆட்சேபணை இருக்கவேமுடியாது. ஆதலினாலே இந்த இரண்டிற்கும் இருக்கின்ற ஒரு பந்தத்தை உத்தேசித்து நம்முடைய ஞானிகளாக இருக்கின்ற பெரியோர்கள், இப்படிக் கூடியிருக்கிறதே உடம்பும் உயிரும், இவைகளினுடைய கூட்டத்தைக்கொண்டு என்ன தான் சாதிக்கவேண்டும், அது இவர்களுக்குத் தெரியவேண்டுமே என்றெல்லாம் தாங்கள் கவலை கொண்டவர்களாகி, நமக்காக அருளிச்செய்துபோயிருக்கும் நூல்கள் பலவற்றிலே வடித்து எடுக்கப்பட்ட சிகரம் போன்றது திருமந்திரம் என்பது. இந்தப் பாத்திரம் என்கிற ஓர் இடத்திலே அதைத் தெளிவாய்; திவ்யமாகச் செப்பியிருக்கிறார் திருமூலர்பிரான். ஆகவே, நாம் உயிருக்கும் ஆக்கம் தேடவேண்டும், நம் உடலுக்கும் ஆக்கம் தேடவேண்டும். இந்த இரண்டையும் திருவள்ளுவர் தெளித்து ஒரே குறளில் சொல்லிப்போனார். அந்தக் குறள் எல்லோருக்கும் தெரிந்த குறள்தான்.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'

என்று சொல்லிவிட்டார்; உடம்பைப்பற்றின விஷயத்தை. உயிரைப்பற்றின விஷயத்தையும் அதிலேதான் சேர்க்கிறார்.

அருள் இல்லார்க்கு
அவ்வுலகம் இல்லாகியாங்கு'

என்று உவமையில் கொண்டுவந்து, சிறந்த பொருளைச் சொல்லவேண்டும் என்ற கருத்தோடு அதனை மாட்டியிருக்கிறார்.

எனவே, இப்போது இத் திருக்குறளை வைத்துக்கொண்டு பார்த்தோமானால், நாம் இரண்டே நோக்கம் கொண்டவர்களாக உள்ளோம் என்பது ஏற்படும். ஓரிடத்திற்கு நடப்பதற்கு இரண்டு கால்களில் ஒன்றை முந்தியும் ஒன்றைப் பிந்தியும், பிறகு ஒன்றை முந்தியும், ஒன்றைப் பிந்தியும் வைத்து நடந்து குறிக்கோளுக்குப் போய்ச் சேருகிறோம். இரண்டு கால்களும் உடம்பைச் சுமக்கின்றன. அதுபோல, இரண்டே குறிக்கோள்கள்தாம் நமது வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டியவைகளாக இருக்கின்றன நமக்கு. அதில் ஒரு குறிக்கோள் பொருள். மற்றொரு குறிக்கோள் அருள். இரண்டும் மூன்று எழுத்து வார்த்தைகள். பின் இரண்டு எழுத்துக்களிலே ஒற்றுமையும் பெற்றிருக்கின்றன. எனவே, இதைச் சுருக்கமாய் நினைப்பிலே முடிந்து போட்டு வைத்துக்கொள்ளுவதற்கு ஏற்ற விதமாகத் திருவள்ளுவர் இந்தக் குறளில் பொருள் என்றும் அருள் என்றும் குறித்தார். அருள் உயிரைப்பற்றிய செய்தி. பொருள் உடலைப் பற்றிய செய்தி. பொருள் மிக மிக இன்றியமையாதது என்பதை இந்நாளில் கூடவா நாம் உணராமல் இருக்கமுடியும்? சீனன் என்கிற துரியோதனன் பாரத அன்னையின் கூந்தலைக் கையிலே சுழற்றி இழுக்கிறான். கர்ணன் என்கிற ரஷ்யன் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருக்கின்றான். ஒன்றுமே சொல்லக்காணோம். அமெரிக்கா என்கிற கிருஷ்ணன் 'ஆகட்டும், பார்ப்போம்' என்று இருக்கிறான். நேருஜி முதலான தரும புத்திரர்கள் ஒன்றும் செய்யமுடியாமல் தவிக்கிறார்கள். இப்பொழுது என்ன கேட்கிறது அரசாங்கம்? இவ்வளவு பேரும் சேர்ந்து நம்மை என்னகேட்கிறார்கள்? கேட்காமலே கொடுத்தருளினார்கள் நம்முடைய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்; இவர்கள் தவிக்கிறது இன்னதற்காகத்தான் என்று தெரிந்து உதவினார்கள். என்ன கேட்கிறார்கள்? பொருள். அவ்வளவுதானே அவர்கள் கேட்பது? அது இல்லாவிட்டால் சீனப் படையெடுப்பு தோன்றி அணு ஆயுதங்கள் பிரயோகிக்கப்பட்டு இருக்குமானால், நாம் இன்றைக்கு இங்கு பேசமுடியுமா? ஆகவே, பொருளைக் கொடுத்து, ஆபத்திலிருந்து நம்மை விலக்குவதற்கு அரசாங்கம் முனைகிறது, அதற்காகத்தான் பொருளைக் கேட்கிறது. பொருளைக் கொடுக்கிறோம். ஆகவே அரசாங்கம் முதலாக ஆண்டி வரைக்கும் எல்லாருக்கும் பொருள் இன்றியமையாதது இந்த உலகத்து வாழ்க்கையிலே என்பதை நாம் நன்றாக அறிகிறோம், இன்றைய அனுபவ ரீதியில். அது போகட்டும்.

அந்தக் குறளிலே, பொருளைச் சொல்ல வந்த வள்ளுவர், அருளையும் மாட்டினாரே,

பொருளுக்கும் அருளுக்கும் ஏதாவது ஒரு தொடர்பிருக்கிறதா? பொருள் உடம்பைப் பற்றின செய்தி; உடம்பு இந்த உலகத்தில் வீழ்ந்து போகிறது. அருள் ஆன்மாவைப் பற்றின செய்தி; அது என்றைக்கும் நித்திய மானது. அநித்தியமான பொருளுக்கும், நித்தியமான அருளுக்கும் என்ன தொடர்பு உண்டு? என்றெல்லாம் ஒரு கேள்வி கேட்கத் தோன்றும். அதிலே உள்ளீடான ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறதினுலேதான், பொருளையும் அருளையும் ஒன்ருக இணைத்துத் திருவள்ளுவர் அந்தக்குறளில் பெய்து வைத்திருக்கிருர். அந்த இணைப்பைத்தான் நம்முடைய திருமூலர் 'பாத்திரம்' என்ற தலைப்பில் சொல்கிருர்.

பொருளுக்கும், அருளுக்கும் உள்ள இணைப்பு என்ன என்பதை நான்கு பாடல் களில் திருமூலர் சாதித்து வைத்திருக்கிருர். அதிகமான பாட்டுக்களைச் சொல்லி நம்மைக் கவலைக்குள்ளாகும்படியாகச் செய்யவில்லை. நான்கே திருப்பாட்டுகள். இந்த நான்கில் ஒன்று தன் அனுபவத்தையே சொல்லியிருக் கிருர். தன் அனுபவத்தைச் சொல்லாமல் 'இப்படி இருங்கள், அப்படி இருங்கள்' என்று சொன்னுல், அதை நாம் கேட்க மாட்டோம்; மறுக்கவும் துணிவோம். ஆதலினுலேதான், திருமூலர் இந்த நான்கு பாட்டுக்குள்ளேயும் தன் அனுபவம் ஒன்றை யும் ஒருபாட்டில் சேர்த்து வைத்திருக்கிருர். 'பொருளுக்கும் அருளுக்கும் இருக்கும் ஒரு தொடர்பை நன்ருக நான் விளங்கிக்கொண் டேன், நீங்களும் விளங்கிக்கொள்ளுங்கள்' என்று சொல்கிருர். நம்மிடத்திலே கைச் சரக்காக இருக்கிறது பொருள் ஒன்றுதான். செல்வம் ஒன்றுதான். அந்தச் செல்வத்தைக் கொண்டு அருளை எப்படிப் பெறலாம்? எங்கிருந்து பெறலாம்? இவைகளுக்கு விடை கூறிக்கொண்டே போகின்றது அந்நான்கு செய்யுட்கள்.

அதிலே அவர் முடிவாகச் சொல்லியிருக் கின்றது, பொருளைக் கொடுத்து அருளைப் பெறவேண்டும் என்று நினைக்கிறீர்களே, அவ்வாறு நினைக்கின்ற நீங்கள் பக்தியை முதலில் கொள்ளவேண்டும் என்கின்ருர். ஆகவே, பக்தியை மேற்கொண்டு நடக்கிற நீங்கள், அப்பக்தியை மனத்திலே வைத்துக் கொண்டு செல்லுகிற மார்க்கத்தைப் பெரும் பாலோராக நீங்களிருந்து அனுபவிக்கிறீர் கள்; அப்பக்தியை முதன்மையாகக்கொண்ட பொருளின் மூலமாக அருளைத் தேடுங்கள் என்கிருர்.

இவ்வாறு பக்தியை முதன்மையாகக் கொண்டு, பொருளைத் தந்து அருளைத் தேடினவர்களில் பற்பல பேர்கள் இருந் திருக்கிருர்கள். பெரிய புராணத்தில் மிக அரும்பொருள் - செல்வத்துள் மிகச் சிறந்த செல்வம் புத்திரன். எனவே அப்படிப்பட்ட பொருளைக் கொடுத்து, பைரவமூர்த்தியாக எழுந்தருளிய ஒரு சிவஞானியரிடமிருந்து அருளைத் தேடினுர் பெரும் தொண்டைச் செய்த சிறுத்தொண்டர். ஆகவே அந்தப் பொருளைக் கொடுத்து அருளைத் தேடுவதில் எப்படி ஆவேசிக்கலாம் என்பதை அந்தப் புராண வரலாறு நமக்கு நன்ருகத் தெரி வித்துப்போகிறது.

இப்படியே அப்பூதி அடிகளும் என்ன செய்தார் என்பதை நாம் அறிகிருேம். அவர் களும் தம் வீட்டில் இருக்கின்ற எல்லாப் பொருட்களுக்கும் மெத்தப்பழுத்த சிவஞானி யராக விளங்கின திருநாவுக்கரசர் பெயரை வைத்தார். படி, மரக்கால், மாடு, கன்று, பிள்ளை குட்டிகள் எல்லாருக்குமே அதே பெயரை வரிசைப்படி வைத்து, அந்தப் பெயரைச் சொல்லிச்சொல்லி, அச்சொல்லின் உத்வேகத்தினுலே நாவுக்கரசர் பெருமானை அந்தச் சொல் மந்திரம் இழுத்துவர, அவ ரிடத்தில் தான் ஈடுபட்டவராகி, சிவஞானத் தைப் பெற்றுர் அப்பூதி அடிகள் என்று பெரிய புராணத்தில் பார்க்கிருேம்.

இப்படி பொருளைக் கொடுத்து, அருளை வாங்கினதாகிய வரலாறுகள் பல இருக்கின் றன. இஃது ஒரு வியாபாரம்போலிருந்து கொண்டிருக்கிறது. அந்த விஷயத்தைத் தான் நமக்கு நன்ருக இங்கே 'பாத்திரம்' என்ற இந்தப் பகுதியில் திருமூலர்பிரான் நினைப்பூட்டிப் போகிருர். அவ்வாறு நினைப் பூட்டுவதிலே தனது அனுபவத்தை அவர்

இந்த 3000 என்று சொல்லப்படும் திருமந்திரத்திலே ஆங்காங்குக் கூறியுள்ளார். ஒரு காரியத்தை நாம் செய்தால் நல்லதுதான். என்ன காரியம்? அனேக பாட்டுக்களிலே தன்னையே சொல்லிக்கொள்கிருர். நமக்கு ஒரு வேளை நம்பிக்கை இருக்காதோ என்று அவருக்கு அவநம்பிக்கை. ஆனபடியினுல், பல இடங்களில் 'இப்படி நான் செய்தேன், இப்படி நான் கண்டேன்' எனத் தம்மனுபவ வாயிலாக வெளியிடுகிருர். அப்பாடல்களை எல்லாம் பிரித்து எடுத்து, அவற்றை ஒன்ருகத் தொகுத்துவிட்டால் 'திருமூலரின் சுய சரிதை' என்று ஒரு சரித்திரமே எழுதிவிடலாம். அம்மாதிரிப் பாட்டுகளை உட்கார்ந்து தேடவேண்டும். சிக்கல் வருகிற இடத்திலே தான் தன் அனுபவத்தை எடுத்து அத்தகைய பாடல்களில் சொல்லிக் காட்டுகிருர். திருமூலர் தம் அனுபவத்தைச் சொல்லுகின்ற பாடல்களைத் தொகுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். அப்படிப்பட்ட பாட்டையும் இந்தப் பாத்திரம் என்ற பகுதியிலே அவர்கள் கொடுத்திருக்கிருர். அவர் தம்முடைய சுவானுபவத்தை எப்படிக் கூறுகிருர் என்பதற்கு அந்தச் செய்யுளைப் படிக்கிறேன்.

திருநாவுக்கரசு சுவாமிகள் முதலானவர்களும் அப்படித்தான் சொல்லி இருக்கிருர்கள். நமக்கும் அவ்வனுபவம் இருக்கிறது. ஆனுல், சகலரானபடியினுலே சொல்லத் தெரியாமல் உடன்மறந்துவிடுகிறேம். தாயினுடைய கருப்பப்பையிலே இருக்கும் காலத்திலே நாம் இறைவனைப்பற்றி எண்ணிக் கொண்டுதான் கிடந்தோம். வெளியிலே வந்தவுடன் வேண்டுமானுல், ஏதாவது ஒரு கட்சியிலே சேர்ந்துகொண்டு 'கடவுளில்லை' என்று பேசலாமே தவிர, எவன் ஒருவனும் மாதாவின் கர்ப்பத்திலே இருக்கிற காலத்தில் குழந்தையாயிருக்கும் பருவத்தில் அவனுடைய அறிவினுலே இறைவனை நினைத்துக் கொண்டு, இனிமேல் இறைசிந்தனையோடு உலகத்திலே பிறந்தோமானுல் நல்ல முறையில் நடந்து, அவன் அடியைத் தேடவேண்டும் என்று நினைக்கத்தான் செய்கிருன். நினைக்கத்தான் செய்கிறது அந்தக் கருவிலே இருக்கும் ஒன்று. அந்த நினைப்பு அப்படியே இருந்துவிட்டால் இன்றைக்கு எல்லோரும் முக்தர்களாகவே மாறிவிடுவோம். ஆனுல் அப்படியே இல்லையே. அங்கே பிரக்ஞாபத்தியம் என்கிற ஒரு வாயுவான்து, நன்ருய் நினைத்துக்கொண்டிருக்கும் குழந்தையைத் திடீரென்று தலைகீழாய் மாற்றிவிடுகிறது. பிறக்கும் நேரத்திலே திடீரென்று தலைகீழாய் மாற்றும்போது உண்டாகும் அதிர்ச்சி காரணமாய் மறந்து நமக்கு இப்போது அந்தச் சிந்தனை இல்லாமற்போய்விடுகிறது. இறையைப்பற்றி எண்ணின எண்ணம் வயிற்றை விட்டு வெளியே வந்தபிற்பாடு, பீறிட்டுக் கொண்டுபோய்விட்டது அதிர்ச்சி காரணமாக. அதிலிருந்து உலகச் சூழலிலேயே நாம் சிக்கி மயங்கிக்கொண்டு கிடக்கிறேம். 'உண்டு' என்று வாதிக்கிறேம்; 'இல்லை' என்று பேதிக்கிறேம். இவ்வாறெல்லாம் மனம் குழம்பும்படி நாமே செய்துகொண்டு விட்டோம். உலண்டு தன்னைத்தானே சுற்றிக்கொண்டு அவதிப்படுவதுபோல இப்போது நாம் அவதிப்படுகிறேம். 'இப்படி அவதிப்படாதீர்கள்' என்று நமக்குத் தன் அனுபவத்தைச் சொல்லி ஞாபகம் ஊட்டுகிருர் திருமூலர்.

கருவிலே இறைவனைப் பற்றியிருக்கும் நினைப்பு எல்லோருக்கும் ஒரேமாதிரிதான் இருக்கும். அவ்வாறு வைத்துக்கொண்டு, பிறந்த பிற்பாடு எவ்வளவு பேதகம் நீங்கள் அடைந்தாலும் அந்த நினைப்பு இருந்ததே, அதை வாசனையாகக்கொண்டு, அதற்கான வழியிலேயே ஒழுகுங்கள், அதுவே போதுமானது; அதற்கான செயலையே செய்யுங்கள், அதுவே போதுமானது என்றுதான் தம்முடைய தேவாரத்திலே திருநாவுக்கரசர் பெருமானும் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்ருர். அவர் சொல்கிறது என்ன ?

'கருவாய்க் கிடந்து'

என்பது வயிற்றுக்குள்ளே இருக்கும் விஷயத்தைச் சொல்லுகின்றது. திருநாவுக்கரசு சுவாமிகள் சொல்வது.

'கருவாய்க் கிடந்து உன் கழலே
நினையும் கருத்துடையேன்'

கை கால் எல்லாம் இப்பொழுது சொல்லப்படவில்லை. மனம் மாத்திரம்தான் அங்கே

வேலை செய்கிறது. உள்ளே இருக்கும் சிசுவுக்கு அறிவு மாத்திரம், மனம் மாத்திரம் வேலை செய்கிறது. எப்பொழுது சுக்கில சோணிதங்கள் சேர்ந்தனவோ, உள்ளே, அப்பொழுதே பிராண வாயுவை வாகனமாய்க்கொண்டு மனம் உடனே புகுந்து விடுகிறது ஆனபடியினால் அதுதான் 'முன் தோன்றி' அது நினைக்கிறது. என்ன நினைக்கிறது? 'கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்' என்பது. அதற்குப் பிறகு, கொஞ்சங்கொஞ்சமாக உருவாகிறது. உருவாகி வெளியே வருகிறது.

'உருவாய்த் தெரிந்து'

அங்கேதான் அவருடைய வாழ்க்கைக்கும் நம்முடைய வாழ்க்கைக்கும் வேறுபாடு. உருவாய்த்தெரிந்த பிறகு நாம் பொருளுக்கோ மருளுக்கோ அலைந்துகொண்டு கிடக்கின்றோம். அவர் என்ன சொல்லுகிறார்.

'உருவாய்த் தெரிந்து உன்றன்
நாமம் பயின்றேன்'

இங்கே 'கருதினேன்' என்கிற விஷயமில்லை. வாய்தான் உண்டாகிவிட்டதே. ஆனபடியினால் வாக்கினாலே நான் எதை மாதாவின் கர்ப்பத்திலேயிருந்து நினைத்தேனோ, அந்த நினைப்புக்குள்ள பொருளை வாயினால் மந்திர ரூபமாகச் சொல்லிக்கொண்டு கிடக்கிறேன் என்று விண்ணப்பிக்கிறார்.

அப்படி கரசரணாதிகளால் அதே கைங்கரியத்தைச் செய்துகொண்டிருக்கின்றேன். வெளியிலே வந்த பிற்பாடு - ஓர் உருவத்தை அடைந்துவிட்ட பிற்பாடு, என்ன என்ன செய்து தாம் உய்வு பெற்றார் என்பதை அவரும் சொல்லிக் காட்டியிருக்கிறார் தேவாரத்தில். இங்கே நம்முடைய ஆசிரியராகிய திருமூலரும் அதே கருத்தைத்தான் நமக்கு வெளியிடுகிறார்.

கைவிட்டிலேன் கருவாகிய காலத்தும்.

நானும் தாயார் வயிற்றிலிருந்து பிறந்தவன்தான்; உங்களைப்போலத்தான் நானும் மாதாவின் உதரத்தில் கிடந்தேன் என்று சொல்லுகிறார். 'மாதா உதரத்தில் நான் வாழ்ந்த அந்தக் காலத்தில் இறைவனது நினைப்பைக் கைவிட்டுவிடாமல் எண்ணிக் கொண்டுகிடந்தேன்' என்கிறார்.

அதற்குப் பிறகு உடம்பை அடைந்து, உருவைப்பெற்று, வெளியிலேவந்த பிற்பாடு அங்கேதான் திருநாவுக்கரசருக்கும் நமக்கும் வாழ்க்கையிலே ஒரு பேதம் வந்தது போல, திருமூலருக்கும் நமக்கும் வேறுபாடு உண்டாகிறது. பிறந்தவுடன் இறைவனை நாம் மறந்து விடுகின்றோம். ஆனால் திருமூலரோ கருவிலேகொண்ட நினைப்பு மாறாதவராய், உருப்பெற்று வெளிவந்தவுடனும் அந்த இறைவன் திருவடியையே தேடி நின்றாராம். அதைச் சொல்கிறார்.

மெய்விட்டிலேன் விகிர்தன் அடி தேடுவன்.

கருவாக இருந்தகாலத்துக் கைவிடாமல் நினைவில் கொண்ட இறைவனை, உடம்பை அடைந்து வெளியே வந்த காலத்திலேயுங் கூட நான் விடாமல் பற்றிக்கொண்டிருக்கிறேன் என்கிறார். அதுதான் சிவஞானிகளாக ஆவதற்கு அடிப்படை. இவ்விடத்தில் தான் அந்தத் தொடர்ச்சி நமக்கு விட்டுப் போவதனால் நமக்கும் அந்தச் சிவஞானம் விட்டுப்போகிறது. அப்படியின்றித் தொட்டுக்கொண்டிருக்கப் பிறப்போமானால், அப்பொழுது சிவஞானத்தின் வித்து ஊன்றப் பட்டுவிடுகிறது; தான் அப்படிக் கருவாய்க் கிடந்தபோது கொண்ட நினைப்பையே உருவாய்ப்பிறந்தபின்னும் இறைவன் நினைப்பை விட்டுவிடாமல் பற்றிக்கொண்டேன் என்று கூறுகிறார் திருமூலர்.

அதற்குப் பிற்பாடு 'பொய் விட்டு' என்கிறார். பொருள்முதலான போகங்கள் இவையெல்லாம் உச்சமானவை என்று நினைத்துக் கொண்டிருந்தகாலம் போய்விட்டது. அவை பொய்; நிலையற்றவை; துச்சமானவை என்ற கருத்துத் தோன்றும்படி, 'பொய் விட்டு நானே புரிசடையானடி - நெய் விட்டிலாத இடிஞ்சிலுமாமே' என்கின்றார்.

சிவபெருமானைக் கருவிலே நினைத்தவர்; சிந்தனைக்குரிய பொருளாக இருக்கும் சிவபெருமானை உருவை அடைந்த பிற்பாடும் நாம் அடைய வேண்டுமென்று கருதிக் கிடந்தவர்; அவர் யாரைத் தேடுவார்?

விகிர்தன் அடி தேடுவன்

என்கிறார். நந்தியெம்பெருமானாகிய பரமாசாரியனைத் தேடினேன். எவன் தன்னை நாடி வருகின்றவருக்கு உபதேசம் செய்து சிவஞானத்தை வழிவழியாகப் பரப்புவதற்கு ஏற்ற தகுதியை எனக்கு அளிக்கவல்லானோ அவன் அடியைத் தேடினேன் என்பாரைப் போல 'விகிர்தன் அடி தேடுவன்' என்கிறார்.

இயற்கையான தன்வடிவத்தை விட்டு, நமக்காக ஒரு வடிவத்தைச் சிவபெருமான் மேற்கொள்ளும் காலத்தில் அவர், பிறரால் ஆக்கப்படாத உருவாய் - உளியினால் தச்சர் கொல்லர் முதலிய இவர்களினால் செய்யப் படாமலே ஓர் உருவத்தைத் தாமாகவே, அருளே திருமேனியாகச் செய்துகொள்ளுகிறார். ஆனபடியினால், அவருக்கு விக்ருதன் என்ற பெயர். 'விக்ருதன்' என்பதற்கு செய்யப்படாதவன் என்பது அர்த்தம்.

ஓர் உருவத்தைத் தாங்கியிருக்கிறதனால் செய்யப்பட்டவர் போலக் காணப்படுகிறாரே தவிர, அவர் செய்யப்படாதவர்; அருளே திருமேனியாகத் தன்னிச்சையினால் தோன்றியவர்; அப்படிப்பட்ட சிவஞானியை நான் தேடிக்கொண்டே கிடக்கின்றேன் என்பார் 'தேடுவன்' என்கிறார். 'இப்படித் தேடாவிட்டால் அருள் வாய்க்காது' என்பதை ஓர்உபமானத்தில்வைத்துச் சொல்லிக்காட்டுகிறார்.

நெய்விட் டிலாத இடிஞ்சிலு மாமே.

எப்போதாவது கொஞ்சம் வேகம்வந்து விட்டால், உண்மையை சாதிக்கச் சொல்லும் வேகம் வந்துவிட்டால், 'செய்' என்று சொல்வதற்குப் பதிலாகச் 'செய்வாயா?' என்று கேள்வியே போட்டுவிடுவதுதான் வழக்கம். 'நீ இந்த வேலையைச் செய்' என்பதற்கு 'நீ செய்வாயா?' என்று கேட்டால், நீ செய்யவேண்டும் என்பதுதான் சொல்கிறவனுடைய கருத்து என்று தெரிந்துகொள்ளலாம். அப்படி இங்கேயும் ஒரு கேள்வியை வைத்திருக்கிறார். ஓர் இருண்ட அறை. அந்த அறைக்குள்ளே இருக்கும் பொருளைத் தேடவேண்டும். அந்தக்காலம். ஓர் அகல் விளக்கும் இருக்கிறது. நெய் இருந்தும் திரி இருந்தும் அது எரி கொளுத்தப்படாத விளக்காக இருந்தால் ஏதேனும் பயன் உண்டா? அதைக்கொண்டு இருட்டறையில் நாம் தேடுகின்ற பொருளைக் கண்டுபிடிக்க முடியுமா? என்று ஒரு கேள்வியைப் போடுகிறார். என்ன பொருள்? நெய்விட்டு எரிக்காத அகல், விளக்கு ஆகாது. அதுபோல் சிவபெருமானுடைய திருவடியை அடைய வேண்டும்; விகிர்தன் அடியைத் தேடுவதே வாழ்க்கையின் குறிக்கோள் என்று சொல்லாதவருடைய உடம்பு உடம்பாகாது. இதோ மின்சாரமிருக்கிறது. மின்சார பல்பு இருக்கிறது. பல்பு எரிய வேண்டும் என்றால், நுணுக்கம் அறிந்தவர் இருந்து மின்சாரத்தைக் கம்பிமூலம் கொண்டுவந்து இத்துடன் இணைக்கவேண்டும். அந்த இணைப்பைப் போலத்தான் இறைவன் திருவருள் இருக்கிறது. அந்தத் திருவருளை நமக்கு ஊட்டக் கூடியவர்கள் யார் என்றால் 'சிவஞானிகள்' தாம். ஆகவே, இந்தப் பிறப்பிலே நாம் அருளைத் தேடவேண்டுமானால் சிவஞானிகளை நாடவேண்டும். இவ்வாறு சொல்லி 'நான் அப்படித்தான் தேடினேன், அடைந்தேன்' என்று உபமானமும் வைத்துச் சொல்லிவிட்டுப் பின்னர், சிவஞானிகள் எப்படி இருப்பார்கள்? என்று சொல்ல வருகிறார்.

உலகத்தில் நாம் எத்தனையோ பேரைப் பார்க்கிறோம். அவர்கள் எல்லாம் சிவஞானிகளா? இல்லையா? என்று எனக்குத் தெரியவில்லை. 'சிவஞானிகள்' என்றால் எப்படி இருப்பார்கள்? அதை எங்களுக்குச் சொல்லுங்கள் என்று கேட்டால், அக்கேள்விக்கு விடைபோலச் சொல்லுகிறார் திருமூலர்.

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன்பேர் நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளை யோனே.

என்ன கருத்து? எல்லாம் அவன் செயலென்று இருப்பவனே சிவஞானி என்கிறார். வைத்துப் பார்க்கலாம் ஒரு பரீட்சை. ஒருவரைப் பார்த்தவுடன் 'என்ன ஐயா உங்களுக்கு இப்படி ஆகிவிட்டதாமே!' என்று கேட்பது; 'என்வசத்திலா இருக்கிறது'

எல்லாம் திருவருள் வசம்; நான் ஏதோ கருவியாய்க் கிடக்கிறேன்' என்று சொல்கிற பழக்கம் ஒருவனிடம் இருக்கிறதா? என்று சிந்தனை செய்யுங்கள்; அப்படிச் சொல்கிற வழக்கம் உண்மையிலே ஒருவன் இதயத்திலிருந்து உதிக்குமானால் அவன் சிவஞானி ஆவதற்குரிய முதற்படியில் ஏறியிருப்பவன் என்று தெரிந்துகொள்ளலாம்.

ஒருடாக்டர். அவருக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டும் அவரது இரண்டு கண்களைப் போன்ற பிள்ளைகள்; வேறு சந்ததி இல்லை. அந்த இரண்டு பிள்ளைகளுக்கும் டைபாய்டு ஜுரம் ஒரேகாலத்தில் வந்தது. இரண்டு பேர்களையும் இரண்டு அறைகளில் படுக்க வைத்திருக்கிறார் அவர். உண்மையான சரித்திரம் சொல்கிறேன். கட்டுக்கதை அல்ல. இரண்டு பேரையும் அவர் பிழைக்க வைக்கவேண்டும் என்ற கருத்தோடுதான் பார்க்கிறார். நல்ல மருந்தை இரண்டு பிள்ளைகளுக்கும் கொடுக்கிறார். ஊசி போடுகிறார். ஏனென்றால், இருவரும் அவருடைய சொந்தப் பிள்ளைகள். நல்ல வயது வந்த பிள்ளைகள். காலேஜ் படிப்பிலிருக்கும் பிள்ளைகள். அவர்களை எவ்வளவு தூரம் கவனிப்பார், தன்னுடைய வயதுத் தளர்ச்சிக்காலத்தில்? இவ்வளவு கவனித்து வருகின்ற டாக்டர் என்ன நினைக்கிறார் மனத்திலே. இரண்டு பிள்ளைகளும் உயிர்பெற்று எழவேண்டும் என்றுதான் நினைக்கிறார். அவருக்கு மனத்திலே ஒன்றும் பாரபட்சம் இல்லை. கொடுக்கின்ற மருந்திலும் வேறுபாடு காணோம். ஆனால், கடைசியில் என்ன ஆயிற்று? இன்றைக்கு ஒரு பிள்ளைதான் இருக்கிறது. இருவரும் பிழைக்க வேண்டும் என்ற கருத்து தந்தையும் மருத்துவரும் ஆகிய அவருக்கு இருந்தும் ஒரு பிள்ளைதான் பிழைத்தது. இன்னொரு பிள்ளை இறந்தது.

வைத்தியம் செய்துகொண்டு இருந்த போது 'இருவரையும் பிழைக்கவைத்துவிடுவேன்' என்று சொல்லிக்கொண்டு இருந்த அவரை இன்றைக்குப்போய் 'என்ன ஐயா? எத்தனையோ நீங்கள் பாடுபட்டும் ஒரு பிள்ளை போய்விட்டதே' என்று கேட்டால் 'நான் என்ன செய்வது ஐயா; நம் கையிலா இருக்கிறது? நம்மாலாவது என்ன? ஈசன் கொடுத்தான் எடுத்துக்கொண்டான்' என்று சொல்கின்றார் இன்றைக்கும். ஆனால் பிள்ளைகள் இரண்டு பேரும் ஜுரத்தோடு படுக்கையிலே இருந்த அன்று இப்படிச் சொல்லக் காணோம். 'இரண்டுமக்கள் நோயையும் குணப்படுத்தி விடுவேன்' என்று பேசிக் கொண்டிருந்த அவருடைய முனைப்பை இச் சம்பவம் மழுப்பிவிட்டது. இவ்வாறு உலகத்திலே இறைவனுடைய திருவருள் ஆக்க வேண்டியதை ஆக்கியும், அழிக்கவேண்டியதை அழித்தும் செய்துகொண்டிருக்கிறது. இந்த உலகமும், ஆருயிர்க் கூட்டங்களும் இறைவன் திருவருளிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூரியன் கிழக்கே உதிக்கப் போவது இல்லையாம், நாளைக்கு வடக்கே உதிக்கப்போகிறானாம் என்றால் உதித்தால் உதிக்கட்டுமே, அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும்? என்று சொல்கிற அவ்வளவுதூரம் பற்று விட்டுப் போன தன்மை நம்மிடம் வருமானால் - நம் செயலால் ஆவது ஒன்றும் இல்லை என்ற உண்மையான நினைப்பு வருமானால் - அது தான் சிவஞானியாக நாம் காணப் போகிறவருக்கு முதல் லட்சணம். 'ஆவன ஆவ' என்று சொல்லிக் காட்டுகிறார். இப்படிப் பல லட்சணங்களைச் சிவஞானிகளுக்கு அவர் சொல்லி, இந்தப் 'பாத்திரம்' என்கிற அதிகாரத்தைப் பூர்த்திசெய்கிறார். இந்தச் சிவஞானிகளை எவ்வாறு சந்தோஷப்படுத்தி அவர்களுடைய அருள்நோக்கத்தைப் பெறுவது என்று கேட்பாருக்கு விடை சொல்வாரைப் போலத்தான் பாத்திரம் என்ற அதிகாரத்தின் முதல் பாட்டைத் துவக்கினார். என்னிடம் நிறையப் பொருள் இல்லையே கொடுத்து அவர்கள் அருளைப் பெறலாம் என்றாலும் என்று ஏங்குவாருக்குச் சொல்வதுபோல நிறையப் பொருள் கொடுக்க வேண்டும் என்பது இல்லை, எள் அத்தனை சிவஞானிகளுக்கு ஈந்தாலும் போதும்.

*திலமத்தனையே சிவஞானிக்கு ஈந்தால்.*

சித்தியாரிலேயும் இதே பதத்தைத்தான் உபயோகிக்கிறார்கள். அதுபோல நீங்கள் எள் அத்தனை உதவி செய்வீர்களானால் போதும்

என்கிறார். இன்றைக்குப் பஞ்சவடி என்று இருக்கிற க்ஷேத்திரத்திலே ஐந்து பெரிய ஆலமரங்கள் விரிந்து படர்ந்து கிடக்கின்றனவே அவை ஒரே வித்திலிருந்து உண்டானவைதாம். பஞ்சவடியாக விளங்கும் அந்த இடம், ஒரு சின்ன வித்திலிருந்து உண்டானதுதான். அதுபோலத் திலம் அத்தனை சிவஞானிகளுக்கு உதவுங்கள்; அவ்வாறு உதவுவீர்களானால், அந்த உதவியானது வளர்ந்து உங்களுக்குப் பல முத்தி, சித்தி, பரபோகமும் கொண்டுவந்து தரும் என்று கூறுகின்றார். நீங்கள் கொடுக்கும் பொருள் மிகக் கொஞ்சமாக இருந்தாலும் போதும் என்று நமக்குத் தட்டிக்கொடுத்து, உற்சாகமும் ஊட்டுகிறார். நிலம் அத்தனை ஈய வேண்டுவது இல்லை, திலம் அத்தனை ஈந்தாலும் போதும் என்று நம் சக்தியை உணர்ந்து பேசுகிறார். நாமும் பொருளைக் கொடுக்கிறோம். ஆனால் எந்தப்பாத்திரத்தில் இடவேண்டுமென்று தெரிந்து இடுவதில்லை. பாத்திரம் அறிந்து இடவேண்டும் என்பாரைப்போல, நிலம் அத்தனை பொன்னை நிர்மூடர்களுக்கு ஈந்து என்ன பயன்? உங்கள் கைப்பொன் விரயம் ஆகும்; அதோடு மறுமை இன்பத்தினையும் இழப்பீர்கள்; அப்படியின்றித் திலம் அத்தனை - எள் அத்தனை சிவஞானிகளுடைய பாத்திரத்தில் ஈந்தால் உங்களுக்கு இகலோக வளவாழ்வு மட்டுமல்ல, இறப்பில்லாப் பேரின்ப வாழ்வும் கிடைக்கும் என்கிறார். சத் பாத்திரம் சிவஞானிகள்தாம். தங்களுடைய ஆன்மாவில் சிவனுடைய அருளைத் தேக்கி வைத்திருப்பவர்களே சிவஞானிகள் - சத் பாத்திரர்கள். ஆகவேதான்,

திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமுமற் றேபர போகமும் குன்றுமே.

என்று சொன்னார்.

நிர்மூடர்களுடைய பாத்திரத்தில் நிலமத்தனை பொன்னை ஈவதற்குப் பதிலாக, சிவஞானிகளுடைய பாத்திரத்தில் சிறிது பொருளை ஈந்தாலும் போதும். திலமத்தனை ஈந்தாலும்போதும். அவர்களுக்குக்'கிஞ்சித்' கொடுத்தாலும் போதும் - நாம் கிருதார்த்தர்களாகி விடுவோம் இந்தச் சகலர் பிறப்பிலேயே என்பதாகப் 'பாத்திரம்' என்ற தலைப்பிலே சூட்சுமமாக ஆசிரியர் பொருளுக்கும் அருளுக்கும் இணைப்பு எது என்கிறதைக் குறிப்பிட்டுள்ளார் என்கிற விஷயத்தை உங்களுடைய திருமுன்பே விண்ணப்பித்துக் கொண்டு, அடியேனுக்கு இந்த வாய்ப்புத் தந்தமைக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடைய திருவடித்தாமரைகளை முடிமேல் சுமந்துகொண்டு உங்களனைவரையும் வணங்கி அமர்கிறேன்.

கண்டிருந் தாருயிர் உண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் குணத்தனை
நன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனைச்
சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே.

— திருமந்திரம்.

'அபாத்திரம்'

ஆதீன வித்துவான்

# திரு. து. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்,

திருவாவடுதுறை.

கருணையே வடிவமாக விளங்குகின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளுக்கு என் மனமொழி மெய்களால் வணக்கம் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். மற்றும் இங்குள்ள முனிபுங்கவர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும் என் வணக்கம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

பத்தாண்டுகளிலேயும், 'ஆயிரம்கொடுப்பர் போலும் ஆவடு துறையனாரே' என்று ஆயிரம் ஆயிரமாகப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றனவே; அப்படி வழங்கப்பட்டவைகளிலே முன்னே திருமூலருடைய திருமந்திரத்துக்கு எங்கள் மகாவித்துவான் அவர்கள் எழுதிய 'பஞ்சாட்சரதீபம்' என்ற உரை; அதன் பின்னே எங்கள் ஆதீன வித்துவானாக இருக்கிற ஸ்ரீநிவாசாசாரியார் அவர்களுடைய உரைநடை; இத்தனை புத்தகங்களையும் வாரி வாரி வழங்குகிறோமே; இவன் ஏதாவது அந்தப் புத்தகத்தைத் தொட்டுப் பார்த்திருக்கிறானா? என்று இவ்வளவுகாலம் தாழ்த்து அடிமையை அளக்கின்றார்கள் குருமகாசந்நிதானம்.

முன்னே பதித்து வெளியிட்டது உரையோடு கூடிய பகுதி. இதிலே எனக்கு வேலை இல்லை. எல்லோருமே நன்றாகப் படித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். எல்லாரிடத்திலேயும் புத்தகம் இருக்கிறது. ஆதலினாலே இங்கே எனக்கு வேலை இல்லையென்று சொல்லி அமைதலே என்னுடைய நல்ல முடிந்த முடிபு. என்றாலும்கூட, அந்த நூலை நான் படித்திருக்கிறேனா என்று ஒருசோதனை உண்டு அல்லவா? அதற்கு நான் ஏதாவது சில அம்சங்களாவது பெறுதல்வேண்டும். சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தொண்டர்களுடைய பெருமையைத் 'திருத்தொண்டத் தொகை'யாக அருளினார்கள். அதை நம்பியாண்டார் நம்பிகள், 'திருத்தொண்டர் திருவந்தாதி'யாகச் செய்தார்கள். அதனை விரித்துச் சேக்கிழார் பெருமான் நமக்குத் திருத்தொண்டர் புராணமாக அருளினார்கள். அந்தமட்டோடு அது நின்றுவிடவில்லை. உமாபதிசிவம் 'திருத்தொண்டர் புராணசாரம்' ஒன்று அருளினார்கள். அதுபோல, நமக்குத் திருமூலருடைய வாக்காகிய திருமந்திரம்; பஞ்சாட்சரதீபம் என்ற உரை; மற்றொரு உரைநடை; அவைகளோடு இல்லாமல் கருத்தாக ஒன்று வெளிவர இருக்கிறது. அதனை எங்கள் ஞானானந்தா அவர்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இத்தனை உபகாரங்கள் நமக்கு இருக்கின்றபோது, இந்த நூலிலே பிரவேசிப்பதற்கு மிக மிக ஆர்வத்தோடு நாம் செல்லுதல் வேண்டும். அப்படிச் சென்று பார்க்கும்போது, முன்னே மூவகைச் சீவவர்க்கம் என்று சொன்னார்களே; அந்த நிலையிலே விஞ்ஞானகலராக எங்களுடைய மகாவித்துவான் அவர்களை நான் உருவகம் செய்து கொள்ளுகிறேன். பிரளயாகலராக வித்துவான் ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்களை நான் உருவகம் பண்ணிக்கொள்ளுகிறேன். இப்பொழுது நான் சகலனாக வந்து நிற்கிறேன். இந்த மூவகை ஆருயிர் வர்க்கம் இருக்கிறதே, அதனை இப்பொழுது அடியேன் இந்தப்படி வைத்துக் கொண்டால், நான் இந்த மலநிலையிலே, பொழுது போக்குகின்ற நிலையில் திருமூலருடைய திருவருள் எண்ணத்தில் தோன்றிய அந்தப் பகுதிக்கு உரை காணுதல் என்னுடைய அறிவால் இயலுமா? இயலாது. சாதனங்கள் இருக்கின்றன. நான் அப்படியே அதைத் திருப்பி உங்களிடத்தில் ஒப்பித்து விடுகின்றேன், அந்த அளவிலே;

'புத்தகமே சாலத்
 தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தக மெல்லாம்
 நிறைப்பினும்—புத்தகத்தைப்

போற்றும் புலவரும்
வேறே பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.'

—நாலடியார்.

என்றதனுலே நாங்கள் இங்கு ஆதீனத்தில் ஆயிரக்கணக்காக புத்தகங்களைச் செலவழிக்கிறோமே, அந்த வித்துவான்களாவது ஏதாவது தொட்டுப் பார்த்திருக்கின்றுர்களா? இங்கே அடிமையாகக் கிடக்கிறேனே, இவனுவது ஏதாவது செய்திருக்கிறுனு? என்ற நிலையில்தான், இப்பரீட்சை எனக்கென்று எழுந்தது. ஆழ்ந்த கடலினிடத்திலே போய் ஒரு நாழியைக்கொண்டு அளந்தால், அது நான்கு நாழியை முகந்துகொள்ளாது, அது எவ்வளவு கொள்ளுமோ அந்த அளவுதான் கொள்ளும். அதுபோலே, எனது அறிவு திருமந்திரமாகிய கடலில் நுழைந்து எவ்வளவு கொள்ளமுடியும்? ஏதோ என் அளவுக்கு என்னுல் இயன்ற அளவு மொண்டு உங்கள் முன்னே சமர்ப்பிக்கின்றேன்.

இங்கே அபாத்திரம், பாத்திரம். பாத்திரம் என்ருல் கொள்கலம். அபாத்திரம் என்ருல் கொள்ள முடியாதது. எதற்கும் பயன் இல்லாதது என்ற நிலையில் கொள்கலமாக உள்ள ஒன்று எப்படிப் பக்குவ நிலையை உண்டுபண்ணிக்கொள்வது என்ருல், அதைத் திருவாசகத்திலே பல இடங்களில் மாணிக்கவாசகசுவாமிகள் சொல்லுகிருர்கள்.

ஆமாறுன் திருவடிக்கே
அகம் குழையேன் அன்பு உருகேன்
பூமாலை புனைந்து ஏத்தேன்
புகழ்ந்து உரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில்
தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே.'

திருமந்திரத்திலே பல இடங்கள் இவ்விஷயங்களை எடுத்துக்காட்டுகின்றன.

இந்த அளவுதான் நம்முடைய இந்தக் கீழ்நிலையை மாற்றிப் பக்குவம் இல்லாத நிலையிலிருந்து பக்குவ நிலைக்குக் கொண்டு வரச் செய்வது. ஆதலினுலே, நம்முடைய சொல்லிலே, செயலிலே, எண்ணத்திலே தூய நிலையிலே நாம் வாழ்தல்வேண்டும் என்பதைக் காட்டியிருக்கிருர் திருமூலர்.

இதைத் திருநாவுக்கரசு சுவாமிகளும் சொல்லுகிருர்கள்: 'அந்தப் பாத்திர அபாத்திரங்களை நீங்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும்; நீங்களும் நல்ல பாத்திரமாக இருத்தல் வேண்டும்; அந்தப் பாத்திரத்தில் கொள்ளுவதைக்கூட நல்லதாகக் கொள்ளுதல் வேண்டும்' என்று சொல்லுகிருர்கள் :-

'சாத்திரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திர மும்குலமும் கொண்டுஎன் செய்வீர்
பாத்திரம்சிவன் என்றுபணி திரேல்
மாத்திரைக்குள் அருளும்மாற் பேறரே.

பக்குவ ஆன்மாவாக இருந்தாலுங்கூட, அது பற்றிக்கொள்ளுகின்ற பரம்பொருள் ஒப்புயர்வற்றது என்று உணர்தல்வேண்டும். அந்த ஒப்புயர்வற்ற பரம்பொருளை அடைந்தாலல்லாமல் ஒப்புயர்வற்றநிலையை நாம் அடைதல் கூடாது.

பின்னே சொல்கிருர் நோன்பு,' விரதம், முதலானவைகளெல்லாம் வேண்டும் என்று. அது பட்டினி கிடத்தல் முதலானவைகளில் இல்லை என்று நீதி நூல்களும் மற்ற நூல்களும் நமக்கு நன்ருகச் சொல்லுகின்றன.

'முப்பதாம் ஆண்டளவில்
மூன்றற்று ஒரு பொருளைத்
தப்பாமல் தன்னுள் பெருனுயின்

என்று ஔவையார் சொல்லுகிருர். அந்தச் சாதனங்கள் எல்லாம் முப்பது வயதுக்குள்ளே பெற்ருல் அல்லாமல் முடிவுவரையில் நன்ருக அனுபவிக்க முடியாது என்று திட்டமாக வேறு நூலாரும் நமக்குக் காட்டுகின்ருர்கள்.

'பருவத்தே பயிர் செய்' என்பது மிக இளம் பருவத்திலேயே சிவப்பயிரை நமது மனத்திலே நன்ருக ஊன்றி வளர்த்தல் வேண்டும் என்பதை அறிவிக்கின்றது.

பின்னே மூன்றும் பாடலிலே திருமூலர் என்ன சொல்கிருர் ? பஞ்ச பாதகம் என்று -

'அதி பஞ்ச பாதகம்' என்று சொல்லுகின்ருர். பாதகம், உப பாதகம், அதி பாதகம், மா பாதகம் என்று பாதகங்கள் பல வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அதிலே பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலில், 'மா பாதகம் தீர்த்த படலம்' என்று ஒரு படலம் உண்டு. அந்த மாபாதகங்கள் எப்படிப் பட்டவைகள் என்பதை அங்கே காணலாம். அந்த மாபாதகங்களில் மேம்பட்டன சிவத் துரோகங்கள்.

இங்கே 'தூய குரவன்' என்று சொன்னதனுல் ஞானசாரியனையே அது குறிக்கிறது. சாதனங்கள் ஒன்றும் செய்யாமலே ஏதோ பலனைப் பெறவேண்டும் என்று நினைக்கிருனே, அவனை 'அபாத்திரன்' என்ருர். அதற்கு ஒரு உதாரணம் :-

'சொக்கிட் டரமனைப் புக்குள்
திருடிய துட்டர்வந்து
திக்குற்ற மன்னரைக் கேட்பது
போற்சிவ நிந்தைசெய்து
மிக்குக் குருலிங்க சங்கமம்
நிந்தித்து விடிச்சிக்கும்
எக்குப் பெருத்தவர்க் கென்சொல்லு
வேன்கச்சி யேகம்பனே.'

'எக்குப் பெருத்தவர்' என்று இருக்கிறதே இதுதான் இங்கே பக்குவம் இல்லாதநிலை. அதாவது அபக்குவநிலை; அபாத்திரர். இன்னெரு இடத்தில் சொல்லுகிருர் :-

'கடுஞ்சொல்லின் வம்பரை ஈனரைக்
குண்டரைக் காமுகரைக்
கொடும்பவ மேசெய்யும் நிர்மூடர்
தம்மைக் குவலயத்துள்
நெடும்பனை போல வளர்ந்துநல்
லோர்தம் நெறியறியா
இடும்பரை ஏன்வகுத் தாய்இறை
வாகச்சி யேகம்பனே.'

இவர்கள்தாம் அபக்குவநிலையிலுள்ளவர்கள். அந்தப் பக்குவநிலைக்கு வருவதற்கு என்ன செய்து கொள்ளுதல் வேண்டும் என்ருல், அதைப் பரஞ்சோதி முனிவர் சொல்லுகிருர்.

'துறவினர் ஈசன் நேசத்
தொண்டினர் பசிக்கு நல்லூண்
திறவினைப் பிணிக்குத் தீர்க்கும்
மருந்துடற் பனிப்புக் காடை
உறைவிடம் பிறிதும் நல்கி
அவரவர் ஒழுகிச் செய்யும்
அறவினை இடுக்கண் நீக்கி
அருங்கதி உய்க்க வல்லார்'

என்ருர். அவர்களை நல்லநிலையிலே வேலி போலப் பாதுகாத்தல் இருக்கிறதே அது தான் நம்மைப் பாதுகாக்கும்.

'நிச்சலும் ஈசன் அன்பர்
நெறிப்படின் சிருர்மேல் வைத்த
பொச்சமில் அன்பும் மன்னர்
புதல்வரைக் கண்டால் அன்ன
அச்சமும் கொண்டு கூசி
அடிபணிந்து இனிய கூறி
இச்சையாறு ஒழுகி உள்ளக்
குறிப்பறிந்து ஏவல் செய்வார்.'

இந்த நிலை அபக்குவர்களைப் பக்குவ நிலைப் படுத்துவதற்கு உரியது; அபாத்திரரைப் பாத்திரராகச் செய்வது. இந்த நிலையை விட்டுத் தவறினுல் அபக்குவநிலையிலேயே அபாத்திர நிலையிலே ஆழ்த்துவது. உயிர் பக்குவ நிலையை அடைவது என்று சொல்கிற அந்தப் பக்குவம் என்ருல் என்ன?

ஆசாரியன் அநுக்ரகித்தவாறே,சந்தேக விபரீதம் இல்லாமல், அப்படியே வாங்கிக் கொண்டு, தான் அனுபவத்திலே நிற்றல். இதுதான் பக்குவம் என்று சொல்லுவது. அவரே பாத்திரர், ஏனையோர் அபாத்திரர். இது இலேசான காரியம் இல்லை.

சிவஞான சித்தியாரில் நல்ல பக்குவத்தை விரித்துச் சொல்லுவார்; மூவகை ஆருயிர் வர்க்கம் என்று எடுத்துக்கொண்டு, அந்த வரிசையிலே பக்குவ நிலையைப்பற்றி நன்ருகச் சொல்வார்கள். புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம் புக்கும் வந்தால் கடைசியில் பக்குவநிலையில் வந்து சிவத்துவத்தை அடைவதற்கு அது ஏதுவாகக் கொண்டுவந்துவிடும் என்று சொல்கிருர். இஃதல்லாத நிலைதான் அபாத்திர நிலை.

நான்காவது பாட்டிலே, கொடுக்கின்றவர்களுக்கும் சிவசிந்தனை இருத்தல்வேண்டும். வாங்குகிறவர்களுக்கும் சிவசிந்தனை இருத்தல்வேண்டும். அதை நம்முடைய நமஸ்காரக் குறிப்பிலே: ஒருவரை நாம் வணங்கினால், அந்த ஆன்மாவிலே உயிருக்கு உயிராயிருக்கின்ற பரம்பொருளுக்கு இந்த வணக்கம் என்று நாம் கொடுத்தல் வேண்டும். பெற்றுக் கொள்கின்றவனும், நான் கல்வி உடையேன், செல்வம் உடையேன், அதிகாரம் உடையேன், வேறு ஒன்றிலே சிறந்தவன் என்று பெற்றுக்கொள்வானுனால், சிவத்திரவியம் கவர்ந்தவன் செல்கின்ற ரௌரவாதி கும்பீபாகத்திலேசென்று வருந்துவான் என்று சிவாகமம் கூறுகிறது. ஆதலினாலே கொடுக்கின்றவன் இதைச் சிவனுக்கென்று கொடுத்தல்வேண்டும். வாங்குகிறவனும் சிவனுக்கு என்று அதைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இந்த நிலையை நான்காவது திருப்பாட்டிலே திருமந்திரத்திலே அருளிச்செய்கின்றார்.

இந்த ஒரே மாதிரியான அப்பொருள் பல நிலைகளிலே இருப்பானேன் என்றால், அதற்கு ஒரு உதாரணம் கொடுக்கின்றார், துறவுக்கு அடிப்படையாக வாழ்ந்த நம்முடைய பட்டினத்தடிகள்.

அப்பென்றும் வெண்மைய தாயினும்
ஆங்கந் நிலத்தியல்பால்
தப்பின்றி யேகுண வேற்றுமை
தான்பல சார்தலினால்
செப்பில் அபக்குவம் பக்குவ
மாயுள்ள சீவனிலும்
இப்படி யேநிற்ப னெந்தை
பிரான்கச்சி யேகம்பனே'

இந்த உயிர் பக்குவநிலையிலே நின்றால் சொல்கின்றதை வாங்கி அப்படியே, அனுபவத்திலே வைப்பதற்கு முடியும். அபக்குவ நிலையில் முடியாது. ஆனால் முடியாதா? என்றால் மெல்ல மெல்ல நாளாவட்டத்தில் அது பக்குவப்பட்டு வந்துவிடும். எனக்கு முன்னே பேசிய பெரியவர்கள் இருக்கிறார்களே, அவர்கள், 'பொருள்வேண்டும் அருள் வேண்டும்; இந்த உலகத்திற்குவேண்டும் அந்த உலகத்திற்கு வேண்டும்' என்று சொன்னார்கள் அல்லவா?

'பொருளுடை யோரைச் செயலினும்
வீரரைப் போர்க்களத்தும்
தெருளுடை யோரை முகத்திலுந்
தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடை யோரைத் தவத்திற்
குணத்தி லருளிலன்பில்
இருளறு சொல்லினுங் காணத்
தகுங்கச்சி யேகம்பனே'

என்றருளினார் பட்டினத்தார். 'இருளறு சொல் இருக்கிறதே, அதுதான் இப்பக்குவ நிலைக்குக் கொண்டுவரும். எல்லாமிருக்கும். இந்த இருளோடுகூடிய சொல்லுமிருக்கும். அது அத்தனையையும் வீண் பண்ணிவிடும். அந்தச் சிவன்தான் கொடுத்தான், சிவன் தான் செலவழிக்கிறான் என்ற ஒரு பெரிய எண்ணம் வரவேண்டுமானால், அது நல்ல பயிற்சியிலே வருதல்வேண்டும். அதையும் சொல்லுகிறார்.

'பிறக்கும் பொழுது கொடுவந்த
தில்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ
தில்லை யிடைநடுவில்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்தந்த
தென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக் கென்சொல்லு
வேன்கச்சி யேகம்பனே.'

இங்கே 'இறக்கும் குலாமருக்கு என் சொல்லுவேன்?' என்று சொல்லுகிறார். இதுதான் அபாத்திர நிலை, கொடாதநிலை. கொடுக்கிற நிலை வந்துவிட்டால் அதுதான் பாத்திரம், சற்பாத்திரம், அது பக்குவநிலை?

சூரியன்தான் எங்கேயும் மிக நன்றாகத் தன்னுடைய கிரணத்தை வீசுகிறது. அது எல்லாவற்றிற்கும் ஒளி உடையதாகப் பயன் படுகிறதா என்றால், சில நாட்களுக்குமுன், என்னுடைய ஒரு கண்ணுக்கு நேர்ந்த ஒன்றினை நினைக்கிறபோது, கண் இல்லாதவர்கள் என்ன துன்பமடைவார்கள் என்பதை உணர்ந்தேன். ஏட்டிலே படித்ததை என் அனுபவத்தில் இறைவன் உணர்த்த வேண்டுமே, அதற்காக எனது இடக்கண்ணிலே துன்பம் உண்டுபண்ணினார். அவர் உண்டு பண்ணினாரா? நானாக உண்டுபண்ணிக் கொண்டேனா? நான் தேடிக்கொண்டவினை;

என் வினை, அதை அவன் ஊட்டினுன். எதனுலே இந்தக் கண்ணுக்கு இந்த ஊனம் வந்திருக்கவேண்டும் என்று நான் சிந்தித்துப் பார்க்கிறது உண்டு. 'நமசிவாயமூர்த்திக்குத் துரோகம் செய்திருப்பேன்' என்று நினைத்தேன். அந்த அன்னத்தை, அந்த உடைய அந்த அருளைப் பெறுகிறேனே! என்ன நான் செய்திருக்கிறேன்? ஒன்ருவது இல்லே, முன்பு கட்டுக்கட்டாகப் புத்தகம் வெளிவருமே. இப்போது ஒரு வருஷத்திற்கு ஒரு புத்தகங்கூட வரவில்லேயே; இவனுக்குக் கண் இருந்தும் என்ன பயன்?' என்று நமசிவாயமூர்த்திகள், 'கண் போகட்டும், இப்போதாவது புத்தகம் வருமா?' என்று எண்ணினுர் என்றுதான் நான் எண்ணி எண்ணி அழுதேன். இப்பொழுது கண் கொஞ்சம் தெரியும். ஒரே இருளாக இருந்த ஒன்று, இப்போது ஓரளவிலே ஒரு வடிவம் இருக்கிறது என்று காணும் நிலே இந்த இடக்கண்ணுக்கு வந்திருக்கின்றது. அதனுல் நான் என்ன செய்யவேண்டும். எனது கண் நன்ருகத் தெரியும் காலத்திலே செய்யவேண்டிய கடமையை நன்கு செய்து முடிக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். எண்ணம் நல்லதாயிருக்கலாம் அல்லவா? செயல் எப்படியோ? என் ஊழினமைப்பால் அமைகிறது.

பொல்லா இருளகற் றுங்கதிர்
கூகையின் புண்கண் ணுக்கு
அல்லா யிருந்திடு மாறெக்கு
மேயறி வோருளத்தில்
வல்லா ரறிவா ரறியார்
தமக்கு மயக்கங்கண் டாய்
எல்லாம் விழிமயக் கேயிறை
வாகச்சி யேகம்பனே.'

சூரியனுடைய கிரணம் நல்ல ஆந்தையின் கண்ணுக்கு இருட்டாகத்தானே இருக்கும்? அறிவோர் உள்ளத்தில் வல்லார் அறிவார், அறியார் தமக்கும் மயக்கம் கண்டாய், உணர்ச்சியுள்ள பெரியோர்கள் சிவஞானிகள், அந்தப்பொருளே அறிவார்களே அல்லாமல், ஏனையோர் அறியமாட்டார்கள். இவைகளெல்லாம், 'விழிமயக்கே இறைவா கச்சி ஏகம்பனே' என்று அபக்குவநிலே-அபாத்திரநிலே இன்னது என்பதை நமக்கு நன்ருக இதனேடு சேர்த்துப்பார்ப்பதற்கு உரிய ஒரு வாய்ப்பை அளித்தார்கள் பெரியவர்கள்.

மூலன் மரபிலே வந்த தாயுமான அடிகள், அந்தப் பக்குவநிலேயை அப்படியே வாங்கிக்கொண்டு பேசுவார். ஆதலினுலே பெரியோர்களே! ஒரு நூலேக் கற்பதற்குப் பல நூல்களினுடைய துணே உண்டு. இன்றைக்கு ஆதீனத்திலிருந்து வெளியாகின்ற திருமந்திர உரையை வைத்துக்கொண்டு, நம்முடைய அறிவு அங்கே சென்று வாங்கிக் கொள்ளுகிறநிலேயில் எப்படி எப்படியோ நம்மைத் திருத்திக்கொள்ளலாம் என்ற அளவிலே ஆதீனத்திலே வெளியிட்டுள்ள உரையை ஒருவாறு நானும் தொட்டுப் பார்த்திருக்கிறேன் என்ற விண்ணப்பத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கின்றேன். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் நீடு வாழ்க, அவர்களுடைய ஒப்புயர்வற்ற பெருங்கருணே வாழ்க, ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் திருமரபு வாழ்க, மெய்கண்டசந்தானம் வாழ்க என்று வாயாரப் புகழ்வது அல்லாமல் நாமெல்லாம் என்ன செய்யக்கடவோம்.

# இரண்டாம்நாள் பேருரைகள்

தலைமையுரை:

## சிவஸ்ரீ ஈசானசிவாசாரியார் அவர்கள்,

பழநி.

*சிவநேசச் செல்வர்களே!* கருணைக் கடலாகிய சிவபெருமானின் திருவருள் நமக்கு இந்த நிலவுலகத்திலே அருளுதற்பொருட்டு எழுந்தருளிய திவ்விய ஸ்தாபனம் நம்முடைய சைவ ஸ்தாபனமாகும். இந்த ஸ்தாபனத்திலே 'பாரம்பரியம்' என்று சொல்லுகின்ற ஒன்றிலே பயன் உடையதாகி, நாம் எல்லாம் உய்வு பெறவேண்டுமானல், அதற்கமைந்த ஆதீனம் திருவாவடுதுறை ஆதீனமாகும். இந்த ஆதீனத்திலே, ஒளிபெற்று விளங்குகின்ற தங்கத்தை மேலும் மெருகிட்டு மிகுந்த ஒளியினைப்பெறச் செய்யுமாறுபோல நிலைபெற்ற நம்முடைய சமயப்பொருள்கள் இன்று ஒளிபெற்று விளங்கும் வண்ணம் பன்னெடுங் காலத்திய சிவானுபவங்களை சிவாகம சாஸ்திரத்தின் நுட்பப்பொருளைத் தொகுத்தெடுத்து விளக்குதற்கு உரிமை, தகுதி, தவம், சிவஞானம், அனுபவமாகிய இவையெல்லாம் திரண்டு ஒரு வடிவெடுத்தாற்போன்று கிருபா சமுத்திரமாகிய திருமூலதேவ நாயனருடைய திவ்விய திருவாக்காகிய 'மந்திரமொழி' என்று சொல்லுகிற ஒன்று, உய்வு பெறுவிக்கும் என்று சொல்லுகின்ற குறிப்பு நாம் ஆய்ந்து முடிவுக்கு வாராமலேயே அதனுடைய பெயரினலேயே புலப்படுத்திக்கொண்டிருக்கிறது. 'மந்திரம்' நினைப்பவர்களைப் பவசாகரக் கடலிலிருந்து தாண்டச்செய்கின்ற குறிப்பினை உடையது என்பதனை நமது சமய அறிவு உணர்வு கொண்டு நாம் எல்லாம் தெளிந்தபொருள்; ஆதலினலே, 'மந்திரம்' என்ற தலைப்பிலே வைத்து நம்முடைய சமய உண்மைகள்பல சிந்திக்கத்தக்கன என்று சொல்லுகின்ற ஒரு கருத்து, ஆகமத்திலே ஆங்காங்கே பெறப்படுமாயினும், இவைகளையெல்லாம் வடித்தெடுத்த பொருள் என்று சொல்லுகின்ற இந்த அளவிலே, திருமந்திரம் மூவாயிரம் திருப்பாடல்களினலே, தொகுத்தெடுத்து உரைக்கின்ற மிகப் பெரும் சிறப்பு, நமது சிந்தனைக்கும் சாதனைக்கும் ஆசிரியனுடைய போதனைக்கும் நம்முடைய பேற்றுக்கும் உரியதாகிறது.

'மந்திரம்' என்று சொல்லுகின்ற தலைப்பிலே இதனைத் தருகிற திருக்குறிப்பு, சிவாகமங்களிலே, வேதத்திலே, எல்லையில்லாது விளங்குகிற இந்த ஞானப் பெருங்கடலிலே சில்வாழ்நாள் பல் பிணிச் சிற்றறிவினராகிய மாந்தர், இந்த நாளிலே அறிதல் மிகமிகக் கடினமானதாகும். ஜீவ இயல்போடுகூட, காலத்தின் இயல்பினலும் அறிவு குறைந்து வருகிறதன்மை, இக்கலியுகத்திற்கு அமைந்திருக்கிறது. உயிர்களுக்கென்றே அமைந்த இயல்பு சில்வாழ்நாள் பல் பிணிச் சிற்றறிவு என்பது. அது கால எல்லையைக் கடந்த நியத தர்மம். காலத்தின் உள்ளே அகப்பட்டுச் சுருங்கியது பின்னலே வருகிறதாயிருக்கிற பாஷாஞானம் முதலியவைகளிலே உள்ளதாயிருக்கிற குறைவு. யுக தர்மத்தினுடைய வலிமை அதற்குத்துணையாக நிற்றலாலும், ஏனைய சமய அறிவு காலத்திற்கு ஏற்ப மக்கள் அறிவிலே புகுந்து மருட்டல் செய்தலாலும், நம்மவர்கள் அந்த அகன்ற உண்மையை குறுகியகால எல்லையினுள்ளே சுருங்கிய அறிவினல் பெறுதலருமை ஆதல் நோக்கி, அவற்றை எடுத்துத் தொகுத்து உணர்த்தினல் அதற்குச் 'சங்க்ரகம்' என்று சொல்லுகிறபெயர் தந்தாலேபோதும்; நம்மவர்களைக் கருணையோடு தெருட்டல் செய்து, அதிலே ஈடுபட்டுப் பயன்படுத்திக்கொள்ள

வேண்டும் என்ற உணர்ச்சியை நமக்குத் தருவான்வேண்டி, 'மந்திரம்' என்று சொல்லுகிற ஒரு பெயராலே அதனை அமைத்தால், இங்கே தொகுக்கப்பட்ட கருத்துக்கள் எல்லாம், சிந்தனைக்கு மட்டும் உரியது அன்று, உய்விப்பது; ஆதலால், நீங்கள் இதிலே விரைந்து, திகைப்பின்றி, ஏதும் ஆராய்ச்சி இல்லாது, பின்பற்றி இவற்றினது பயன் காணுங்கள். இவை சாதனைக்குரியது, பயன் தருவது என்ற உணர்ச்சி நமக்குக் கருணையினாலே ஊட்டவேண்டி, 'மந்திரம்' என்று சொல்லுகின்ற தலைப்பைத்தந்து அருளினர்கள் என்று நாம் ஊகித்துக்கொள்ளுவது நலமாகும்.

கோபுரத் துவாரத்திலே உள்ளே புகக் காத்திருக்கின்ற நமக்கு மன எழுச்சி செல்லுதற்பொருட்டு, அமைந்த இத்துணை அமைப்புக்களை அனுபந்தம் என்றும், பாயிரம் என்றும், நாந்தியுரை என்றும், உபோத்காதம் என்றும், பதிகம் என்றும், புறவுரை என்றும், தந்துரை என்றும் இத்தனைப் பெயர்களினாலே ஆன்றோர்கள் நினைப்பூட்டுவர். அதுபோலே, திருமந்திரம் என்று சொல்லுகின்ற மகத்தான ஞான ஆலயத்தினுள்ளே புகுகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், அங்கேயுள்ள பெரும் சிறப்புக்கள் பலவற்றில் ஒரு சிலவற்றையாவது நினைவுகூராது, அங்கே செல்லுவோமாயின் நாம் விரைந்து பயன் காண மாட்டோம். அதிலே உள்ள கௌரவபுத்தி இனைத்ததென நாம் நினைப்பூட்டுதலும் இங்கே தந்தருளிய பெரும் பேற்றுக்கு இலக்கு ஆவேன் என்று கருதிய பெரியோருடைய உள்ளத்தின் துணிபை நான் நினையாது நிற்பவனாக ஆவேன். அக்குறைபாட்டினை நீக்கிக் கொள்ளுதற்காக, இங்கே இந்தச் சிந்தனையை நினைவுக்குக் கொண்டுவந்தேன். இன்னும் ஒரு சில வார்த்தைகள் சொல்லி, விரைந்து வருகிற சிந்தனைக்கு நாம் உறுதுணையாக நிற்க வேண்டியது என்னுடைய கடப்பாடு என்பதைக் காலத்தின் அருமையை உணர்ந்த நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

இந்த ஞானப் பெருநூல் வேதாகமங்களின் திரண்ட சாரம். ஒவ்வொரு ஆதீனத்திற்கும் வேதங்களும், உபநிஷத்துக்களும், சிவாகமங்களும் பிரமாணமாம். பதினெண் பத்ததிகளும், ஒழுகலாற்றுக்குத் துணைசெய்வன. இவற்றின் வழிவந்த நூல்கள் பிரமாண சாஸ்திரங்கள் ஆம் என்று எடுத்துச் சொல்லத் தலைப்படின், முன்னே சொன்ன முறையால் குறுகிய நம்முடைய சிற்றறிவு திகைப்புற்று, ஒரு நெறியிலும் செல்லாது, நின்ற இடத்தில் இருந்தே அயர்ந்துவிடும். ஆதலினாலே, ஒரு வரையறையினுள்ளேயே கடப்பாடு பூண்டு ஒழுகுகின்றவர்களுக்கு எல்லை வகுத்துத் தந்த வழியல்லாது அவர்களுடைய செலவு தடைப்படும் ஆதலினாலே, ஒவ்வொரு சம்பிரதாயங்களும் பிரமாணமே ஆயினும், ஒரு சில நூல்களைத் தொகுத்து எடுத்துக்கொள்வார்கள். அந்த முறையிலே திருமந்திரத்தை அருளிச்செய்த ஆசாரிய பரம்பரையிலே வந்த ஆகமங்கள் ஒன்பது.

அவற்றுள் மூல ஆகமங்கள் பல, உப ஆகமங்கள் சில. அவை தொகுக்கப்பெற்று, 'நவ ஆகமம்' என்ற பெயரால் போற்றப்படுகிறது. இவற்றினாலே நவ ஆகமமேதான் பூலோகத்திற்கு வந்தது என்று கருதுதல் ஏற்புடையதாகாது. வெளிவந்த ஆகமங்களில் வழக்காற்றிலே உள்ளவை பல. அதனுடைய பாரம்பரியத்தில் வந்தவை சில. அவை இங்கே தொகுத்தெடுத்து உணர்த்தப்பெற்றன. அவற்றில் மூல ஆகமங்கள், உப ஆகமங்கள் ஆகும். அவைகளும் ஒரு வகையால் பிரமாணம் ஆவன என்று நம்முடைய சமயச்சார்பிலே தழுவப்பட்டு விலக்காகிய பல பகுதிகள் அப்படியே செய்யப்பட்டன. ஆதலினாலேதான் காலோத்திரம், யாமளம் முதலியவைகளைப்பற்றிச் சொல்லுகின்றபோது கொடுத்திருக்கின்ற அடைமொழியினாலே 'ஆகும் காலோத்திரம் உற்ற நல் யாமளம்' என்று சொல்கிற ஒன்றினுள் தேவி யாமளம் முதலியவைகள் பரந்து சென்று வேறு சமயச்சார்பு உடையனவாகி விரிந்து அகன்று, எல்லையின்றி ஒரு தொலைவுக்கு ஈர்த்துச் செல்லுதலினால் அவைகளைத் தொகுப்பாக எடுத்துணர்த்துதல் ஆசிரியர் திருக்குறிப்பு. ஆதலினாலே, 'நல் யாமளம்' என்று சொல்கிற ஒன்றும், அக்குறிப்பை நமக்குப் புலப்படுத்தும்.

இந்த நெறியினுலே நமக்கு உணர்த்தப்பட்ட செம்பொருள் சைவ சித்தாந்தமே. 'சிவாகமங்கள் சித்தாந்தமாகும்' என்பது தொல்லாசிரியர் தந்த பெரியதொரு ஆணை. அந்த எல்லை கடவாது இதற்குப் பொருள் காணுதல் சைவ சம்பிரதாயத்திற்குப் பயன் தருவது. நம்முடைய உள்ளம் வேறு பிரகாரத்தால் சிதறுண்டு மயக்கம் உற்றவர்களாகி உலக மகாசபையிலே கௌரவம் பெறுதல் வேண்டுமென்று சொல்லுகின்ற திகைப்பு, காலத்தின் இயல்பினை நோக்கி, நம்மையும் வாட்டுதல் செய்தல் விந்தையன்று. அதனுல் அன்பு முதலிய அருஞ்சொற்களை எடுத்துக் கொண்டு அவற்றை நாம் எங்கேயும் வழங்கி யாருக்கும் உரியதாக்கி விடலாம் என்பன போன்ற சிற்சில கருத்துக்கள் நம்முடைய உள்ளத்தை ஈர்த்துக் காலத்தினுக்கு ஏற்ப ஒரு பிரகாரத்தால் அமைந்து செல்லுகிறது. ஆனுல் 'சித்தாந்தம்' என்று சொல்லுகின்ற அடிநிலை எதன்பொருட்டு எழுப்பப்பட்டது என்று நாம் நினைவுகூர்தல், அந்த நூலிலே வைத்திருக்கிற கௌரவபுத்தி நம்மால் சிதையாமல் காத்தலும் அதை நாம் பயன்படுத்திப் பேறு பெறுதலும் பிறருக்கும் அந்தப் பயன் விளைதற்கண் ஊறு செய்யாமையும் ஆகிய பணி புரிந்ததாகும். அவை போல்வன பல.

'அன்பு' என்று சொல்லுகிற ஒன்றை எடுத்துக் காட்டினுல் 'இவை போல்வன' என்று சொல்லிவிட ஏதுவாகும். இப்போது 'அன்பு' என்று சொல்கிற ஒன்றைப்பற்றி எல்லோராலும் பேசப்பட்டு, அத்தலைப்பைத் தம்மதாக ஆக்கிக்கொள்ளுதலை விரும்பாத மனிதவர்க்கம் இருக்க முடியாது. பாஷாந்தரம், தேசாந்தரம், சமய பேதங்களெல்லாம் அந்த அன்பு என்று சொல்கிற ஒன்றைப் பாராட்டியே தன்னுடைய கௌரவத்தைக் காத்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் இக்காலத்தில் மிகமிக இன்றியமையாததாக இருக்கிறதென்பதனை நாமெல்லாம் நன்ருக அறிவோம். அவற்றைத் தழுவாதுபோயின், நம்மை எவரும் அணுகுதல் செய்யார் என்பதை அவரும் அறிவார். அந்தச் சொல்லாலன்றி, வேறு பிரகாரத்தால் பிறரை ஈர்த்தல் செல்லாது என்பதனைக்கண்ட தெளிந்த உள்ளமே அதனைத் தழுவிக்கொள்ளுகிறது. ஆனுல், அந்தச் சொல் எங்கே கனம் பெறுகிறது என்று சொல்லுகிற ஒன்றை, நாம் சிந்தித்து நம் அளவிலே அந்தரங்கமாக வைத்துப் போற்றிக்கொண்டு, ஏனையோரையும் நாமும், அப்படித் தழுவப் பார்த்தல் நலம் செய்யும். அடிப்படையை இழந்து நாம் அச்சொல்லைக் குறிப்பின்றி வழங்கத் தலைப்படின், அப்பேறு நம்மாலே அகௌரவிக்கப்பட்டதாகிவிடும். திருமூலருடைய திருவுள்ளக்கருத்திற்கு நம்முடைய மன மொழி மெய்களினுலே நாம் முறை பிறழச் சென்று, அவருடைய திருவுள்ளத்தை அசட்டை செய்யத் தலைப்படுதல், போற்றுதல் செய்யத் தலைப்படுகிற தலைப்பின்கீழமையாத ஒன்று என்பதை நாமெல்லாம் நன்கு அறிவோம். ஆதலினுலே, அன்பு என்பது நம்முடைய சமயத்திலே எங்கே அமைந்தது? அதனைப் பற்றித் திருமூலர் எடுத்துக் காட்டுகிருர்.

அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

திருமந்திரத்திலே உள்ளது என்று தெரியாதவர்களுக்குக்கூட, மனனம் ஆன திருப்பாட்டுக்களுள்ளே முதன்மையானது இது. இந்த ஒரு சொல் எங்கேயிருந்து கௌரவம் பெறுகிறது, என்ன அடிப்படையிலே எழுந்தது என்பதனை இந்தச் சபையிலே நினைப்பூட்டுதல் நம்மவர்க்கெல்லாம் உற்ற கடன். ஏன்? 'அன்பு' என்று சொல்லுகிற ஒன்று, சொல் அளவிலே பயின்று வருகின்றது; இங்கே சொல்லப்பட்ட அன்பு என்ற ஒன்று சிவம் ஆதற்கு ஒரு பரம சாதனம் என்பது அல்லவா, இந்தத் திருமந்திரத்தினுடைய குறிப்பு.

அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

'அன்பும் சிவமும்' என்று தொடங்கிச் 'சிவ' சப்தத்திற்கு முன்னர் அமைத்து, 'அன்பும், சிவமும் இரண்டு என்பர்' என்றமையினுலே, சிவசப்தத்தின்முன் வைக்கப்பட்டதாக இருக்குமாயின், சிவத்துக்கு முன் ஒரு பொருளும் இல்லை ஆதலினுலே, அந்த சிவத்தோடு பொருந்துதற்குச் சாதனங்கள்

பலவற்றினுள்ளே தலையாய ஞானமே இங்கு 'அன்பு' என்று பேசப்படுமென்று சொல்லு கிற கருத்தை நாம் புலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று 'அன்பும் சிவமும் இரண் டென்பர் அறிவிலார்' என்று குறிப்பிட்டார். இங்கே 'அறிவிலார்' என்று சொல்லுகின்ற சொல் பிராகிருதர்களை நினைவுகூரவந்தது அன்று. ஆகவே இங்கு அதற்குச் 'சிவஞான அறிவு இல்லாதார்' என்பது பொருள்.

அன்பு என்று சொல்லுகின்ற ஒன்று, சிவபெருமானை அடைதற்கு உரிய ஒரு பரம சாதனம், அது 'ஞானம்' என்று எடுத்துக் கொள்வோமானால், அது ஒரு பிரகாரத்தால் பொதுச் சொல்லாகவே ஆகும். 'ஞானமே ஞானம் என்பர்' என்று சொல்லுகிற இடத் திலே, அந்தப் பொது உரிமை விலக்கப் பட்டு, ராஜ கிரீடத்திற்குச் சக்ரவர்த்திக்கே உரியதாயிருக்கிற கிரீடம், அமைச்சர் முதலா யினரும் ஏகதேசத்திலே அணிந்து கொள் ளத்தக்கது என்று அதற்கு வியாக்கியானம் பொருந்தாதவாறுபோல, 'ஞானமே ஞானம் என்பர்' என்று சொல்லுகின்ற அச்சொல் இங்கே சிவஞானம் ஒன்றனையே உணர்த் தும். ஏனைய பாச பசு ஞானங்கள், அந்தச் சொல்லுக்குப் பக்கத்திலே செல்லும் தரம் உடையது அன்று. அதுபோல, 'ஞானம்' என்ற பொதுச்சொல், அந்த எல்லை அணு காதபோது, அது பொதுவாகிநின்று, பாச பசு ஞானங்களுக்கும் பொதுவாகப் பொருந் தும். ஆதலினாலே, ஞானம் என்ற பொதுச் சொல்லால், இங்கே சிந்தனைபண்ணுகின்ற நிலையிலே ஒரு பிரமாணத் தன்மையையும் இலக்கணத்தையும் எடுத்துப் பேசுகின்ற எல்லையிலே 'ஞானம்' என்ற சொல்லுக்குப் பொருள் வேறு. சாதனம் என்று சொல்லு கின்ற நிலையிலே பேசுகிறபோது, 'ஞானம்' என்ற சொல்லுக்குப் பொருள் வேறு. சொல் ஒருமைபற்றி இரண்டனையும் ஒன்று என எண்ணி மயங்கலாகாது.

'ஞானம்' என்பது பிரமாணம், இலக் கணம் ஆகிய இந்த எல்லையினுள்ளே பேசு கின்றபோது, பாச பசு ஞானங்களை உணர்த் துமேனும், 'சாதனம்' என்று சொல்லுகின்ற எல்லையினுள்ளே அது சிவ ஞானத்தையே உணர்த்துதல் சைவமரபு. 'ஞானம்' என்று எடுத்துக்கொண்டு, பிரமாணம் இலக்கண மாகிய இந்த இரண்டும் முடிந்தது சாஸ்தி ரத்தினுள்ளே ஆனபடியினாலே சாதனம், பயன் என்று சொல்லுகிற இரண்டனையும் லட்சியமாக வைத்துக்கொண்டு எழுந்தது பெரிய புராணம். பெரிய புராணத்திற்கும் ஒரு எல்லை காணுதல் வேண்டுமல்லவா? பிரமாணத்தாலும், இலக்கணத்தாலும் பேசு கின்ற உண்மை, சைவ சித்தாந்தத்தைப் பால போதமாக முடித்தது ஆதலினாலே சாதனம், பயன் என்று சொல்லுகிற இரண் டனையும் லட்சியமாக வைத்துக்கொண்டு, தெளிந்ததொரு தெளிவு பெரிய புராணம். ஞானம் என்று சொன்னால், அது வேதாக மங்களாலே பெறப்படுகிற ஞானமும், திரு வருள் ஞானமுமாகிய இந்த இரண்டனையும் புலப்படுத்தும் என்று சொல்லுகிற திருக் குறிப்பு, ஞானமே பிழம்பாகிய ஞானசம் பந்த சுவாமிகளினுடைய புராணத்திலே வைத்துத் தெளிவு செய்யப்பட்டது.

ஞானம் தலைப்பட்ட இடத்து அன்றி, தம்மிடத்திலே தானும் அன்பு இல்லாத உயிர், எங்கே அன்புடையதாக இருக்கு மென்று கருதி, அந்தச் சொல்லை நம்முடைய குறுகிய எல்லைக்குள்ளே வைத்துப் பரந்த தாக நாம் காணுகிற மருட்சி நீங்கும்வண் ணம் தம்பால் அன்புடையராவார் எல்லோ ரும் எல்லா ஜீவர்களிடத்தும் அன்புடையர்; எல்லா ஜீவர்களிடத்தும் அன்புடையர், சிவ னிடத்தும் அன்புடையர், அவனிடத்திலே உள்ள அன்பின் உண்மையே எல்லோரிடத் திலும் உள்ள அன்புடைமைபற்றி அது நன் றாகத் தெளித்து உணரப்படும் ஆதலினாலே, 'ஈசனுக்கு அன்பிலார் தமக்கும் அன்பிலார் பிறர்க்கும் அன்பிலார்' என்று இப்படி அதனை எடுத்து விவரித்து, இருத்தலினாலே அந்த அன்பு ஈசன்பால் ஞானம்; ஞானம் என்பது ஈசன்பால் அன்பே என்றார்கள்.

ஆகவே, இங்கே பேசப்படுகிற அன்பு என்பது சித்தாந்த ஞானசாஸ்திரங்களிலே பேசப்படுகிற சிந்தனையினாலே, நம் அறிவில் சாதித்துப் பேறு பெறுதற்குரிமையுடையது உயிரென்று தேர்ந்து, தகுதியில்லாமையால்

அந்த ஒரு நல்ல பேற்றினைப் பெறவில்லை என்று தெளிந்து, உரிமையுடையார்க்கன்றி தகுதி வந்தபோது எவையும் சித்திப்பன அல்ல, எல்லோருக்கும் பொருளை ஆளுதற்கு உரிய உரிமை வந்துவிட்டது என்று பிறர் பொருளிலே அவர்கள் ஆவேசம்கொண்டு செல்ல இயலாது. அவர்களுக்கு உரிமை இருக்கிறதா என்று தெரிந்த பின்புதான் தகுதிக்குச் சந்தர்ப்பம். உரிமை இருக்கிறது என்று தேர்ந்து, உயிர் தகுதியுடையதாகிக் காத்திருக்கவேண்டும். அன்பு எது? அது ஞானம்; அந்த ஞானம் 'ஈசன்பால் அன்பு' என்று புலப்படுத்துகிறார். இவைபோல்வன பல. அதைச் சொல்வதற்காகத்தான் இங்கு அன்பை எடுத்துக்கொண்டேன்.

நம்முடைய ஆதீன மகாவித்துவான் திரு. தண்டபாணிதேசிகர் அவர்கள் அந்த ஞானப்பெருநூலைச் சிந்தித்தும், வந்தித்தும் போற்றிப் பொருள் தருகிற பேற்றினை, அன்று அவர்கள் கருதிய கருத்தின் உறைப்பும் குருவருளும் திருவருளும் துணைசெய்தலால் இப்பேற்றினை நாம் பெற்று 'திருமூலர் திருமந்திரம்' என்று சொல்லுகின்ற இந்த ஞானபொக்கிஷத்தைக் கையிலே ஏந்துகிற பெரும் சிறப்பினை, நமக்குத் தந்தருளிய கருணையே பிழம்பாகிய நம்முடைய மகா சந்நிதானம் அவர்களுடைய அருட்டிறத்தைச் சென்னியிலும், சிந்தையிலும் போற்றி, இந்தப் பேற்றிலே உரிமை உடையேன் என்று அவர்கள் திருவுள்ளத்திலே கருதிய கருத்து நம்முடைய தேசிகர் அவர்களுடைய வாக்கிலே புலப்பட்டது. அது அத்தனையும் அந்தக் குருவருளுக்கே உரியது. அந்தத் திருவருளை நாம் எல்லாரும் அஞ்சலித்துக் கொண்டு, இந்த ஞானப் பெருநூலிலே தலைப்பட்டு, அரும்பொருளைக் கண்டு உய்வு பெறுதல், நம்மவர்க்கெல்லாம் சிறந்த கடப்பாடு என்பதனைப் புலப்படுத்திக்கொண்டு, இங்கே அமைந்த தலைப்புக்கள் எத்துணை அருமையும் இனிமையுமானவை என்பதனை மகாவித்துவான் புலப்படுத்தினார்கள்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று சொல்கிற இவற்றினை எல்லாம் வடமொழியிலே ஒரு தொடர்பாக அமைத்து 'தீர்த்தம்' என்று சொல்கிற தலைப்பிலே அமைத்துக் காணுதல் வடதேசத்திலே உள்ள வழக்கு என்பதனை நம்முடைய ஞானாநந்தசுவாமிகள் அவர்கள் அறிவார்கள். தீர்த்தசப்தத்திற்குப் 'புனிதம்' என்று சொல்கிற ஒரு பொதுச் சொல்லாக அமைந்தது. அந்தத் தலைப்பின்கீழே அவற்றோடு இயைபு உடையது கோயில்; அவற்றோடு இயைபுடையதாயிருக்கிற திருக்கோயிலிலே அல்லாத செயல்கள், அவற்றின் கொடுமை முதலியன. அதற்கு அப்பாலும் அமைந்த கருத்துக்கள், சிவபரத்துண்மையில் தேருதார் அறிவிலே நிகழ்கிற நிகழ்ச்சி. பின்பு, இந்த நெறியிலே செல்லாதார்க்குச் செலுத்தும் திருவருள் அதோமுகதரிசனம்.

இப்படி எல்லாம் அமைந்திருக்கிற இந்த அமைப்பு இந்தப் பத்தாம் ஆண்டில்தானே நாம் பெறல்வேண்டும்! இதுதானே நம்முடைய சமயத்திலே பெறுகின்ற பேற்றின் எல்லை என்று நாமெல்லாம் அந்த நாளிலே கேட்டிருக்கிறோம்! தத்துவ தரிசனம் முதலாகச் சிவபோகத்தில் சென்று இயையும் என்று. எங்களுடைய பரந்த சமய ஞானத் தொகுப்பு எல்லாம் இந்தப் பத்தினுள்ளே அடங்கக் காண்பதுதானே நாம் பெற்றிருக்கின்ற பேறு! அது தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகமென்று சொல்லுகிற ஒன்றை அதிலே பயின்று நினைவிற்கு வாராததற்காக நான் இவ்வரிசையை நினைவூட்டினேன். இந்த நெறியிலே இப் பத்தாம் ஆண்டில் இப்படி நமக்குச் சிவபோகத்தைத் தருகிற மாநாடாக அமைந்தது என்பதனை நம்முடைய அன்பு உருவாகிய மகாவித்துவான் நேற்றையதினம் தெரிவித்தார்கள். இதனையும் அந்தக் கருத்தோடு இணைத்து நாமெல்லாம் இன்று மகிழ்ச்சி பெறுவோம்; பேறு பெறுவோம்.

'தீர்த்தம்'

திரு. மீ. பா. சோமு அவர்கள்,
சென்னை.

திருக்கயிலாய பரம்பரையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை முதற்கண் செலுத்துகிறேன். மதிப்பிற்கு உரிய தலைவர் அவர்களுக்கும், பெரியோர்களுக்கும், மெய்யன்பர்களுக்கும் என்னுடைய வணக்கம்.

நான் இங்கே பேசவேண்டும் என்று எனக்குப் பணித்துள்ள தலைப்பு 'தீர்த்தம்'. திருமந்திர நூலில் இரண்டாம் தந்திரத்திலுள்ள ஓர் அதிகாரத்தின் தலைப்பு இது. இந்த அதிகாரத்திலே, ஆறு திருப்பாடல்களிலே மகாஞானி திருமூலர் தீர்த்தத்தின் தன்மைகளை நமக்கு விளக்குகிறார். நாம் மலங்களிலிருந்து நீங்கி, அகத்தூய்மையை எப்படிப் பெறுவது என்பதே இந்த அதிகாரத்தில் உணர்த்தப்படுகிற பொருள்.

நம்மைப் பிணித்துள்ள வினைகளின் கட்டுப்பாட்டிலிருந்து நாம் விடுதலைபெற்று, நல்ல நிலையை அடையவேண்டும் என்ற நாட்டமானது உலகின் எல்லாத் தேசத்து ஞானிகளுக்குமே இருந்து வந்துள்ளது. வினைகளிலிருந்து விடுபடுவது எப்படி? நம்முடைய மாசுகளை நாமே கழுவிக்கொள்வது எப்படி? என்று எல்லாத் தேசத்து ஞானிகளுமே மருண்டார்கள். நமது வினைகளைக் கழுவும் புனித தீர்த்தத்தைப் பெறுவதற்கான வழிவகைகளைக் காண வேண்டும் என எல்லாத் தேசத்து ஞானிகளுமே முயன்றார்கள். பாரசீக தேசத்து ஞானி ஒருவன், இந்தக் கவலையிலே ஆழ்ந்தான். வினையினுடைய கொடுமையிலிருந்து, ஊழினுடைய பிணைப்பிலிருந்து விடுபட்டு, எப்படிப் பேரின்பத்தை அனுபவிப்பது என்றுமருண்டான் அந்த ஞானி. விதி என்று சொல்கிறோம். தலையெழுத்து என்று சொல்கிறோம். வினையின்படி நம்முடைய வாழ்க்கை செல்கிறது என்றெல்லாம் சொல்கிறோம். இதைத்தான் அப்பாரசீகத்து ஞானியும் சொல்லித் தன்னுடைய கவலையை வெளியிடுகிறான். அவன் சொன்னான் - விதியினுடைய கையானது நம்முடைய நெற்றியிலே எழுதிக் கொண்டே செல்கிறது என்று.

இப்படி அந்தக் கை எழுதிக்கொண்டே போகிறதே; அந்த விதியின் எழுத்தை நம்மால் அழிக்க முடிகிறதா? அதுதான் முடியாது. 'தொழுது கெஞ்சி நின்றாலும், சூழ்ச்சி பலவும் செய்தாலும் அது எழுதிய வரிகளிலே அரை வரியைக்கூட உன்னால் அழிக்க முடியாது' என்கிறான் அந்தக் கவி. அது மட்டுமா? 'அழுத கண்ணீர் ஆறெல்லாம் அதிலோர் எழுத்தை அழித்திடுமோ? விதி எழுதிய எழுத்தின் சொல்லைக்கூட உன் கண்ணீர் வெள்ளம் அழிக்க முடியாது' என்று சொல்லி மிகுந்த கவலையோடு கதறுகின்றான் பாரசீகதேசத்து ஞானி. ஆனால் அவனைப் பார்த்துப் பதில் சொல்கிறார் நம்முடைய திருமூலர்.

'அப்படியா நீ சொல்கிறாய்? விதியின் எழுத்தை அழிக்கமுடியாதா? அரை வரியைக் கூட அழிக்க முடியாதா? வெள்ளமாகப் பெருகுகின்ற கண்ணீரினால் அதனுடைய ஒரு வார்த்தையைக்கூடக் கழுவ முடியாதா? பாரததேசத்து ஞானம் அப்படிச் சொல்லவில்லையே.

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்.

முன்னை வினையின் பயன்கள் இன்னும் மூளாது அழித்திட வழி இன்னது என்று தெரிந்தவர்கள் நம்தேசத்துத் தத்துவஞானிகள். வினையின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளவே முடியாது என்று ஒருகாலும் இவர்கள் மயங்கி இருந்துவிடமாட்டார்கள். விதியின் எழுத்தை அழிக்கமுடியாது என்று சொல்கிற ஜாதி அல்ல இந்தப் பாரத ஜாதி. என்ன செய்வார்கள் எங்களுடைய ஞானிகள் தெரியுமா?

முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்.

தன்னை அறிந்திடும் தத்துவஞானிகள் எப்படி முன்னை வினையின் முடிச்சை அவிழ்க்கிறார்கள்? பின்னை வினையை எப்படிப் பிடித்துப் பிசைகிறார்கள்? இந்த இரகசியத்தைச் சொல்வதுதான் திருமந்திரம். திருமந்திர நூலின் சாரம் எல்லாம் இந்த ரகசியத்தின் வெளியீடுதான். இதையேதான் சொல்கிறார் திருமூலர். சிவபெருமானுடைய அருள் தங்களுக்கு இருக்கிறது; அவனது அருளைத் துணையாகக்கொண்டு ஞானிகள் விதியை வெல்லுகிறார்கள்.

சென்னியில் வைத்த சிவனருளாலே.

சென்னியில் வைத்த சிவனருளினாலே முன்னை வினையின் முடிச்சை அவிழ்க்கிறார்கள், பின்னை வினைகளும் ஆற்றல் இழக்கச் செய்கிறார்கள் என்கின்றார் திருமூலர். நம்முடைய வினையின் முடிச்சை அவிழ்ப்பதற்கும், மல மாசுகளிலிருந்து நம்மைக் கழுவிக் கொள்வதற்குமாக ஏற்பட்ட தீர்த்தங்களைப் பற்றிச் சொல்வதுதான் ‘தீர்த்தம்’ என்ற அதிகாரம். சிவவாக்கியர் என்ற ஒரு ஞானி இதைப்போன்ற ஒரு தீர்த்தத்தைப்பற்றிப் பேசுகின்றார். அது குடிக்கின்ற தீர்த்தம் - இளநீர். தெங்கிலுள்ள இளநீரைச்சொல்லி, ஆன்மவிடுதலைக்கான, மாசு களைவதற்கான தீர்த்தத்திற்கு வருகின்றார் சிவவாக்கியர். என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம். தீர்த்தத்தோடு இயைபுடைய அவர் பாடலை இங்கே நினைவுபடுத்திக் கொள்வது அவசியம் என்று கருதுகின்றேன். ‘செய்ய தெங்கிலேஇளநீர் சேர்ந்த கார ணங்கள் போல் ஐயன் வந்து என்னுளம் புகுந்து கோயில் கொண்டனன்’ தேங்காயின் உள்ளே இளநீர் இருக்கிறது. தேங்காயை உடைத்து யாராவது அதனுள் தீர்த்தத்தை விட்டுப் பிறகு மூடி ஒட்டி, தேங்காயாக அனுப்பினார்களா? இல்லை. தெங்கு எப்போது பாளை விட்டுக் குரும்பை வைத்ததோ அப்போதே தண்ணீர்த் தத்துவமும் அதன் உள்ளே புகுந்து கிடக்கிறது. தேங்காயின் வளர்ச்சியோடு வளர்ச்சியாக அதனுள்ளே இளநீரும் சுரந்து பெருகுகிறது. இதைப்போல இறைவன் எங்கோ வெளியிலிருந்து திடீரென்று நம்முடைய உள்ளத்தில் வந்து புகுந்து கொண்டான் என்பதில்லை. அவனுடைய தொடர்பு ஜனனத்தோடுவந்த ஒரு தொந்தம். நம்முடைய ஆன்ம வளர்ச்சிக்குத் தகுந்தவாறு அந்த இளநீர் சுரக்கிறது. அந்த ஆன்ம அனுபவம் ஏற்பட்ட பின்பு என்ன ஆகிறது? விளைவு என்ன? ‘ஐயன் வந்து என்னுளம்புகுந்து கோயில்கொண்ட பின் வையகத்தில் மாந்தர் முன்னம் வாய் திறப்ப தில்லையே’ அவ்வளவுதான்.

மோனத்திலே பேச்சு ஏது? வார்த்தை ஏது? அப்படி வாய் திறவாமல் மோனலயத்திலே 365 நாட்கள் இருந்தவர் திருமூலர். ஒருநாள் வாய் திறக்கும். ஒரு திருமந்திரம் வரும். பிறகு வையகத்தில் மாந்தர் முன்னம் வாய் திறப்பதில்லையே. அப்படி வெளியான பாடல் திருமந்திரப்பாடல்.

இளநீர் தாகத்தைத் தீர்க்கிறது. திருமூலர் பேசுகிற தீர்த்தம் ஆன்ம தாகத்தைத் தீர்ப்பதோடு நம்முடைய மாசுகளை - வினைகளையெல்லாம் கழுவுகிறது. அப்படிப்பட்ட தீர்த்தம் எங்கே இருக்கிறது? அதைப் பேசுகிற அதிகாரந்தான் தீர்த்தம் என்பது.

இங்கே கூடியிருக்கிற நீங்கள் எல்லாரும் அறிஞர் பெருமக்கள்; திருமந்திர நூலில் நாட்டம் உடையவர்கள்; திருமந்திர நூலில் பயிற்சி உடையவர்கள். எனவே விரிவாக இந்தப் பாடல்களின் பொருளையெல்லாம் உங்களுக்குச் சொல்லிக்கொண்டேபோவது அவசியம் இல்லை.

இந்த அதிகாரத்தின் முதலாவது பாட்டிலேயே ஆதார சுருதி ஒலிக்கிறது. என்ன சொல்கிறார்?

உள்ளத்தின் உள்ளே உள பல தீர்த்தங்கள்.

தீர்த்தங்கள் எங்கோ வெளியே இருக்கின்றனவா? இல்லை.

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெட.

வினை கெடுவதற்குச் செய்ய வேண்டியது என்ன? ஒவ்வொரு வார்த்தையும் அடிக்கோடு இடவேண்டிய வார்த்தைகள்.

மெள்ளக்குடைந்து நின்றாடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வி யிலோரே.

ஆன்மஞானக்கல்வி இல்லாதவர்கள் என்ன செய்கிறார்கள்? தீர்த்தங்களை நாடி, பள்ளமும் மேடும் பரந்து திரிகிறார்கள். ஆனால், இந்த அழுக்குகளைக் களைந்து ஆன்மவிடுதலை தந்து பேரின்பத்தை அருளுகிற தீர்த்தம் எங்கே இருக்கிறது?

உள்ளத்தின் உள்ள உளபல தீர்த்தங்கள்.

இந்த அதிகாரத்தின் பொருள் இதுதான். நம்முடைய உள்ளத்திற்குள்ளேயே தீர்த்தங்கள் பல இருக்கின்றன.

மூன்றாவது தந்திரத்திலே கொல்லாமை போன்ற விரதங்களால் ஏற்படுகின்ற தீர்த்தங்கள் விரிவாக வருகின்றன.

லட்சியம் என்ன? பொருள் என்ன? என்றால் நம் உள்ளத்திற்கு உள்ளே விடுதலையை நமக்கருளுவதற்கான தீர்த்தங்கள் இருக்கின்றன. எப்படித் தேங்காய்க்குள் இளநீர் இருக்கிறதோ, அப்படி இந்த உள்ளத்திற்குள்ளே அந்தத் தீர்த்தம் இருக்கிறது. அந்தத் தீர்த்தத்திலே முங்கி, மூழ்கி வினை மாசுகள் அகன்று பேரின்பநிலையை அடைவதுதான் நம்முடைய சைவ ஞானத்தின் லட்சியம். அந்த லட்சியத்தை அருளுவது திருமூலருடைய திருமந்திர நூல். இப்படிப்பட்ட ரகசியங்களை எப்படித் தெரிந்து கொள்வது என்றால், எப்படித் தேங்காயின் முதிர்ச்சிக்குத் தகுந்தாற்போல இளநீர் சுரக்கிறதோ, அப்படி நம்முடைய முதிர்ச்சியையும் நாட்டத்தையும் பொறுத்து இந்தத் தீர்த்தங்கள் நம்முள் சுரக்கும்படிச் செய்கிறார்கள் ஞானாசாரியர்கள். உபதேசமாவது உடனிருந்துகாட்டுதல். அதுதான் ரகசியம்.

இந்த இரகசியங்களைக் காணுவதற்கு உண்டான தகுதியை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும். அதற்கு ஒரு ஆன்ம நாட்டம் வேண்டும். அப்படிப்பட்ட நாட்டத்தை வளர்ப்பதற்காக ஆண்டுதோறும் இப்படிப்பட்ட மாநாடுகள் கூட்டி ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்கள் திருமந்திரத்தை; எல்லாருக்கும் பயன்படக்கூடிய முறையிலே தேசிகர் அவர்கள் எழுதியுள்ள அரிய உரையோடு வெளியிடுகின்றார்கள். இந்தத் தீர்த்தத்தின் ஊற்று எங்கே இருக்கிறது? ஊற்றுக்கண் எங்கே இருக்கிறது? என்று தெரிந்துகொள்வதற்கு நமக்கு நாட்டம் வேண்டும். நாட்டம் இருந்தால் குரு அருள் தானாகவே வந்து கூடும். அப்படிப்பட்ட ஒரு நாட்டம் - ஊற்று எங்கே இருக்கிறது என்று தேடுகின்ற தாகத்தை நமக்கு வளர்ப்பதற்காகவேதான் இந்த மாநாடு கூட்டப்படுகின்றது. இப்படிப்பட்ட ஒரு பெரிய சமயப்பணியைச் செய்து வருகின்ற இந்த ஆதீனத்தினுடைய உயர்ந்த ஆன்ம சேவைக்கு வணக்கம் செலுத்துகின்றேன். இப்படிப்பட்ட ஒரு மாநாட்டைக் கூட்டுகின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவருட்கருணைக்கு என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் செலுத்தி, என்னையும் இன்றைய நிகழ்ச்சியிலே பங்கு பற்றுமாறு பணித்த அவர்களுடைய கருணைக்கு நன்றியும் வணக்கமும் செலுத்தி அமைகிறேன். வணக்கம்.

அறிவார் அமரர்கள் ஆதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் சென்று வலங்கொள்
மறியார் வளைக்கை வருபுனற் கங்கைப்
பொறியார் புனல்மூழ்கப் புண்ணிய ராமே.

— திருமந்திரம்.

## திருக்கோயிலிழிவு'

திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், B. A., L. T.,
காஞ்சிபுரம்.

அரிய பெரிய சிறப்புக்கள் எல்லாம் அமைந்த தவ உருவாகிய சிவாசாரியசுவாமிகள் அவர்களே! மற்றும் அன்பர்களே! இங்கே அருள்வடிவாக எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடிகளைத் தொழுது, அவர்களுடைய ஆணையினால், இப்போது சிந்திக்க எடுத்துக்கொள்ளுகிற பொருள் 'திருக்கோயில் இழிவு' என்னும் திருமந்திரப் பகுதி. திருமந்திரம் ஒன்பது பெரும் பகுப்புக்களை உடையதென்பதை நாம் அறிவோம். அவை ஒவ்வொன்றும் 'தந்திரம்' என்ற பெயராலே வழங்கப்படுகின்றது. அவற்றுள்ளே இரண்டாவது தந்திரம் 25 பிரிவுகளை உடையது. அவற்றுள் இப்பிரிவு 19 வதாக உள்ளது. இதற்குமுன் இருக்கிற 18ம் பிரிவு 'தீர்த்தம்' என்பது. திருக்கோயில் இழிவு என்ற இப் பகுதியில் 5 மந்திரங்கள் இருக்கின்றன. 'தீர்த்தம்' என்பதைப் படித்து, திருக்கோயில் இழிவு என்று வருகின்றபொழுது என்ன தொடர்பு அல்லது சம்பந்தம் இருக்கிறது என்று பார்ப்போம். தீர்த்தம் என்பது நம்மைப் புனிதப்படுத்துவது. புனிதப்படுத்துகின்ற பொருள்கள் புறத்தே பலவாக இருந்தாலும், இறைவனுடைய திருவருள்தான் ஆன்மாவைப் புனிதப்படுத்துவது. உள்ளத்திலே பல தீர்த்தங்கள் உள்ளன. அவை இறைவனுடைய திருவருளாலே நம்முடைய உள்ளத்தில் எழுகின்ற குணங்கள் பலவும் ஆகும். அவற்றைத்தான், தீர்த்தம் என்ற சொல்லாலே முன்னே உணரவேண்டும். இக்கருத்தை,

> 'பந்தம் அகற்றும் அனந்தகுணப்
> பரப்பும் எவன்பால் உதிக்குமோ'

என்று இவ்வாதீனத்திலே முனிவர் பெருமானாக இருந்த கவிராட்சசர் எனப் பெயரிய கச்சியப்பமுனிவர் விநாயகரைக் குறிக்கின்றபோது குறிப்பிடுகிறார். 'பந்தம் அகற்றும் அனந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ' என்றதனால், குணங்கள் அனந்தம்; அவை இறைவனிடத்திலேயிருந்து தோன்றுவன; அவை பந்தத்தை அகற்றுவன என்பவை விளங்கும். மாசுகளைக் கழுவுவதற்கு உரிய முக்கியப் பொருளாக இருப்பது திருவருள். அந்தத் திருவருளிலிருந்து நமக்கு நல்ல குணங்கள் உள்ளத்திலே உதிக்கின்றன. அவைகளெல்லாம் நம்மைத் தூய்மைப்படுத்தும் எனக் கொள்ளல்வேண்டும். தீர்த்தம் என்றது திருவருளை எனக்கொண்டால், திரு அருள் நிலைத்தானம் திருக்கோயில் என்பது தானே விளங்கும். அதை உள்ளத்திலே காண்கின்றபடியே வெளியேயும் காணவேண்டும். திருக்கோயிலுக்கும் உள்ளத்திற்கும் எப்பொழுதும் சம்பந்தமுண்டு.

> 'சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்பலத்தும்
> என்சிந்தையுள்ளும் உறைவான்'

என்று மணிவாசகர் சொல்லியிருக்கின்றார். திருமூலர், சிந்தை உள்ளே உறைகின்றவன் திருச்சிற்றம்பலத்திலே உறைகின்றான் என்கின்றார். தீர்த்தம் என்றதனால் திருவருள் என்று அகத்திலே கண்டு, திரு அருள் நிலைத்தானமாகிய திருக்கோயிலை அடுத்தபடி புறத்தே காணுகின்றோம். இத்தகைய திருக்கோயிலின் உயர்வு இங்குக் குறிக்கப்படுகின்றது. திருக்கோயிலை அதனுடைய உயர்வுக்கேற்றபடி கொண்டு நடக்கவேண்டும்; அதனுடைய உயர்வுக்கு மாறாக இழித்தல் கூடாது; திருக்கோயிலை அதனுடைய உயர்வினின்றும் தாழ்த்தும் நிலையிலே நம் உள்ளம் செல்லக்கூடாது என எதிர்மறை முகத்தால் நான்கு கருத்துக்களை ஐந்து திருமந்திரத்தினாலே தெரிவிப்பது இப்பகுதி.

முதலாவதாக, திருக்கோயிலில் மூர்த்தி எனப்படுவது சிவலிங்க வடிவம்தான். அச் சிவலிங்க வடிவத்திற்குத் தாவரம் என்பதும் பெயர். திருஞானசம்பந்தப்பெருமான் சிவலிங்கமூர்த்தியை, 'தழைத்ததோர் ஆத்தியின்

கீழ்த் தாவரம் மணலால் கூப்பி' என்று, தாவரம் என்ற சொல்லாலே வழங்கியிருக்கிறார். அங்ஙனமே, நம் திருமூலநாயனாரும், 'தாவரலிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்' எனக் கூறுகிறார். சிவலிங்கம் தாபிக்கப்படுவதும் உண்டு; தானே முளைப்பதுமுண்டு. தானே முளைத்தது சுயம்பு எனப்படும். தானே ஸ்வயம்புவாக இருந்தாலும், பெரியோர்களாலே பிரதிஷ்டிக்கப்பட்டு இருந்தாலும் முன் நிலையிலேயிருந்து பெயர்க்கக் கூடாது. பெயர்த்தல் தவறு என்பது ஒரு கருத்து.

திருக்கோயிலைப் பழுதுபடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பது இரண்டாவதாகச் சொல்லப்படுகின்ற கருத்து. மூன்றாவதாகச் சொல்லப்படுகின்ற கருத்து திருக்கோயிலிலே நித்தியம், நைமித்தியம், காமியம், பிராயச்சித்தம் முதலியவற்றைக் குற்றமின்றிச் செய்துவரவேண்டுமென்பது.

பொதுவாக, 'சிறப்பொடு பூசனை செல்லாது' என்று பொதுமறையிலே எடுத்து ஓதப்பட்ட வகையிலே 'நித்தியம் நைமித்தியம்' என்று சொல்லப்படுகிற இருவகையான வழிபாடு அங்கே நடக்கவேண்டும். அந்த வழிபாட்டை நமக்குத் தெரிவிப்பன வேதாகமங்கள். 'வேதம்' நெறியை உணர்த்துவதாக, சிவாகமங்கள் துறையில் தங்கி நின்று அனுபவித்தற்கு உரிய நிலைமைகளை விளக்குகிறதாக அமைவதால், நெறி நூலும் துணை நூலுமாக அமைகின்ற வேதாகமங்களின்படி நித்திய வழிபாடு, நைமித்திக வழிபாடு என்பவற்றைக் குறைவறச் செய்ய வேண்டுமென்பது மூன்றாவதாகச் சொல்லப்படுகின்ற கருத்து.

நான்காவதாக, வழிபாட்டைச் செய்வோர் அவற்றைக் குறைவறச் செய்வதற்கு உரிய தகுதி உடையவராக இருக்கவேண்டுமென்பது சொல்லப்படுகிறது. ஆக, இந்த நான்கு கருத்துக்களை ஐந்து மந்திரங்களிலே சொல்லுகிறார் திருமூலர். இஃது இப்பகுதியின் தொகுப்பான பொருள்.

இனி, பாட்டின் பொருளைச் சொல்லி முடித்துவிடலாமென்று கருதுகின்றேன்.

முதல் பாட்டில் சிவலிங்க மூர்த்தியை அசைத்தல் கூடாது, இடம் பெயர்த்தலும் கூடாது என்று சொல்லுகின்றார். அப்படிப் பெயர்க்கவிடாமல் கவனிப்பது யார் என்ற ஒரு கேள்வி எழுமல்லவா? அந்தக் கடமை பொதுவாக சொசைட்டி என்று சொல்லுகிறோமே, அம்மக்கள்சமூகத்திற்கேயுரியது. ஆனால், மக்கள் எப்படி ஒழுங்கிற்கு உட்படுகிறார்கள் என்றால், அரசாட்சியினாலேதான் ஒழுங்கிற்குட்படுகிறார்கள். ஆதலால், அக்கடமை அரசன் கடமையாகிறது. ஆகவே, வழிபாட்டில் பிறழுநேரின் அரசுக்குத்தான் முதலில் தீங்குவருமென்பதைச் சொல்கிறார். அதனாலே அரசுக்குத் தீங்குவராது இருக்க வேண்டுமானால், திருக்கோயிலில் வழிபாடு செம்மையாக நிகழ்தல் வேண்டும். திருக்கோயிலில்தான் நம் ஆட்சியைப் பாதுகாத்தலும், மக்களை நன்னெறியிற்செலுத்துதலும் உள்ளன. இருதயத்தானமாக இருப்பதே திருக்கோயில். நமக்கு எப்படி இருதயம் உடம்பு முழுவதும் செல்லக்கூடிய செந்நீர் என்று சொல்லப்படும் ரத்தத்தைச் சேர்த்து, உடம்பு முழுவதற்கும் கொடுப்பதாக இருக்கிறதோ அதுபோல, ஆண்டவனுடைய திருவருளைப் பெற்று மக்களுக்குக் கொடுக்கக் கூடிய இடம் திருக்கோயிலாக இருக்கிறது. ஆதலினாலே திருக்கோயிலை அரசர்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

தாவர லிங்கம் பறித்தொன்றில் தாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலைகெடும்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடும்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே.

அசையாது இருக்கின்ற அசலம் எனப்படும் சிவலிங்கத்தை நிலைபெயரச் செய்தல், எக்காரணம்பற்றியோ ஒருவருக்கு வருமேயானால், அவர் அதைச் செய்து முடித்தற்குள்ளே 'அரசு நிலைகெடும்'.

அதுமாத்திரம் அன்று, அவர்கள் இறத்தற்குமுன்னே உடம்பும் ஊறுபடும். அதைச் செய்வதற்குக் காரணமாக இருக்கின்றவர்கள் அல்லது பொறுப்பேற்று நிறைவேற்றுபவர்கள் உடம்பும் ஊறுபடுமென்றார். இது விஞ்ஞானத்திற்கு ஒத்து இல்லையே; கோயிலிலே நடப்பதற்கும் அரசுக்கும் என்ன

சம்பந்தம் இருக்கிறது? என்று வினவலாம். விஞ்ஞானம் முழுவதும் உணராதவர்கள், அதைத் தெரிந்துகொள்ள முடியாது. இறைவனுடைய திருவருள்தான் உலகத்தை நடத்துவது என உணர்ந்தோர் தெரிவர். 'காவலன் பேர் நந்தி கட்டுரைத்தானே' - நந்தி என்ற பெயரை உடையவனுக இருக்கின்ற காவலன், எல்லாவற்றையும் காத்து ராஜாதி ராஜனுக இருக்கிற பெருமான் பரமேஸ்வன். இதை உறுதியாகச் சொல்லி இருக்கின்றுர். ஆதலினுலே, அதன்படி நடக்கவேண்டும் என்று முதலில் சொன்னுர்.

கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே.

சில சமயங்களில் திருக்கோயிலில் இருக்கும் கற்கள் நம் வீட்டிற்கு உபயோகப்படுவதாகக்கூட இருக்கலாம். கட்டுவித்து ஆர் மதில் - பெரியோர்களால் சிவபுண்ணியப் பேறு கருதி கட்டப்பட்டு, அமைந்து நிறைந்திருக்கிற மதில். அதிலே ஒரு கல் சிறிது பழுதுறும்படி செய்தாலும் 'வெட்டுவிக்கும்'. அதை ஊறுபடுத்திஞல் இவர்களுடைய உடம்பு ஊறுபடும்; யாருக்கு அப்படி என்ருல் 'அபிடேகத்து அரசரை' அதாவது முடிமன்னர்களுக்கு இப்படி நிகழும்.

இன்னும் 'முட்டுவிக்கும்'-அவர்கள் எச்செயல்களிலே சென்ருலும், அச்செயல்கள் கைகூடாதபடி இடையூற்றை விளைவிக்கும். முனி வேதியராயினும் - முனிவர்களாக, வேதியர்களாக இருந்தாலும், மற்ற தருமங்கள் எல்லாம் செய்திருக்கிருேமே, இந்த ஒரு தவறுதானே செய்கிருேம் என்று எண்ணி, வேறு பலவற்றிஞலே ஈடு செய்துகொள்ளலாமோ என்ருல், ஈடு செய்ய இயலாது.

வெட்டுவித்தே விடும் - அவர்கள் உடம்பிற்கும் ஊறு வரும். ஆதலால், சிவாலயங்களை ஊறுபடாமல் பாதுகாக்கவேண்டுவது அரசனுடைய கடமை, மற்றவர்களுடைய கடமை. எவ்வகையிலேயும் ஆலயங்களுக்கு ஊறு செய்யவேகூடாது. 'விண்ணவர் ஆணையே' 'விண்' என்பது பரவியோமம் எனப்படும் திருவருளைக் குறிக்கக்கூடியது.

'ஆகாசம் பிரும்மத்திற்குச் சரீரம்' 'உமையலால் உருவம் இல்லை' என்ற இடங்களில் பராசக்திக்குப் பிரியமாக வழங்கப்படுவது ஆகாசம் என்னும் சொல். எனவே, திருவருளைத் தமக்குச் சொரூபமாகவும், குணமாகவும் கொண்டு, அத்திருவருளிலே நிலைத்து நின்று, எல்லாவற்றையும் செய்கிற பரமேசுவரனுடைய ஆணை இது என்று அடுத்தபடி சொல்லி, இரண்டு பாட்டுக்களினுலே நித்திய நைமித்தியங்கள் குறைவற நடைபெறவேண்டும் என்பதைச் சொல்லுகிருர். அப்படி இல்லையானுல், உலகத்தினுடைய க்ஷேமம் குறையும். அங்கே செய்வது எதற்கோ செய்கிருேம் என்று எண்ணக்கூடாது. அந்த இடத்திலே செய்வது உலக நன்மைக்காகத்தான் என்னும் நிச்சய புத்தி வேண்டும்.

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்களெல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.

சாற்றிய பூசைகள் - வேதாகமங்களினுல் நித்தியம் நைமித்தியம் என்று விதிகளினுல் சொல்லப்பட்ட பூசைகள்.

தப்பிடில் - தவறுகள் நேர்ந்தால். ஆற்றரு நோய்மிக்கு அவனி மழையின்றி - உலகத்திற்கே அது கேடு பயக்கும்; நோயுண்டாகும்; மழையானது பெய்யாது. சிறந்த நிலையிலே இருக்கிற மன்னர்களும் தாங்கள் பிறரிடத்திலே வெற்றிகொள்ளும் நிலையினின்றும் மிகக் குறைபாடு உடையவர்களாக ஆவார்கள்.

முன்னவ ஞர்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே.

முன்னவனுர் கோயில் பூசைகள் முட்டிடின் மன்னர்க்குத் தீங்குள - பூசை தவறினுல் ஏதோ அரசுக்கு உத்பாதம்; பூசையில் ஏதாவது குறையிருந்தால் அரசாட்சிக்கு ஏதோ தீங்கு உளதாகும். தவறு நேரின், அதனை உத்பாதம் என்று நாம் கொள்ள வேண்டும்.

வாரி வளம் குன்றும் • மழை பெய்யாது. வாரி என்றால் வருவாய். 'பாரின் எக்சேஞ்' என்று சொல்கிறோமே அப்படிப்பட்டதெல் லாம் வேண்டுமென்றால், பூசையினிடத்திலே கருத்துடையவர்களாக இருக்க வேண்டும். பூசை நிபந்தங்களைக் குறைக்கக்கூடாது. சரிவரச் செய்யவேண்டும். கன்னம் களவு மிகுத்திடும் காசினி • உலகத்தின்கண்ணே தீயசெயல்கள் மிகும். மக்கள் நல்ல நடை யிலே ஒழுகமாட்டார்கள்.

என்னரு நந்தி எடுத்து உரைத்தானே• ஆண்டவன் இதனை அவனே சொன்னான் என்று சொல்லி, அடுத்தபடி இவ்வளவு பாதுகாத்து உய்க்கவேண்டுவதாக இருக் கும் பூசைமுறைகளைச் செம்மையாயுணர்ந் தவர்களாக அம்முறைகளை உணர்ந்திருக்க வேண்டும். உணர்வதோடு, அவ்வுணர்வி னுடைய பயனாக இருக்கும் அன்பும் இருக்க வேண்டும். ஞானத்தின்பயன் அன்பு என்ற வகையிலே 'அன்பும் அருளும் அறிவுக்கு அடையாளம்' என்பர் சிவன் வாக்கு. 'உணர்ந்தோர் ஈண்டு' என்று சொல்லுகிற படி அன்பே அறிவின் பயன். அப்படி இருக் கிறவர்களுக்குப் பார்ப்பார் என்று பெயர். 'பார்ப்பார்' என்றால் நூலினுடைய முடிந்த ஒரு பொருளைத் தங்களுடைய அகக்கண் கொண்டு கண்டு, இதுதான் நூலினுடைய கருத்து என்று பார்க்கிறவர்கள். 'ஸ்மிருதி' என்ற சொல்லுக்குக்கூட 'ஸ்மிருதி' என்றால் நினைத்தல்; முனிவர்கள் வேத வாக்கியங் களுக்கு இது தாத்பர்யம் என்று நினைத்து, இது செய்யத்தக்கது இது செய்யத்தகாதது என்று நினைத்து நமக்கு ஸ்மிருதியின் பொருளை விளக்குதலால், ஸ்மிருதி என்று பெயர். உபநிஷதங்களின் தாத்பர்யங்களை நோக்குகின்றவர்கள் ஒன்றி நோக்குகின்ற வர்கள், அவர்கள்தாம் 'பார்ப்பார்' என்று சொல்லப்படுவோர். அப்படி நோக்கி உல கத்திற்கு நன்மை விளைவிக்கக்கூடிய சாதன மாக இந்தப் பூசையை மேற்கொள்ளவேண் டும். அப்படி இல்லாமல், வெறும் பெயரள விலேமாத்திரம் இருக்கின்றவரைப் பின்வரு மாறு கண்டிக்கின்றார்:

பேர்கொண்ட பார்ப்பான்
பிரான்தன்னை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப்
பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப்
பஞ்சமு மாமென்றே
சீர்கொண்ட நந்தி
தெரிந்துரைத் தானே.

இந்த ஒரு வகையிலே அந்தத் திருக் கோயிலிலே இருக்கும் மூர்த்தி எந்தவடிவில் இருக்கிறதோ, அதைச் சிதையாமல், நிலை பெயராமல் பாதுகாக்கவேண்டும். திருக் கோயில்களை நாம் பழுதறப் பாதுகாத்துக் கொள்ளல்வேண்டும். நித்திய நைமித்திக பூசைகளைச் சிறப்பாகச் செய்து வரவேண் டும். பூசிக்கின்றவர்கள் அந்தத் தகுதியில் குறையாதவர்களாக இருத்தல் வேண்டும். அதுவும் நம்முடைய கடமைதான். இது பொதுமக்கள் சார்பில் அரசினுடைய கடமை ஆகும். அரசன் தகுதி உடையவர்களைக் கொண்டு பூசை முதலியவற்றை ஆற்றி வர வேண்டும். இந்த நான்கு கருத்துக்கள் 'திருக்கோயில் இழிவு' என்னும் இப்பகுதி யில் உள்ளன. இந்த நல்ல ஆராய்ச்சியில் ஈடுபடும் பெருவாய்ப்பை அடியேனுக்கருளி உய்யக்கொண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நி தானம் அவர்களின் திருவடிகளை மீள்வும் போற்றுகின்றேன். குழந்தையின் கையில் தாம்பூலம் கொடுத்து, அது பெற்றவர்கட்கு அதனைக் கொடுக்கின்றபோது, 'குழந்தை நமக்குத் தாம்பூலம் கொடுக்கிறது' என்று மகிழ்வார்கள். அதுபோல இந்தத் திருமந் திரத்தின் உரை எல்லாம் இங்கே ஆதீன மகாவித்துவான் மூலமாக மிகச் சிறப்பாக இப்போது அச்சிட்டு வைத்திருக்கிறார்கள். முதலில் சில மாநாடுகளில் திருமந்திரப் பொருள் உணர்வதற்குக் கஷ்டமெல்லாம் பட்டதுண்டு. ஆனால் இந்தச் சமயத்தில் அவைகளை முன்னாலேயே எழுதியிருக்கின் றார்கள். அவற்றையெல்லாம் படித்து அனு பவித்து, மீள்ச் சொல்லும்படியான நிலையில் நம்மை வைத்திருக்கின்ற நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் பெரும் கருணைக்கு மீளவும் எனது வணக்கத்தைத்தெரிவித்துக் கொண்டு, இதோடு எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

## 'அதோமுகதெரிசனம்'

பேராசிரியர்

**திரு. கோ. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், M. A., B. L.,**

அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

முதற்கண் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுக்கு என்னுடைய தாழ்மையான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியோர்களே! அதோமுகம்! அதோ! அதோ! முகம்! எம் முகம்? எண் முகம் ஆம் சண்முகத்தை உண்முகம் கொண்டு உற்று நோக்குங்கள். அதோமுகதரிசனம்! அதோ நமசிவாயமூர்த்திகள்! பஞ்சாக்கரக் காட்சி! அதோ உங்கள் திருமுகத்தைக் கொண்டு ஒருமுகமாய்க் குரு முகத்தைக் காணுங்கள்.

பெரியோர்களே! 'அதோமுக தரிசனம்' என்பது எனக்குப் பணித்துள்ள தலைப்பு. 'அதோமுகம்' என்றால் கீழ்நோக்கிய முகம். அதை நன்கு விளக்கியுள்ளார் நம்முடைய திருமூலர். அந்தப் பாடல்களை நாம் புரிந்து கொள்ளுதற்குச் சைவ சித்தாந்தநூல்களில் சிறிது பயிற்சி தேவை, சித்தாந்த அறிவு இல்லாமல், திருமந்திரத்திற்குள் நுழைந்தோமானால் நீச்சல் தெரியாதவன் குளத்திலே விழுந்தமாதிரிதான். அதோமுகதரிசனத்தின், அதாவது 'சிவ தரிசனத்தின்' இயல்பை 'உண்மைநெறி விளக்கம்' என்னும் சித்தாந்த நூல் பின்வருமாறு கூறுகிறது;

பரைஉயிரில் யான் எனதுஒன்
றறநின்றது அடியாம்
பார்ப்பிடமெங்கும் சிவமாய்த்
தோன்றலது முகமாம்
உரையிறந்த சுகம் அதுவே
முடியாகும் என்றங்கு
உண்மையினை மிகத்தெளிந்து
பொருள் வேறென்றின்றித்
தரைமுதலிற் போகாது
நிலையினில் நில்லாது
தற்பரையில் நின்று அழுந்தாது
அற்புதத்தின் ஆகும்
தெரிவரிய பரமானந்
தத்திற் சேர்தல்
சிவன்உண்மைத் தரிசனமாய்ச்
செப்பும் நூலே.'

அதுதான் சிவ தரிசனம். இதன் பொருள் என்ன? யான் எனது என்னும் செருக்கு அற்று, யாண்டும் நிறைந்து நிற்கும் பரம் பொருளை, ஒளிக்குள் ஒளியாய்க் கண்டு, அந்தக் காட்சியில் தோன்றும் ஆனந்தத்தின் உண்மையை உணர்ந்து, நிலம் முதலாய தத்துவங்களில் மீண்டும் செல்லாமல் 'நான் பிரும்மம்' எனும் பசு ஞானத்திலும் நில்லாமல், மேலான பரையிலே நின்று அழுந்தாமல், சிவப்பேற்றிலாகும் அறிதற்கரிய பரமானந்தத்தில் சேர்தலே சிவனை உள்ளபடி தரிசித்தல் என்று சிவாகமங்கள் கூறும்.

எனவே, அதோமுகதரிசனம் என்பதன் தத்துவப் பொருளாவது, யாண்டும் கலந்தும் கரந்தும் நிற்கும் பேரொளிப் பிழம்பாம் பரம்பொருளைத் தரிசித்தல். அதுதான் அதோமுகதரிசனம்.

இதை அப்பர்சுவாமிகள் மிகத் தெளிவாக ஒரு சிறு பாட்டிலே சொல்லுகிறார் :-

'விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.'

மறைந்த முகம் முன்னாலே நிற்கும். எப்பொழுது? உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே. சிவஞான அறிவைக் கொண்டு, அதாவது நம்முடைய பாச அறிவு, பசு அறிவையெல்லாம் மூட்டைகட்டி வைத்து விட்டு, அரிதில் முயன்று, தவம் கிடந்து, பதிஞானத்தைப் பெற்று, அதன் விளைவாக

ஞானக்கண் கொண்டு பார்க்கின்றபோது முன்நிற்குமே.

அதோமுகத்தைப் பாதாளமுகம் என்று வேதங்கள் ஓதும். பாதாளமுகம் என்ருல் மறைமுகம் என்னும் பொருள். பாதாளம் என்ருல் மறைவு. இறைவன் இங்ஙனம் இயங்கு திணையும், நிலைத்திணையும் ஆகிய எல்லாப் பொருள்களிலும் விரவிக் கலந்து இருத்தல் அவை நிலைபெறுதற்பொருட்டே ஆகும். ஏன் ஒளிந்துகொண்டிருக்கிருன்? வாரண்டுக்குப் பயந்தா? இல்லை. அவற்றைத் தாங்கிக்கொண்டிருக்கிருன். அவன் சோம்பேறியாக இல்லை. வேலையைச் செய்து கொண்டே இருக்கிருன். வேலைக்கு இருக்கும் ஆள் எப்பொழுதும் வீட்டிலே காணப் படமாட்டான். அதுபோல, ஆண்டவன் மறைந்திருக்கிருன். அவன் தன் 'ட்யூடியில்' இருக்கின்ருன். அவனை எப்படிப் பார்க்க முடியும்? சோம்பேறிகளை எங்குபார்க்கலாம். திண்ணையிலே பார்க்கலாம். சந்தியிலே பார்க்கலாம். இரயில்வே நிலையத்தில் பார்க்கலாம். சத்திரத்திலே பார்க்கலாம். உழைப்பாளியை எளிதில் காண முடியாது.

இறைவன் எங்கும் விரவியிருப்பினும் அவனை அப்பாசங்கள் பந்திக்கமாட்டா வாம். பாசத்தை எல்லாம் தாங்கிக்கொண்டு பாசத்திலே இருக்கிருன் என்ருல் அவனும் பாசத்திற்குக் கட்டுப்பட்டவனே? இல்லை. அவன் கடந்தவன்; அதீதமானவன்.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே.

என்னும் திருமந்திரம் முன்னரே குறித்துள்ளது. அதனையே மீண்டும் வேருெரு வகையாக வலியுறுத்துகிருர் திருமூலர், அதோமுகதரிசனத்தில்.

அண்டமொ டெண்டிசை தாங்கும்அதோமுகம்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே.

சிவபெருமானுக்கு ஏன் கண்டம் கறுத்தது? உடனே நம்முடைய சைவர்களிலே பலபேர் எழுந்து, 'நஞ்சு தொண்டையைக் கறுக்கி விட்டது' என்று சொல்வதற்குத் தயாராகக் காத்துக்கொண்டு இருக்கின்ருர்கள் எனத் தெரிந்து திருமூலர் சொன்னுர்;

கண்டம் கறுத்த கருத்து அறிவார் இல்லை.

கரிகாலன் என்று சரித்திரத்தில் வருகிருன் ஒருவன். சோழர்குலத்தைச் சேர்ந்தவன்; அவனுக்கு ஏன் அப்பெயர் வந்தது? அவன் காலிலே தீப்பட்டுக் கால் கறுகிவிட்டது, அதனுல் கரிகாலன் என்று பெயர் வந்தது என்று புத்தகத்தில் வருகிறது. நான் கேட்டேன். 'அவனுக்குக் கால் என்ன விறகுக் கட்டையா, கறுகிக்கொண்டே போவதற்கு?' என்று. யுத்தத்திலே யானைக்குக் காலனுய் இருக்கிருன் என்று அவனுடைய வீரத்தைப் போற்றுவதற்காக வந்த பெயர் கரிகாலன். இலக்கணப்படியே பார்த்தாலும் அவர்கள் சொல்லுகிற பொருள் வரவேண்டுமானுல், கரிக்காலன் என்றல்லவா இருக்கவேண்டும்? அதுபோலத் திருநீலகண்டம், கருநீல கண்டம் என்றவுடனே ஒரு புலவர் பாடுகிருர், 'ஐயோ! சிவனைக்கூடக் கறுக்கிவிட்டது ஆலகால விஷம்' என்று. அப்படியானுல் சிவனும் நம்மைப் போலவே சாதாரண, நாடோடி ஆளைப்போல்தானே இருப்பார் என்று ஆய்விடும்; அதைத்தான் திருமூலர் விளக்கினுர். இதனுல் நஞ்சு உண்ணவில்லை என்பது பொருள் அல்ல. சிலபேர் திருமந்திரத்தைப் படித்தவுடனே, 'முப்புரம் எரித்தது மும்மல காரியம்' என்று சொல்லியிருக்கிறது; திரிபுரத்தை எரிக்கவில்லை சிவபெருமான்; திருமூலர் கண்டித்திருக்கிருர்' என்று உரை எழுதிவிடுவார்கள். அந்த வரலாற்றையோ அல்லது சிவபெருமான் திரிபுரம் எரித்ததையோ இவர் இங்கு மறுக்கவில்லை; அவை உண்மையாகவே இருக்கட்டும். அதனுடைய உட்பொருளாக - எந்தப் பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு என்று ஒன்று இருக்கிறது அல்லவா? ஆகையால், அந்த உண்மைப்பொருள் என்ன? அதனுடைய அடிப்படைக் கருத்து என்ன? என்பதைத் தான் எடுத்துக் கூறுகிருர்.

அதனால் இந்த ஒரு பாட்டைப் படித்த உடனே, 'சிவபெருமான் நஞ்சு உண்ண வில்லை என்று திருமூலர் சொல்லிவிட்டார்; கண்டம் கறுத்த காரணம் வேறு' என்று சொல்லிவிடக்கூடாது. கண்டம் எதற்காகக் கறுத்தது என்பதைப் பார்க்க வேண்டும். எனக்குத் தெரிந்தமட்டில் இந்தப்பாட்டு ஒரு புதிராகத்தான் அங்கே இருந்துகொண் டிருக்கிறது. அதை ஒருவரும்விளக்கவில்லை. நான் என்ன நினைக்கின்றேன்? — அதைப் பின்னாலே சொல்லுகிறேன்.

இறைவன் பாசத்தோடு விரவியிருப்பி னும் அப்பாசங்கள் அவனை மறைத்தலும் மயக்குதலும் இல்லை என்பதனை அவனது திருநீலகண்டமானது விளக்கும். புராணக் கதையின் தத்துவப்பொருளும் இதுவே.

நஞ்சு, உட்கொண்டாரின் உடல் முழுதும் பரவி, ஆளை மயக்கிக் கீழே தள்ளி, உயிர் என்னும் ஒருபொருளும் இல்லை ஆம்படி அவனைப் பாடாணம்போல் கிடத்திப் பிண மென ஒரு பெயரும் சூட்டிவிடும். அங்ஙன மின்றி அந்த நஞ்சு இறைவன் கண்டத்தில் தனித்திருத்தல் அவனைப் பாசம் அணுகாது என்னும் உண்மையினையே உணர்த்தும்.

எல்லோரும் உண்ணாத நஞ்சு உண்டு, விண்ணோரும் தொழும்படி அவர்களுக்கு அருள் புரிந்து கொண்டிருப்பான் சிவபெரு மான் என்று சிலப்பதிகாரத்திலேகூட எடுத் துச் சொல்லப்பட்டிருக்கிறது. நஞ்சு உண்டு சாகாமல் இருந்ததோடு மட்டுமல்ல; அதற் காகப் பயந்து ஓடிய தேவர்களையெல்லாம் கூப்பிட்டுவைத்து, அவர்களுக்கு அருட் பிரசாதமும் வழங்கிக்கொண்டு இருந்தான் என்றால் அதிலே நிரம்பச் சிறப்பு இருக்கத் தானே வேண்டும்? உலகத்து உயிர்களைப் பாதுகாக்கும் பரம கருணையால் இறைவன் ஆலகாலத்தை எடுத்து மிடற்றில் அடக்கி னான். அக் கருவிடம் இறைவனின் செந்நிற மான தூய கண்டத்தினூடு நீல நிழலொளி பரப்பி நிற்கிறதேதவிர, இறைவன் கண்டம் கறுத்துவிட்டது என்றோ, கறுகிவிட்டது என்றோ நாம் கூறுதல் பொருந்தாது. அது பொய்யே ஆகும்.

செய்தான் அறிவன் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே யுரைத்துப் புகழும் மனிதர்காள்
மெய்யே யுரைக்கில் விண்ணோர் தொழச்செய்
மைதாழ்ந் திலங்கு மணிமிடற் றோனே. [வன்

இம்மந்திரம் இதனை வலியுறுத்தும். 'விண் ணோர் தொழச்செய்வன்' என்ற கருத்து ஒன்றும் செய்யவேண்டாம், வேறு தவம் கூடச் செய்யவேண்டாம், பொய் பேசாமல் இருந்தால்போதும், தேவர்கள் தொழும்படி யாக ஆக்கிவிடுவான் சிவபெருமான் என்று சொல்கிறார். பொய்சொல்லாமல் இருந்தால் போதும். பொய்சொல்வது என்னவென் றால், சிவபெருமான் நஞ்சு உண்டு கண்டம் கறுத்துப்போச்சு, தீய்ந்துபோய்ச்சு என்று சொல்வது. தொண்டையில் உள் நாக்கு வளர்ந்துவிட்டால் கறுக்குவது (காடரைஸ்) என்கிற மின்சார வைத்தியமுறை உண்டு. அம்மாதிரி அவர் தொண்டையில் ஏதாவது காடரைஸ் ஆகிவிட்டதா? அப்படிச் சொல்வ தெல்லாம் பொய். 'சிவ நிந்தை கூடாது' என்று சொன்னார்களே, அதையாவது செய் யாமல் இருந்தால் இறைவனுடைய கருணை கிடைக்கும். இதைத்தான் அப்பர்சுவாமிகள் இன்னொரு விதமாகச் சொல்லுகிறார்:

'முழுத்தழல் மேனித் தவளப்
பொடியன் கனகக் குன்றத்து
எழிற்பெருஞ் சோதியை எங்கள்
பிரானை இகழ்திர் கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படு
வானைத் தொழுத பின்னைத்
தொழப்படுந் தேவர் தம்மால்
தொழுவிக்கும் தன் தொண்டரையே.'

இங்கே திருமூலர், 'விண்ணோர் தொழச் செய்வன்' என்கிறார். 'தொழப்படும் தேவர் தம்மால் தொழுவிக்கும் தன்தொண்டரை' என்று அப்பர் சொன்னார். பிரம்மா வந்து விழுகிறார் சிவன் காலில். 'நீ தொண்டரைக் கும்பிடு' என்றார் சிவபெருமான். திருஞான சம்பந்தர் கும்பிட்டார் காளத்தியப்பரை. காளத்தியப்பர் என்ன சொன்னார்? 'என் னைக் கும்பிட்டாயே, என்பக்கத்தில் கண் ணப்பன் இருக்கிறான், அவனைக் கும்பிடு' என்றார். வேடனையிற்றே என்று சொன்னார் திருஞானசம்பந்தர். அடியார், தொண்டர்.

கீழேவிழ, எப்பேர்ப்பட்ட தேவராயிருந்தாலும். 'செய்தான் அறிவன்' என்ற திருமந்திரப் பாடல் பல இடங்களில் தலைகாட்டுகிறது. அதோமுகதரிசனத்திலும் தலைகாட்டிற்று. 'கூடார்வொழுக்கம்' என்று பின்னுலே வருகிறது. அதிலேயும் இதேபாட்டு, கொஞ்சம் பாட வேறுபாடுகளோடு வருகிறது. அதெல்லாம் ஆராய்ச்சி பண்ணுகிறவர்கள் ஆராய்வதற்குரியது.

அதோமுகம் என்னும் இந்தத் திருமுகம் சிவயோகியரான அறிஞரால் தியானித்துத் தரிசித்தற்குரியது.

நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
செந்தீக் கலந்துட் சிவ்னென நிற்கும்
முந்திக் கலந்தங் குலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோமுக மாமே.

இந்தத் திருமந்திரப் பாடல் அழகாக அமைந்து இருக்கிறது பாருங்கள். கந்த புராணம் பாடியவருடைய உள்ளத்தையும் கவர்ந்துவிட்ட பாடல் இது. இதை அப்படியே தம்முடைய நூலில் தூக்கி வைத்து விட்டார்.

சிவனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. பல்லாண்டுகள் ஆகிவிட்டன. கல்யாணம் ஆன வீட்டில் சும்மா இருப்பார்களா வருகிறவர்கள் போகிறவர்கள் எல்லாம்? 'குழந்தை பிறந்ததா?' என்று கேட்கிறார்கள். ஒரு வருஷம், இரண்டு வருஷம் ஆன பிறகும் குழந்தை பிறக்கவில்லையா? என்று சிவபெருமானைக் கேட்க ஆரம்பித்து விட்டார்கள். பின்னுல், தேவர்கள் எல்லாரும் போய் முறையிட்டார்கள். சுவாமி! உங்களுடைய திருக்கல்யாணக் காட்சியை நாங்கள் கண்டு களித்தது எதற்காக என்றால், ஒரு குழந்தையைக் கொடுப்பீர்கள் என்று அல்லவா நினைத்தோம்; அசுரனுடைய கொடுமை தாங்கமுடியவில்லையே என்று முறையிட்ட போது, அவர் 'வருந்தாதீர்கள்' என்று சொன்னார்.

வந்திக்கு மலரோ னுதி
வானவர் உரைத்தல் கேளாப்
புந்திக்குள் இடர்செய் யற்க
புதல்வனைத் தருது மென்ன

'அந்திக்கு நிகர்மெய் யண்ணல்
அருள்புரிந் தறிஞ ராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத்
திருமுகம் ஆறுங் கொண்டான்.

இந்த ஐந்து முகத்தோடு அதோமுகத்தையும் தோற்றுவித்து, அறுமுகம் கொண்டான். இங்கே என்ன சொன்னர்? 'வந்திக்கும் மலரோனுதி வானவர் உரைத்தல்'. அதோமுகம் எப்பேர்ப்பட்டது? 'அறிஞராயோர் சிந்திக்கும் தனது தொல்லைத் திருமுகம் ஆறுங்கொண்டான்' 'ஐந்து முகத்தோடு அதோமுகமுந்தந்து திருமுகங்கள் ஆருகி' எனக் கந்தர்கலிவெண்பா கூறும்.

இவ்வாறாக, இந்தத் திருமுகமானது உண்மை ஞானிகளின் தியான பாவனைகளால் மட்டும் அகக் கண்ணுல் தரிசித்தற்கு உரியதாக இருத்தலினுலே நம் செந்தமிழ்ச் சைவத் திருமுறைகளில் இத்திருமுகத்தைப் பற்றிய செய்தி மிக அருமையாகப் போற்றி ஓதப்பட்டுள்ளது. பொதுவாகச் சிவனுக்கு ஐந்து திருமுகங்கள் என்று கூறப்பட்டது. அப்பர் திருப்பாடல் ஒன்றில் மட்டும் சிவபெருமானுக்கு ஆறு திருமுகங்கள் என்ற உண்மை கூறப்பட்டது. ஒரே ஒரு பாட்டு.

ஏறனூர் ஏறு தம்பால்
இளநிலா எறிக்குஞ் சென்னி
ஆறனூர் ஆறு சூடி
ஆயிழை யாளோர் பாகம்
நாறுபூஞ் சோலைத் தில்லை
நவின்றசிற் றம்பலத்தே
நீறுமெய் பூசி நின்று
நீண்டெரி யாடு மாறே

ஆறு திருமுகங்களுள்ளே நெற்றிக் கண்ணினின்று ஆறு செந்தீப் பொறிகள் தோன்றி அவை ஆறும் விண்ணிலும் காற்றிலும் தீயிலும் நீரிலும் மண்ணிலும் விரவித் தங்கிய புராணக் கதையின் தத்துவமும், மேலே குறித்தவாறு இறைவனை யாண்டும் பேரொளி உருவினனுகத் தரிசிக்கும் வாய்மையினை விளக்கும். விண் வெளியாகக் கொண்டு போனுன். வாயு கொண்டு போனுன். அக்கினி கொண்டு போனுன். கங்கையிலே கொண்டுபோய் விட்டார்கள் ஆறு பொறிகளை. ஆக, ஆகாய வழியாகச்

கொண்டு போனான் - விண் சம்பந்தம். அக்கினி சம்பந்தம். வாயுசம்பந்தம். கங்கையிலே அதைக்கொண்டுபோய் விட்டார்கள்; நீர் சம்பந்தம். சரவணப் பொய்கையிலே தாமரை மலரிலே குழந்தை இருந்தது. தாமரை பிருதிவி சம்பந்தம். ஆக, இந்த ஐம்பூதங்களில் ஊடுருவிக் கலந்து நீக்கமற நிறைந்து நிற்கின்றது அதோமுகம். இந்த அதோமுகத்தினுடைய ஒரு தன்மை கந்த புராணத்தில் மிக அழகாகக் கூறப்பட்டிருக்கிறதாகப் பெரியவர்கள் சொல்வார்கள்.

முருகன் இறைவனது கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, மேல், கீழ் திசைகளை, நிரலே நோக்கிய ஈசானம், தற்புருடம், அகோரம், சத்யோ ஜாதம், வாமதேவம், அதோமுகம் ஆகிய ஆறும் உடையான். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்யோஜாதம் ஆகிய இந்த ஐந்து முகங்களும் சிகாராதி திருவைந்தெழுத்துக்களிலே உள்ள ஐந்து எழுத்துக்களை மந்திர வித்துக்களாக அதாவது பீஜாட்சரமாக உடையன. ஆறுவது ஆகிய இந்த அதோமுகமானது ஓம் எனப்படும் பிரணவ மந்திர உருவம் ஆகும். சொல்லும் பொருளுமாய் உள்ள இரு கூற்று உலகங்களுக்கெல்லாம் மூலமாய் உள்ளது இந்த ஓங்காரமாகிய பிரணவ மந்திரமே ஆகும். இதனைத் திருமூலர் எவ்வாறு கூறுகிறார்?

அதோமுகங் கீழண்ட மான புராணன்
அதோமுகந் தன்னொடும் எங்கு முயலும்
சதோமுகத் தொண்மலர்க் கண்ணிப் பிரானும்
அதோமுகன் ஊழித் தலைவனு மாமே.

சதோமுகம் என்றது சத் ஓம் முகம்; சத் - உள்ளது.

'முகத்தில் ஒன்றதாம் அவ்வெழுத்துடையதோர் முருகன்' என்று கந்தபுராணத்தில் சொல்லுகிறார். முருகனுடைய ஆறு முகத்தில் ஒருமுகம் ஓங்காரம்; மற்ற ஐந்து முகங்களும் திருவைந்தெழுத்துக்கள்.

'ஓம் எனப்படும் குடிலையே
ஒப்பிலா முருகன் மாமுகத்துள்
ஒன்றும் அவன்தன்மை
யார் வகுப்பார்'.

என்னும் திருவாக்கும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

சிவபெருமான் அதோமுகம் கொண்டு தோற்றியருளிய முருகப்பெருமானின் திரு உருவமே ஓங்காரத்தின் உள்ளொளி என்பதை அருணகிரியாரும், கந்தர் அலங்காரத்தில் அருமையாகப் பாடியுள்ளார்.

'ஆங்கா ரமும்அடங் கார்ஒடுங்
கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும்
அறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே
முருகன் உருவம்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யார்என்செய்
வார்யம தூதருக்கே.'

இதுவே அதோமுகதரிசனம். இவற்றால் எல்லாவற்றிற்கும் தாரகமாயுள்ள ஓங்காரமான தாரக மந்திரத்தை முதலில் கொண்டுள்ள திருவைந்தெழுத்தே அதோமுக தரிசனம் என்பது புராணம். அதுவே இறைவனை மந்திர வடிவினனாகத் தியானிக்கின்ற முறைமையாகும். சூரபன்மன் என்பவன் அசுரன். அசுரன் என்றது ஆணவ மல இருளை. அசுரன் உயிரினங்களுக்கெல்லாம் பகைவன். அவனை ஒடுக்கவேண்டி இறைவனிடம் தேவர்கள் முறையிட, தத்பரசிவம் அதோமுகம்கொண்டு ஆறுமுகனை வெளிப்படுத்தி, 'அவ்வசுரனைக் கொல்' என்று ஏவினான். இதைத் திருமூலர் கூறுகிறார்.

எம்பெரு மான்இறை வாமுறை யோஎன்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி அறுமுகன் போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே.

இங்கு முருகனை 'அம்பவள மேனி அறுமுகன்' என்று அழகாகக்கூறுகிறார். பவளம் போல் சிறந்த அழகிய மேனியை உடையவன் அல்லவா? அறுமுகக்கடவுளே அதோமுகதரிசனமென்பதை உணர்தல்வேண்டும். இந்த அதோமுகதரிசனம் என்னும் அதிகாரத்தில் உபதேசிக்கப்பட்டுள்ள தத்துவப் பொருளை விளக்குதற்கு எழுந்துள்ள நூலே கந்தபுராணமாகும். ஆறுமுகக் கடவுளின் அவதாரத்தால் மறைமுகமாய், அதோமுகமாய் நின்ற பரம்பொருளின் தன்மையை

அனைவரும் எளிதில் தரிசிக்கும்வண்ணம் விளக்குவது கந்தபுராணம்.

இனி, இவ்வாறன்றி, அதோமுகம் என்பதைப் பிரகிருதி மாயை எனக்கொண்டு, சிவசத்தியாகிய மாயையினுடைய மேல் பாகம் பிந்து, நடுப்பாகம் மான், கீழ்ப்பாகம் மோகினி (அதோமுகமாயை) எனப்படுவதன்றி வேறின்மையால் அதோமுக மாயையிலும் உருக்கொண்டு சகலாகலராய் ஆன்மாக்களுக்கு அருள்புரிவான் ஈசன் என்பது அதோமுகதரிசனம் என்பதன் கருத்தெனக் கூறுவாரும் உளர். அதோ மாயைக்கும் அதோ முகத்திற்கும் யாதொரு இயைபும் இல்லையாதலின் இக்கூற்றுப் பொருந்தாது.

ஆனால், திருமூலர் ஒரு தலைசிறந்த சிவயோகி ஆதலால் யோக நிலைகளையும் முறைகளையும் குறிப்பதாகவே செய்யுள் இயற்றுதல் அவருக்கு வழக்கு. அதேபோல், இங்கும் கூறுகின்றார். யோகியின் பார்வை ஊர்த்துவமுகமாய், புருவத்தின் மையத்தை உற்று நோக்காது அதோமுகமாகி, உள்முகமாய்க் கீழே நோக்கி, 100 இதழ்களைக் கொண்ட தாமரையாய் விரிந்த இதயகமலத்தில் அந்தமில் சக்தியை அளிக்க வல்ல அதோமுக மந்திரமாகிய ஓங்காரத் திருவைந்தெழுத்து மந்திரத்தை உரு எழுதித் தியானிக்க இறைவன் அங்கே அதோமுக தரிசனம் அளிப்பன் என்கிறார். எப்படி?

அதோமுக மாமல ராயது கேண்மின்
அதோமுகத் தாலொரு நூறுய் விரிந்து
அதோமுக மாகிய அந்தமில் சத்தி
அதோமுக மாகி அமர்ந்திருந் தானே.

'சக்தி அமர்ந்திருந்தானே' என்கிறார். இப்பாடலில் முருகன் சரவணப் பொய்கையில் தாமரை மலர்மேல் வீற்றிருந்த கோலத்தை அழகுறச் சித்திரிக்கிறார் திருமூலர். சிவனது அதோமுகத்து அரும்பெருங் குணத்தால் நூறு இதழ் கொண்ட பெரிய தாமரை மலராக அவ்வதோமுகமே விரிந்து கொடுக்கவும், அம்மலர்மேல் எல்லையில்லாத சத்தி மயமாகிய அந்தமில் சத்தி அதோமுகக் கடவுள் ஆகிய முருகன் அதோமுகம் ஆகி, ஆறுமுகம்கொண்டு அமர்ந்திருந்தான் என்கின்றது இப்பாடல். சரவணப்பூம்பள்ளி அறையில் திருவோலக்கக் காட்சியே அதோமுகதரிசனம் என்பது இங்கே நன்கு புலனாகும். ஆறுமுகப் பொருளே அதோமுக தரிசனம்.

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்று
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்று
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுகம் ஒன்று
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்று
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்று
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்று
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசலத்தில் அமர்ந்த பெருமாளே.

ஆமே பிரான்முகம் ஐந்தொடு மாருயிர்
ஆமே பிரானுக் கதோமுக மாறுள
தாமே பிரானுக்குந் தன்சிர மாலைக்கும்
நாமே பிரானுக்கு நரரியல் பாமே.

— திருமந்திரம்.

# மூன்றும்நாள் பேருரைகள்

**தலைமையுரை:**

பேராசிரியர்

## திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்,

M. A., B. L., M. O. L.,

அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

அன்பர்களே! இங்கே நடக்கின்ற இத் திருமந்திர மாநாட்டுக்கு இன்றையதினம், தலைமை தாங்கவேண்டுமென்று, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பணித்தபோது எனக்கு ஒருதயக்கம். இன்று வேறு எங்கோ இருக்கவேண்டிய ஓர் அலுவலிருந்தது. ஆனால், 'குருவின் அருளினாலே ஆகாதது இல்லை' என்று சொல்லுவதற்கு இணங்க, எப்படியோ அந்த அலுவல் இன்றில்லாது போயிற்று. நம்முடைய தேசிகர் அவர்கள் சொல்லியபடி, வேறு எதை எதையோ பேசிக்கொண்டிருந்து வாணாளை வீணாளாக் காதபடி ஆண்டுக்கு ஒருமுறையாவது திருவருள் இங்கே வந்து பேசுமாறு என்னைக் கூட்டுவிக்கின்றது. அதனை எண்ணுகின்ற பொழுது 'குருவின் அருளும் ஆண்டவன் அருளும் நம்மையும் அறியாமல் எப்படியெல்லாம் நம்மை நல்வழிப்படுத்துகின்றன' என்ற ஒரு வியப்புத் தோன்றுகிறது என் உள்ளத்திலே.

இந்தமுறை, அறிஞர்கள் மூன்று சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்த இருக்கிறார்கள் - சிவநிந்தை, குருநிந்தை, மகேசுரநிந்தை என்கிற பொருள்பற்றி. 'எல்லாம் நிந்தைப் படலமாக இருக்கின்றதே, கேட்கும்போது' என்று நான் எண்ணிப்பார்த்தேன். 'இது ஏன் இப்படி?' என்று ஊன்றி எண்ணினேன். இந்த உலகம் இன்றைக்கு நிந்தைப் படலந்தான் பாடிக்கொண்டு இருக்கிறது. இரயில் வண்டியிலும் சரி, பஸ் வண்டியிலும் சரி, வீட்டுத் திண்ணையிலும் சரி, பள்ளிக் கூட மாணவர்களிடத்திலும் சரி, ஆசிரியப் பெருமக்கள் இருக்கின்ற கூட்டத்திலும் சரி, அங்கேயெல்லாம் நிந்தைப்படலம் மட்டும் அல்ல; நிந்தைப் புராணமே காலை முதல் மாலை வரை நடந்துகொண்டிருக்கப் பார்க்கிறோம். பத்திரிகை உலகத்தைப் பார்த்தாலும் சரி; காரசாரமாகத் திட்டி எழுதினால் தான் நன்றாக இருக்கிறது என்று சொல்லுவார்கள். நல்லபடியாக எழுதினாலோ பேசினாலோ அது மக்களுடைய உள்ளத்தைக் கவர்வதாகக் காணோம். இப்படி, இவ்வுலகம் நிந்தையிலே சுழன்று அலைகிறது. காணுகின்ற இடம் எல்லாம் சிவமாகக் காண வேண்டிய காட்சியிலே ஒரு சிறிதும் பழகாமல் - காணுகின்ற இடமெல்லாம் கொழிக்கின்ற அருளினைக் காணாமல் - அன்பினைக் காணாமல், பண்பு சிறிதேனுமில்லாத பொய்க் குப்பைகளையே கண்டு உள்ளம் வருந்தி, வாடி, உலகம் கீழே போய்க்கொண்டிருக்கின்றதைப் பார்க்கின்றோம். இதனாலேதான் போலும், இன்று இந்த நிந்தைகளையெல்லாம் நீக்கக்கூடிய ஒரு சிறந்த முயற்சியாக, இம்மூன்றும் திருநாள் அமைந்ததுபோலத் தோன்றுகிறது.

நம் மெய்கண்டார் அவர்கள் சிவஞான போதத்தின் முடிவிலே, ஞானியானவர்களுங்கூட, உலகத்தைப் பார்க்கும்பொழுது, சிவமாகவும் - கோயில்களைப் பார்க்கின்ற பொழுது சிவமாகவும் - பார்க்கவேண்டும் என்று 12ஆம் சூத்திரத்திலே பணித்தருளி இருக்கின்றார்கள். அந்தச் சூத்திரம் இப்பொழுது நினைவுக்குவருகிறது. அவர்கள் உடன்பாட்டுமுகத்தினாலே,

'செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே'

என்று சொன்னார். இதற்கு எதிர்மறையான நிலைமை உலகத்திலே புழங்குகிறது. சிவத்தையே நிந்தித்தல், குருவையே நிந்தித்தல், மகேசுவரனையே நிந்தித்தல் என்ற முறை எங்கும் பரவி வரும்போது, அந்த உடன்பாட்டு நிலையைக் காணமுடியாது. ஆனால், அந்த உண்மையை இந்த இருபதாம் நூற்றாண்டுபோல, வற்புறுத்துகின்ற காலத்தை நாம் கண்டிருக்கமுடியாது. நம் ஞானிகள் எழுதி வைத்ததோடு அவர்களே அனுபவித்தும் பார்த்தார்கள்.

அந்தச் சூத்திரத்திற்கு வேறு சிலர் எல்லாம், அனுபூதிமானுடைய இயல்பைச் சொல்லுவதென்று பொருள் கொண்டிருக்க, இந்த ஆதீனத்திலே உலகம் உய்யத்தோன்றிய சிவஞான சுவாமிகள் ஒரு சிறந்த உரையை, ஆதீன சம்பிரதாயத்தையொட்டி, கண்டிருக்கின்றார்கள். சிவஞானிகளுடைய இயல்பைச் சொல்லுவது மட்டுமல்ல; சிவஞானிகளுக்கும் ஏவல் இடுவதாக அதைப் பொருள் கொள்ளுகின்றார். மலங்களையெல்லாம் கழுவியவர்கள் சிவஞானிகள்; என்றாலும் அவர்களுங்கூட, மறுபடியும் அப்பற்று அப்பழைய வாசனை தம்மைத் தாக்காதபடி, அன்பர்களோடு கூடி இருத்தல்வேண்டும் என்று ஒரு கட்டளை இடுவதாக அந்தச் சூத்திரத்திற்குப் பொருள் கண்டார். அதோடு கூட மாலறநேயம் மலிந்த அன்பர்களுடைய வடிவங்களையெல்லாம் காணுகிறபோது சிவனாக வழிபடுக என்று ஏவல்கண்ணிய வியங்கோளாக அந்தச் சூத்திரத்திற்கு உரை கண்டிருக்கின்றார். ஆங்கிலத்திலே சொல்லுகின்றபோது Descriptive என்று மெய்ஞ்ஞானியினுடைய இயல்பைச் சொல்லுவது எனப் பிறரெல்லாம் அதற்கு உரைகொள்ள, இவர்கள் அதை Prescriptive ஆக, ஒரு விதியாகப் பயன்படுத்திப் பொருள் உரைத்தார். இப்படி மெய்கண்டார் கூறிய நெறிக்குச் சிவஞானசுவாமிகள் பொருள் கொண்டிருக்கின்றார்; இந்த ஆதீனம் இத்தகைய ஒரு சீரிய கருத்தை வெளியிட்டிருக்கின்றது என்பதையெல்லாம் மகாத்மா காந்தி அவர்களோ, இன்று அவர்வழியிலே செல்லுகிற வினோபா அவர்களோ நேராக அறிந்திருக்க முடியாது. ஆனால்,அவர்கள் இந் நெறியைப் பின்பற்றுவதோடு அல்லாமல், தங்களுடைய கூட்டத்தினர்களுக்கெல்லாம் இதனையே வற்புறுத்திக் கூறுகின்றார்கள்.

ஞானியானவன், ஞானம் அடைந்து, அனுபூதி பெற்றவுடனே, அவனால் இங்கே - இவ்வுலகத்திலே - செய்யத்தக்க தொண்டு ஒன்றுமில்லை என்று கருதலாகாது. ஆண்டவனுடைய சத்திநிபாதம். அவனது அருளானது மக்கள்மேலே பக்குவப்பட்ட ஆன்மாக்கள் மேலே - விழுகின்றபோது, அது இறங்கி வருகிறது; இவன் ஏறத் தொடங்குகின்றான். ஆக, அப்படி இறங்கிவந்த அக்கடவுளின் அருளை எங்குமாகக் காண்கின்ற ஓர் அநுபவம் பெற்ற ஞானி இந்த உலகத்தில் செய்யத்தக்கது ஒன்று இருக்கின்றது. இந்த உலகத்தையெல்லாம் அவன் சிவமாகக் காண்பதுமட்டுமல்ல; சிவமாக ஆக்கவும் அவன் முயலுதல் வேண்டும். உலகத்திலே இருக்கிற ஜடப்பொருள்கள் அனைத்தையும் இவன் சிவமாகக் காண்கின்றான். அதுமட்டும் போதாது. தனக்கு மட்டும் புலனாகி, உள்ளுக்குள்ளாய் ஒளிர்கின்ற அச்சிவ ஒளியை உண்மையிலேயே மற்றவர்களும்கூடக் காணுமாறு செய்தல்வேண்டும். எல்லா ஜடப்பொருள்களினிடத்திலுங்கூட, சிவ மணம் பூத்து விளங்குதலை மக்களுக்கு உணர்த்தவேண்டும். அதோடு உயிர்களாக இருக்கின்றவை எத்தனையோ வகைகளிலே பழுதுபட்டுத் தோன்றினாலும், அவற்றையெல்லாம் தம்முடைய அருள் நோக்கால் மேலுக்கு அவன் உயர்த்தவேண்டும். ஜீவனுக்குள்ளேயே சிவமணம் பூத்திருப்பதை, தான் உணர்வதோடு மட்டுமல்லாமல் உலகத்திலே இருக்கின்றவர்கள் எல்லாருங்கூட உணரச்செய்தல் வேண்டும். ஜீவன்களையெல்லாம் சிவமாகஆக்குகின்ற அருளினை, மேலிருந்து இறங்கிவந்த அந்த அருளினை, இந்த உலகத்திலே உள்ள ஜீவான்மாக்களிடத்திலேயும் பாய்ச்சி, இவர்களை மேல் நோக்கி ஓங்கிப்போகுமாறு செய்தல்வேண்டும். இந்த அழகிய ஒருகருத்தை வினோபா அவர்கள் பலமுறை குறிப்பிடுகின்றார்கள். இந்தக் கருத்தை அண்மையிலே புதுவையில் வாழ்ந்துவந்த பெரிய ஞானியாகிய அரவிந்தரும் குறித்திருக்கின்றார். இவர்கள்

எல்லாம் தாம் துறவுக்கோலம் கொள்ளாத தற்குச் சொல்லுகின்ற காரணமே இதுதான்.

நாம் எல்லாரும், உண்மையிலே, துற வறத்தால்வருகின்ற அருள் அறத்தில் பங்கு கொள்ளுதல் வேண்டும். எப்படிச் செல்வம் எல்லாம், ஆண்டவன் அருளாலே எல்லா ருக்கும் வாய்க்குமாறு உழைக்கவேண்டுமோ அதுபோல, இந்த அருளும் எல்லோருக்கும் வாய்க்குமாறு உழைப்பதுதான் குடியரசின் தத்துவம். பொருளாதார நிலை செம்மைப் பட்டால் மட்டும் போதாது; தொழிற்சாலை கள் வளர்ந்தால் மட்டும் போதாது; எல்லா ரும் செல்வம் பெற்றவர்களாக வாழ்ந்தால் மட்டும் போதாது; எல்லாரும் நோய் இல் லாதவர்களாக மாறிவிட்டால் மட்டும்போ தாது; எல்லாரும் அறிவு உடையவர்களாக நிரம்பிவிட்டால் மட்டும் போதாது; இவற் றுக்கெல்லாம் மேலாக, அந்த ஆன்ம நேய ஒருமைப்பாட்டில் சிறந்தவர்களாய், அருள் விளக்கங்களாய் மக்கள் உயர்தல் வேண் டும். அதுதான் உண்மைக் குடியரசு. எல் லோரும் அந்த அருளறத்தில் பங்குகொண் டிருக்கின்றார்கள் என்ற உண்மையை இவர் கள் வற்புறுத்தி வருகின்றார்கள்.

ஆகவே, இந்த உலகத்தில் ஞானிக்கும் ஒரு தொண்டு உண்டு. பெரிய புராணத் திலே எல்லோரும் ஞானச் செல்வர்கள்; அதனாலேதான், சுந்தரமூர்த்தி சுவாமிகள், அவர்களில் ஒவ்வொருவர் பெயரையும் சொல்லி, அவர்கள் காலிலே விழுகின்றார். சுந்தரரே வணங்கக்கூடிய அந்த ஞானிகள் உலகத்தில் செய்யத்தக்கது ஒன்றும் இல்லை என்று விட்டுவிடவில்லை. தங்களுடைய குறிக்கோளுக்காக வாழ்ந்தது மட்டுமல்லா மல் தம்மாலான அளவு, உலகத்திலே இருக்கின்ற துன்பங்களைப் போக்கி, இன் பத்தை வளர்த்து, அருளறத்தைப் பேணி, ஜீவன்களிலெல்லாம் சிவனைக் கண்டது மட்டுமல்லாமல், சிவமாகவே ஆக்குதற்கும் முயன்றிருக்கின்றார்கள். சிவஞான போதத் தில் உள்ள 12-ஆம் சூத்திரத்திற்கு விளக் கம்போல் அமைந்ததுதான்பெரியபுராணம். உலகத் துறையிலே இன்னதுதான் சிறந் தது என்பது இல்லை. அதிலே எல்லாச் சமயத்தினரும் இருக்கின்றார்கள். எல்லாத் துறையில் இருக்கின்றவர்களும் இருக்கின் றார்கள். இளைஞர்கள் இருக்கின்றார்கள். அரசர்கள் இருக்கின்றார்கள். ஏன் வீரர்கள் இருக்கின்றார்கள். பெண்களிருக்கின்றார்கள். இப்படி எல்லாருக்கும் பொதுச் சொத்தாக இருப்பது இந்த அருளறம் என்பதை நமக் கெடுத்துக்காட்டுவது போல் இருக்கிறது பெரியபுராணம். அதிலே இருக்கின்ற பெரு மக்களாகிய திருஞானசம்பந்தரை ஞானம் கைவராதவர் என்போமா? திருநாவுக்கரை யரை ஞானம் கைவராதவர் என்போமா? சுந்தரரைஞானம்கைவராதவர் என்போமா? இவர்கள் எல்லாருமே ஞானம் கைவந்தவர் கள். ஆண்டவனைக் கண்ணுற்கண்டவர்கள். இருந்துங்கூட, இவர்கள் உலகத்திற்காக உழைத்தார்கள் என்றால், உலகத்தை உய் விக்க, உலகம் சிவம் ஆக, தாங்கள் கண் டது மட்டும் போதாது என்று தம்முள்ளே ஒளிர்கின்ற சிவன் வெளியேயும் ததும்ப வேண்டும் என்ற எண்ணத்தினாலே உழைத் தார்கள். இந்த உண்மையைத்தான் இருப தாவது நூற்றாண்டு நமக்குச் சொல்லிக் கொண்டு வருகிறது.

இப்படி உழைத்தவர்கள் எந்தத் துறை யில் உழைத்தார்கள். இன்னதுறை என்பது இல்லை. எந்தத் துறையாகவும் இருக்கலாம். எங்கேயும் பிறக்கலாம். எந்த எந்தக் கடமை உடையவர்களாகவும் இருக்கலாம். அவர் அவர்கள், அவரவர்களுடைய துறையிலே சிறந்து நிற்றல்வேண்டும் என்பதுதான் தமிழர்கள் கொண்ட கொள்கை. அந்தச் சிறப்பைத்தான், வாகை முல்லை என்று சொன்னார்கள். அரசன் ஒருவனேதான் வாகை சூடவேண்டும் என்பது இல்லை. அரசன் அறத்தை வளர்த்து, வீரத்தை வளர்த்து உலகத்தைச் செம்மையுறக் காப் பானால், அவன் வாகை சூடுகின்றான். அப் படியே அந்தணனாகப் பிறந்தவன் தன் னுடைய ஒழுக்க நெறி கடவாது, எத்தனை இக்கட்டுகள் நேர்ந்தாலும் அவற்றையெல் லாம் வென்று தன்னுடைய கடமைகளை நிறைவேற்றி வைப்பானானால், அவனும் வாகை சூடுகின்றான். அப்படியே ஒவ்வொரு துறையிலே இருக்கின்றவர்கள் வணிகத்

துறையிலே இருக்கின்றவர்கள், என்னைப் போலே ஆசிரியத் துறையில் இருக்கின்றவர்கள், பாடத் துறையில் இருக்கின்றவர்கள், பல கலைத்துறையில் இருக்கின்றவர்கள், பத்திரிகைத் துறையில் இருக்கின்றவர்கள், சேவகத்துறையில் இருக்கின்றவர்கள் யாராயிருந்தாலும் சரி - அவரவர்கள் அவரவர்களுடைய கடமையைத் தங்கள் நெஞ்சறிய, பொய்யின்றி, எத்தனை இக்கட்டு வந்தாலும், தங்கள் குறிக்கோளை மறவாது நிலைநாட்டுவதுதான் வாகை என்று தமிழர்கள் கருதினர்கள். இப்படி உலகப் போக்கிலேயிருந்து கண்ட அந்த வாகையைக் கடவுள் கண்கொண்டு சுந்தரமூர்த்திகளும் சேக்கிழாரும் கண்டு அனுபவித்து அருள் துறையிலேயும் அதனைப்பொருத்திக் காட்டுகிறார்கள். எல்லாவற்றையும் சிவமாகவே கண்டு சிவத்தைப் பேணி, சிவத்தைக் குறிக்கோளாகக் கொண்டு வாழும் மெய்த்தொண்டர்களுடைய வாகையையே சேக்கிழார் சிறப்பிக்கின்றார். அவர்களுடைய வீரம் எம்மால் விளம்பற்பாலதோ? என்று சேக்கிழார் பாராட்டுகின்றார். காரணம், எங்கே வீரம் இருக்கிறதோ அங்கே வாகை இருக்கிறது. உயிர் என்பது அழியாத ஒன்று. ஆதலினாலே, இந்த உடம்பை விடுவதால் தாங்கள் அழியமாட்டோம் என்று அவர்கள் உறுதியாக நம்பினர்கள்.

'மானம்' என்பது இந்தக் 'குறிக்கோள் வாழ்க்கையே'. இந்த உடம்பு அழிவுற்றாலும் பரவாயில்லை; தங்கள் உயிருக்கு உயிரான கொள்கையை 'விடமாட்டோம்' என்று உறுதியாக நின்று வாகை சூடினவர்கள் இவர்கள். மானம் கெடுவதா? அல்லது உயிர் கெடுவதா? என்ற ஒரு போட்டிவருமானால், வள்ளுவரும் பழந்தமிழ் மக்களும் என்ன கண்டார்கள்? உயிர் இறப்பதில்லை; ஆதலினால், உயிரை உடலினின்று விடுவது ஒரு பெரிய காரியம் அல்ல. 'ஆனால், குறிக்கோளை நிலைநிறுத்துவது இதனினும் சிறந்தது. ஆகையினால் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். தாங்கள் கொண்ட குறிக்கோளைக் காப்பாற்ற வேண்டும். உயிரைக் கொடுத்தேனும் காப்பாற்ற வேண்டுமென்பதே வள்ளுவரும் தமிழ்மக்களும் கண்ட உயர்ந்த நெறி. அந்நெறியைத்தான் கடவுளறத்திலே புகுத்தி, இந்தத் தமிழ்நாட்டிலே பிறந்த 63 நாயன்மார்களும் வாழ்ந்து காட்டினர்கள். இந்த வாழ்வைக்கண்டு வியந்துதான் அவர்கள் அடிகளில் வீழ்ந்துவணங்குகின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அந்த அடியார்களுடைய வாழ்வின் சிறப்பை, அருள் ஆழத்தைக் கண்டபோதுதான் அரசநெறியிலே பிறந்து, அமைச்சராக வாழ்ந்த சேக்கிழார் எல்லாவற்றையும் துறந்து, இக்குறிக்கோள் வாழ்வையே பாடவேண்டும் என்று ஒரு சிறந்த காப்பியத்தைத் தமிழ் நாட்டிற்குத் தந்து இருக்கின்றார். எனவே, இவர்கள் எல்லாம் வற்புறுத்துவது, சிவஞானபோதத்தின் 12-ம் சூத்திரத்தின் சிறந்ததொரு பொருள்.

இப்படி அவர்கள் உடன்பாட்டுவழியில் வற்புறுத்திய அந்தச் சிறந்த உண்மையை இந்த இருபதாவது நூற்றாண்டில் நம்முடைய நல்ல காலமாக நம் நாட்டில் பிறந்து, அந்த அறத்தை - அருள் அறத்தை - சிவ வாழ்வை வாழ்த்து காட்டுகின்ற பெருமக்கள் இந்த வாழ்வின் ஆழத்தை, பழந்தமிழ்ச் சைவத்தின் உண்மைவிளக்கத்தை நமக்குக் காட்டினர்கள். ஆகவே, அந்த உடன்பாட்டு நிலையிலே இருக்கவேண்டியபோது அங்கே ஒருவரையும் பழிப்பது இல்லை. ஒருவரையும் குறைவாகக் காண்பது இல்லை. எங்கும் சிவமாகக் காண்கின்றபொழுது, எங்கும் நீக்கமற நிறைகின்ற அந்தப் பரிபூரணனந்தம் அருள் வெள்ளமாகப் பொங்கி வழிகின்ற போது, எங்கே குறை காண்பது? குறை காணாத பெருவாழ்வை, சிவவாழ்வை, அருள் வாழ்வை இந்த ஆதீனத்தார் வாழ்ந்துகாட்டினர்கள். வாழ்ந்து வருகின்றார்கள். ஆதலினாலே, இந்த ஆதீனத்திற்கே உரியதொரு திருவருள் நெறி இது. ஆகவே, ஞானிக்கும் ஒரு தொண்டு உண்டு என்று இந்த ஆதீனத்துச் சிவஞான சுவாமிகள் வற்புறுத்திய அந்த உண்மை இன்று உலகத்தாராலே பாராட்டப்படுகிறது. அந்த நெறியிலே பல பெருமக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த உடன்பாட்டு நெறியால் வளர்ந்த ஒரு சைவப்பேரருள் திறத்தினை இன்று

உலகம் மறந்திருக்கும்போது, அந்த மறப்பி னுல் நேரிடுகிற நிந்தையைக் களையவேண்டு வது நம்முடைய கடமை என்று உணர்கிறது இன்று இந்த ஆதீனம். அதனுலே இன்று அப்பன்னிரண்டாம் சூத்திரத்தின் ஆழ்ந்த கருத்தினை விளக்கப் பன்னிரண்டாம் திரு முறை எழுந்த திறத்தினையும் வியந்து பாராட்டி, அந்தத் திறம் அந்த நெறி இந்த உலகில் வாழவேண்டும் என்ற கருத்தினுலே எதிர்மறைமுகத்தினுலே இன்று இந்த ஒரு மாநாட்டை நம் குருமகாசந்நிதானம் கூட்டி யிருக்கிருர்கள். இதற்கு வழிகாட்டியவர் இம் மண்ணைச் சிவமாக்கிய திருமூலர். அவரது திருமந்திரம் - இரண்டாந்தந்திரத்திலே சிவ நிந்தை, குரு நிந்தை, மகேசுவர நிந்தை என்பவற்றை வற்புறுத்திக் கூறுகின்றது.

நம்முடைய தேசிகர் அவர்கள் கூறியது போல், சிவநிந்தை செய்தவன் என்ன பாடு பட்டான் என்பது நமக்குத் தெரியும். சிறந்த தொரு காப்பியத்தை - தக்கயாகப்பரணியை ஒட்டக்கூத்தர் நமக்குப் பாடி அளித்திருக் கிருர். சிவநிந்தையிலே ஈடுபட்ட தக்கன், அவனை நம்பி அவனைப் பின்பற்றியவர்கள் எல்லோரும் என்ன ஆயினர் என்பதும் நமக்குத் தெரியும். அது ஒரு சிறந்த காப்பிய மாகும். தக்கன்பட்ட பாட்டை எல்லாம் நம் முடைய உள்ளக்கண்ணெதிரிலே கொண்டு வந்து காட்டுகிருர் ஒட்டக்கூத்தர், அவரு டைய அழகான காம்பீர்யமான நடையிலே.

குரு நிந்தை, மகேசுவர நிந்தை இவற் றைப்பற்றி இந்தக் காலத்திலே கட்டாயம் பேசுதல் வேண்டும். வாய் புளித்ததா மாங் காய் புளித்ததா என்று பெரியோர்களை யெல்லாம் இகழ்ந்துவருகிற ஒரு பழக்கம் நாட்டிலே பரவி வருகிறது. ஏனென்ருல், ஒவ்வொருவனுக்கும் தான்தான் பெரியவன் எனக் கருதிக்கொள்ளும் பேராசை வளர்ந்து வருவதை எங்கேயும் பார்க்கலாம். உதாரண மாக, ஒரு ஏழைவீட்டுக்குச் சென்ருலுங்கூட அவனுடைய பிள்ளை தன்தாய்க்கு ஒன்றும் தெரியாது, தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று சொல்வான். அந்த இளைஞனின் தாய், தன் கணவனைவிடத் தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று சொல்வாள். அந்த வீட்டில் வேலை செய்கின்றவன் அந்த வீட்டு எஜமானனைவிடத் தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று சொல்லிக்கொள்ளுவான். இப்படி ஒவ்வொருவனும் எவ்வளவுதான் கீழ் நிலையில் இருந்தாலும், தன்னைப்பற்றி ஒரு பெருமதிப்புக் கொள்கிருன். அதற்குத் தான் ஆணவம் என்று பெயர். அப்படிப் பட்ட ஆணவமலத்தை வேரோடு களைய வேண்டுமானுல் இந்த நிந்தைப் புராணத்தி லிருந்து நாம் விடுபடவேண்டும். நிந்தைப் புராணம் என்பது மிக இனிக்கும். நம்மை ஏமாற்றும். எல்லா இன்பங்களிலும், பிறரை நிந்திப்பதற்குக் காரணமான - மூலமான ஆணவத்தினுலேவரும் இன்பம் மிகப் பெரி யது. அதைத் தட்டிக் கழிக்க முடியாது. ஆணவத்தின் விடாப்பிடியிலிருந்து விடுபட் டால்தான் உண்மையான இன்பம் உண்டு. இந்த இருட்டிற்கு நேர்மாருன சிவ ஒளி நமக்கு விளங்கும். அப்பொழுதுதான் சிவ ஞானபோதத்தின் 12-ஆம் சூத்திரத்தின் கிட்டே போக முடியும். ஆகவே, அடிப் படையிலே உள்ள ஆணவத்தைக் களைவ தற்கு நிந்தைப் படலத்தைக் களையவேண் டும். அது சிவநிந்தையாக எழும்; குரு நிந்தையாக எழும்; மகேசுவர நிந்தையாக எழும்.

அவற்றை எல்லாம்பற்றிப் பேசப் பெரு மக்கள் வந்திருக்கிருர்கள். ஆகவே அவர்க ளின் பேச்சுக்கு இடையூருக நான் இருக்க விரும்பவில்லை. இந்த மடத்திற்கே உரியவ ராயிருந்து மடாலயம் பல நூறு ஆண்டுக ளாகச் செய்துவந்த சைவத் திருத்தொண் டையும் தமிழ்த் திருத்தொண்டையும் நிலை நிறுத்திய தமிழ்த் தாத்தா என்றெல்லாம் இன்று உலகம் பாராட்டிவருகின்ற அறிஞர் சாமிநாத அய்யருடைய மாணவர் வந்து பேசுகின்ருர். இந்த ஆதீனத்தினுடைய அறிவிலேயே ஊறி அருளிலே திளைத்தவர்.

முதலிலே சிவநிந்தையைப்பற்றிப் பேசு கின்ருர் என்னுடைய நண்பர் திருவாளர் அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள். தேசிகர் சொல்லியதுபோல அவர்களுடைய தந்தை, நாம் இத்தனைநேரம் சொல்லிவந்த அந்தப் பன்னிரண்டாம் திருமுறையில் தொண்டர்

நெறியை - அந்த லட்சியவாழ்வைப் பெருஞ் சொல் கொண்டலாக இருந்து, தமிழ்நாட்டிலே விளக்கிவந்த சரவணமுதலியாராவர். அவருடைய மைந்தராகிய எனது நண்பருக்கும் பெரிய புராணத்திலே எல்லையற்ற ஈடுபாடு உண்டு. அவர்களும் பேச இருக்கின்றார்கள்.

அதற்கு மேலாக ஒரு பெரிய வியப்பு. ஐயங்காரவர்கள் மாகேசுவரர்களைப் பற்றிப் பேசுகிறார். இந்தக்காலம் கடவுள் ஒருமைப் பாட்டிலே எவ்வளவு முன்னேறிநிற்கிறது என்பதற்கு அவர் ஒரு சான்று. தொண்டர்கள் என்பவர்கள் - எந்த ஒரு குலத்தைச் சேர்ந்தவர்களானாலும் - நமக்கும் அப்பாற்பட்டதாய் ஒரு பேரருட்பிழம்பு இருக்கிறது நம்மைக் காத்துக்கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கையிலே தங்களுடைய செயல், தங்களுடைய சொல், தங்களுடைய எண்ணம் எல்லாவற்றையும் இறைவனுடைய தொண்டாகக் கொண்டு வாழ்பவர்கள்தாம். ஆண்டவனோடு உள்ள அந்த உறவினாலேயே - 'நான் அந்தணன், நான் அரசன், நான் இன்னான், நான் தமிழன் என்ற வேறுபாடு இல்லாமல் 'ஒன்றே குலம்' என்ற உணர்வு இவ்வுலகத்திலே திரண்டு வருகிறது. ஆழ்வார்கள், 'தொண்டக் குலத்து உள்ளீர்' என்று பாடுவார்கள். அந்த உரிமையினால் அவர் நமக்கு அதைப்பற்றிப் பேசவந்தது ஒரு ஆழ்ந்த குறிக்கோள் உடையது. இப்படியாக முப்பெருமக்கள் தம்முடைய சிறந்த கருத்தை, இந்த நாளைக்கு இன்றியமையாது வேண்டப்படுகிற கருத்தை விளக்க இருக்கிறார்கள்.

நான் சொல்லியபடி, உண்மை நெறியினை நாம் அறிவோமானால், நம்முடைய காந்தியடிகளுடைய நெறியையும், வினோபாவின் நெறியையும் ஆழமாக அறிந்து கொள்ளக்கூடும். அப்படிப்பட்ட இந்த ஒரு சிறந்த மாநாட்டுக்கு, ஒன்றும் பற்றாத என்னைத் தலைவனாக்கியது குருவருள் ஒன்று தான்; இது ஒரு வியப்பு. ஒன்றுக்கும் பற்றாதவனையெல்லாம் உயர்த்துவதுதானே திருமூலர் செய்கின்ற சித்து! அந்தச் சித்தினைக் குருமகாசந்நிதானம் இன்று என்வழியாகக் காட்டுகிறது. ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே என்று அடங்குவதன்றி இதைப் பற்றி வியக்கவோ, இதைப்பற்றி வாழ்த்தவோ, இதனுடைய ஆழத்தை உணரவோ எனக்குத் தரமில்லை. ஆகவே, பெருமக்களைப் பேசுமாறு குருவருள் துணைகொண்டு கேட்டுக்கொள்வதன்றி என்னாலே செய்வதற்கு ஒன்றும் இல்லை.

முதலில் 'சிவநிந்தை'யைப்பற்றித் திரு. ஞானசம்பந்தம் அவர்கள் பேசுவார்கள். கேட்டு இன்புறுவோமாக.

முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை
எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை
அத்தனைக் காணா தரற்றுகின் றேனையோர்
பித்தன் இவனென்று பேசுகின் றாரே.

—திருமந்திரம்.

## 'சிவநிந்தை'

திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள், M. A.,
சென்னை.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவடிகளுக்கும், தலைவர், பெரியோர்கள் ஆகிய உங்கள் எல்லோருக்கும் என்னுடைய வணக்கம் உரியதாகும்.

ஆண்டவனுடைய பல திருவிளையாடல் களில் இதுவும் ஒன்று என்று நினைக்கிறேன். ஓர் உறுப்புக்கூட வெள்ளை இல்லாது முற்றி லும் கறுப்பாகவே இருக்கும் ஆட்டிற்கு இச் சிறந்த தமிழர்கள் 'வெள்ளாடு' என்று பெயர் வைத்தார்கள். அதுபோல, ஞானத் தோடு ஒரு சிறிதும் சம்பந்தம் இல்லாத எனக்கு அப்படி ஒரு பெயரையும் கொடுத் தார்கள். ஆனால், இப்படிப் பல விதங்களும் பொருத்தம் இல்லாத இந்த உலகத்திலே பொருத்தத்தோடு ஒன்று வாய்த்ததென்றால் அது இன்றுதான். நண்பர் தேசிகர் அவர் களைக் கேட்டேன் 'எவ்வளவு காலம் சிந்தித் துப் பார்த்து இந்தச் சிறந்த தலைப்பை எனக்குத் தந்தீர்கள்?' என்று. ஏனென்றால், பின்னே வருகின்ற இரண்டும் பொருத்தம் உடையவை என்பதைத் தலைவர் அவர்கள் அழகாக எடுத்துக் காட்டினார்கள். குருபக்தி யிலே இன்று உலகத்திற்கோர் இலக்கண மாக விளங்குகின்ற என் அருமை நண்பர் திரு. கி. வா. ஜ. அவர்கள் 'குரு நிந்தை' பற்றிப் பேசுவது பொருத்தம் உடையதே. பகவானைவிடப் பாகவதர்கள் உயர்ந்தவர்க ளென்று சொல்லுகின்ற அடியார்களின் பெருமையை உள்ளவாறு பாராட்டுகின்ற சமயத்தைச் சேர்ந்தவர் 'மகேசுரர் நிந்தை' யைப் பற்றிப் பேசுதல் முற்றிலும் பொருத்த மானது. ஆனால், நான் எங்கே குறுக்கே வந்தேன்? என்றுதான் எனக்கு விளங்க வில்லை. ஆனால், அரசாங்க ஊழியர்கள் எப்பொழுதும் பிறரைத் திட்டிக்கொண்டு இருப்பதிலே தேர்ந்தவர்களென்ற பேருண் மையை அறிந்துதான் போலும் குருமகா சந்நிதானம் அவர்கள் 'பிறரைத் திட்டும் போது உனக்கு எவ்வளவு சுவை ஏற்படு கிறது என்பதை இப்பொழுது வந்து பார்' என்று காட்டுவதுபோல, இதனைப் பற்றிப் பேச எனக்குப் பணித்தார்களென்று நான் நினைக்கிறேன்.

ஆனால், ஒரு சந்தேகம் வந்தது எனக்கு. சட்டங்கள் வகுக்கின்றது வரன்முறை; பெரி யவர்கள் நூல் செய்யும்போது 'நீ இப்படி நடந்துகொள்ள வேண்டும்' என்றுதான் எழுதுவது முறையேதவிர 'இப்படி நடந்து கொள்ளக்கூடாது' என்று எதிர்மறையிலே சொல்லுகின்றது மிக மிக அருமை. மனோ தத்துவம் அறிந்தவர்கள்கூட, இன்று சொல் வார்கள்; குழந்தைகளைப் பார்த்து 'நீ இது செய்' என்று சொல்லவேண்டுமே தவிர 'இதைச் செய்யக்கூடாது' என்று சொல்வது அவ்வளவு பொருத்தம் உடையது அன்று, அப்படிச் சொல்லுவது குழந்தைக்கு நல்ல தொரு அறிவைப் புகட்டாது என்றெல்லாம் சொல்கிறார்கள். இன்றைய மனோதத்துவ வாதிகள் அறிந்த இந்தச் சிறு உண்மையை நம்முடைய பெரியவர்கள் தெரியாமலா விட் டிருப்பார்கள்? இறைவனைப் போற்றி வழி படவேண்டும் என்று நூற்றுக்கணக்கான பாடல்களில் சொன்னவர்கள் 'தூற்றுதீர்' என்று சொல்லவேண்டிய தேவை என்ன? என்று சிந்தித்துப் பார்க்கும்பொழுது, அப் பொழுதுதான் என் போன்றவர்களுடைய அருமை உங்களுக்கு விளங்கும். எவ்வளவு தான் உடன்பாட்டு முகத்தினாலே சொன்னா லும், சிலரை அசைக்கவே முடியாது. வள்ளு வன் சொன்னான் 'அச்சமே கீழ்களது ஆசா ரம்' என்று. பயம் ஒன்றைத் தவிர வேறு எதற்குமே கட்டுப்படாத சிலபேர் உண்டு. இவர்களுக்குச் சரியான வழி 'நீ இதைச் செய்யவில்லையானால் உனக்கு இன்ன இன்ன தீமைகள்தான் விளையும்' என்று சொன்னா லொழியத் திருந்தமாட்டார்கள்.

ஒரு வண்டி; அதிலே பல பெரியவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவ்வண்டியோடு

இணைக்கப்பட்ட பெட்டி ஒன்று இருக்கிறது. அதிலே சில பண்டங்கள் - தேவையில்லாத பண்டங்கள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பெட்டி அவிழ்ந்து விழுந்து விடுகிறது. அது போனால்தான் போகட்டுமே என்று ஒருபண்புடைய வண்டி யோட்டி விட்டுவிட்டுப் போகமாட்டான். அப்படி ஒருவேளை பெட்டி அவிழ்ந்துவிடு மானால், வண்டியை நிறுத்தி, பெரியவர்கள் எல்லாரும் மனம் வருந்தினும்கூடக் கவலைப் படாமல் அந்தப் பெட்டியை இழுத்து கட்டிக் கொண்டுதான் போவான். அவன்தான் பொறுப்புடைய வண்டியோட்டி என்று நாம் சொல்லுகிறோம். அதேபோல, நம்முடைய பெரியவர்கள், 'உருப்படவே மாட்டேன்' என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்ற வர்களைக்கூட, 'விடமாட்டேன்' என்று சொல்கிறார்கள். 'நயத்தாலும் பயத்தாலும்' என்று நம்முடைய பாட்டி பழமொழியாகச் சொல்வாள். நயத்தினால் சொல்லுகிறார்கள். கிடைக்கின்ற பயனையெல்லாம் எடுத்துச் சொல்லுகின்றார்கள். ஒன்றுக்கும் அசங்க வில்லை. கடைசியில் 'நின் பணி பிழைக்கில் புளியம் வளாரால் மோதுவிப்பாய்' என்று அந்த அநுபவம் வாய்ந்த கிழவர் பாடினரே அதையும் எடுத்துக் காட்டுவார்கள்.

'என்னமோ சொல்வதைச் சொன்னேன். நீ கேட்குமாறு இல்லை. ஆனால், என்ன நடைபெறும் என்று தெரியுமா உனக்கு, இதைக் கேட்காவிட்டால்?

'என்ன நடைபெறும்; உங்கள் பூச்சாண் டிக்கெல்லாம் நான் பயப்படுவதாக உத்தே சம் இல்லை.'

அழகான ஓர் உவமை தருகின்றார் நம் திருமூலர்.

'தம்பி! நீ கிளி பார்த்திருக்கிறாயா?'

'ஓ' நன்றாகப் பார்த்திருக்கிறேன்.'

'நான் சொல்லுகிற கிளி பூமியில் பெரும் பாலும் உலவாது. மரத்திற்கு மரம் தத்தும். ஆனந்தமாக உயரத்தில் பறக்கும். பாடும். பேசும். மிகவும் அற்புதமானது, தெரியு மல்லவா?'

'ஓ தெரியுமே.

'பார்ப்பதற்கே அழகு. நீ சொல்லிக் கொடுத்ததையெல்லாம் அது சொல்லும். அவ்வளவு உயர்ந்த பொருள். நன்றாக ஆகாயத்திலே பறக்கக்கூடியது கிளி. ஆகா யத்திலே பறக்கக்கூடிய கிளியைக் கேவலம் ஒன்றரை அடிகூடத் தத்திக் குதிக்கமுடியாத பூனை என்ன பண்ணிவிடும் என்றுதானே நீ நினைக்கிறாய்? பூனையின் கையில் அகப் படாமல் கிளி 'ஜிவ்' என்று ஆகாயத்திலே பறந்துவிடும் என்றுதானே நீ நினைத்திருந் தாய்?'

ஆமாம் நினைக்கிறேன்.

'கிளி ஜிவ் என்று பறக்கும், அதிலே சந்தேகம் கிடையாது. பூனை ஐந்தடிக்கு மேலே ஏறவும் முடியாது. அதிலும் சந்தே கம் கிடையாது. ஆனால், பூனை கிளியினிடம் அகப்படும்பொழுது, நெஞ்சைத்தான் கிழித் தெறியும். வேறு ஒன்றும் பண்ணாது.'

நான்கூடப் பார்த்திருக்கிறேன்.

அப்பொழுது நீ யோசனை பண்ணிப் பார்த்தாயா? இவ்வளவு உயரத்தில் மேலே பறக்கும் கிளி எப்படிப் பூனையிடம் அகப் பட்டு இறக்கை வேறு, இருதயம் வேறாகப் பிளந்து கிழிபட்டுக் கிடக்கின்றது என்று நீ யோசனை பண்ணினாயா?'

'பண்ணினேன்

'யார் கிழித்தது என்று பார்த்தாயா?'

'பூனை கிழித்தது.'

'அட பைத்தியக்காரா! பூனை பூமியிலே இருக்கிறது, பறக்கும் கிளி பறக்காத இந்தப் பூனையினால் எப்படிக் கிழிபட்டது?'

'அதுதான் கொஞ்சம் புதுமையாக இருக்கிறது.'

'விஷயம் அவ்வளவுதான். நீ சிவ நிந்தை பண்ணும்போது அப்படி நிமிர்ந்து நின்று பண்ணுகின்றாய். வரட்டுமே உங்கள் சிவபெருமான் எதிர்த்தாற்போல. என்ன தான் பண்ணிவிடுவான் என்கிறாய்.'

'சும்மா இருங்க அய்யா. எத்தனையோ பேர் சிவநிந்தை பண்ணினவர்கள் இன்றைக்கு ஆனந்தமாக நன்றாக இருக்கிறார்கள். அவர்கள் பாங்க் பாலன்ஸ் இன்று உயர்கிறது. சிவ நிந்தையே பண்ணாமல், தினம் சிவனை வழிபடுகிறார்களே, அவர்கள் பாங்க் பாலன்ஸ் இறங்கிக்கொண்டே இருக்கிறது.'

'ஆண்டவனே! நீயே சரணம்' என்று போகிறார்களே, அவர்களுக்குக்கிடைக்கின்ற உதை, அடி, கணக்கிலேயேகிடையாது.

'நினைந்து உருகும் அடியாரை
நைய வைத்தார்'

என்று பாடினார், காலாலேயே உலகத்தைச் சுற்றிப்பார்த்த அந்தத் தொண்டு கிழவர். இதைவிட என்ன வேண்டும்? நினைந்து உருகும் அடியார்களை அந்தப் புண்ணியவான் என்ன பண்ணுகிறார் தெரியுமா? நைய வைத்தாராம். சுண்ணாம்பை அம்மியிலே போட்டு, தொட்டுத் தொட்டுப் பார்த்து அரைப்பது போல, 'நைய வைத்தார்' என்கிறார். இது கிழவனார் பெற்ற அநுபவம்.

இனி, சின்னக் குழந்தை ஒன்றுக்கு ஒரு அநுபவமேற்பட்டது. அது எங்கே போய்ப் பார்த்ததோ தெரியவில்லை. கிழவனார் உலகமெல்லாம் சுற்றிப்பார்த்தவர். இக்கூத்தைப் பார்த்திருக்கிறார். ஆனால், சின்னக் குழந்தை அது பிறந்தவுடனேயே புளியமரத்தடிக்கு ஓடிப்போய்விட்டது. அது எங்கே பார்த்ததோ தெரியவில்லை நமக்கு. ஆனால், அக்குழந்தை இந்த அநுபவத்தைப் பாடுகிறது. என்ன கூத்து அய்யா?

'நண்ணாதார் முறுவலிப்ப
நல்லுற்றார் கரைந்தேங்க
எண்ணாருத் துயர்விளைக்கும்
இவையென்ன உலகியற்கை.'

ஆண்டவனே! நீயே சரணம் என்று சொன்னவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் கரைந்து ஏங்குகிறார்கள். இந்த நண்ணாதார் இருக்கிறார்களே அவர்கள் முறுவலிக்கிறார்கள். 'அடடா! என்ன பக்தி! என்ன பக்தி! வேறு தொழில் இல்லைபோல் இருக்கிறது. கோயிலுக்கா? போங்க; போங்க! அந்த நேரத்திலே இரண்டு பிசினஸ் பண்ணினால் ரொம்ப நன்றாக இருக்குமே' என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். சொல்லுவது மட்டும் அல்ல. நான்குநாள் கழித்து அவர் என்ன சொல்கிறார்? 'அந்தப் பக்தர் தினம் கோயிலுக்குப் போவாரே, அவருக்கு எவ்வளவோ சொன்னேன், கேட்கவில்லை. ஒரு நாள் அப்படியே தன்னை மறந்து ஈடுபட்டு வந்தவரை நம் வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு லாரி வந்து அடித்துவிட்டது' என்று பெருமிதத்தோடு சொல்கிறார்.

'நண்ணாதார் முறுவலிப்ப.'

அவர் எள்ளி நகையாடுகின்றார். நீயே சரணம் என்று சொல்லுகின்ற நல்லுற்றவர் இருக்கிறாரே அவர் கரைந்து ஏங்குகின்றார். இது என்ன உலக இயற்கை அப்பா என்று கேட்கிறது குழந்தையாகிய நம்மாழ்வார்.

நம்முடைய காலத்தில் வாழ்ந்தான் கவிச் சக்கரவர்த்தி. இந்தக் கொடுமை அன்றல்ல; என்றுமே உலகத்திலே இருந்திருக்கிறது. ஆகவே, அவன் பாடுகிறான்.

'நல்வழி செல்பவரை
மனம் நையும்வரை
சோதனைசெய் நடத்தை உண்டு.'

கண்ணனாகிய ஆண்டவனைப்பற்றிப் பேசுகிறான். எவன் ஒருவன் நல்வழியில் நடக்கிறானோ அவனை மனமானது நையும்வரை சோதனைசெய்துவிடுவான் எங்கள் அப்பன்.

நிந்தனை தோன்றுவதற்கு நிலைகளனை இப்பொழுது பேசிக்கொண்டு வருகிறேன். ஏன் இவன் நிந்தனை செய்கிறான்? இப்படி உலகியல் அமைகின்றது. அறிவுடையவன் இந்த ஒரு நிகழ்ச்சியிலிருந்து காரணத்தைக் சிந்திக்கத்தொடங்குகிறான். உலகமெல்லாம் சுற்றிப்பார்த்துச் சொன்னாரே, 'நினைந்து உருகும் அடியாரை நைய வைத்தார்' என்று, அந்தத் தாத்தாவேதான் இதற்கும் விடை சொல்கிறார். ஏன் தெரியுமா நினைந்து உருகும் அடியாரை நைய வைத்தான்?

'நில்லாமே தீவினைகள்
நீங்க வைத்தான்.'

வேறு ஒன்றும் பண்ணமுடியவில்லை அந்த ஆளுக்கு. என்ன என்னவோ சொல்லிப் பார்த்தான். நடக்கவேயில்லை. கடைசியில் இம்மாதிரி ஸல்ஃபூரிக் ஆஸிட்டில் போட்டு இரண்டு வாட்டு வாட்டி எடுத்தால்தான் சொக்கத் தங்கமாக ஆகும் என்று நினைத் தான். ஆகவே, போட்டான். போட்டுச் சொக்கம் ஆக்கினான். அதுபோல, காரணம் எது என்பதை ஆராய்கிறபோது உலகியலை நன்கு அறிந்துகொள்ளுகிறபோது, 'நான்' என்றது கொஞ்சம் கீழே இறங்குகிறது. இராவணன் கேட்கின்றானே 'அன்றைக்கு எங்கேடா போனான் இவன் எல்லாம்? இன் றைக்கு நீ சொல்கிறாயே ரொம்பப் பெரிய மனுஷன் என்று; இந்தப் பெரிய மனுஷன் எல்லாம் கந்தனார் தந்தையாரைக் கயிலை யோடு ஒருகைக்கொண்டேனே அப்போது எங்கே போனான்?' என்று.

இந்த அகங்காரத்திலே, இந்த ஆண வத்திலே இராவணனுடைய பரம்பரையில் எத்தனையோ பேர் இருக்கின்றோம். அந்த அளவு இல்லாவிட்டாலும், கொஞ்சம்கொஞ் சம் சின்னச் சின்ன அளவில் இருக்கிறோம். இந்த நிலையிலேதான் சிவ நிந்தனை பேசத் தொடங்குகின்றான் 'என்னை என்னபண்ணி விடப் போகிறான்?' என்று. என்ன சொல்ல முடியும்? அறிவினாலே வாதம் செய்து அவ னுடைய அறியாமையைப் போக்கமுடியாது. அறியாமையிலே நின்று பேசுகின்ற அவனை அறிவை எடுத்துக் காட்டி ஒன்றும் பண்ண முடியாது. அறிவுடைய ஒருவனை அறிவு வாதம் கொண்டு அடக்கலாம். அறிவேயில் லாமலிருக்கிறவனை அறிவு வாதம்கொண்டு அடக்க முடியாது. ஏசுநாதர் அழகாகச் சொன்னார் :-

'He who knows not and knows not that he knows not is a dangerous man; shun him'

என்று. அவனே முட்டாள். முட்டாள் என்று அவன் ஓரளவு தெரிந்துகொண்டிருந்தால் அவனைத்திருத்தலாம். தான் முழு அறிவாளி என்று நினைத்துக் கொண்டிருக்கின்றான். அவனை யார்தான் என்ன பண்ணமுடியும்? ஆகவே, பயமுறுத்துவதைத் தவிர வேறு வழியே இல்லை. அதற்காகத்தான் இந்த அழகான உவமையை எடுத்துக் காட்டினார் திருமூலர். உயரப் பறக்கிறது கிளி என்று நீ நினைக்காதே; அது பூமியிலே மறைந்து திரியும் பூனையால் மார்பானது கிழிபட்டுப் போவதை நீ கவனிக்கவேண்டும். ஆகவே, நீ சிவநிந்தை பண்ணுவாயானால் எங்கோ ஆகாயத்தில் இருந்துகொண்டு பேசும் கிளி போல் நான் உயரத்தில் இருக்கிறேன், அதிகாரத்தின் எல்லையில் - ஆட்சிபீடத்தின் உச்சியில் - பிறர் கண்டு என்னை அஞ்சுகிற சூழ்நிலையில் இருக்கின்றேன் என்று நினைப் பாயானால், பூனையாரிடம் கிளி அகப்பட்டுக் கிழிபட்டதை மறந்துவிடாதே என்கிறார்.

இனி அடுத்த பாட்டிலே,

முளிந்தவர் வானவர் தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்ந்நின்ற ஞானம் உணரார்.

வகை வகையாகப் பிரிக்கின்றார் திருமூலர். ஒரு நிலையிலே இருக்கிறவர்கள், அதற்குச் சற்று உயரத்தில் இருக்கிறவர்கள், இன்னும் அதற்கு மேலே இருக்கிறவர்கள் எல்லாரை யும் ஒன்றாக முடிச்சுப்போட்டு 'விளிந்தவர்' என்கிறார். ஒரு நிலையில் இருக்கின்றவன் மற்றவனைப் பார்த்து, 'அவனுக்கு என்ன அதிருஷ்டம்? அங்கே நன்றாய் ஜோராகத் தெரிகிறதே' என நினைக்கிறான். சாதாரண மாக நடந்து இங்கிருந்து மாயூரத்திற்குப் போய்ப்படிக்கவேண்டிய பையனுக்கு என்ன பேரார்வம். என்ன உலகமிது! ஒரு சைகிள் வண்டிமட்டும் நமக்குக்கிடைத்தால் எப்படிப் படிக்கலாம் தெரியுமா? நடந்து போகின்ற போது உண்டாகும் நினைப்பு இது. தகப்ப னார் சைகிளும் வாங்கிக் கொடுத்துவிட்டார். அப்பப்பா நெஞ்சு வலிஎடுத்துப்போகிறது இதை மிதித்து மிதித்து. ஒரு ஸ்கூடர் கிடைத்துவிட்டால் ஜம் என்று போய்ப் படித்துவிட்டு வரலாம் என்று நினைக்கிறான். ஸ்கூடரும் கிடைத்துவிட்டது. ஆனால் புழுதி வாயிலும் மூக்கிலும் ஏறுகிறது. பிறகு ஒரு சின்ன கார் கிடைத்துவிட்டால் போதும். இப்படித்தான் நினைப்பு ஆசை வளர்ந்து வருகிறது. ஆகவே, நடந்துபோகும்போது சைகிள்தான் உலகத்திலே கிடைத்தற்கரிய

பொருள். பின் சைகிள் கிடைத்தவுடனே ஸ்கூடர். ஸ்கூடர் கிடைத்தவுடனே மோட்டார். 'அந்த மோட்டாரிலே போகிறவன் 'அப்பாடா, முதுகு வலி எடுத்துப் போய் விடுகிறது' என்கிறான். ஏரோப்பிளேனில் யாத்திரை செய்த பிறகு, ரயிலிலோ மோட்டாரிலோ போவது சுத்தமாகப் பிடிக்கவே பிடிக்காது.

முளிந்தவர் வானவர் தானவர்.

மூக்கைப்பிடித்து, உடம்பை வற்றலாகப் போட்டிருக்கிற ஆசாமிகள்; எல்லாவித சுக போகங்களையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற தேவர்கள்; இந்தத் தேவர்களை என்றைக்கும் மறக்கமாட்டேன் என்று இருக்கிற அசுரர்கள் இத்தனை பேரையும் ஒரு மூட்டை கட்டிவிட்டார் நம் திருமூலர். இவன் நினைக்கிறான் - உடம்பை இவ்வளவு வருத்தி அந்த உலகத்தில் போனால் நிம்மதியாக இருக்கலாம் என்று. அங்கே இருக்கிறவன் நினைக்கிறான்; அரம்பை, ஊர்வசி, திலோத்தமை எல்லோரும் சுற்றியிருந்தாலும் பொழுது போனால், பொழுது விடிந்தால் இராட்சதர்கள் படுத்தும்பாடு சொல்ல முடியவில்லையே என்று. இப்படி ஆண்டவன் அவரவர்களுக்கு எதையாவது வைத்துத்தான் இருக்கிறான். ஆட்டுக்கு வால் அளந்து வைத்திருக்கிறான் என்பது பழமொழி. ஆட்டுக்கு வால் நீளமாக இருந்தால் அது படாதபாடு படுத்திவிடும் என்று தெரிந்தோ என்னவோ அப்படி வைத்திருக்கிறான். தேவர்களாயிருந்தால் நல்லது என்று இங்கே இருக்கிறவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், தேவர்கள் பாடு நித்திய கண்டம் பூர்ண ஆயுசாக என்றைக்கு இடம் பறிபோய்விடுமோ என்ற ஒரே கவலையில் இருக்கிறார்கள் அவர்கள். இத்தனை பேரையும் ஒன்றாகச் சேர்த்து 'விளிந்தவர்' என்கிறார். ஏன் தெரியுமா? அளிந்து அமுது ஊறிய ஆதிப்பிரானை உணரமுடியாத ஜன்மங்களினால் என்ன புண்ணியம்?

அளிந்து அமுது ஊறிய ஆதிப்பிரானை.

ஒரு பெரிய தத்துவத்தை இங்கே புகட்டுகின்றார். மாணிக்கவாசகர் 'அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றினை ஏற்றினை' என்று பேசுகிறார். அந்த இன்பம் இருக்கிறதே அது நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும் இன்பம். எப்படிப்பட்ட இன்பம்? தேன் இனிப்பு உடையது; வாயிலே போட்டால் இன்பத்திற்குப் பஞ்சம் இல்லை. ஆனால், அடுத்த விநாடி அது கசக்கின்ற கசப்பும் எல்லை இல்லாதது. பாலைக் குடித்துவிட்டு வாயைக் கழுவாமல் படுக்கிறவர்கள் அந்த அனுபவத்தை நன்கு அறிவார்கள். பால் சுவை உடையதுதான் என்றாலும் எஞ்சுவது கசப்பே. அதுபோன்ற இன்பமல்ல இது. உண்டால் சுவை பயப்பன சில. கேட்டால் சுவை பயப்பன சில. கண்ட மாத்திரத்தில் சுவை பயப்பன சில. ஆனால், நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும் என்று சொல்லி அதிலே நிறுத்தாமல் 'எப்போதும்' என்கிறார். அந்த இன்பத்திற்கு ஓரெல்லை வகுக்கின்றார் இங்கே. 'அனைத்தெலும்பு உள் நெக' என்று சொல்லுகிறார். எலும்பு உள்ளே மென்மைத்தன்மை அடைகிறது. ஆனந்தத்தேன் சொரிகிறது. அற்புதமான அமுத தாரைகள் எற்புத்துளைதொறும் பாய்கிறது என்று சொல்வார்கள். அங்கேயும் அந்த இன்பத்தை அநுபவிக்கக்கூடிய அளவுக்கு எல்லையற்றது அந்த இன்பம். அதை யார் பேச முடியும்? அதையேதான் இங்கே சொல்கிறார்.

அளிந்து அமுதூறிய ஆதிப் பிரானை.

மனம் பக்குவப்பட்ட நிலைமையில் உள்ளத்திலே தோன்றுகின்ற அமுதம் அது. வள்ளலார் நமக்கு ஏற்ற முறையிலே 'தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாய்க் கூட்டி' என்று பாடினார். மணிவாசகருடைய திருவாசகத்தைப்பற்றிச் சொல்லும்போது 'நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து' என்று சொல்லுவார்கள். திருவாசகத்தை நான் முப்பது வருஷங்களாக என் தந்தைக்குப் பயந்து படித்துக்கொண்டிருக்கிறேன். 'ஒருகால் ஓதின் கருங்கல்மனமும் உருகும்' என்று சொல்லுகிறார். ஆனால், இத்தனை வருஷங்களாக என் தந்தைக்குப் பயந்து படித்தும், என்னுடைய கண்களிலிருந்து தண்ணீரே வரவில்லை. திருப்பி

வள்ளலாரை எடுத்துப் பார்க்கும்போது, 'நின்வாசகத்தை நான் கலந்து பாடவேண்டும்' என்கிற அடி எனக்கு விளங்கிற்று. படித்துக்கொண்டிருந்தால் மட்டும் பயன் இல்லை. நின் வாசகத்தை நான் கலந்து பாடவேண்டும் என்றார். அகங்காரமாகிய 'நான்' என்பது அதிலே கரையவேண்டும். நான் என்பதுதானே முன் நிற்கிறது. அது எங்கேயிருந்து இனிக்கும்? இப்பெரிய கருத்தைத்தான் 'அளிந்து அமுது ஊறிய' என்று கூறுகிறார். அந்த மனோநிலை, நானைக் கரைக்கும் மனோநிலையிலே அமுதாக அது ஊறும். அது அல்லாதபோது ஒருவிதமான பயனையும் அது தருவது இல்லை. அப்படித் தெளிந்தவர்களை அல்லாது மற்றவர்கள் இந்தப் பெரிய இன்பத்தைத் தாங்கக்கூட முடியாது. ஆகவே, நிந்தனை செய்தால் கிழிபட்டுப் போக நேரிடும். நிந்தனைசெய்யாமல் பயனை அடையவேண்டும் என்று நினைத்தாலும் அவ்வளவு எளிதிலே அது கிடைப்பது இல்லை. அளிந்து அமுது ஊறிய ஆதிப்பிரானைத் தாங்குவதற்கு ஒரு பண்பாடு வேண்டும். அப்படிக் கொஞ்சம் ஆரம்பித்தவுடனே, திடீரென்று வித்தைக்காரன் மாதிரி புத்தி மாறிவிடும். மெஸ்மரிஸம் போலப் பழக ஆரம்பிப்பான். ஓரளவு மனத்தை அடக்கி மேலே செல்லவேண்டும் என்ற நல்ல எண்ணத்திலே பெரியவர்கள் இதை வகுத்தார்கள், இதைக் கற்றுக்கொண்டவுடனே பிறருக்கு இந்த வித்தையைக் காட்டி ஒரு தினுசாகச் சம்பாதிக்கவே ஆரம்பித்து, அதிலே போய்ச் சேர்ந்துவிடுவான். அதைத்தான் நாலாவது பாட்டிலே கூறினார்.

வேதியராயும் விகிர்தன் நாம்.

நல்ல பிறப்பு. அந்த ஒரு நல்ல பிறப்பிலே கொஞ்சம் சில்லரைப் புத்திகள். அந்தச் சில்லரைப் புத்திகளைப் போக்கின பிற்பாடு கூட ஒரு நினைப்பு. நான் யார் தெரியுமா? என்கிற நினைப்பு. எங்கள் நாட்டிலே ஒரு கதை சொல்வார்கள். ஒரு பாட்டி ஆற்றைக் கடந்து போகவேண்டும். ஆறு நிறையத் தண்ணீர். அவள் யோசனை செய்தாள். பெரியவர் ஒருவர் ஒருகாலத்தில் அவளுக்கு எப்போதோ சொன்னது ஞாபகம் வந்தது. 'உனக்கு என்றைக்காவது துன்பம் வருமானால் நீ என்னை நினைத்துக்கொள் தாயே' என்று சொல்லியிருந்தார். பூரணமாக நம்பினாள் அந்தப் பெருமாட்டி. அந்தப் பெரியவர்தான் நம்பச்சொன்னாரே என நினைத்து ஆற்றில் இறங்கினாள். ஆறு வழிவிட்டது இதைப் பின்னால் ஒருவன் பார்த்தான். அவன், தன்னுடன் வந்த சீடர்களில் ஒருவனைக் கூப்பிட்டு, 'அந்தப் பாட்டி என்ன சொன்னாள்?' என்று கேட்டான். 'குரு பாதமே சரணம்' என்று சொல்லி அந்தப் பாட்டி இறங்கினாள்; ஆறு வழிவிட்டது. என்றான். அவளுக்குக் குரு இருக்கிறார்; அவரது பெயரைச்சொல்லி இறங்கினாள்; ஆறு வழிவிட்டது; இப்போது நான்தானே குரு என்று 'எனது பாதமே சரணம்' என்று சொல்லி ஆற்றில் இறங்கிவிட்டான். அது போல, இந்த மனோநிலை மாறிவரும்போது வேதியராயும் விகிர்தன் நாம் என்கின்ற எண்ணம்; முழுமுதற்பொருள் என்ன? நாம்தாம் முழு முதற்பொருளின் நிலையை அடைந்துவிட்டோமே என்று நினைத்தார்கள். பூனை கிளியைக் கிழித்த கதையை மறுபடியும் நினைவூட்டி, இனி இம்மாதிரி சிவநிந்தையில் இறங்காதே என்கிறார்.

அப்பகை யாலே அசுரருந் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை யாகிலும் எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செய்யினும் ஒன்றுபத் தாமே.

—திருமந்திரம்.

## 'குருநிந்தை'

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், M. A.,
சென்னை.

ஞானத்திருவுருவாய் எழுந்தருளியிருக்கின்ற குருமகாசந்நிதானத்தின் திருவடிகளுக்கும், அன்பர்கட்கும், அவைத்தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை முதலில் செலுத்திக்கொள்ளுகிறேன்.

நான் இந்த மாநாட்டுக்குப் புறப்படும்போது ஒருநண்பர், 'எங்கே போகிறீர்கள்' என்று கேட்டார். நான் 'மாநாட்டுக்குப் பேசப் போகிறேன்' என்று சொன்னேன். 'என்ன பேச்சு? எது பேசுகிறீர்கள்?' என்று கேட்டார். 'குரு நிந்தை பேசப்போகிறேன்' என்று கூறினேன். பின்பு திருத்திக்கொண்டேன்; 'குரு நிந்தையைப்பற்றிப் பேசப் போகிறேன்' என்று. ஆகவே, நான் குரு நிந்தை பேச வரவில்லை; குரு நிந்தையைப் பற்றிப் பேச வருகிறேன்.

பொதுவாகவே உலகத்தில் 'இறைவன் இல்லை' என்று சொல்லுகின்ற கொள்கையினர்கூட இருக்கிறார்கள். இறைவனை நம்பி, அந்தப் பெருமானுடைய திருவருளைப் பெற வேண்டும் என்கிற சமயத்தினர்கள் அல்லாமல், 'இறைவன் இல்லை' என்று சொல்லுகின்ற மக்களும் இருக்கிறார்கள். அவர்கள் கூட, தங்கள் கொள்கையைத் தம் அளவிலே பரப்பிவிட்ட குருநாதன் இருக்கிறார் என்பதை ஒப்புக்கொள்வர். கடவுளை மறந்தாலும் அல்லது கடவுள் இல்லை என்று சொன்னாலும், 'குரு இல்லை' என்று சொல்லுகின்ற கூட்டத்தாரே இல்லை. நல்லதுக்கு மாத்திரமல்ல, திருடர்கட்குங்கூட குருநாதருண்டு. அவர்கள்கூட, தங்கள் குருவை நிந்தை செய்யமாட்டார்கள்.

இந்த நாட்டிலே ஆண்டவனே குருநாதனாக வருகிறான் என்று சொல்லுகின்ற கொள்கை இருந்து வருகிறது. அநுபவஸ்தர்கள் சொல்லுகிறார்கள். மாணிக்கவாசகப் பெருமான்,

> 'அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
> குருபரனாகி அருளிய பெருமையைச்
> சிறுமையென்று இகழாது'

என்று பேசுகிறார். குருநாதனுடைய திருவருள் இல்லாவிட்டால் ஆண்டவனுடைய அருள் சாம்ராஜ்யம் நமக்குக் கிட்டாது. இறைவனுடைய அருள் என்றும் இருந்துகொண்டே இருக்கிறது. ஆண்டவனுடைய அருள் பொழியாத காலமே கிடையாது. ஆனால், அதை ஏற்றுக்கொள்ளுவதற்குரிய பக்குவம் யாருக்கு உண்டோ அவர்கட்குத்தான் அது கிடைக்கிறது.

ஓர் ஊரிலே மழைபெய்தது. தண்ணீர்ப் பஞ்சமான ஊர். அடுக்களையிலே தாய் வேலைசெய்துகொண்டு இருந்தாள். தண்ணீரை ஏந்திவைக்கவேண்டும் என்ற ஒரு ஆசை. தன்னுடைய பெண் குழந்தையினிடத்திலே, 'முற்றத்திலே கொண்டுபோய் உள்ளேயிருக்கிற பாத்திரத்தை வை' என்று சொன்னாள். பெண் கொண்டுபோய் வைத்தாள். இரண்டு மணிநேரம் சடசட என்று மூன்று அங்குலம் மழை பெய்தது. பெய்து நின்ற பிறகு, தாய் பாத்திரத்தைக் கொண்டு வரச் சொன்னாள். குழந்தை கொண்டுவந்தாள். ஆனால், அதில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லை. பாத்திரம் ஓட்டையல்ல, நல்ல பெரிய பாத்திரமே. அவர்களுக்குத் தண்ணீர் வேண்டும் என்ற ஆத்திரமிருக்கின்றதே, அதுவும் குறைவில்லை. தண்ணீர் வேண்டுமென்ற ஆத்திரமும் அதற்குவைத்த பாத்திரமும் நன்றாக அமைந்து இருந்தன. ஆனால், அப்பெண் என்னைப் போன்றவள்; அம்மா சொன்னதையே கேட்கிறவள். 'பாத்திரத்தை வை' என்று சொன்னாள். பாத்திரத்தை உள்ளே கவிழ்த்து வைத்திருந்தாள் தாய். அப்படியே கொண்டுபோய் வைத்துவிட்டாள் முற்றத்தில். இரண்டுமணி என்ன இருநூறு மணிநேரம் இருந்தாலும் அதில் தண்ணீர் ஒரு சொட்டாவது இருக்குமா?

இராது. நல்ல பாத்திரம் இருந்தும், மழை இருந்தும் 'நிமிர்த்தி வை' என்று சொல்கிற ஒரு குரு அங்கே இல்லை. அதுபோலே, நமக்கு அறிவு இருந்தும், ஆண்டவனுடைய அருள்மழை பொழிந்தும், அதனைப் பெறுவதற்குரிய பக்குவத்தை நம்பால் புகுத்துவதற்கு இவ்விரண்டையும் இணைப்பதற்குக் குருநாதன் இல்லாவிட்டால், ஆண்டவனுடைய அருள்வெள்ளமே பயனற்றுப்போய் விடும் என்று சொல்வார்கள்.

இன்னும் ஒரு கதை சொல்லுகிறேன். அமெரிக்கநாட்டில் நூறு மாடி உடைய ஒரு கட்டடம். அங்கு எல்லாம் மாடிப்படியிலே ஏற மாட்டார்கள். ஊஞ்சல் அங்கிருந்து தூக்கி மேலே விட்டுவிடும். அக்கட்டடத்தில் ஒரு நாள் அந்த ஊஞ்சல் பழுதாகிவிட்டது. தூக்கிச் செல்லும் தொட்டி கெட்டுவிட்டது. நூறுவது மாடிக்குப் போகவேண்டும் மூன்று அன்பர்கள். நூறு மாடி கடந்து போவதென்றால் எத்தனை இளைப்பு. எப்படி அங்கே போவது. 'ஒவ்வொருவரும் கதை சொல்லிக்கொண்டு போகலாம்; அந்தக் கதையின் சுவாரசியத்தில் நடந்துவிடலாம்' என்று பேசிக்கொண்டார்கள். முதல்வன் கதை சொன்னான். ஐம்பது மாடி கடந்துவிட்டார்கள். அதற்குமேல் இரண்டாமவன் தொடங்கினான். அவன் நாற்பத்தொன்பது மாடி ஏறும்வரை கதை சொன்னான். ஐம்பதும் நாற்பத்தொன்பதும் தொண்ணூற்றொன்பது. இன்னும் போகவேண்டிய மாடி ஒன்றே ஒன்று. அந்த இரண்டு பேரும் சொன்னார்கள்; 'தம்பி! இன்னும் இருக்கிறது ஒரு மாடிதான்; சுருக்கமான கதையாகச் சொல்' என்று. 'சுருக்கமான கதைதான் சொல்கிறேன் ஒரே வார்த்தையில்; சாவியைக் கொண்டுவர மறந்துவிட்டேன்; கீழே இருக்கிறது' என்றான். தொண்ணூற்றொன்பது மாடி கடந்தும், ஒரு மாடி இருந்தும், இவ்வளவு கால்நடையும் இவ்வளவு முயற்சியும் அந்தச் சாவி இல்லாததினாலே பயன் தராமல்போய்விட்டது. அதுபோலத்தான், மூளையைத் தீட்டிக்கொண்டு, புத்தகங்களை எல்லாம் அடுக்கிக்கொண்டு, எம். ஏ. பட்டம் பெற்றுக்கொண்டிருக்கிற சிலருக்கு ஆண்டவனது அருளுணர்ச்சி வரவில்லை. அருளுணர்ச்சியைப்பற்றிச் சரியான எண்ணமே இல்லை என்றால், அதற்குக் காரணம் இந்தச் சாவி இல்லாத சாவி அவர்களுடைய படிப்பு. அந்தச் சாவிதான் நம் குருநாதன். அந்தச் சாவி இல்லாவிட்டால் எத்தனை பண்டங்கள், எத்தனை பொருள்கள் பெட்டியில் இருந்தாலும் அது நமக்குக் கைவராது. இந்த உண்மை உலகத்தில் உள்ள வித்தையைத் தெரிந்துகொள்ளுகிற எல்லோருக்கும் பொதுவானாலுங்கூட ஞானவித்தையைத் தெரிந்து, இறைவனோடு ஒன்றுபடுவதற்காகவே இந்தச் சரீரம் அமைந்திருக்கிறது என்ற நம்பிக்கையோடு வாழ்வதையே தம்முடைய வாழ்க்கையாகக்கொண்ட பாரத நாட்டில் குருநாதனுக்குப் பெருமை கொடுத்திருக்கின்றார்கள். குருநாதன் யார்? சிவபெருமானே. எப்படி ஐயா சிவபெருமான் குருநாதனாக ஆவார்?

காவிரியிலிருந்து வயலுக்கு நீர் பாய்கிறது. கால்வாய் வழியாகப் பாய்கிறது. கால்வாயிலிருந்து மடைவழியாகவந்து பாய்கிறது. 'மேல்மடைத் தண்ணீரை அடைத்துவிட்டார்கள்' என்று சொல்லுகின்றார்கள். அம்மடையை உடைத்துவிட்டால் தண்ணீர் வயலில் பாய்கிறது. காவிரித்தண்ணீர்தான் ஆனால், 'மடைத்தண்ணீர்' என்று சொல்லுகிறோம். மடைத்தண்ணீர் என்று சொன்னாலும், அது காவிரித்தண்ணீர்தான். காவிரித் தண்ணீரே பாய்வதாக வைத்துக் கொள்ளலாம். என்ன ஆகும்? காவிரி நீர் வயலிலே புகுந்து மணல் அடித்துவிடும். ஆகவே நீர் நிரம்ப இருந்தாலும், வயலுக்குக் காவிரி வேண்டியிருந்தாலும், ஒரு தலைப்பில் காவிரியினுடைய சம்பந்தமும், மறு தலைப்பிலே வயலினுடைய தொடர்புமாக இருக்கிற ஒரு வாய்க்கால்தான் அந்தக் காவிரிநீரையும் பயனுறச்செய்யும், வயலையும் வளம்பெறச் செய்யும். ஒரு தலைப்பில் காவிரியினுடைய தொடர்பு இருக்குமாப்போலே, குருநாதனுக்குச் சிவபெருமானின் அம்சத் தொடர்பு உண்டு. அதுபோல, மற்றொரு தலைப்பு வயலோடு இணைந்திருக்குமாப்போலே, மக்கள் கூட்டத்திலே கருணை இருக்கும். அந்த உயர்ந்த பண்பே இறைவனோடு ஒட்டிய அம்சம். அருபரத்தொருவனாக இருத்தல்

அவன் அவனியில் வருவதற்கு உரிய ஒரு பண்பு - கருணை. கருணையினாலே மக்களிடத்தில் ஒட்டியிருக்கும் தன்மையும், பெருமையினாலே இறைவனிடத்தில் ஒட்டியிருக்கும் தன்மையும் குருநாதனுக்குண்டு. ஆகவே, குருவைச் சிவபெருமானினின்றும் வேறு அல்ல என்று சிந்தித்து வந்தித்துப் போற்றுகின்ற நாடு இது. இந்நாட்டிலே நூல் செய்யவந்தார் திருமூலதேவர். அவர்செய்த நூலுக்குத் திருமந்திரம் என்று பெயர்.

மந்திரம் என்பதற்குப் பலபொருள்கள் உண்டு. வேதத்திற்கே மந்திரம் என்று பெயர். வேதத்திலுள்ள வர்க்கியங்களையெல்லாம் சுலோகம் என்று சொல்லுகிறதில்லை. மந்திரம் என்று சொல்லுவார்கள். தன்னை நினைப்பாரைத் துன்பத்திலிருந்து நீக்குவது மந்திரம். வேத மந்திரம் அனைத்தும் மந்திர உருவமாய் இருப்பதினாலே வேதத்திற்கு மந்திரம் என்ற பெயரும், ஆகமங்களுக்குத் தந்திரம் என்ற பெயரும் உண்டு. திருமூலர் திருமந்திரம் வேதசாரமும் ஆகம சாரமும் ஆகையினாலே அங்கியாகப் பார்க்கின்றபோது திருமந்திரமாக, அங்கமாகப் பார்க்கின்றபோது நவதந்திரமாக இருக்கிறது. 'மந்திரமும் தந்திரமும் ஆயினான் காண்' என்று சொல்லுகின்ற பெருமானை மந்திர நூலானது தந்திர அங்கங்களாலே காட்டுகிறது.

பெயர் என்ன? மந்திரம். மந்திரமென்பது வேதத்திற்குப் பெயர் என்றேன். வேதமென்ன சொல்லுகின்றது? வேதம், 'இது செய்க, இது செய்யற்க' என்று இரண்டும் சொல்லுகின்றது. விதி, விலக்கு என்று சொல்லுவார்கள். அதனாலேதான் உலகத்திற்கே ஒரு நூல்செய்த திருவள்ளுவர் திருக்குறளில் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் உலகம் உய்ய நீதிகளைச் சொல்வதனால் அது வேதம்போன்றது; தமிழ்மறை என்று அதனைச் சொல்லுகிறார்கள். அதுபோலத் தான், பன்னிரு திருமுறைகளும் வேதம்; இறைவனைப்பற்றிச் சொல்வதனாலே வேதம். ஆனால், உண்மையாகச் சொல்லப்போனால் - வேதத்திற்குரிய எல்லா இலக்கணங்களும் பொருந்திய ஒரு வேதம் என்று சொன்னால் விதி விலக்குகளைச் சொல்லவேண்டும். நம்முடைய நாயன்மார்கள், சைவ சமய ஆசாரியர்கள், 'இது செய்க, இது செய்யற்க' என்று பாடி வருகிறார்கள். ஆனால், முறை பற்றிப் பாடவில்லை. வேதம் எப்படி முறையாக, 'இது செய்க, இது செய்யற்க' என்று சொல்லி, ஆண்டவனுடைய பெருமையைச் சொல்லிக் காட்டுகின்றதோ, அதுபோலே திருமந்திரமாகிய வேதம், 'இது செய்க' என்று பல இடத்திலும், 'இது செய்யற்க' என்று சிற்சில இடத்திலும் சொல்லுகிறது. ஆகையால், இந்த ஒரு விலக்குப்படலத்தை இங்கே நாம் பார்க்கிறோம். அதில் எனக்குக் கிடைத்தது நடுவிலே நிற்பது. 'குருநிந்தை'யைப்பற்றிப் பேசுவது. மிக மிக அழகாகச் சொல்லுகிறார். ஏழு பாடல் அந்தக் குரு நிந்தையைப் பற்றிய பகுதியிலே வருகிறது.

முதல் பாட்டு, குருநிந்தை செய்வாருடைய தீங்கும், குருவைப் பக்திபண்ணுவாருடைய நலமும் பேசுகிறது. பின் இரண்டு பாடல்கள், அக்குருநிந்தை செய்வாருக்கு மறுமையிலே என்ன தீங்கு நிகழும் என்று சொல்லுகின்றன. ஒருபாட்டு இம்மையிலே அவர்களுக்கு என்ன தீங்கு நிகழும் என்று சொல்லுகிறது. பின்னைய இரண்டு பாட்டு, ஒருவர் குருநிந்தை செய்தாலும் அவராலே சமுதாயத்திற்கு என்ன தீங்கு நேர்கிறது என்று சொல்கிறது. கடைசிப்பாட்டு, குருவினுடைய பெருமையை உணராதாருக்கு ஓர் உவமை சொல்லி முடிக்கிறது. அவற்றை இனிப் பார்க்கலாம்.

நம்முடைய வேதம்சொல்கிறது; மனிதன் காணும் தெய்வம் மூன்று என்று. நாலாவது தான் உண்மையான தெய்வம். உலகினில் பிறந்து வளர்கிற மனிதனுக்கு முதலாவது தெய்வம் அன்னை. இரண்டாவது தெய்வம் அப்பன். மூன்றாவது தெய்வம் ஆசாரியன். இதை வேதம் எப்படிச்சொல்கிறது? 'மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ'. ஆசாரியனிடத்திலே பக்தி இருக்கவேண்டுமானால், படிப்படியாக வந்தவனுக்குத்தான் பக்தி இருக்கும். நாலாவது படியிலே திடீர் என்று தாண்டியவன் கீழே விழுந்து முழங்காலை முறித்துக்கொள்வான்.

முதல் படியில் ஏறி, இரண்டாம் படியில் ஏறி, மூன்றும் படியில் ஏறி, நாலாவது படியில் ஏறினவனே முறைப்படி ஏறுவான். சோபானக்கிரமத்திலே. இப்படி அன்னையை வணங்கி, அப்பனை வணங்கி, குருவை வணங்கி, இறைவனை வணங்கினால் நாலு படிக்கு அப்பாலே உள்ள மோட்ச சாம் ராஜ்யத்தை அடையலாம். இதைச் சாத்திரம் சொல்லுகிறது. 'தேவோ பவ' என்று சொன்னதனாலே தெய்வமாகப் பாவிக்க வேண்டும் என்று சொல்லுகின்றது. தெய் வத்தையே கடைசியில் பாவிக்கவேண்டும். முதலிலே தன் அன்னையிலும் அப்பனிலும் தொடங்கி, குருவினிடத்தில் சென்று, பின்பு தெய்வத்திலே முடிகிற சேர்பனம் இது. பெற்றிருந்த பெரியவர்களை யார் கும்பிட வில்லையோ அவர்கள் எந்தப் பேற்றையும் அடையமாட்டார்கள் என்று ஆரம்பிக்கிறார். எடுத்தவுடனே, திடீரென்று மேலே போகா மல் முன் இருந்த இரண்டு பக்திகளையும் சொல்லி, பெற்றோர்களிடத்திலே அன்பு இல்லாதவர்கள் தன்மாட்டு உற்று நலம் செய்கின்ற அக்குருநாதனிடத்திலே அன்பு இல்லாதவர்கள் பேறு பெறார் என்று முத லிலே தொடங்குகிறார்.

பெற்றிருந்தாரையும் பேணார் கயவர்கள்.

மனிதர்களில் இரண்டுபேர். இரண்டு பேருக்கும் வேறுபாடு கண்ணிலே தோற் றது. வள்ளுவர் சொன்னார்; உலகத்திலே நாம் எந்தப்பொருளுக்கு எந்தப்பொருளை உபமானம் சொல்கிறோமோ இரண்டுக்கும் வேறுபாடு நிச்சயமாகத்தெரியும். 'தாமரை போல் முகம்' என்றால் நிச்சயமாகத் தாமரை வேறாகத் தெரியும். முகம் வேறாகத் தெரியும். ஆனால், நான் சொல்லுகிற உபமானம் இருக்கிறதே, வேறே தெரியாது.

'மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்'

மனிதன் மாதிரியேதான் இருப்பான்; அதே மாதிரி இரண்டு கால்களிலே நடப்பான்; அதேமாதிரி ஆடை புனைந்துகொள்வான்; அதேமாதிரி அரைப்படி சாப்பிடுவான்; ஆனால், அவர்கள் கயவர்கள் என்று பேசு கின்றார். ஆக, அந்தக் கயவர்கள் என்ன செய்கின்றார்களாம்? இழிகுணத்தார். பெற் றிருந்தாரையும் பேணார். இயற்கையிலே ஒட்டிவந்த உறவு. இறைவன் மனிதனைப் படைக்கும்போது அவன் உலகத்தில் பிறக் கும்போதே ஒட்டி நிற்கின்ற உறவையும் கொடுக்கிறான் - அன்னையையும் அத்தனை யும். அந்தப் பெற்றவர்களையும் அவர்கள் பேணமாட்டார்கள். 'மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோபவ' என்று வேதம் விதித் திருக்கிறதை உல்லங்கனம் செய்துவிட்டு, பெற்றோர்களை மதிக்கமாட்டார்கள். யார்? கயவர்கள் - இழிகுணம் உடையவர்கள்.

உற்றிருந்தாரை உளவன சொல்லுவார்.

உற்றிருந்தார் - துன்பம் வரும்போது உற் றுழி உதவுவார். யார் துன்பம் வரும்போது வந்து காக்கின்றார்களோ அதேபோல், குரு நாதன் கருணையினாலே தன்னுடைய சீடனை அடைந்து நலம் செய்கின்றான். அப்படி வந்த குருநாதனையும் என்ன செய்வான்?

உற்றிருந்தாரை உளவன சொல்லுவார்.

நிந்தை அத்தியாயம் இங்கு ஆரம்பம். முன்னே, தலைவர் அவர்கள் சொன்னது போல, எங்கள் அம்மாவுக்கு ஒன்றும் தெரி யாது; இது முதற்படி. அப்பாவைப்போல் முட்டாள் இல்லை; இது அடுத்தபடி. எனக் குச் சொல்லித்தந்தாரே வாத்தியார், அதெல் லாம் பத்தாம் பசலி - இது மூன்றாவது படி. இப்படி அவலமாளிகை கட்டப்படுகின்றதே. இதற்கு அஸ்திவாரம் எது? தாய் தந்தையர் நிந்தனை. அதற்கு அடுத்தாற்போல் வரு கிறது குருநிந்தை.

பெற்றிருந்தாரையும் பேணார் கயவர்கள்.

பெற்றிருந்தாரையும் என்று சொன்னார். ஏனென்றால், மிருகங்கள்கூடப் பால் குடிக் கின்றமட்டும் தமது அன்னையினிடத்திலே அன்புடன் இருக்கிறது. தாய் தந்தையர்க ளிடத்திலே அறிவில்லாத விலங்குகள்கூட ஒட்டுறவோடுகூட நடந்துகொண்டிருக்கும் போது அப்படி ஒரு நிலைகூட இல்லாமல், எப்போதும் பிறந்தவுடனே நலம் சாதிக்கிற அந்த இரண்டுபேரையுங்கூடப் பேணுகிற தில்லை கயவர்கள்.

உற்றிருந்தாரை உளைவன சொல்லுவார்.

பின்பு, தன்னை உற்று, தனக்கு நலம் செய்கின்ற குருநாதரையும் உள்ளம் புண்படும் படியாக நிந்தனைசெய்வார். இவர்கள் யார்? குருநிந்தை செய்கிறவர்கள். நிந்தையை மாத்திரம் சொன்னால் அது அவ்வளவு சிறக்காது என்று கருதினரோ என்னவோ நிந்தை செய்யாதவருடைய பெருமையைச் சொல்லுகிறார்.

கற்றிருந் தார்வழி உற்றிருந் தாரவர்
பெற்றிருந் தாரன்றி யார்பெறும் பேறே.

கற்றிருந்தார் - கற்று அமைதியாயிருந்தவர்கள். இருத்தல் - அடங்கி இருத்தல். 'இருந்தபடி இருங்கோள்' என்று அலங்காரத்திலே சொல்லுவார்கள். அமைதியாக இருங்கள், மலைபோல இருங்கள் என்று. கற்றிருந்தார் - கல்வி எல்லாம் கற்று அடங்கி நிற்கின்ற பெரியவர்கள். வழி உற்றிருந்தார் - பெற்றிருந்தார் வழியும், உற்றிருந்தார் வழியும் சென்று நிற்பார்கள். அவர் பெற்றிருந்தார். எதை அவர் பெற்றார்கள்? பெறும்பேறு பெற்றிருந்தார். இந்த உடம்பினாலே பெறுகின்ற பாக்கியம் எதுவோ,

'உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பிலே உத்தமனைக் காண்'

என்னுமாப்போல, இந்த உடம்பு பெற்றதனாலாய பெறும் பேற்றை அவர்கள் பெற்றார்கள். யார்? அவர்களுடைய வழியில்நின்று, கற்று அடங்கி நின்று, பெற்றோர்களையும், உற்றாரையும், குருநாதரையும் யார் வணங்கி அணுகிச் சென்று நலம் செய்தார்களோ, அவர் பெற்றிருந்தார்; பெறும்பேறு பெற்றிருந்தார். அன்றி யார் பெறும் பேறு பெற்றிருந்தார்? வேறு யார் பெற்றிருந்தார்கள்? அன்னையையும் பிதாவையும் குருநாதரையும் வந்தித்து நிற்கின்றவர்கள் நான்காவது படியாக இறைவனுடைய திருவருளையே பெற்றிருந்தார்; இது உலகம் அறிந்தது. அப்படி அல்லாதவர்களில் யார் அந்தப் பேற்றைப் பெற்றார்கள்? என்று சொல்கிறார்.

அடுத்தபடியாக, நிந்தையைப்பற்றியே சொல்ல ஆரம்பிக்கின்றார். தன் குருநாதனை நிந்திப்பவர்களுக்கு மறுமைப் பயன் என்ன என்று சொல்கிறார். அடுத்த பிறவி என்ன? நாயாகப் பிறப்பான் என்று சொல்கிறார். இரண்டுபாட்டிலே சொல்லுகிறார்.

ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரை.

எழுத்தாளர் நாங்கள் அல்ல. குருநாதரை இங்கே சொல்லுகிறார்.

சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்களுய்ப் பிறந்தங்கு ஒருகம்
வாரிடைக் கிருமியாய் மாய்வர் மண்ணிலே.

ஓர் எழுத்தின் பொருளைச் சொல்லித்தந்த குருநாதன், அல்லது பிரணவத்தினுடைய தத்துவமாகிய பரமேசுவரனைச் சொல்லித் தந்தவர் என்று சொல்லலாம். எல்லோரும் சொல்லுகிற எழுத்தல்ல. 'தனி ஓர் எழுத்து' என்று சொல்கின்ற ஆதி மனு இருக்கிறதே ஓங்காரம், அந்தப் பிரணவத்தினுடைய பொருள்தான் - பரமேசுவரன். நாம் அந்தப் பரமேசுவரனை உணரும்படியாகக் கூறிய சீர் எழுத்தாளர் - குருநாதர்; அவருடைய உளம் வருந்தும்படியாகச் செப்பினோர். இறைவன் திருவடிகளைப் பற்றிக்கொள்வதற்கு மந்திரப் பொருளையெல்லாம் நமக்குச் சொல்லித்தந்த குருநாதரின் உள்ளம் உளையும்படியாக - சிதையும்படியாகச் சொன்னவர்கள்.

சுணங்களுய்.

திருமூலர் கொஞ்சம் ஜோஸ்யம் தெரிந்தவர்; தீர்க்க தரிசனம் உடையவர் என்று நினைக்கிறேன். வீட்டிலே சுணங்களுய் இருப்பது வேறு. ஊருக்கு நடுவிலே சுணங்களுய் இருப்பது வேறு. மந்திரி வீட்டிலே நாயாக இருந்தால், அவர் மனைவிக்குக்கூட இராது அத்தனை பெருமை. ஏனென்றால் அவர்கள் போகும்போது பக்கத்திலே - அந்த அருமையான மெத்தையிலே அது காரில் போகும். அவன் சைவனாயிருந்தாலும், அசைவவுணவை அதற்கு அருத்துவான். அப்படியெல்லாம் நாயை வளர்க்கிறார்கள். ஆனாலும், இந்த நாட்டிலே நாய் என்றால் மிக இழிவுதான். நாய்ப்பிறப்பு என்று நாம் சொல்லுகிறோம். ஒருநண்பர் நாயை வளர்க்கிறார். நாய்நூல்களையெல்லாம் வாங்கி வைத்திருக்கின்றார்.

தாம் வளர்க்கும் அந்த நாய்களுக்கெல்லாம் மெத்தைபோட்டு வைத்திருக்கின்றார். தான் போகும்போது காரோடு, தன் மனையாட்டி இல்லாவிட்டாலும், நாயை கூட்டிக்கொண்டு போகிறார். நாய் உயர்ந்துவிட்டது அவருக்கு. ஆனால், நாய் என்ற சொல் இன்னும் உயரவில்லை. ஆக நாய் என்பது இழிவுக்கே ஓர் அடையாளம். அது எத்தகைய நாய்? வீட்டிலே இருக்கும் நாய் அல்ல, ஊர் நாய்.

ஊரிடைச் சுணங்கனாய்.

தெருத்தெருவாய் அலையும் நாய். அந்தச் சுணங்கனாய்ப் பிறந்து, அதற்குப் பிறகு,

ஓருகம்
வாரிடைக் கிருமியாய் மாய்வர் மண்ணிலே.

பரந்த உலகத்திலே ஒரு யுககாலம் புழுவாக இருந்து செத்துப்போவார் என்று சொல்லுகிறார். இழிந்த பொருளைச் சொல்லவந்தவர் நாயை ஏன் சொன்னார்? கொஞ்சம் யோசனை பண்ணிப் பார்த்தேன். ஊர் சுற்றும் நாயாகப் பிறந்து அப்புறம் புழுவாகப் பிறந்து செத்துப்போவான். இதை மாற்றிச்சொல்லலாமே என்றால், இந்த ஆண்டவன்தான் தண்டனை கொடுக்கிறான். தண்டனை கோபத்தினால் அல்ல; தர்மத்தினால். இவன் செய்த தீங்குக்கு இது கொடுக்கவேண்டும். அதனாலேதான் ஆண்டவன் தண்டிக்கிறான். என்னத்தினாலே தண்டிக்கிறான்?

பொன்னை உருக்குவதற்குக் காரணம், பொன்னிலேயுள்ள மாசு போவதற்கு. அது போல ஆண்டவன் பக்தர்களைத்தான் தண்டிக்கிறான். அப்பர் சொல்லுகிறார்:-

'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்'

அடியார்களை இப்படியா தண்டிக்கவேண்டும் ஆண்டவன்! என்று தோன்றுகிறது.

ஆண்டவன் நல்லவர்களிடத்தில் சிறு குற்றம் நேர்ந்தாலும் உடனுக்குடன் அவர்களுக்குத் தண்டனை கொடுத்து நல்வழிப் படுத்துகிறான். ஆனால், மற்றவர்களை நரகத்திற்கு அனுப்பிவிடுகிறான்; அழுக்குத் துணியைச் சலவைச்சாலைக்கு அனுப்புவதுபோல. அவன் அவ்வாறு செய்வதற்குக் காரணம் கோபம் அல்ல; தர்மம். பொன்னை உருக்குமாப்போலே தண்டிக்கின்றான். அப்படித் தண்டிக்கும்பொழுது பொருத்தமாகச் செய்கிறான். ஏன் நாயாகச் செய்கிறான்? சின்ன வயதில் குற்றம் பண்ணினால் ஒரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவார்கள். செங்கற்பட்டில் இப்படி ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது, பார்ஸ்டல் ஸ்கூல் என்று. ஏன் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு இந்தப் பிள்ளையை அனுப்புகிறார்கள்? சாதாரண பள்ளிக்கூடத்தில் பாடம்மாத்திரம் இருக்கும்; தண்டனை கிடையாது. சிறையில் தண்டனை மாத்திரம் இருக்கும்; ஆனால் பாடம் கிடையாது. இப் பிள்ளைக்குப் பாடமும் கற்பிக்கவேண்டும்; தண்டனையும் கொடுக்கவேண்டும். வெளியில் போகாதபடி சிறைச்சாலையைப் போல அடைத்திருப்பதனாலே தண்டனை. அவன் இஷ்டப்படி போகமுடியாது. பொழுதுபோக்காமல் சும்மா பாடம் சொல்லித்தருகிறதாலே கல்வி. கல்வியையும் தண்டனையையும் ஒரு சேரக்கொடுக்கிறார்கள், அந்த இளம்பருவக் குழந்தைகளுக்கு. ஆண்டவனுக்கு நாமெல்லோரும் இளம் பருவக் குழந்தைதானே. இவன் தன்னுடைய குருநாதனை நன்றி அறிவு இல்லாமல் நிந்தனை செய்தானே இந்தப்பாவி. நன்றியறிவு இல்லாத இந்தப் பாவிக்கு நன்றியறிவுள்ள ஒரு ஜன்மத்தைக் கொடுக்கலாம் - பாடம். அதே சமயத்தில் இழிவான ஜன்மமாக இருக்கவேண்டும் - சிறை. பார்ஸ்டல் ஸ்கூல் மாதிரி, படிப்பும் தண்டனையும் ஒருசேர உண்டுபண்ணுமாப் போலே, பிறர் இழிவுகருதுகின்ற, பிறர் 'சீ நாயே' என்று சொல்லும்படியான தண்டனைக்குரிய ஒரு ஜன்மத்தை - அதே சமயத்திலே நன்றியறிவில் மிக்க ஜன்மத்தை. அவன் நன்றியறிவு இல்லாமல்தானே தன் குருவை நிந்தனை பண்ணினான் - அவனுக்கு எது இல்லையோ அதைப் பாடம்கற்பிக்கவும் அவன் செய்த குற்றத்திற்குத் தண்டனை, இழிவு, உலகத்தாராலே இழிவு பண்ணப் பெற்றுத் தண்டனை அடையவும் இரண்டும் ஒருசேரப்பொருத்தமாக ஆண்டவன் நாய்ப் பிறவியைக் கொடுக்கிறான்.

ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்
வாரிடைக் கிருமியாய் மாய்வர் மண்ணிலே.

குருநாதர் என்று சொன்னால், அது உச்சிக்கொழுந்து. அதற்குக்கீழே இலைகள். அதற்குக் கீழே மரம். இலையைப் பறித்துக் கொள்பவன் கொழுந்தையும் கிள்ளுவான். மாட்டைக்கெடுத்து மனிதனைக் கெடுத்தாற் போலே, நல்லவர்களை வைது, அப்புறம் கொஞ்சங் கொஞ்சமாகப் போய், இருக்கிற நல்லவர்களையெல்லாம் திட்டின பிற்பாடு நல்லவர்களுள் சிகாமணியாக இருக்கின்ற குருநாதனையே திட்டுவான். ஆக குருவைத் திட்டாதே என்று சொல்வதற்கு முன்னாலே, 'தம்பி! நல்லவர்களையும் திட்டாதே' என்று சொன்னால்தான், அவ்வளவு தூரம் போக மாட்டான். ஆகவே, மூன்றாவது பாட்டிலே சொன்னார்:

பத்தினி

எளிதாக நாம் திட்டுகிறது பெண்களைத் தான். ஆண்கள் கூட்டத்திலே எத்தனையோ பாட்டு. ஆயிரக்கணக்கான பாட்டு. யார் யாரோ? நகரத்தாரும், நாட்டாரும், பட்டினத்தாரும், பட்டிக்காட்டாரும், எத்தனையோ பேர் பெண்களையெல்லாம் திட்டியிருக்கிறார்கள் என்று நாம் மேடையிலே பேசுகிறோம். எளிதில் அவர்கள் திட்டு வாங்கிக்கொள்கிறவர்கள். அதனாலே முதலில் சொன்னார்கள் 'பத்தினி' என்று.

அடுத்தபடி சாதுக்கூட்டம்; பக்தர்கள்.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்.

தத்துவ ஞானிதானே குருநாதர். தத்துவ ஞானியைத் திட்டுவதற்கு முன்னாலே, கொஞ்சங் கொஞ்சமாகப் பதம் பார்க்கிறப் போல அபலைகளாகிய பெண்களை - பத்தினிகளைத் திட்டுவான். பின் பக்தர்களைத் திட்டுவான். 'போகிறது பார்! காற்படிசாம்பலைப் பூசிக்கொண்டு' என்று திட்டுவான். பின்பு, இந்த இரண்டுபேரும் எதிர்க்காததனாலே, அந்த அம்பு கூரியதாகி, தன்னுடைய குருநாதனையே திட்டுவான். தத்துவஞானியைத் திட்டுவான். இப்படி சுருதிசேர்ந்து, மெல்ல மெல்ல மேல் ஸ்தாயிக்கு எட்டுகிற மாதிரி, பத்தினியைத் திட்டி, பின் பத்தரைத் திட்டி, தத்துவஞானியையும் திட்டுகிறான். ஆகையினாலே, அடிப்படையிலே இதை நன்றாக ஆக்கவேண்டும் என்று எண்ணினார் நமது திருமூலர்.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்.

இனி அடுத்த ஜன்மத்திலே நாயாகப் பிறக்கிறது இருக்கட்டும். அதை யார் கண்டார்? என்றால், கைமேல் பலன்கிடைக்கும் அப்பா என்கிறார். என்ன அது?

அத்தமும் ஆவியும்
ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.

திருமூலர் விதியைத்தான் சொல்லுகிறாரா? அல்லது வையத்தான் வைகிறாரா? என்று தோன்றுகிறது. அப்படிச் சொல்லுகிறார். அவனுடைய அத்தமும் ஆவியும் ஆண்டு ஒன்றில் மாண்டிடும். அந்தப் படுபாவி ஒரு வருஷத்திலே செத்துப் போவான். செத்துப்போவான் என்றுமாத்திரம் அவர் சொல்லவில்லை. முதலில் அவன் துணிக்கும் சோற்றுக்கும் ஆலாய்ப் பறந்து செத்துப் போவான் என்று சொல்லுகிறார். செத்துப் போவதில் இங்கு ஒன்றும் விசேஷம் இல்லை. ஆனால், அதற்கு முன்னாலே, வறுமையினுடைய துன்பத்திலே உழன்று செத்துப் போவான். அதுதானே தண்டனையாக இருக்க முடியும்? செத்துப் போவது விடுதலையாகக்கூட இருக்கலாம். அப்படியின்றி வாழ்க்கையினுடைய வளங்கள் எல்லாம் கெட்டு, பின் அவனுடைய பொருளெல்லாம் போய், ஒரு வருஷத்திற்குள்ளே அவன் ஓட்டாண்டியாகப் போய், பின்னாலே சோறு சோறு என்று மிகவும் வருந்திச் செத்துப் போவான் என்று சொல்லுகிறார்.

அத்தமும் ஆவியும்
ஆண்டொன்றில் மாண்டிடும்.

'ஆவியும் அத்தமும்' என்று போட்டால் பொருத்தம் இல்லை. முதலிலே அவனுடைய சொத்தெல்லாம் போய், ஓட்டாண்டியாகி, சோறு சோறு என்று திரிந்து, கடைசியில் செத்துப் போவான் என்று வைகிற மாதிரி அந்த அமைப்பை வைக்கிறார்.

அத்தமும் ஆவியும்
ஆண்டு ஒன்றில் மாண்டிடும்.

என்ன கணக்காய்ச் சொல்கிறரே என்ருல், 'சத்தியம் ஈது' என்கிருர். அது மாத்திரமா? இன்னுர் மேல் ஆணை என்று வைத்துத் தானே சத்தியம் சொல்வது வழக்கம். குரு நிந்தையினுடைய சிறுமையைச்சொல்கிறவர் குருநாதனுடைய பெருமையை உணர்ந்தவர். அவருக்குச் சிவனுடைய ஆணையைக் காட்டிலும் குருவின் ஆணைதான் பெரிது. நந்தியின்மேல் ஆணையாகச் சொல்கிறேன்; இது சத்தியம்; ஒரு வருஷத்தில் சொத்தெல்லாம் போய், ஓட்டாண்டியாகப்போய் செத்துப் போவான் அப்பா. யார்? பத்தினியை வைதவன். பத்தர்களை வைதவன். தத்துவ ஞானியை வைதவன். அத்தமும் ஆவியும் ஓர் ஆண்டில் விட்டுவிட்டு அவன் போய்விடுவான். இது சத்தியம். சதா நந்தி ஆணையே என்று குருநாதன் திருநாமத்தைச் சொல்கிருர்.

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதா நந்தி ஆணையே.

இம்மையிலே நிகழ்கிற தீங்கைச் சொல்லி, பின்பு மறுமைத் தீங்கை மறுபடியும் சொல்கிருர்.

மந்திரம் ஓரெழுத்து உரைத்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்களுய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே.

நூறு பிறவிகள் திருப்பித் திருப்பி மிக இழிந்த ஒரு நிலையிலே புலையராகப்பிறந்து செத்துப் போவார்கள் என்று சொல்கிருர்.

இதுவரைக்கும் தனி மனிதனுக்கு உண்டான இழிவைச் சொல்லிவந்தார். அழுகல் பழம் மேலும் அழுகிப்போவது ஆச்சரியம் இல்லை; போனுல் போகட்டும். ஆனுல், சுற்றி இருக்கின்ற பழமெல்லாம் அழுகப்பண்ணி விடும் என்று சொல்வதுபோல, அந்த ஒரு பாவி இருப்பதால் சமுதாயம் கெட்டுவிடும் என்று சொல்ல வருகிருர்.

ஈசனடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்.

எங்கே ஈசனுடைய அடியார்கள் உள்ளம் உளைகிருர்களோ, அப்படி உளையும்படியாகச் செய்கின்ற சிலர் இருக்கிருர்களோ, அந்நாட்டிலுள்ள எல்லா வளமும் கெட்டுப் போய்விடும் என்று சொல்கிருர். யாரோ ஒருவர் யாரையோ வைகிருர்கள் என்று எண்ணக்கூடாது. சிலர் எண்ணுவார்கள். கடவுளை வைதால் என்ன? பெரியவரை வைதால் என்ன? யாரையோ யாரோ வைகிருர்கள் என்ருல், சமுதாயம் அந்த வசவை நிறுத்த வேண்டும். யாரையோ யாரோ வைகிருர்கள் என்று அரசாங்கங்களும் சமுதாயமும் நினைந்து இருந்துவிடக்கூடாது. அதனுல் உலகம் கெட்டுவிடும், நாடு கெட்டுவிடுமென்பதை நினைக்கவேண்டும் என்று அறிவுறுத்துவாராகி, ஈசனடியார் இதயம் கலங்கிட என்ன ஆகும்? தேசமும் நாடும் சிறப்பும் அழிந்துவிடும். விரிந்த நம் பாரத தேசமே கெட்டுவிடும். நாம் வளைய வருகிருேமே இந்தத் தமிழ்நாடும் கெட்டுப்போய் விடும். எத்தனை எத்தனை சிறப்புகளெல்லாம் இருக்கின்றன என்று சொல்கிருேமோ அத்தனையும் கெட்டுவிடும். ஏனென்ருல், ஈசனுடைய அடியாரை நிந்தனை செய்தவனுக்கு விடுதலை - சுதந்திரம் கொடுத்துவிட்டால் அவன், உலகம் உள்ளளவு நமக்குப் பழி உண்டாகும்படியாக பண்பாட்டை அழித்து விடுவான்.

ஈசனடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நந்நந்தி ஆணையே.

தேவராஜாவாக இருந்தாலும் சரி, அக்குடிமக்கள் தேவ உலகத்திலே ஒருவனுக இருந்தாலும் இந்திரபீடமே கெட்டுவிடும். இவ்வுலகத்திலே அப்படி ஒருவன் இருந்தானுனல், சமுதாயம் முழுவதும் அழிவதற்குக் காரணமாக அந்த நிந்தையானது, சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்குக் கடமையையுடைய அரசனுடைய பீடத்தை அழித்து விடும், ஆதலாலே, சிவநிந்தை பண்ணினுலும், குருநிந்தை பண்ணினுலும், அடியார்

நிந்தை பண்ணினுலும் அரசாங்கம் அதைத் தடுக்க வேண்டும் என்று சொல்லாமலே சொல்லுகிருர். பின்பு, மேலும் பேசுகிருர்.

சன்மார்க்க சற்குரு சந்நிதி பொய்வரின்
நன்மார்க்க முங்குன்றி ஞானமுந் தங்காது
தொன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்
பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே.

பொல்லாத நெறி செல்லுகின்ற துன்மார்க்கர்கள் சன்மார்க்க நெறியைக் காட்டுகின்ற குருநாதனை வைது நிந்தனை செய்தார்களானுல், நல்வழி எதுவும் நில்லாது. பல வகையாக ஆண்டவனை அடைதற்கு உரிய மார்க்கங்கள் அத்தனையும் கெட்டுவிடும்.

கடைசியில் குருநாதனைமறந்து, ஞானம் தந்த பெருமானை மறந்து உலகத்திலே வாழ்வதற்காக உலகியல் கன்மத்திலே ஈடுபட்டவன் இருக்கிருனே, அவனுக்கு உதாரணம் சொல்லுகிருர். இன்ன இடத்திலே மாணிக்கம் கிடைக்கிறது, மாணிக்கப் புதையல் இருக்கிறது, மாணிக்க மலை என்று பெயர் என்று யாரோ சொன்னதைக் கேட்டுக்கொண்டான். அதனையெல்லாம் கட்டிக் கொண்டுவந்துவிடவேண்டுமென்று அங்கு போனுன். மாணிக்கமலை இருக்கத்தான் இருக்கிறது. ஆனுல், அங்கே காவலும் இருக்கிறது. காவல் மறைந்திருக்கிறது. மரத்தின்மேல் இருந்த காவற்காரன் கல்லை வீசி எறிந்தான். வீசி எறிந்தவுடன் அந்த மரத்திலிருந்துதான் மாணிக்கம் விழுகிறது, மாணிக்க மலை இல்லை, மாணிக்க மழைதான் இருக்கிறது என்று நினைத்தான். இருட்டு. மரத்திலிருந்து ஐந்தாறு கல் விழுந்தது. மாணிக்க மலையினிடத்தில் போன அவன் அந்த மலைக்குள்ளே போய் மாணிக்கத்தை எடுத்துக்கொள்ளாமல், மாணிக்க மழை என்று கல்மழை விழுந்ததே அந்தக் கற்களையெல்லாம் பொறுக்கிக் கட்டிக்கொண்டு வீட்டிற்கு வந்தான். மாணிக்க மலையை அணுகியும், மாணிக்கக் கற்கள் இருக்கும் இடத்திற்குப் போயும், அந்த மணியைக் காணுமல் அங்கேகிடந்த - இதுவே மாணிக்கமென்று தன் உடம்பின்மேல்பட்ட கற்களையெல்லாம் எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து பார்த்தால் என்ன இருக்கும்? கல்லாக இருக்கும். அதைச் சொல்லுகிருர்:

கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
மெய்ப்பட்டகல்லைச் சுமப்போன் விதிபோன்று.

சேர்ந்தாற்போல ஆயிரம் கல் இருக்கிறது; விற்ருல் நாம் உலகத்தையே வாங்கிவிடலாம் என்று கணக்கண்டுகொண்டு, அவன் அந்த மூட்டையைத் தலையிலே வைத்துக்கொண்டு போகிருன். விளக்கிலே போய்ப்பார்த்தால் அந்தச் சின்னச்சின்ன கல் - மேலே எல்லாம் காயம்பட்ட கல் - காயங்கூட அப்புறந்தான் தெரிகிறது. மெய்ப்பட்டகல் அல்லவா? அக் கல்லைச் சுமந்துகொண்டு வருகிருன் அவன். அப்படி ஞானியை விட்டு, கன்மத்திலே ஈடுபட்டு, உலகியல் இன்பத்தைக் கருதிப்போகிருனே அவன் எத்தகையவன்? சாப்பாடு வைத்திருக்கிறேன் அங்கே, சாப்பிடுங்கள், எல்லாம் இருக்கின்றது என்று ஒருவன் சொல்லிவிட்டுப் போனுன். ஒரு பாட்டிலில் நெய்; இன்னொரு பாட்டிலில் பால் இருக்கிறது. இன்னொரு பாட்டிலில் தயிர் இருக்கிறது. ஆனுல் அந்த மூன்று பாட்டில்களும் நீலபாட்டில்கள். நீலபாட்டிலில் உள்ளே இருப்பது இன்னது என்று தெரியாது அல்லவா? நெய் வைத்திருக்கிறேன், பால் வைத்திருக்கிறேன், தயிர்வைத்திருக்கிறேன், நெய்விட்டுக் குழம்புஞ்சாதம் சாப்பிடுங்கள், பிறகு பால் விட்டுக்கொள்ளுங்கள், வேண்டுமானுல் தயிர் விட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லிப்போய்விட்டான் ஒருவன். உள்ளே இன்னொரு இடத்தில் கை கால் கழுவுவதற்காக அறப்பு, அந்த அறப்பைப் கொஞ்சம் கரைத்து வைத்து, அதை ஒரு வெள்ளைப் பாட்டிலில் போட்டுவைத்திருந்தான். இவன் போனுன். சாதம் இருந்தது. சாதத்திலே விட்டுக்கொள்வதற்காக என்ன இருக்கிறது என்று பார்த்தான். மூன்று பாட்டிலும் கறுப்பாக இருந்தது. எண்ணெயாக இருக்கும் என்று விட்டான். குழம்பு மாதிரி இருந்தது அறப்புப் பாட்டில். அறப்பும் குழம்புமாதிரி தான் நிறம் ஒன்ருக இருக்கும். அதை அப்படியே விட்டுக்கொண்டு பிசைந்து சாப்பிட்டான். ஒரே கைப்பு. இந்தப் படுபாவி, பாட்டிலைக் கண்ணுலே பார்த்தானேதவிர, கொஞ்சம் கார்க்கைத் திறந்து தன் விரலை விட்டோ அல்லது ஒரு குச்சியை விட்டோ முகர்ந்துபார்க்கக் கூடாதா? அதற்குள்ளே

ஆத்திரம். ஆராய்ச்சி பண்ணி அல்லவா பிறகு அதையெல்லாம் உண்ணவேண்டும். அதுதெரியவில்லை. கண்ணாலே பார்த்தான். மூன்றும் கருப்பு பாட்டில். விளக்கெண்ணெ யென்று நினைத்துக்கொண்டான். இந்த பாட்டில் குழம்புமாதிரி இருந்தது. அது அறப்பு. அதன் நிறம் ஒரேமாதிரி பழுப்பா கத்தான் இருக்கும். அவசரம் அவனுக்கு. அதை விட்டுக்கொண்டான்; பிசைந்தான். வாயில் வைத்தால் ரொம்பக் கசப்பு. அந்தப் பைத்தியக்காரன் எப்படியோ, அங்கு நெய் இருக்க, பால் இருக்க, தயிர் இருக்க, அதை எல்லாம் விட்டுவிட்டுக் கசப்பான பண்டத் தைக் கையைப்போட்டு வாரியுண்டு தூ தூ என்று துப்புவானே, அதுபோல, ஞானி இருக்கவும், கன்மிகளோடுசேர்ந்து, ஞானி யாவது ஒன்ருவது என்று பெரியவர்களைப் பழிக்கிருர்களே அந்த ஆசாமி எப்பேர்ப் பட்டவன்? திருமூலர் சொல்கிருர்.

கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
மெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதிபோன்
கைப்பட்ட நெய்பால் தயிர்நிற்கத்தானறக்[றும்
கைப்பிட்டுண் பான்போன்றும் கன்மிஞானிக்
— கொப்பே.

இப்படியாக, குருநிந்தையைச் சொல்லு கின்றபோது, முதல் பாட்டிலே தனது மாதா பிதாக்களை வணங்கிக் குருநாதனுடைய திரு வருள் பெற்றுர்கள், அல்லாதவர்கள் பேறு பெறவில்லை என்று சொல்லி; பின்பு குரு நாதனை நிந்திக்கிறவர்கள் நாயாய்ப் பிறப் பார்கள், புழுவாய்ப்பிறப்பார்கள், தண்டனை யும் பாடமும் கொடுப்பதற்குரிய நாய் ஜன் மத்தை அடைவர் என்று சொல்லி; அவை யெல்லாம் மறுமை வாழ்வில்தானே என்று நினைப்பார்க்கு, இம்மாதிரி வாழ்விலே அத்த மெல்லாம் போய், ஆவியும் விட்டுத் துன்ப முறுவார்கள் என்று சொல்லி; அப்படிச் செய்வார்கள் தங்களுக்குத் தீங்கை உண் டாக்குவதோடு அல்லாமல் சமுதாயத்திற்கே தீங்கு செய்வார்கள் என்பதைக் காட்டி; தேச மும் நாடும் சிறப்பும் கெட்டுவிடும் என்று சொல்லி; பின்பு கடைசிப் பாட்டிலே, அந்த இரண்டு பேருக்கும் - குருநிந்தை பண்ணு மல் குருபக்தி பண்ணுகின்றவர்களுக்கும், உலக இன்பமே பெரியது என்று கருதி, அந்தத் தொழிலிலே ஈடுபட்டு, குருநிந்தை பண்ணுவார்க்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுவாராகி, மணி பக்கத்தில் இருக்கவும் கல்லைச் சுமந்த பாவி போலவும், நெய், பால், தயிர் இருக்கவும் பிண்ணுக்கைச் சாப் பிட்ட - கைப்பைச் சாப்பிட்டவன் போலவும் அந்த இரண்டு பேரும் இருக்கின்ருர்கள் என்ற அளவில் திருமூலர் நமக்கு அறிவித் துள்ளார் என்று உங்கள் முன் அறிவித்து அமைகின்றேன்.

இங்குநின் ருனங்கு நின்றனன் எங்தளன்
பொங்கிநின் ருன்புவ ஞபதி புண்ணியன்
கங்குல்நின் ருன்கதிர் மாமதி ஞாயிறு
எங்குநின் ருன்மழை போலிறை தானே.

— திருமந்திரம்.

**'மயேசுரநிந்தை'**

## திரு. S. V. வரதராஜ ஐயங்கார் அவர்கள், M. A., M. O. L.,

சென்னை.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கும், தலைவர் அவர்களுக்கும், மற்றும் உள்ள பெரியோர்களுக்கும் என்னுடைய தாழ்மையான வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, 'குருநிந்தை' 'சிவநிந்தை' ஆகிய இவ்விரண்டு பொருள்களைப்பற்றி நிகழ்ந்த சிறப்பான பேச்சுக்களுக்குப் பின்னர், நான் 'மயேசுவர நிந்தை' என்பதைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல முன்வருகின்றேன்.

பெரியோர்களே! அடியார்கள் திரண்டு இருக்கும் பெருங்கூட்டத்தில் கூசித்தான் நான் வந்தேன். ஆனல், மாபெரும் தலைவர் பன்மொழிப் புலவர் அவர்கள் எனக்குப் பாதுகாப்பு அளித்தார்கள். அவர்கள் தம் முடைய தலைமையுரையில் 'தொண்டக்குலத்தில் உள்ளீர்' என்று சொல்லித் திருப்பல்லாண்டிலிருந்து ஒரு அடியை எடுத்துக் காட்டி, எனக்குப் பாதுகாப்பு அளித்தார்கள். 'பண்டைக் குலத்தைத் தவிர்த்துத் தொண்டக் குலத்தில் உள்ளீர்' என்று சொன்னதனுலே, தொண்டர்களாக ஆகி விட்டபொழுது பண்டைக்குலங்களெல்லாம் நீங்கிவிடுகின்றன. மற்றும் தொண்டர்கள் என்பவர்கள் எல்லோரும் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி, இங்குப் பேசுவதற்கு இடம் உண்டு என்று தெரிவித்தார்கள். கொஞ்சம் தைரியம் வந்தது.

பெரியோர்களே! நான் ஒரு வைணவன் என்பதை அவர்கள் தெரிவித்தார்கள். நானும் விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன். வைணவத்திற்கும் சைவத்திற்கும்புறம்பான ஒரு சமயத்தைச் சார்ந்தோராலே நடத்தப் பெறும் கல்லூரியிலே - ஜைனகல்லூரியிலே நான் பணியாற்றுகின்றேன். இப்படிப்பட்ட ஒருவனை இங்குப் பேசநிறுத்தியது திருவருளினுடைய பெருங்கருணேயே என்றுதான் நினைக்கிறேன்.

இங்கு 'மயேசுவரநிந்தை' என்ற தலைப்பில் அடியேனைப் பேசும்படியாகக் குருமகா சந்நிதானத்தினுடைய ஆணை பிறந்தது. இன்றைய தினம் பத்தாவது திருமந்திர மாநாடு. இந்தப் பத்தாவது திருமந்திர மாநாட்டிலே பத்தாவது திருமுறையாக அமைந்திருக்கின்ற இத்திருமந்திரத்தைப் பற்றிய விஷயங்களில் பேசும்படியான பொருத்தம் மிகவும் நன்ருக அமைந்திருக்கின்றது. இங்கு மூன்று நிந்தைகளிலே மகேசுவர நிந்தையிலேயுள்ள மகேசுவரர் என்பவர் மகேசுவரரை அண்டியவர்கள் - மகேசுவரனுலே ஆதரிக்கப் பெற்றவர்கள் - மகேசுவரனுலே ஏற்றுக்கொள்ளப் பெற்ற அடியார்கள். மகேசுவரரை நிந்தை செய்தாலும் ஒன்று; சிவபெருமானை நிந்தை செய்தாலும் ஒன்று. இந்த நிந்தைகளுக்கு வேறுபாடு இல்லை. சிவபெருமானுக்கு அடியார்களை நிந்திப்பவர்களினிடத்திலேதான் அதிக கோபம்; தன்னை நிந்திக்கின்றவர்களிடத்திலேகூட அவ்வளவுகோபம் இராது. இந்த அடியார்களிடத்திலே இறைவன் எவ்வாறு ஈடுபடுகிருன் என்பதைப் பார்த்தால் 'சிவ நிந்தை கூடாது; பண்ணினுலுங்கூட அவனடியார்களை நிந்தைசெய்தல் ஆகவே ஆகாது' என்று சொல்லுகிருர்.

ஒரு பெரிய - கற்றறிந்த - தர்க்கத்திலே வல்ல அடியார்கூட்டத்திலே ஒருவர்,

'கள்ளார் துழாயும்-
கணவலரும் கூவிளையும்
முள்ளார் முளரியும்
ஆம்பலும்முன் கண்டக்கால்
புள்ளாய்ஓர் ஏனமாய்ப்
புக்கிடந்தான் பொன்னடிக்கென்று
உள்ளாதார் உள்ளத்தை
உள்ளமா கொள்ளோமே'

என்ற ஒரு பாசுரத்தைச் சொல்லி, அதற்குப் பொருள் சொல்லிக்கொண்டு வரும்போது,

தர்க்கத்திலே மிக் வல்லவரான ஒருவர், தர்க் கத்திலே தன்னை வெல்லுகிறவர்கள் இல்லை என்று பதினெட்டு மேடையிட்டு, அதன் மேலே உட்கார்ந்திருந்த நஞ்சீயர் என்பவர் எழுந்திருந்து 'இதை நான் ஆட்சேபிக்கின் றேன்; இந்தப் பாட்டிலே வருகிற கருத்தை நான் மறுக்கின்றேன்' என்று சொல்லி, 'முள்ளார் முளரியும்' என்று சொன்னது தவறு; 'நகண்ட காரியம்' என்று சாத்திரம் விதிக்கிறது; முள் உள்ள புஷ்பம் பகவா னுக்கு ஆகாது என்று சாத்திரம் கூறுகிறது; ஆகவே, இப்பாசுரத்தில் வருவது தவறு' என்று அவர் ஆட்சேபித்தபோது, அதற்குப் பொருள் சொல்ல முன்வந்த பட்டர் திடீர் என்று அப்பொழுது அவருக்குத் தோன்றிய ஒரு கருத்தைச் சொன்னார். அதிலே இந்த மகேசுவரருடைய பெருமை விளங்குகிறது. 'பகவானுக்கு இன்னபுஷ்பம் ஆகும், இன்ன புஷ்பம் ஆகாது என்பது இல்லை; எந்த மலரைக்கொண்டாகிலும் அவனை அருச்சிக் கலாம்; அன்புதான் வேண்டும்; ஆனாலும், சாத்திரம் எதற்காகத் தடுத்தது, என்று கேட்டால், அடியவன் போய் அந்த மலரைப் பறிக்கின்றகாலத்தில் அவனுடைய கையில் முள் குத்தும்; அடியவனுடைய கையில் முள் குத்தினால், அது ஆண்டவனுடைய கண் ணிலே குத்தின முள்போன்றது; ஆகவே தான், சாத்திரம் அதை விலக்கிற்று' என்று சமாதானம் அதற்குச் சொன்னார் என்று இந்தப் பாசுரத்திலே வியாக்யானம் எழுது கின்றவர்கள் இப்படி மகேசுவரர்களுடைய பெருமையை வெகு அழகாகச் சொல்கிறார்.

அடுத்தாற்போல, இந்த அடியார்களை ஆண்டவன் எப்படி மதிக்கிறான்? எப்படிப் போற்றுகிறான்? என்று பார்த்தால், ஆண் டவனிடத்திலே போய் அடியார்களைப்பற்றி, யார் எந்த விதமான குறை சொன்னாலும், அவன் ஏற்றுக்கொள்வதே இல்லை. இதை ஒரு ஆழ்வார் சொல்லுகிறார்: எம்பெருமா னிடத்தில் ஒருவர் போனார்; 'உம்முடைய அடியார் என்று பெருமை பேசிக்கொள்ளு கிறீரே; அவர் பண்ணாத அக்கிரமங்களே கிடையா; அவரை உம்முடைய அடியார் என்று நீ சொல்வதே தவறு' என்று சொன் னார். இறைவன் பார்த்தான்: 'இல்லை; அது எம் அடியார் செய்யார்' என்று சொன்னார். இப்படிச்சொன்னது யார்? இப்படிச்சொன் னவர் சாதாரண ஒருபக்தர் அல்லர்; வழிப் போக்கர் அல்லர். எந்த ஒருவனுக்கு ஸ்ரீயப் பதி என்று பெயரோ, எந்த ஸ்ரீ இல்லாவிட் டால் அவனுக்குப் பதித்வம் உண்டாகாதோ அந்த ஸ்ரீயப்பதி சொன்னார்:

> 'தம்மடியார் திறத்தகத்துத் தாமரையாள்
> ஆகிலும் சிதகுரைக்குமேல் எம்அடியார்
> அதுசெய்யார்'

என்று ஒரே உறுதியாகச் சொல்லிவிடுவார். 'என்னுடைய பக்தர்கள் அப்படிச் செய்து இருக்கவே மாட்டார்கள்; நீ சொல்வது பொய்' என்றார்.

அவர், 'இல்லை; நிச்சயமாகச் செய்தார் என்று உறுதியாகச் சொல்கிறேன்' என்றார்.

> 'செய்தாரேல் நன்று செய்தார்
> என்பர்போலும்.'

அப்படிச் செய்திருந்தால் நல்லதுதான் செய்திருப்பார் என்று சொல்லுவார். இறை வனுக்குத் தனது அடியார்களாகிய இந்த மகேசுரர்களிடத்திலிருக்கும் உறுதிப்பாடு அவர்களை அவன் கொண்டிருக்கின்ற நிலை இந்த ஒரு பாசுரத்திலே மிகவும் அழகாகச் சொல்லப்படுகிறது.

இந்த அடியார்கள் இறைவனிடத்திலே பழகுகின்ற ஒரு பழக்கத்தைப் பார்ப்போமா னால் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். மகே சுவரர்களை இறைவன் மதிக்கின்ற மதிப்பு அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசு கிறார்கள், இறைவன் கேட்டுக்கொள்ளுகின் றான் அவற்றை. நிந்தித்தாலும் பழித்தாலும் கேட்டுக்கொள்கிறான்; அதைத் தனக்குப் பூசையாகக் கொள்கிறான்; தன்னைத் துதித்த தாகவே மதிக்கிறான்.

திருமங்கைமன்னன் பல இடங்களையும் சுற்றிக்கொண்டு திருக்கண்ணமங்கைக்கு வந்தார்; அங்கே வந்ததும், இறைவனைக் குறித்துப் பாடினார்; பல பாடல்கள் பாடிக் கொண்டே வந்தார்; அப்பெருமானுடைய சாந்நித்யம் அவருக்குச் சரிவர, மற்ற இடங் களிலே கிடைத்தது போலக் கிடைக்கவில்லை.

கோபம் வந்துவிட்டது. இறைவன், அடியாருக்குக் கோபம் வந்ததும் அஞ்சுகின்றான். அவ்வளவு பெருமை அடியார்களுக்கு இருக்கிறது.

'கையில் வெண்சங்கம் ஒன்று ஏந்திய கண்ண!
நின்தனக்கும் குறிப்பாகில் கற்கலாம்
கவியின் பொருள்தானே.'

நான் இவ்வளவு பாட்டுப்பாடினேனே உன்னைத் துதித்து. பொருள் விளங்கவில்லையா உனக்கு! பொருள் விளங்காவிட்டால் என்னிடத்திலே வந்து, சிஷ்யனாக அமர்ந்து, 'நீ பாடிய பாட்டுக்குப் பொருள் என்ன?' என்று கேள்; நான் சொல்லுகின்றேன் என்றார். இதற்கு வியாக்கியானம் பெரியவாச்சான்பிள்ளை என்பவர் எழுதினார். 'நின்தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே' என்ற அடிக்கு உரை எழுதும்போது, 'இராமாவதாரத்தில் முனிவனாகிய விசுவாமித்திரனிடத்திலும்,கிருஷ்ணாவதாரத்தில் முனிவனாகிய சாந்தீபினியிடத்திலும் சிஷ்யனாக இருந்த பெருமானுக்குத் இத்திருமங்கை ஆழ்வாரிடத்திலே சீடனாக அமர்ந்து தமிழ் கற்கக் கசக்கிறதோ!' என்று எழுதினார்.

இப்படி அடியார்களிடத்தில் இறைவன் அன்பு கொண்டிருக்கின்றான். சீடனாகவும் அமர்ந்து கற்கவேண்டும் என்று அடியார் சொல்ல, அதை ஆமோதிக்கிறார்கள் மற்றோர்கள். அதை நாம் இன்புற்றுப் படிக்கின்றோம்.

இந்த அடியார்கள் பார்வைக்கு - நம் போன்றவர்களுக்கு - விருப்பமான தோற்றமுடையவராக இரார். அவர்கள் செயல் விருப்பமாய் இருக்காது. அவர்கள் பேச்சும் விருப்பமாய் இருக்காது. அடியார் ஒருவர் அதிகாலையில் நான்கு மணிக்கு எழுந்து ஏதாவது பாட ஆரம்பித்தால் வீட்டிலே இருக்கிறவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? 'நல்ல தூக்கவேளையில் தலைவேதனையாக இருக்கிறது இந்தத் தொந்தரவு' என்று சொல்கிறார்கள். இப்படி அடியார்களுடைய தோற்றத்தைப் பார்த்து உலகோர் வெறுப்பது இயல்பு. இதனை,

'பேயரே எனக்கு யாவரும் யானும் ஓர்
பேயனே எவர்க்கும் இது பேசி என்?'

இப்படி ஒரு ஆழ்வார் தாமே சொல்லிக் கொள்கிறார். ஒரு ஆழ்வாருக்குப் பேயாழ்வார் என்றே பெயர். பூதத்தாழ்வார் என்று ஒருவருக்குப் பெயர். 'இப்படி என்னைப் பேயன் என்று சொல்லுகிறார்கள்; என்னை என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும்; அவர்களைப் பேயர்கள் என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன்' என்று இப்படி பேசுகிறார்கள் அடியார்கள். இந்த அடியார்களை நிந்திப்பது மிகவும் கொடுமை என்பதை நம்முடைய திருமந்திரம் 'மகேசுவர நிந்தை' என்ற தலைப்பிலே இரண்டு பாடல்களிலே தெரிவிக்கிறது.

ஆண்டான் அடியவர் ஆர்க்கும் விரோதிகள்.

ஆர்க்கும் விரோதிகள் - எல்லாருக்கும் அடியவர்கள் விரோதிகளாகவே வெளித் தோற்றத்திலே காணப்படுவார்கள். அவர்களுடைய உள்ளத்திலே கொண்டிருக்கிற - இறைவனிடத்தில் கொண்டுள்ள பேரன்பை பக்தியை அறியாமல், அவர்களை வெளித் தோற்றத்திலே பார்க்கும்போது, 'ஆர்க்கும் விரோதிகள்'. அவர்கள் செய்கின்ற செயல்களெல்லாம் விரோதமாக இருக்கும். ஏன்? அவர்கள் நெற்றியிலே நன்றாகத் திருநீறு தரித்துக்கொண்டு ஆனந்தப்படுவார்கள். அது மற்றவர்கட்கு வெறுப்பாக இருக்கும். அவர்கள் ஏன் விரோதிகளென்று கேட்டால் ஒரு விரோதமும் இல்லை. மற்றவர்களோடு அவர்கள் ஒட்டி நடக்கவில்லை. மற்றவர்கள் செய்கிற தீச்செயல்களுக்கு அவர்கள் இடம் கொடுக்கவில்லை. மற்றவர்கள் புறக்கணிக்கின்றவைகளை இவர்கள் மேற்கொள்கிறார்கள். 'நீறு இல்லா நெற்றி பாழ்' என்பதை ஒருவரும் விரும்பவில்லை. 'நெய் இல்லா உண்டி பாழ்' என்பதை எல்லோருமே ஆமோதிக்கின்றார்கள். விருப்பு வெறுப்பு இப்படிக் கலந்திருக்கின்ற உலகத்தில் இவர்கள் இறைவனுக்கு மிக விருப்பமான செயல்களையே செய்துகொண்டு இருக்கும்போது, அவை உலக நடையிலே மக்களுக்கு - சாமானிய மக்களுக்கு - ஞானம் கைவரப் பெறாதவர்க்குப் பிடிப்பதில்லை.

அடியவர்கள் ஐயம் ஏற்று உண்பவர். சிவபெருமான் கபாலத்திலே ஐயம் ஏற்று உண்கின்ற பெருமான். அவருடைய அடியார்களும் ஐயம் ஏற்று உண்கின்றவர்கள். 'நாம் யார்க்கும் குடி அல்லோம், நமனை அஞ்சோம்' என்று ஒருவருக்கும் அஞ்சாதவர்கள். ஆகையால், யார் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும், ஆகாய விமானத்தில் யார் பறந்தாலும் பறக்கட்டும், நமக்கு வேண்டுவது இறைவனுடைய அருள். அவனுடைய அருளை நாம் கொண்டிருப்பதற்கு வயிற்றுக்கு உணவு என்று அந்த அளவிலே ருசி எதுவுமே பாராமல் அவர்கள் ஐயம் ஏற்று உண்கிறவர்கள்.

ஆண்டான் அடியரை வேண்டாது பேசினோர்.

அடியார்களைத் தாறுமாறாகப் பேசுகின்றவர்கள் சிலர் உண்டு. எப்பொழுதுமே ஆண்டானுடைய அடியார்களை மட்டுமல்ல, யாரையுமே தாறுமாறாகப் பேசக்கூடாது.

> 'ஆய்தந்தவன் அவ்வுரை கூறலும் நின்
> வாய்தந்தன கூறுதியோ நின் மறைதந்த
> நாவால்'

என்கிறார் கம்பர். அதுவும் படித்தவன் தாறுமாறாகப் பேசலாமா? அதுபோல, அடியார்களைப் போற்றாவிட்டாலும், தகாத வார்த்தைகளைச் சொல்லி நிந்திப்பது மிகவும் பழி.

> வேண்டாது பேசினோர்
> தாம்தாம் விழுவது தாழ்நர காகுமே.

இவர்களைக் கொண்டுபோய் யாரும் நரகத்திலே தள்ளவேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் நரகத்தில் தாமாகவே போய் விழுவார்கள். தாழ்நரகாகுமே என்பது மீளாத நரகு அது என்பதை உணர்த்தும். அடியார்களை நிந்திக்கின்றவர்களாகிய மக்கள் விழும் நரகம் எப்படிப்பட்டது?

> 'வம்புலாம் கூந்தல் மனைவியைத் துறந்து
> பிறர்பொருள் தாரமென் றிவற்றை
> நம்பினர் இறந்தால் நமன்தமர் பற்றி
> எற்றி வைத்து, எரிஎழுகின்ற
> செம்பினால் இயன்ற பாவையைப்
> பாவீ தழுவென மொழிவதற்கு அஞ்சி
> நம்பனே! வந்துஉன் திருவடி யடைந்தேன்
> நைமிசா ரணியத்துள் எந்தாய்!'

என்று திருமங்கை மன்னன் பாடியுள்ளார்.

அவனை இயமதூதர்கள் ஏற்றித் தள்ளி அனல் வீசுகின்ற செம்பினாலியன்ற பாவையைத் தழுவச் செய்வார்களாம். அப்படி அல்ல இந்நரகம். எப்படிப்பட்டது? தானே போய் விழும்படியான நரகம். அடியார்களை நிந்திக்கும் இந்த நிந்தனையே இவர்களைக் கொண்டுபோய் நரகத்திலே ஆழ்த்திவிடும். அப்படிப்பட்ட நரகத்தை அடைவார்கள்.

தாந்தாம் விழுவது தாழ்நர காகுமே.

நரக வேதனையைக் காட்டிலும் நமது நூல்களிலே சொல்லப்படுகின்ற கொடுமை வேறு ஒன்றும் கிடையாது. நரக வேதனையைச் சொல்லித்தான் அடியார்கள் நம்மைப் பயமுறுத்தியிருக்கிறார்கள். ஆனால், மக்கள் யார் என்ன சொன்னாலும் எவ்வளவுக்கும் அஞ்சுகின்றவர்களாக இல்லை. தன்னுடைய தெய்விகத் தோற்றத்தைக்காட்டி மக்களைத் திருத்த இயலாமற்போன நமது இறைவன், முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும் என்ற ஒரு நியாயப்படி இந்த அடியார்களைக் கொண்டாவது திருத்தலாம் என்றுதான் அடியார்களை இந்த உலகிலே அவதரிக்கச் செய்தான். அதுபோலவே, திருமாலடியார்களும் கருதுகிறார்கள். 'திருமால் பல அவதாரங்கள் எடுத்துப்பார்த்தார். மக்கள் மசியவில்லை; ஆழ்வார்களை இந்த உலகத்திலே அவதரிக்கச்செய்தார்' என்று எழுதுகிறார்.

இவ்வாறு மகேசுவரர் ஆகிய அடியார்கள் இந்த உலகத்திலே நம்மையெல்லாம் நல்வழிப்படுத்துவதற்காகவே வந்து நமது அறிவையும் தமிழையும் நன்கு வளர்த்து, சிறந்த நூல்களையும் பாடங்களையும் இயற்றியருளினார்கள். அவர்களைப் போய் நிந்தை செய்வதைக் காட்டிலும் தீமை பயப்பது உலகத்தில் வேறு எதுவுமே இல்லை என்பது இந்தப் பாட்டின் கருத்து.

ஞானியை நிந்திப்பவர் அடையும் தீமை யாது? ஞானியை வந்திப்பவர் அடையும் நன்மை யாது? இந்த இரண்டையும் ஒத்திட்டுச் சொன்னாலாவது இவர்கள் மனம் திருந்துமோ என்கின்ற எண்ணத்தினாலே அடுத்த பாட்டில்,

ஞானியை நிந்திப் பவனும் நலனென்றே
ஞானியை வந்திப் பவனுமே நல்வினை
யான கொடுவினை தீர்வார் அவன்வயம்
போன பொழுதே புகுஞ்சிவ போகமே.


என்று அருளிச்செய்கின்றார் நம் திருமூலர். ஞானியை நிந்திப்பவன் நல்வினை தீர்வான்; நல்வினை என்பதே அவனுக்கு இல்லை. ஞானியை வந்திப்பவன் தீவினை தீர்வான்; கொடுமையைச் செய்யக்கூடிய தீவினை தீர்வான். அவன் அந்தக்கொடுவினை தீர்ந்து ஞானியாகிய அடியவரைப் போய் அண்டுகின்ற காலத்திலே, அவனிடத்தில் போன பொழுதே அவனுக்குப் பணிவிடை செய்ய வேண்டாம்; அவனை நிந்திக்காமல் அவன் பெருமையை அறிந்து, அவனை அடைவானுல் அவனுக்கு நன்மை உண்டு என்ற கருத்தோடு அவனுடைய திருவடிகளை நம்பி நெருங்குகிற காலத்திலே என்ன ஆகும்? சிவபோகம். அவனுக்குச் சிவபோகமாகிய பேரின்பநிலை உண்டாகும். அதன் பின்பு அவன் அடைவதெல்லாம் இன்பமே. இவ்வாறு நிந்திக்கிறவர்கள் அடையும் தீமை, அடியவர்களை அடையும்படியான பெருமை இவைகளைச்சேர்த்து அடுத்த ஒரு பாட்டிலே சொல்லுகிறார். இப்படி இரண்டு பாடல்கள் திருமந்திரத்திலே அமைந்திருக்கின்றன. இறைவனுக்கு ஓர் அடியார் மாமிசத்தைப் படைத்தார். உடனே இதெல்லாம் தகுமா? இப்படிச் செய்கிற அடியார்களை எப்படித் தூற்றுமலிருப்பது? நிந்தியாமலிருப்பது? என்று கேட்கலாம். அடியார் செய்கிறதை இறைவன் எப்படி ஏற்றுக்கொள்ளுகிறுன் என்ற ஒரு நிலையைப் பார்த்துத்தான் நாம் அதற்கு முடிவு செய்யவேண்டும். பெரியோர் "அத்யந்த பக்தி யுக்தானும் நசாஸ்த்ரம் நைவசக்ரம:" நம் பகவானிடத்தில் பக்தியானது உண்டான ஈடுபாடு மிகுமாயின், அப்பால் சாஸ்திரம் ஏது? நாம் அவனை அடைவதற்கேற்பட்டது சாஸ்திரம். அவனை அடைந்த பிற்பாடு சாஸ்திரம் என்பது அங்கே ஏது? கிரமம் என்பது ஏது? 'இவைகளையெல்லாம் கடந்தநிலை' என்று பெரியோர் இதைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சிவநிந்தைகூடாது, சிவபெருமானை நமக்கு அறிமுகப்படுத்திவைத்த குரு - ஆச்சாரிய நிந்தை கூடாது. சிவபெருமானை வழிபாடு செய்கின்ற அடியார்களை நிந்திக்கக் கூடாது என்று சொல்லுகின்றார் திருமூல தேவர். இந்த மூன்று தொடர்பான நிந்தைகள் கூடா என்பதற்காகத்தான் தலைப்பிலே 'நிந்தை' என்று அமைத்து, அதைக் கவனிக்கிறவர்களின் கவனத்தை ஈர்க்கும்படியாகச் செய்தார் என்பதை உங்கள்முன் விண்ணப்பித்து அமைகின்றேன்.

ஐய மாக்கடல் ஆழ்ந்த உயிர்க்கெலாம்
கையில் ஆமல கம்மெனக் காட்டுவான்
மையல் தீர்திரு மந்திரஞ் செப்பிய
செய்ய பொற்றிரு மூலனைச் சிந்திப்பாம்.

—பதிபசுபாச விளக்கம்.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை. —

# திருமந்திர மாநாட்டு மலர்



திருவாவடுதுறை ஆதீனம்

வெளியீடு எண் 199.

உ

சிவமயம்

பதினொன்றாவது

# திருமந்திர மாநாட்டு மலர்

[ சோபகிருது - மார்கழி ]

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

21 - வது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகள் அவர்கள்

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது.


திருவாவடுதுறை ஆதீனம்

1965 - ஜனவரி] [குரோதி - தை

உ

சிவமயம்

# குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# பதிப்புரை

ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகளின் திருவருள் துணைக் கொண்டு, அவர்கள் குருபூசைத் திருநாளாகிய மகரத்தலை நாளை ஒட்டி, வழக்கம்போல் சென்ற சோபகிருது ஆண்டில் பதினொன்றாவது - திருமந்திர மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் சொற்பொழிவாளர்கள், தம் நீண்டநாள் அநுபவத்தைக்கொண்டு வேத ஆகம சாத்திர தோத்திர வரம்பிலே நின்று திரட்டிய பல கருத்துக்களை, மக்களனை வரும் புரிந்துகொள்ளத்தக்க எளிய இனிய நடையிலே பேசுகின்றார்கள். அக்கருத்துக்களை அனைவரும் கேட்டுத் தமது வாழ்க்கை அநுபவத்தோடு ஒட்டிப் பயன் எய்து கின்றார்கள். இந்த அநுபவத்தை மாநாட்டில் கலந்து கொள்ளாத ஏனையோரும் அடைந்து உய்யவேண்டும் என்ற கருணைநோக்காலும், ஆண்டுதோறும் எத்தகைய புதுமையான கருத்துக்கள் — சிவாநுபவச் செல்வங்கள் வெளிவந்துள்ளன என்று திருமந்திர ஆராய்ச்சியின் உணர்ச்சிப்பெருக்கை அறிந்துகொள்ளும் நோக்குடனும் வழக்கம்போல் மாநாட்டுச் சொற்பொழிவுகள் அனைத்தும் தொகுத்து, மலராக வெளியிடப்பெறுகின்றது.

சைவத் தமிழ் உலகம் இந்த வெளியீட்டைப் பெற்று, போற்றி மகிழுமாக.

உ

சிவமயம்

## ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் தோத்திரம் :

இருதய நாப்பண் அஞ்செழுத் துருவின்
இறைவனை உயிர்க்கொலை செயாமை
அருள்பொறி அடக்கல் பொறைதவம் வாய்மை
அன்பு அறிவு என்னும் எண்மலர்கொண்டு
ஒருமையொடு அருச்சித்திடுக என்று அடியர்க்கு
ஒள்ளிய தீக்கைசெய்து உணர்த்தத்
திருஅமர் துறைசை உறையருள் குருவாம்
திருநமச்சி வாயர்தாள் போற்றி.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.


ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளுக்கு வணக்கம் கூறும்முறையில் ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளால் பாடப்பெற்றது இச்செய்யுள். ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் திருவாவடுதுறை ஆதீனத்தை இன்றைக்குச் சுமார் ஐந்நூறு ஆண்டுகட்குமுன்னர்த்தோற்றுவித்த தெய்வீக அருளாளர் ஆவர். இவர்கள் கண்ட ஆதீனம், தென்னாட்டில் பலகோடி மக்களுடைய ஞானத்தையும் சமய உணர்ச்சியையும் நன்னெறியையும் நிலைபெறச்செய்வதற்கும் வளர்ப்பதற்கும் துணையாக இருந்துகொண்டிருக்கிறது. இவர்களால் கட்டளையிடப்பெற்ற நற்செயல்களும் இன்றுவரை நடைபெற்றுவருகின்றன.

நாட்டிலும் மக்கள் உள்ளத்திலும் எத்தனையோ மாறுபாடுகள் தோன்றினும், குருமூர்த்திகளுடைய கட்டளையும் திட்டமும் எள்ளளவும் மாறியன அல்ல. எடுத்துக்காட்டாகத் திருமடத்தின் திருமடைப்பள்ளியை மூர்த்திகள் அமைத்து, அதில் பொருத்திய நெருப்பு அணையாமல் நின்று என்றும் அடியவர்களுக்கு அமுதளிக்கவேண்டும் என அருளிய திருமொழி இன்றும் உண்மையாக இருந்துவருவது உலகம் அறிந்ததே. இந்த ஐந்நூறு ஆண்டுகளில் நிகழ்ந்த மாறுதல்களும் பஞ்சமும் எவ்வளவோ ஆயினும் இத்திருமடத்திலும் இதன் கிளைமடங்களிலும் இன்றுவரை பசிப்பிணி ஒன்று உண்டு என்பதை ஏவரும் அறியார். இத்திருமடம் எந்த நல்ல நோக்கங்களுடன் தோன்றியதோ அந்த நோக்கங்கள் இன்றும் இங்கே நிறைவேறிவருகின்றன.

ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள், சங்கரர் இராமாநுஜர் ஆகிய இவர்களுடன் வைத்து எண்ணக்கூடிய ஒரு பெரிய தத்துவஞானி ஆவார்; இந்தத் திருமடத்தின் தம்பிரான்களில் ஒருவரும் ஆவார்.




ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்



திருவாவடுதுறை ஸ்ரீ கோமுத்தீஸ்வரர் ஆலயம்

## தலச்சிறப்புக்கள் :

சிவபெருமானுடைய ஆணையால் பசுவடிவத்தைப்பெற்ற உமாதேவியார் இந்தத் தலத்துக்கு வந்து சிவபெருமானைப் பூசித்துப் பசுவடிவம் நீங்கப்பெற்ருர். திருமூல நாயனர் மூவாயிரம் ஆண்டுகள் இத்தலத்திலே சிவயோகமிருந்து திருமந்திரமாலையை (மூவாயிரம் மந்திரங்களை) அருளிச்செய்தார். போகநாதசித்தருடைய மாணவராகிய திருமாளிகைத்தேவர், ஆசிரியருக்குத் தொண்டு செய்திருந்து அருள்பெற்றுச் சைவ ஸ்தாபனம் செய்து மேலும் பல அற்புதங்கள் செய்து விளங்கினர். தாம் தவஞ்செய்தமையினுல் பிற்காலத்து நவகோடிசித்தபுரம் என வழங்கப்பெறும் இங்கு நவகோடி சித்தர்கள் சிவஞானம்பெறத் தவம் செய்தனர். சைவசமயாசாரியர்கள் நால்வருள் முதல்வரான ஆளுடையபிள்ளையார் தமது தந்தையார் யாகம் செய்யும்பொருட்டுத் தேவாரத்திருப் பதிகம்பாடி ஆயிரம்பொன் பெற்றனர். தமது கட்டளையின்படியே தேவர்கள் படரரசு மரங்களாக, சிவபெருமான் அம்மரநிழலில் எழுந்தருளினர். மகப்பேறுகருதி வந்து வழிபட்ட முசுகுந்தமன்னருக்கு இறைவன் இதனைத் திருவாரூராகவும், தம்மைத் தியாகேசப் பெருமானுகவும் காட்டிப் புத்திரப்பேறும் அளித்து, புத்திரத்தியாகர் என்னும் பெயருடன் வீற்றிருந்தருளினர். தருமதேவதை தம்மை வழிபட, பெருமான் அதனை இடபமாகக் கொண்டதன்றி, தம் சந்நிதியில் அரசமரநிழலில் கோயில்கொண்டிருக்கும்படி அதற்கு வரமும் தந்தார். தேவர்களும் முனிவர்களும் வேண்டிக்கொள்ள அந்த வேண்டுகோளை ஏற்றுப் போதியம்பலத்திலே சிவபெருமான் மகாதாண்டவம் புரிந்து அருளினர். சில முனிவர்களுக்குச் சிவஞானோபதேசம் செய்தருளினர். சில அந்தணர்களுக்கு வேதத்தை அருளிச்செய்தனர். போகநாத சித்தர் நவகோடி சித்தர் முதலிய சித்தர்கள் விரும்பிய வண்ணம் அவர்களுக்கு அட்டமாசித்திகளையும் பிறவற்றையும் அருளினர். இதுபோன்ற அற்புதங்கள் பல இத்தலத்திலே நிகழ்ந்தன. சித்தர்கள் பலர் இங்கே எப்போதும் வசிக்கின்றனர் என்ற ஐதிகமும் உண்டு.



திருவாவடுதுறை ஆதீன மடாலயம்

## நாட்டில் மடங்கள் :

அன்றுமுதல் நாள்தோறும் நாள்தோறும் அண்ணல்
அடியரள விறந்தபெயர் வந்தவர்கள் எல்லாம்
சென்றுறையத் திருமடங்கள் திருமடங்கள் தோறும்
திருவிளக்கு அந்து அவர்சாத்த உள்ளுடை மேற்போர்வை
துன்றியசெந் நெலின்அடிசில் கன்னல்நறுங் கனிகள்
தூயஅறு சுவைக்கறிநெய் தயிர்திரண்ட பால்தேன்
நன்றுதிருப் பண்ணியந்தண் ணீரமுதம் அடைக்காய்
நரபதி ஏவலின் அமைச்சர் நாள்தோறும் நடத்த.

— ஸ்ரீ உமாபதி சிவாசாரியார்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் போற்றிவருகின்ற சித்தாந்த உண்மைகளை உலகினுக்கு உதவியருளிய சந்தானுசாரியர்களுக்குள் நான்காமவராய் இன்றைக்கு அறுநூறு ஆண்டுகட்குமுன் எழுந்தருளியிருந்தவர் ஸ்ரீ உமாபதிசிவாசாரிய சுவாமிகள். பன்னிரண்டாம் நூற்ருண்டில் நிகழ்ந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் அருளிச்செய்த சேக்கிழார் புராணத்தில் உள்ளது இச்செய்யுள். சேக்கிழார் அருளிய பெரியபுராணம் சோழ அரசர்களின் உள்ளத்தை உருக்கிய காரணத்தால் சோழ அரசர்கள் சோழநாட்டில் பல திருமடங்களை நிறுவினுர்கள். அந்தத் திருமடங்களெல்லாம், தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற முனிவர்கள் தங்கும் இடங்களாக ஆயின. முனிவர்கள் தாங்கள் ஆராய்ந்துகண்ட உண்மைகளையெல்லாம், தமிழ்நாட்டிற்குத் தத்துவ சாத்திரங்களாகவும் சமயக்கோட்பாடுகளாகவும் வழங்கினுர்கள். அவைகளே, நாட்டில் அரசியல் மாறுதல்களும் அமைதியின்மையும் ஏற்பட்டகாலத்து மக்கள் மக்களாக வாழ்வதற்குப் பெரிதும் உதவிபுரிந்தன.



திருமூலதேவர் உத்ஸவம்

கயிலாயத்து ஒரு சித்தராய் நந்திதேவர் திருவருளைப்பெற்ற சிவயோகி, தலயாத்திரையாகப் பொதியமலைநோக்கி வருகிறபோது, திருவாவடுதுறைக்கு வந்து பெருமானை வழிபட்டு அருகிலுள்ள சாத்தனூரை அடைந்தார். அங்கு இறந்துகிடந்த பசுமேய்ப்போனாகிய மூலன் என்னும் இடையனது உடலில் புகுந்து மூலராக எழுந்தார் என்பது வரலாறு. இப்படி மூலராக எழுந்தவுடன் எஜமான் இறந்த துக்கத்தால் கதறிய பசுக்கள் ஆனந்த மேலீட்டினால் மோந்தன; நக்கின; கனைத்தன; துள்ளிக் குதித்தன. எப்படி எப்படியோ சந்தோஷத்தைக் காட்டிக்கொண்டன. மூலராகிய சிவயோகியும் மகிழ்வோடு பசுக்களை மேய்த்தார். அவைகளைக் காவிரித்துறையிலே நீர் அருந்தச் செய்தார்; வெயில் நேரத்தில் நிழலுள்ள இடத்தில் தங்கச்செய்து பாதுகாத்தார். மாலைநேரம் வந்ததும் பசுக்கள் கன்றுகளை நினைத்துக்கொண்டே வீடுகளை நோக்கி நடந்தன. அவை தத்தம் வீடுகளை அடையும்வரை மூலரும் பின்னே தொடர்ந்து சென்றார். இப்படி மூலர் அன்று மேற்கொண்ட பசுப்பணியும் முடிந்தது.

இப்படியாக, பசுப்பணி முடிந்தபிறகு, திருவாவடுதுறையில் அரசமரத்தின்கீழ் மூவாயிரம் ஆண்டுகள் யோகத்திலிருந்து, அருந்தமிழ் மூவாயிரம் அருளினர்; திருமூலதேவநாயனர் என்று சிறப்பிக்கப்பெற்றார். அருந்தமிழும் 'திருமந்திரம்' என்ற பெயருடன் திகழ்கிறது.

இத்தகைய மிகச்சிறப்போடுகூடிய திருமூலதேவநாயனருக்கு, ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறுகிற மகோத்ஸவ இரண்டாந்திருநாளில், தனிச் சிறப்புச் செய்யப்பெறுகிறது. அன்றுகாலை திருவீதியுலாவில் பெருமானுடன் திருமூலதேவநாயனரும் எழுந்தருளுகிறார். திருமூலர் மேற்கொண்ட பசுப்பணியின் நினைவாக அவருக்கு முன்பு ஒரு பசுமாடு கன்றுடன் கொண்டுசெல்லப்பெறுகிறது. திருவுலா முடிந்து ஆலயத்தை அடைந்ததும் சந்நிதியில் ஆதீன ஓதுவாமூர்த்திகளால் திருமூலர் வரலாறு படிக்கப்பெறுகிறது. உடனே கோபூஜை நடைபெறுகிறது. பிறகு தீபாராதனை தரிசனம். இப்படி நிகழ்கிற திருமூலர் உத்ஸவக்காட்சி இது.

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே.

திருச்சிற்றம்பலம்

— திருமூலர்.

# மலரின் மணம்

உ

சிவமயம்

## திருவாவடுதுறை ஆதீனம்

# பதினொன்றாவது திருமந்திர மாநாட்டு நிகழ்ச்சிகள்

திருத்தொண்டத்தொகையில் 'பிரான்' எனச் சிறப்பித்துப்பேசப்பெற்றவர்கள் இருவர். ஒருவர் 'எம்பிரான்'; அவர் திருஞானசம்பந்தர். மற்றொருவர் 'நம்பிரான்'; அவர்தான் திருமூலதேவர். திருத்தொண்டர்கள் வரிசையில் திருமூலதேவர் பின்னவராக எண்ணப்படினும் காலத்தால் எல்லாரினும் முற்பட்டவர். இவர் சிவனுவடுதண்டுறையில் சிவபோதி நீழலில் அரனடி நாடொறும் சிந்தைசெய்து சிவாகமங்களைச் செந்தமிழில் ஆக்கியவர். இச்செந்தமிழே பன்னிரு திருமுறைகளுள் பத்தாந்திருமுறையாகிய திருமந்திரமாக விளங்குகிறது.

திருமந்திரம் இருக்குமிடம் தெரியாமையால் இதை யாரும் அறிந்துகொள்ள முடியவில்லை. பல ஆண்டுகள் சென்றன. தலயாத்திரையாகத் திருவாவடுதுறைக்கு வந்த ஞானசம்பந்த சுவாமிகளுக்குத்தான் திருமந்திரம் இருக்குமிடம் தெரியவந்தது. ஸ்ரீ மாசிலாமணியீசர் பலிபீடத்தின் அருகில் வந்ததும் செந்தமிழ்மணம் வீசுவதை உணர்ந்தார்; பலிபீடத்தின்கீழ் மறைந்துகிடந்த மந்திரத்தை எடுத்து வெளிப்படுத்தினர். இந்த நிகழ்ச்சி ஏழாம் நூற்றாண்டில் நடந்ததாகப் பெரியோர் கூறுவர்.

இப்படித் திருமந்திரம் வெளிப்பட்டு ஒன்றிரண்டல்ல; சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்குமேல் காலம் கடந்துவிட்டது. ஆயினும் இத்திருமந்திரத் திருமுறை வழிபாட்டுக்கு உரியதாக இருந்துவந்ததேயன்றி, திருமுறையுள் புகுந்து ஆராய்ந்து அறிந்து அநுபவித்துப் பிறரையும் அநுபவிக்கச்செய்வார் இதுவரையில் இவ்வுலகில் அரியராகவே இருந்துவந்தனர்.

'வளப்பில் கயிலை வழியில் வந்தேனே' என்று தன் வரலாற்றைச் சொல்லிக் கொள்ளுகிறார் திருமூலர். ஆகவே அக்கயிலைபரம்பரையில் - மெய்கண்ட சந்தான உபதேசவழியில்வந்த அருட்குரவர் ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள். இத்திருவாவடுதுறை ஆதீன ஆதிகுருமூர்த்திகள் அவர்களே. அவர்களுக்குப் பின்னே, இப்போது ஞான பீடத்தில் இருபத்தோராவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி, அருளாட்சி செலுத்தி வருகின்றவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள். இவர்கள் திருமந்திரத்தை அனைவரும் அறிந்து அநுபவித்து உய்யவேண்டும் என்ற திருவுள்ளம் கொண்டவர்கள். திருமந்திரம் நாடெங்கும் பரவப் பலவகையில் இவர்கள் பணி புரிந்து வருகின்றார்கள் என்பதை இன்றைக்குச் சைவச்செந்தமிழுலகம் நேரில் கண்டு மகிழ்கிறது; திருமந்திரத்தைப் படித்து, நன்கு அறிந்து, அனுபவித்தும் வருகிறது.

திருமந்திரப்பணிகள் பலவற்றுள் மாநாடு நடத்துவதும் ஒன்றும். இம்மாநாடு ஆண்டுதோறும் மகரத்தலைநாட் குருபூஜைவிழாத் தொடக்கத்திலே முதல் மூன்று நாட்களிலும் நடத்தப்படுகிறது. அதுவும் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்பு நடந்துவருவது மிக்மிகச் சிறப்புடையதொன்றும். குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாணைவழிநின்று பேரறிஞர்கள் திருமந்திர அமுதத்தை அன்பர்கள் உளங்கொள வாரி வழங்கி வருகிறார்கள். அந்தமுறையில் இவ்வாண்டு பன்னிரண் டாவது ஆண்டு திருமந்திர மாநாடு நடைபெறுகிறது.

பதினொன்றாவது திருமந்திரமாநாடு சென்ற சோபகிருது ஆண்டு மார்கழித் திங்கள் 29-ம்நாள் (13—1—1964) திங்கட்கிழமை தொடங்கி மூன்று நாட்களிலும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அடியார் கூட்டங்களுடன் எழுந்தருளியிருந்தார்கள். அன்பர்கள் பலரும் குழுமியிருந்தனர். ஆதீனத்துத் தேவார இசைப்புலவர்கள் திருமுறை ஓத மாநாடு தொடங்கியது.

பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள் மாநாட்டுத் திறப்புரை நிகழ்த்தினார்கள். தொடக்கநாள் பேராசிரியர் டாக்டர். திரு. T. M. P. மகாதேவன் அவர்களும், இரண்டாம்நாள் ஆதீன மகாவித்துவான் திரு. கே. ஆறுமுக நாவலர் அவர்களும், மூன்றாம்நாள் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் தலைமை வகித்துப் பேருரை நிகழ்த்தினார்கள். அவர்கள் எல்லோருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னுடைபோர்த்தி மலர்மாலை சூட்டி ஆசி அருளினார்கள். புலவர்பெருமக்கள் பலரும் குறித்த தலைப்புக்களில் நின்று, அவ்வத்தலைப்புக்களில் அடங்கியுள்ள திருமந்திரப்பாடல்களின் கருத்தை விளக்கிப் பேசினார்கள்.

பத்தாவது ஆண்டு திருமந்திரமாநாட்டுச் சொற்பொழிவுகள் அடங்கிய மலர், திருமந்திரக்கருத்து, திருமந்திரக்கட்டுரை இம்மூன்று வெளியீடுகளும் வழங்கப் பெற்றன.

*திருச்சிற்றம்பலம்.*

# தொடக்கநாள் பேருரைகள்

## திறப்புரை :

பேராசிரியர்

**திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்**

அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

நமது பெருமதிப்பிற்கு உரிய ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு எனது வணக்கம் உரியதாகும்.

இப்பதினொன்றாவது திருமந்திர மாநாட்டிற்குத் தலைமைதாங்க இருக்கும் அன்பிற் சிறந்த டாக்டர் மகாதேவன் அவர்களே! பெரியோர்களே! இந்தப் பதினொன்றாவது மாநாட்டினைத் தொடங்கிவைக்கும் பேறு, எனக்குக் கிடைத்தது குறித்து, நான், மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். முன்பு, எட்டாவது திருமந்திர மாநாட்டினையும், பத்தாவது திருமந்திர மாநாட்டினையும் தொடங்கி வைத்த பேறுகளை எனக்கு அளித்த நமது குருமகாசந்நிதானம் அவர்கள், மீண்டும் இந்த ஆண்டிலும் இப்பேற்றினை எனக்கு அளித்த பெருங்கருணையை நினைந்து நான் இன்புறுகின்றேன்.

நமது திருமந்திரம், தமிழ் மொழியில் உள்ள ஞானநூல்களுள் முதன்மையும் பழமையும் வாய்ந்தது ஆகும். இந்நூல் ஒன்பது தந்திரங்களில் அடங்கிய இருநூற்று முப்பத்திரண்டு அதிகாரங்களில், மூவாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களை உடையது. இவ்வாறு இருந்தும், சில ஆண்டுகளுக்கு முன்வரை, இந்நூலினைக் கற்போர், மிகச் சிறுபான்மையராகவே இருந்தனர். சிறப்பாகத் தமிழ் கற்றவர்களும், இந்நூலினை அணுகுவதில்லை. இந்நிலைமாறி, இப்போது பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் திருமந்திரத்தினைப் பலர் கற்கவும், கேட்கவும் வாய்ப்பளித்த தனிப்பெருமை, நம்முடைய குருமகாசந்நிதானம் அவர்களுக்கே உரியது.

### திருமந்திரத்தின் சிறப்பியல்புகள்

மக்கள் என்றும் நினைவில் வைத்துப் பயன் பெறுவதற்கு உரிய சில அருமையான தொடர்கள், அவை திருமந்திரப்பாடல்களிலுள்ள தொடர்கள் என்பது பலருக்குத் தெரியாமலே தொன்றுதொட்டு வழக்கில் இருந்துவருவது, நாம் நினைத்தற்குரியது. இத்தகைய சிறு சிறு அறிவுரைத் தொடர்களைப் பாடல்களில் கொண்டிருத்தல், திருமந்திர நூலில் காணப்படும் தனி அழகாகும். இதற்கு எடுத்துக்காட்டுக்களாக, 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' (85), 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' (2104), 'அன்பே சிவம்' (270) என்னும் தொடர்களைக் குறிப்பிடலாம்.

நகைச்சுவை அமைந்த உவமைகளும் உருவகங்களும் அமைந்திருத்தலும் இந்த நூலின் தனித்தன்மைகளுள் ஒன்றாகும்.

தத்துவக் கருத்துக்களை மறைவாக வைத்து வெளிப்படையாக உலகியல் செய்திகளைக் கூறுவதுபோல் அமைந்த செய்யுட்கள் சில, இந்த நூலில் அமைந்துள்ளன. இதுவும் இந்நூலுக்குரிய தனிச்சிறப்பாகும். இத்தகைய பாடல்கள், சித்தர் பாடல்களிலும் சிறுபான்மை மருத்துவம்பற்றிய பழைய பாடல்களிலும் காணப்படுதல், குறிப்பிடத்தக்கது. எனவே, திருமூலர், சித்தியிலும் மருத்துவப் பயிற்சியிலும் வல்லவர் என்று அவரைப்பற்றிக் கூறப்படும் வரலாற்றிற்குத் திருமந்திரத்தில் காணப்படும் அகச் சான்றுகளுடன், இப்பாடல்களின் அமைப்பும் துணைபுரிகின்றது.

திருமந்திரமே சிவகதிக்கு வித்து எனவும், திருமந்திரமே சிவமெனவும் ஒரு தனிப் பாடல் கூறுகின்றது.

" திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம் - அருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றும்அடியார்
சிந்திக்கும் தற்பரமே தான்." [தமக்குச்

இப்பாடலில், திருமந்திரமே சிவமென்று கூறியிருத்தல் நோக்கத்தக்கது. சிவபெருமான் மந்திர வடிவினன் ஆவன்; அவனை அடையும் நெறிகளைக் கூறும் மந்திரநூல், திருமந்திரம் ஆகும். ஆதலால், சிவகதிக்கு வித்தாகும் திருமந்திர நூலினைச் சிவமென்று பாராட்டினர்.

தேவாரம் முதலிய திருமுறைகள், இறைவனைத் தொழக்கூடிய பக்திப் பாடல்களைக் கொண்ட பனுவல்கள் ஆகும். இப்பாடல்களில், இறைவனைத் துதித்தலும் அவனை வேண்டுதலும் பெரும்பாலும் காணப்படும். ஆனால், பத்தாம் திருமுறையாக அமைந்த திருமந்திர நூலில், இறைவனைப் பாடிப் பரவுதலுடன் உயிர்களின் நல்வாழ்விற்கு இன்றியமையாத உடம்பை வளர்த்தல் முதலிய பிற செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இம்முறையில் திருமந்திரம், ஏனைய திருமுறைகளிலிருந்து வேறுபட்டு விளங்குகின்றது.

## உடல் இறைவனின் உறைவிடம்

ஆன்றோர்கள், உடலினை வெறுக்கவில்லை. உடலினை இறைவனின் உறைவிடமாகக் கருதினார்கள். உடலினைக்காக்கவேண்டும் என விரும்பினார்கள். இக்கொள்கை, காயசித்தி எனப்படும். திருமூலர் கொள்கைகளுள் இக்காயசித்தியும் ஒன்றாகும்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.
(724)

இப்பாடல் திருமூலர் வாக்கு. இதனால், சிவம் மணக்கின்ற சீவனை வளர்த்தற்கு, உடம்பை வளர்த்தல்வேண்டும் என்பது புலனாகும். 'சுவரை வைத்துத்தான் சித்திரம் வரையவேண்டும்' என்னும் பழமொழியும் இக்கருத்தினை விளக்குகின்றது என்னலாம்.

திருமூலர், மனித உடலை மாதேவன் குடிகொள்ளும் ஆலயமாக மதிப்பவர்.

நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்றுஈயின்
படமாடும் கோயில் பகவற்க தாமே (1857)

என்னும் அவர் வாக்கு, இதனைப் புலப்படுத்தும். உள்ளப்பூசை செய்தல் வேண்டும் என்று திருமூலர் கூறும்போது, இக்கருத்தினைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காள மணிவிளக்கே.
(1823)

இப்பாடல், உள்ளப்பூசையைக் குறிக்கின்றது. இப்பாடலில், உள்ளத்தினைக் கருவறையாகவும், உடம்பினை ஆலயமாகவும், வாயினைக் கோபுரவாயிலாகவும், உயிரைச் சிவலிங்கமாகவும், ஐம்புலனைப் பெரிய மணிவிளக்காகவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கொண்டு, உட்பூசை செய்தல் வேண்டும் என்றும் கூறுகின்றார்.

திருமூலர், உடல்வளர்ச்சிபற்றிக் கூறுவதன் நோக்கம், உயிர், உடலில் நீண்டகாலம் வாழ்ந்து, இறைவனை முற்றத் துதித்துப் பக்குவப்பட்ட பின், பிறவிப் பிணியை அறுத்துப் பேரின்பவாழ்வு பெறுதல்வேண்டும் என்பதேயாகும். இக்கருத்துப்பற்றியே, இதனைக் குறிப்பிட்டுத் திருமந்திரத்தையும் திருமூலரையும் நம் ஆன்றோர்கள் பலவாறு பாராட்டியுள்ளார். எடுத்துக்காட்டுக்களாக,

" திருமூலர் மாலையெனும் தெப்பத்தைப் பற்றிக்
கருவேலை யைக்கடப்போம் காண் "
(சித்தாந்ததரிசனம்)

" திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்குக்
கருமூலம் இல்லையே காண் " (தனிப்பாடல்)

என்னும் பாடல்களைக் காணலாம்.

## திருமூலர் கொள்கை

'அன்பே சிவம்' என்பது, திருமூலர் கொள்கையாகும். இந்த அன்புக்கொள்கையில், திருமூலர் உறுதிகொண்டவர் ஆதலால், 'யான் பெற்ற இன்பம், பெறுக இவ் வையகம்' என விரும்பினர். திருமூலரின் இப்பரந்த மனப்பான்மை, இன்று பேசக் கூடிய எல்லோரும் இன்புற்றிருத்தல்வேண்டும் என்ற பெருங்கருத்தினை நினைப்பூட்டுகின்றது. இவர் கூறும் இந்த இன்பம், இறைவனை வழிபடுதலால் உண்டாகின்ற பேரின்பம் ஆகும்.

திருமூலர், இவ்வாறு பரந்த நோக்கம் உடையவராக இருந்தாலும், இவரது உள்ளம், சிவபிரானையே முழுமுதற் கடவுளாக எண்ணியது. இதனை,

சிவனோடு ஒக்கும் தெய்வம்
தேடினும் இல்லை (5)

என்று இவர் அழுத்தமாகக் கூறியிருத்தலால் அறியலாம்.

## கடவுளர்பெயர் கூறப்படுமிடங்கள்

திருமந்திரத்தில், சிவன் என்னும் பெயரேயன்றி, அவனுடைய பிறபெயர்கள் சிலவும், வேறு கடவுளர்களின் பெயர்கள் சிலவும் கூறப்பட்டுள்ளன.

வான், காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகிய ஐம்பெரும் பூதங்களுக்கும், சதாசிவன், ஈசன், அரன், மால், பிரமன் ஆகிய ஐவரும் உரிய தெய்வங்கள் என்பர். இச் சைவசித்தாந்தக் கொள்கை, திருமந்திரத்தில் (400) காணப்படுகின்றது.

பிறிதோரிடத்தில், சிவபெருமான், முருகப்பெருமானை நோக்கி, நீ போய்த் தேவர்களின் பகைவரான அவுணரைக் கொல்லுவாயாக என்றார் என்று கூறப்பட்டுள்ளது. இதனால், முருகன், அவுணரைக் கொன்ற வரலாறு விளங்குகிறது. இச்செய்தியினை,

அம்பவள மேனி அறுமுகன் போய்அவர்
தம்பகை கொல்என்ற தற்பரன் தானே (520)

என்னும் பாடற்பகுதியால் அறியலாம்.

வயிரவக் கடவுளைப்பற்றிய பாடல் ஒன்றில், வயிரவக் கடவுளின் உருவம் குறிக்கப் பட்டுள்ளது. வயிரவக்கடவுள் ஆறு கைகளை உடையவர்; உள்ளத்தில் இருத்தி வழிபடத் தக்க மெய்யினையுடையவர்; சிவந்த மேனியர் என்று திருமூலர் கூறியுள்ளார். இதனை,

கையவை ஆறும் கருத்துற நோக்கிடும்
மெய்யதுசெம்மை விளங்கிடும்வயிரவன் (1294)

என்னும் பாடற்பகுதி உணர்த்துகின்றது.

ஆங்கு வடமேற்கில்
ஐயனார் கோட்டத்தில் (999)

கோவினுள் ஆடிடும் கூத்தப் பிரானே (2757)

அளியார் சிவகாமி ஆகும் சமயக்
களியார் பரமும் (2726)

காளியோ டாடிக் கனகா சலத்தாடி (2746)

என்னும் பகுதிகளில் ஐயனார், கூத்தப் பிரான், சிவகாமி, காளி ஆகிய கடவுளர் பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றுள், இறைவியினுடைய சிவகாமி என்ற பெயர், தேவாரப் பாடல்களில் காணப்படவில்லை. மேலும் 'காளியோ டாடிக் கனகா சலத்தாடி' என்னும் அடியில், நடராசப்பெருமானுடன், காளி நடனம் ஆடிய வரலாறு கூறப்படுகின்றது. இவ்வடியில், 'கனகா சலத்தாடி' என்பது, எதனைக் குறிக்கின்றது என்பது, தெளிவாகத் தெரியவில்லை. சிலர் கனகா சலத்தாடி என்பதற்கு, மலையில் ஆடி என்றும், வேறு சிலர், கனகசபையில் ஆடி என்றும் பொருள் கூறுகின்றனர்.

மேற்கூறியவற்றிலிருந்து, திருமந்திரத்தில் சதாசிவன், ஈசன், அரன், மால், பிரமன், முருகன், வயிரவன், ஐயனார், கூத்தப்பிரான், சிவகாமி, காளி ஆகிய பெயர்கள் காணப் படுதலை அறியலாகும். திருமந்திரத்திலே காணப்படும் இத்தகைய கடவுளர் பெயர்களை, நம் அறிஞர்கள் ஆராய்தல்வேண்டும். ஆராய்ந்தால், அக்காலத்தில் அக்கடவுளரைப்பற்றி மக்கள் கொண்டிருந்த கருத்துக்கள் புலப்படும்.

## தலக் குறிப்புக்கள்

திருமந்திரத்தில் காணப்படும் கடவுளர் திருப்பெயர்களைத் தொகுத்துப் பார்த்தல் போல, திருமந்திரத்தில் காணப்படுகின்ற திருத்தலங்களைப்பற்றி ஆராய்தலும் வேண்டும். திருமந்திரத்தில் திருவாவடுதுறை, திருக்கடவூர், திருக்கொறுக்கை, சிதம்பரம் முதலிய தலப்பெயர்கள் உள்ளன. இவற்றுள் சிதம்பரம் என்னும் பெயர், தேவாரப் பாடல்களில் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. தேவாரப் பாடல்களில், சிதம்பரத்தின் பெயராகத் தில்லை என்பதே உள்ளது. திருமந்திரத்தில் சிதம்பரம், தில்லை என்னும் இரண்டு பெயர்களும் காணப்படுகின்றன.

இத்தலங்களைப்பற்றிக் கூறும்பொழுது, சிறப்பாகச் சில செய்திகளைத் திருமூலர் சுட்டியுள்ளார்.

சிதம்பரத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில்,

எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம் (2722)

என்று கூறுகின்றார். சிதம்பரத்தில் இறைவன், நடனம் ஆடிக்கொண்டிருக்கின்றான்; ஆதலால் உலகம் முழுதும் இயங்கிக்கொண்டிருக்கின்றது. எனவே இறைவனுடைய அசைவு, உலகம் முழுதும் பரவியிருக்கிறது என்னலாம்; இவ்வாறு உலகு அனைத்தும் இறைவனது நடனம் நிறைந்திருத்தலால், உலகு எங்கும் சிதம்பரமாக உள்ளதென்று கூறினார். இதனால், உலகம் முழுவதையும் கூத்தப்பெருமான் நடனமிடுகின்ற சிதம்பரமாகக் கண்ட திருமூலரின் பேருள்ளம் புலனாகும்.

திருக்கொறுக்கையைப்பற்றித் திருமூலர்,

அருந்தவ யோகம் கொறுக்கை அமர்ந்ததே (346)

என்று கூறுகின்றார்

திருவாவடுதுறையைப் பற்றிக் கூறும் பொழுது,

... சிவன் ஆவடு தண்டுறை
சீருடையாள்பதம் சேர்ந்திருந்தேனே (78)

என்றும்,

சேர்ந்திருந்தேன்சிவன் ஆவடுதண்டுறை (79)

என்றும் திருமூலர் கூறியிருப்பது, திருமூலர் வரலாற்றினைக் காட்டும் அகச்சான்றுகள் ஆகும்.

இவ்வாறே திருமந்திரத்திலுள்ள தலங்களைப்பற்றி ஆராய்ந்தால், பல உண்மைகள் புலனாகும்.

## சைவசித்தாந்தக் கருத்துக்கள்

திருமந்திரத்தில், சைவ சித்தாந்தத்தின் மூலக் கருத்துக்கள் பல, காணப்படுகின்றன. பதி, பசு, பாசம் என்பன, முப்பொருளாகும். இவை, சைவசமயத்தார் கொண்ட முப்பொருள்கள். இந்த முப்பொருள்களும் அநாதி; நித்தியம் என்பது; சைவசமயத்தின் முடிந்த முடிபு. இதனைத் திருமூலர், அழகாகத் திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்று அணுகாப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம்நில் லாவே. (115)

இப்பாடலில், பதி, பசு பாசம் என்பன அநாதி என்று கூறியுள்ளார். மேலும் பசுவின் பாசம், பதியினைச்சென்று அணுகாது என்றும், பதியானது பசுவினை அணுகினால் பசுவின் பாசம் நில்லாது என்றும் கூறியுள்ளார். இதனால் பதி, பசு, பாசங்களின் இலக்கணம் கூறப்பட்டிருத்தல் புலனாம்.

பிறிதோரிடத்தில், ஆணவத்திற்கு முளையையும், மாயைக்குத் தவிட்டையும், கன்மத்திற்கு உமியையும் உவமையாகக் கூறியுள்ளார். இந்த உவமையால், மும்மலத்தின் இயல்பு புலனாகும். இந்த உவமை சைவப் பெருமக்கள் அனைவரும் கூறும் உவமையாகும். ஆனால், இதே பாட்டில், ஆன்மாவுக்கு அரிசியை உவமையாகக் கூறியுள்ளார்; இவ்வுவமை, பிறர் ஒருவரும் சொல்லாத உவமையாகும். இவ்வாறு, அரிய சைவசித்தாந்தக் கருத்துக்களை உவமை வாயிலாக விளக்கியிருப்பது பாராட்டுதற்கு உரியது.

ஆணவம் மாயையும் கன்மமும் ஆம்மலம்
காண முளையும் தவிடுஉமி; ஆன்மாவும்

தாணுவை ஒவ்வாமல் தண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. (2192)

(ஆணவமும் மாயையும் கன்மமுமாகிய மலத்திற்கு உவமை காணும்போது முளை, தவிடு, உமியாம்; ஆன்மாவும் கடவுளுக்கு ஒப்பாகாமல் அரிசியாய் நிற்கும்; ஆதலால், பாசத்தினின்றும் நீங்கிக் கடவுளைக் கருத்தில் இருத்தி வழிபடுவாய். தண்டுலம் - அரிசி)

## அரிய கருத்து

திருமூலர் மண், பெண், பொன் முதலிய வற்றின்மீது பற்று வைத்துக்கொண்டு, கடவுளிடத்து அன்பு செலுத்துதல் கூடாது என்பதனை நன்கு வற்புறுத்தியுள்ளார். ஆசை பிறப்புக்கு வித்தாகும்.

"அவா என்ப எல்லா உயிர்க்கும்எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து" (குறள் 361)

என்னும் திருவள்ளுவர்கூற்றும் இதனை வலி யுறுத்தும். ஆதலால், ஆசையே கூடாது; ஆசை உண்டாக உண்டாகத் துன்பமே ஏற்படும்; ஆசையினின்றும் விலக விலக, ஆனந்தம் ஏற்படும் என்று திருமூலர் கூறி யுள்ளார். இதுவே புத்தமதக்கொள்கையும் ஆகும். திருவள்ளுவரும்,

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" (குறள் 341)

என்று கூறியிருத்தல் காணலாம்.

இக்கருத்துக்கள் அமைந்த திருமூலரின் பாடலைக் காண்போம்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே. (2615)

இப்பாடல், மிக எளிமையாக அமைந் துள்ளது. ஆனால், இப்பாட்ல் உணர்த்தும் கருத்து, மிகப் பெரியது. இப்பாடலுடன்,

"கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்"

என்னும் சேக்கிழார் வாக்கினை ஒப்பிட்டு நோக்கலாம்.

ஆசை ஒழியவேண்டும் என்று கூறும் இவர், ஆசை ஒழிந்த இடமே வேதாந்தம் என்று குறிப்பிட்டுள்ளார். வேதாந்திகள், 'நான் பிரமம்' என்பர். இந்த ஆசையும் கூடாது என்பது, திருமூலரின் கொள்கை. ஆதலால்,

வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம் (229)

என்று கூறியுள்ளார்.

## திருமந்திரமும் பிறநூல்களும்

திருமூலர், தமிழ்மொழியில் வல்லவர்; இவரே ஒரு பாடலில்,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே (81)

என்று கூறியுள்ளார். இதனால், திருமூலரின் தமிழ்ப்பற்றும், தமிழ் அறிவும் புலனாகும். தமிழ்வல்ல இவர், முன்னோர் நூலின் மொழி பொருளைப் பொன்னேபோல் போற்றியுள் ளார். இவ்வாறே, இவருக்குப் பின்னர் வந் தோரும் இவரைப் போற்றினர். இதனைக் காண்போம்.

## திருமந்திரமும் திருக்குறளும்

திருமந்திரத்தில், திருக்குறளின் கருத் துக்கள் பல அமைந்துள்ளன. எடுத்துக் காட்டுக்களாக,

"சுவையொளி ஊறு ஓசை
நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு"

என்னும் (27) திருக்குறட்கருத்து,

ஆமே சுவையொளி
ஊறுஓசை கண்டவள் (1350)

எனத் திருமந்திரத்தில் உள்ளது.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்"

என்னும் (360) திருக்குறட்கருத்து,

காமம் வெகுளி மயக்கம் இவைகடிந்து (2436)

எனத் திருமந்திரத்தில் அமைந்திருத்தல் காணலாம்.

" ஒருமையுள் ஆமைபோல்
ஐந்து அடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

என்னும் (126) திருக்குறட்கருத்து,

ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந்து அடக்கி
இருமையும் கேட்டிருந்தார் புரையற்றே (133)

எனத் திருமந்திரத்தில் உள்ளது.

## திருமந்திரமும், புறநானூறும்

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்றது எல்லாம் வனைவன்
குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்[டில்]
அசைவில் உலகம் அதுஇது வாமே

என்னும் (443) திருமந்திரப்பாடல்,

"வேட்கோச் சிறுஅர் தேர்க்கால் வைத்த
பசுமட் குரூஉத்திரள் போலக்
கொண்ட குடுமித்துஇத் தண்பணை நாடே"

என்னும் புறநானூற்றுச்செய்யுள்(32)பகுதியுடன் கருத்துவகையால் ஒத்துள்ளது.

## திருமந்திரமும், திருமுறைகளும்

மேலும், திருமந்திரக் கருத்துக்கள் பல, திருமுறைகளில் உள்ளன. எடுத்துக்காட்டுக்களாக,

தன்னைஒப் பாய்ஒன்றும் இல்லாத்தலைமகன்

என்னும் திருமந்திரச் செய்யுட்பகுதி (7) திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

" மற்றாரும் தன்னொப்பார் இல்லா தானை "

என (6-1-2) அமைந்திருத்தலும்,

வழித்துணையாய்மருந் தாயிருந்தார்முன் (297)

என்னும் திருமந்திரச் செய்யுள் ஒன்றின் அடி ஏழாம் திருமுறையில்,

"வான நாடனே வழித்துணை மருந்தே"

என(7-70-9)அமைந்திருத்தலும்காணலாம்.

## திருமந்திரமும் நாலடியாரும்

திருமூலர், யாக்கை நிலையாமையைப் பற்றிக் குறிப்பிடும்போது பின்வருமாறு ஒரு பாடலில் கூறியுள்ளார்.

காக்கை கவரிலென்
கண்டோர் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென்
பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று
தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப்
போனஇக் கூட்டையே. (167)

இப்பாடல், உயிர் பிரிந்த உடலின் நிலையினைப் பற்றிக் கூறுகின்றது, உயிர் பிரிந்த பின் உடலினைக் காக்கை கவர்ந்தால் என்ன? கண்டோர் இகழ்ந்தால் என்ன? பால் வார்த்தால் என்ன? பலர் புகழ்ந்தால் என்ன? என்று கேள்விமேல் கேள்விகேட்டு உடலின் நிலையாமையை உணர்த்துகின்றார். இப்பாடலின் சொல்லும் பொருளும் பெரும்பாலும் ஒத்தனவாக அமைந்துள்ள பாடல் ஒன்று நாலடியாரில் காணப்படுகின்றது. அப்பாடல் பின்வருமாறு :

நார்த்தொடுத்து ஈர்க்கிலென்
நன்றாய்ந்து அடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென்
பல்லோர் பழிக்கிலென்
தோற்பையுள் நின்று
தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால். (யாக்கை. 6)

இந்த நாலடியார்ப் பாடலின் முதலடி திருமந்திரப் பாடலின் முதல் அடியைப் போல இல்லாமல் வேறுபட்டு உள்ளது. இரண்டாவது அடியில் திருமந்திரத்தில் 'பாற்றுளி' என இருப்பது நாலடியார் பாடலில் ' பார்த்துழி ' எனவும், திருமந்திரத்தில் ' பழிச்சிலென்' என இருப்பது நாலடியார்ப் பாடலில் 'பழிக்கிலென்' எனவும் உள்ளன. பாற்றுழி என்பது பார்த்துழி எனவும், பழிச்சிலென் என்பது பழிக்கிலென் எனவும் உள்ள இவ்வேறுபாடுகள் ஏடு எழுதுவோரால் உண்டாகக் கூடியனவே. ஆயினும், திருமந்திரத்தில் அமைந்த பாடலே பொருட் சிறப்புள்ளதாகக் காணப்படுகின்றது.

திருமந்திரப் பாடலின் முதல் அடி 'காக்கை கவரில் என் கண்டோர் பழிக்கில் என்' என உடலை இழிவுபடுத்துவதையும், இரண்டாம் அடி 'பால் தூளி பெய்யில் என், பல்லோர் பழிச்சில் என்' என உடலைப் பாராட்டும் உயர்வையும் காட்டுகின்றன.

## திருமந்திரமும் கம்பராமாயணமும்

திருமந்திரத்தில் துறவு என்னும் தலைப்பில் அமைந்த பாடல் ஒன்றுடன் கம்பராமாயணப் பாடல் ஒன்று பெரிதும் ஒத்துளது. அத்திருமந்திரப் பாடல்,

உழவன் உழஉழ வானம் வழங்க
உழவன் உழவினில் பூத்த குவளை
உழவன் உழத்தியர் கண்ஒக்கும் என்றிட்டு
உழவன் அதனை உழவொழிந் தானே (1619)

என்பதாம். இதனுடன் ஒத்த பாடல் ஒன்று,

"பண்கள்வாய் மிழற்றும் இன்சொற்
கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகால் முகம்வாய் ஒக்கும்
களையலால் களையி லாமை
உண்கண்வார் கடைவாய் மள்ளர்
களைகலாது உலாவி நிற்பர்
பெண்கள்பால் வைத்த நேயம்
பிழைப்பரோ சிறியோர் பெற்றால்"

எனக் கம்பராமாயணத்தில் (பால. நாட்டு 10) இருத்தல் காணலாம்.

## திருமந்திரமும் காஞ்சிப்புராணமும்

ஒன்றது பேரூர் வழியாறு அதற்குஉள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதுஇது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயைஒத் தார்களே.

என்னும் (1558) திருமந்திரப் பாடலுடன்,

"விலகிவீழ் அருவித் தாரை
வேறுவே றாக ஓடிக்
குலநதிப் பாலி வைப்பின்
ஏகமாய்க் கூடும் தோற்றம்
அலகில்பல் வழியும் மூதூர்
அணிமையில் ஒன்று மாறும்
பலபல மதமும் ஈற்றின்
ஒருவழிப் படலும் போலும்"

என்னும் காஞ்சிப்புராணச் செய்யுள் (திருநாட்டுப். 16) ஒத்துள்ளது.

இவ்வாறே திருமந்திரச் செய்யுட்களிலும் பிறநூல்களின் செய்யுட்களிலும் உள்ள ஒப்புமைப் பகுதிகளைக் கண்டு ஆராய்தல் வேண்டும்.

## வழக்குச்சொல் ஆட்சி

திருமந்திரம் யோக ஞானநூல் ஆதலால், இதன்கண் அரிய சொற்கள் பல காணப்படுதல் இயல்பே. இவ்வரிய சொற்களே அன்றி, வழக்கில் உள்ள சொற்கள் சிலவும் திருமந்திரத்தில் அமைந்துள்ளன. இச்சொற்களைப் பழைய இலக்கியங்களில் பெரும்பாலும் காணுதல் இயலாது.

மல்லாக்கத் தள்ளி
மறித்து வைப்பாரே. (199)

இங்கு, மல்லாத்தல் என்னும் சொல் வந்துள்ளது. மல்லாக்கத் தள்ளுதலாவது முகம் மேல்நோக்கிக் கிடக்கும்படி தள்ளுதல்.

வட்டிகொண்டு ஈட்டியே
மண்ணில் முகந்திடும். (260)

இந்த அடியில் வட்டி என்னும் சொல் வந்துள்ளது.

பட்டிப் பதகர் பயன்அறி யாரே. (260)

இவ்விடத்தில் பட்டிப் பதகர் என்னும் சொல் வந்துள்ளது. பட்டிப் பதகராவார், படிப் பயல்கள் (கட்டுப்பாடின்றித் திரிபவர்) ஆவர்.

மண்டலத் துள்ளே
மனஒட்டி யாணத்தை. (818)

இப்பகுதியில் ஒட்டியாணம் என்னும் சொல் வந்துள்ளது. ஒட்டியாணம் என்பது இங்கு அணிகலன்களுள் ஒன்று அன்று; இந்தச் சொல் யோகப்பட்டையினைக் குறிக்க வந்துள்ளது.

மைந்தன் இவனென்று
மாட்டிக் கொள்ளீரே. (1026)

இங்கு மாட்டிக்கொள்ளுதல் என்னும் சொல் வந்துள்ளது. மாட்டிக்கொள்ளுதல்-அகப்பட்டுக்கொள்ளுதல்.

ஆராலும் என்னை
அமட்டவொண் ணாதுஇனி. (2960)

இவ்விடத்தில், அமட்டுதல் என்னும் சொல் வந்துள்ளது. அமட்டுதல் - அதட்டி அச்சுறுத்துதல். உரத்துப் பேசிப் பயமுறுத்துதல்.

இத்தகைய வழக்குச் சொற்கள் பல இந்நூலில் உள்ளன. இவை போன்ற சொற்களைத் தொகுத்து ஆராயவேண்டும்.

## பொருத்தமான எளிய உவமைகள்

மிகப்பொருத்தமான, எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளுதற்கு உரிய உவமைகளைத் திருமந்திரத்தில் இடையிடையே நாம் கண்டு மகிழ்ச்சி அடையலாம். இத்தகைய உவமைகள், ஆசிரியர் கூற நினைத்த கருத்துக்களைக் கற்போர் உள்ளத்தில் பதிய வைத்தற்கு உதவி புரிவனவாகும். எடுத்துக் காட்டுக்களாக இரண்டுவமைகளை இங்கே காண்போம்.

உயிரின் உள்ளே இறைவன் இருக்கின்றான் என்பதனை விளக்க வந்த திருமூலர்,

பூவினில் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக்கு உள்ளே சிவமணம் பூத்தது (1449)

என்று கூறியுள்ளார்.

பூவினில் மணம் நிறைந்திருக்கின்றது; ஆயினும், அது நம் கண்ணுக்குப் புலப்படாமல் உள்ளது. அதுபோல, உயிரிடத்துச் சிவம்கலந்து மிக நுண்ணியதாக உள்ளது என்பது இதன் கருத்து.

கறுத்த இரும்பே கனகமது ஆனால்
மறுத்துஇரும்பு ஆகா; வகையது போல
குறித்தஅப் போதே குருவருள் பெற்றால்
மறித்துப்பிறவியில் வந்துஅணு காவே.(2051)

(குறித்த அப்போதே என்பதற்குத் திருவருட்பதிவு பெற்ற அப்போதே என்பது பொருள்)

இரும்பு தங்கமானால் மீண்டும் இரும்பு ஆகாது ; அதுபோலத் திருவருட்பதிவு பெற்ற காலத்தில் குருவருள் பெற்றால், மீண்டும் பிறவி உண்டாகாது என்பது இதன் கருத்து.

## முடிப்புரை

இறைவனைப் பூவும் நீரும் கொண்டு ஏத்தினால் இறைவன் அருள்புரிவான் என்று திருமூலர் கூறியுள்ளார்.

புண்ணியம் செய்வார்க்குப்
பூஉண்டு நீர்உண்டு
அண்ணல் அதுகண்டு
அருள்புரியா நிற்கும். (1828)

இப்பாடல் திருமூலரின் உள்ளக் கருத்தினை நன்கு விளக்குவதாகும்.

எல்லோரும் பின்பற்றுதற்கு உரிய இத்தகைய கேடில் விழுச்செல்வக் கருத்துக்கள் பலவற்றிற்கு உறைவிடமாகிய இந்நூலினை நாம் அனைவரும் கற்றுத் தெளிந்து கடைப்பிடிப்போமாக எனக் கூறி, இம்மாநாட்டினை நான் மகிழ்வுடன் தொடங்கிவைக்கிறேன்.

தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றுங்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணிய மாமே.

— திருமூலர்.

**தலைமையுரை:**

பேராசிரியர்

## Dr. திரு. T. M. P. மகாதேவன் அவர்கள், M. A., Ph. D.,

சென்னைப்பல்கலைக்கழகம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கும், முனிபுங்கவர்களுக்கும், மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் வணக்கம்.

பல அல்லல்களிலே அவதிப்படும் ஒரு சென்னை வாசிக்கு இந்தப் புனிதமான சூழ்நிலை கிடைப்பது பூர்வ புண்ணியவசத்தினுல்தான் முடியும் என்று கருதுகின்றேன். பெரிய மகான்கள் தங்கித் தவம்செய்து அருளுரைகள் நடத்திய பிரதேசம் இது. சிவபோகத்தை மனமார அனுபவித்து, அதை மக்களோடு பகிர்ந்துகொள்பவர் வாழுகிற பிரதேசம். ஆகையினுலே இங்கு வருவதே ஒரு பாக்கியம் என்று நான் எண்ணுகின்றேன். அதிலும் திருமூலரைப்பற்றியும் திருமூலர் அருளிய திருமந்திரத்தைப்பற்றியும் சிந்திப்பதற்கு ஒரு அவகாசம் பெறுவது என்ருல் இது சாமானியமாக ஒருவருக்குக் கிடைக்காது. இந்தப் பாக்கியங்களை நான் பெறுவது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய திருவருளாலேதான் என்று எண்ணுகின்றேன்.

நாம் தினமும் ஒவ்வொரு மணியும், ஒவ்வொரு நிமிஷமும் எத்தனையோ சொற்களைப் பேசுகின்ருேம். நம்முள் அதிகமாகப் பேசாதவர்கள்கூட ஒரு வருஷத்திலே எவ்வளவு சொற்கள் பேசுகின்ருேம் என்று கணக்கெடுத்துப் பார்த்தால் நமக்கே ஒரு ஆச்சரியம் உண்டாகும். இத்துணைச்சொற்களிலே எவ்வளவு அர்த்தம் உடையது, எவ்வளவு பிறருக்குப் பிரயோஜனம் செய்யக் கூடியது, எவ்வளவு மறுவருஷத்திலே நம்முடைய நினைவில் இருக்கும் என்று எண்ணிப்பார்த்தால் அதைவிட வியப்பு நமக்கு ஏற்படும். தினந்தோறும் செய்திப் பத்திரிகைகள் அநேகம் வருகின்றன. அவைகளினுடைய எண்ணிக்கை தினமும் வளர்ந்து வருகின்றது. இவற்றைக் காசு கொடுத்து வாங்குகின்ருேம். ஒவ்வொரு தாளிலும் பல்லாயிரக்கணக்கான சொற்கள் அச்சிடப்படுகின்றன. இவற்றைப் பூராவும் வாசிப்பது என்ருல் இரண்டு மூன்று நாட்கள் ஆகும். ஆனுல் நாம் எவ்வளவு வார்த்தைகள் தினச் செய்தித் தாள்களிலே வாசிக்கிருேம்; மனத்திலே வைத்துக்கொள்ளுகிருேம். நமக்கு எந்த வகையிலே பிரயோஜனப்படுகின்றன என்று யோசித்துப்பார்த்தால், நாம் அர்த்தமற்ற பிரயோஜனமில்லாத சப்த உலகத்திலே வாழ்கின்ருேம் என்பது நமக்கு நன்ருகப் புலப்படும். இந்தநிலையிலே திருமூலர் திருமந்திரத்தைப்பற்றிச்சிந்திக்கவேண்டும்.

மூவாயிரம் வருஷங்கள் ஞானநிஷ்டையிலிருந்து வருஷத்திற்கு ஒரு திருப்பாசுரமாக மூவாயிரம் பாசுரங்கள் அடங்கிய திருமந்திர நூலை அருளினுர்என்ருல் சொற்களினுடைய கௌரவம் எப்படி இருக்க வேண்டும். நினையாது, சிந்திக்காது பல சொற்களைச் சொல்லுவதினுலே பிரயோஜனம் இல்லை. ஞானநிஷ்டையிருந்து பலகாலம் அனுபூதி பெற்று வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத நிலை எதுவோ அதை மக்கள் அடைந்து உய்யவேண்டும் என்ற கருணையோடு சில வார்த்தைகளிலே மகான்கள் நமக்கு எடுத்துரைத்திருக்கின்ருர்கள். மூவாயிரம் வருஷங்கள் ஞான நிஷ்டையிருந்து மூவாயிரம் பாசுரங்கள் நமக்கு அருளினுர் என்ருல் இது தான் தாத்பர்யம் என்று எனக்குத் தோன்றுகிறது. பலபல பேச்சுக்கள், பலபல வார்த்தைகள், கணக்கில் அடங்காத சொற்கள் இவற்றினுலே மனிதன் பேற்றை அடையமாட்டான். ஜீவன் வீடுபெற வேண்டுமானுல் வெளியிலிருந்து தன்னை இழுத்து, உள்முகமாக அவன் ஆகவேண்டும். இந்த உள்முகத்தை நமக்குக் கற்பிப்பதுதான் திருமூலர் போன்ற மகான்களின் உத்தேசம் என்று எனக்குத் தோன்றுகிறது.

உபநிஷதங்களிலே ஒரு மந்திரம் வருகிறது. நம்மைப் படைத்த ஈசுவரன் நம்முடைய புலன்களை எல்லாம் வெளிப்பார்வை உடையவைகளாகச் சிருஷ்டி செய்தான். ஆகையால்தான் நாம் வெளி விஷயங்களை நாடி வெளிப்போந்து நம்மையே மறந்து விடுகின்றோம். பல மக்களுள் ஒருவன்தான் மகாத்மா; அவன் பேரானந்தத்தை அடைய வேண்டும் என்ற விருப்பம் உள்ளவனாய் வெளி விஷயங்களிலிருந்து புலன்களையெல்லாம் இழுத்து உள்நோக்கம் பெற்று, பரமாத்மாவைத் தரிசனம் செய்து, அமரனாக ஆகின்றான் என்று அது கூறுகிறது.

நம்முடைய கண்களெல்லாம் சிலகாலமாவது உள்ளே திருப்பப்படவேண்டும் என்பதுதான் திருமூலருடைய நோக்கம் என்று நாம் அறியவேண்டும். பல வார்த்தைகள் பேசும்போது, நம்முடைய மனது நானாவிதமாகப் பேதித்துச் சிதறிப் போகின்றது. நாம் உள்ளே திருப்பும்பொழுதுதான் நம்முடைய ஞானம் பகவானிடத்தில் இருக்க முடியும். இந்த ஒரு பேருபகாரத்தைத்தான் மகா கருணையினாலே நம்முடைய திருமூலர் இப்புண்ணிய க்ஷேத்திரத்திலே செய்தார். அதன் பயனாகத்தான் நாம் இன்றும் அவரைப்பற்றிச் சிந்திக்கவும், அவர் அருளிய திருமந்திரத்தைப்பற்றி ஆராயவும் நமக்கு அவகாசம் கிடைத்துவருகிறது.

எனக்கு முன் பேசிய நண்பர் அவர்கள் சொன்னார்கள். 'பதினொரு வருஷங்களாகத் திருமந்திர மாநாடு நடைபெற்றுவருகிறது. ஒவ்வொரு பகுதியாகப் பல அறிஞர்கள் பேசிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதே போல வரப்போகும் வருஷங்களிலே இப்பகுதிகளெல்லாம் முடிந்த பிறகுகூட ஒவ்வொரு பாட்டுக்குமே ஒவ்வொரு வருஷம் அர்த்தத்தைக் கண்டு பிடித்தாலுங்கூடத் தீராது' என்று சொன்னார்கள். இதுதான், திருமூலர் மூவாயிரம் வருஷங்கள் மூவாயிரம் பாசுரங்கள் பாடினார் என்பதற்குப் பொருள் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு வருஷத்திலே ஒரு பாசுரம் பாடினார் என்றால், அந்தப் பாசுரத்தை நாம்தெரிந்து கொண்டு அதனுடைய அனுபவத்தைப் பெறுவது என்றால் ஒரு பாசுரத்திற்கு ஒரு வருஷம் போதாது; பல வருஷங்கள் வேண்டியிருக்கும். அப்பேர்ப்பட்ட மகாத்மாவின் திரு அருள் விலாசத்தை நாம் சிந்திக்கவும், அதைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பளித்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு மற்றொரு முறை என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று எடுத்துக்கொண்ட தலைப்புகள், இரண்டாம் தந்திரத்தின் இறுதி இரண்டு பாகங்களும், மூன்றும் தந்திரத்தின் முதல் பாகமும். மூன்றும் தந்திரம் அட்டாங்க யோகத்தைப் பற்றிக் கூறுகின்றது. அட்டாங்கயோகம் நமக்குக் கூடவேண்டுமானால் நாம் முதலில் அடக்கத்தைப்பெறவேண்டும். சாந்தியைஅடையவேண்டும். பொறுமையை நாம் நன்றாக வளர்த்துக்கொள்ளவேண்டும். இரண்டாவதாக, பெரியவர்களை ஆச்ரயித்து, அவர்களுடைய அனுபவத்தை நாம் நன்கு சிரவணம் செய்யவேண்டும். அவர்களுடைய இணக்கத்தினால்தான் நாம் இந்த யோகசித்தியைப் பெறலாம். ஆகையினால், இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று இணக்கத்தைப் பெற்று அமைந்திருக்கின்றன என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

யோகம் என்பது நம்முடைய பாரத நாடு மக்களுலகத்திற்குத்தானமாக அளித்த ஒரு பொக்கிஷம். மற்ற நாடுகளிலே இந்த யோக வழியை நாம் வெகுவாகக் காண்பது இல்லை. யோகம் என்றாலே சேர்க்கை என்று பொருள். இறைவனோடு சேர்வது என்று அர்த்தம். இறைவனோடு சேர்வதற்கு வகுக்கப்பட்ட வழியும் யோகமே.

யோகமானது ஞானத்திற்குச் சிறந்த சாதனங்களுள் ஒன்று என்றும் பெரியோர்கள் கூறுவார்கள். அட்டாங்கயோகம் எட்டு படிகளாலே அமையப்பெற்ற யோகம். அது இறைவனை அடைய சாதனம் என்று நாம் கருதவேண்டுமேயொழிய மற்ற ஆசைகளை வைத்துக்கொண்டு வேறு அர்த்தங்களுக்காக, யோகப்பழக்கம் நாம் செய்தால் அதனாலே நமக்கு ஹானி ஏற்படுமேயொழிய மேன்மை கிட்டாது என்பதை நாம் மறக்கக்

கூடாது. ஏனென்றால் வெளிநாடுகளிலே இன்று இந்து மதம் - இந்திய தத்துவம் என்றால் என்ன என்று மக்கள் எண்ணுகிறார் கள் என்றால் அவர்களுக்கு அளிக்கப்படுகிற யோகந்தான் என்று நினைக்கிறார்கள்.

சமீப காலத்திலே ஆஸ்திரேலியா கண்டத்திலிருந்து ஒரு செய்தி நமக்கு வந்தது. ஆஸ்திரேலியாகண்டத்திலே ஸிட்னி என்ற ஒரு பட்டணம். அந்தப் பட்டணத்திலே யோகப்பயிற்சி பெற்று வருபவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகிறது என்பதுதான் அந்தச் செய்தி. இந்த ஒரு பட்டணத்திலே மூவாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் யோகப் பயிற்சி செய்துகொண்டு வருகின்றார்கள் என்றும், அவர்கள் சுமார் எட்டு வயது முதற்கொண்டு எண்பது வயது வரையில் உள்ள மக்கள் என்றும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப் போதிய ஆசிரியர்கள் இல்லை என்றும் அச்செய்தி சொல்லிற்று. இன்னும் ருசிகரமான செய்தி என்னவென்றால், இவ்வளவு யோகப்பயிற்சி பெறும் மக்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர்கள் ஸ்திரீகள் என்றும், அவர்கள் எதற்காக யோகப்பயிற்சி செய்கிறார்கள் என்றால் பொருள்வேண்டும், சரீரம் திடமாக இருக்க வேண்டும், யௌவனம் காக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு யோகத்தைப் பயில்கின்றார்கள் என்றும் அந்தச் செய்தி சொல்லிற்று. ஆனால் நம்முடைய முன்னோர்களில், இந்தக் காரணங்களுக்காக யோகம் பழக வேண்டும் என்று ஒருவர்கூட உபதேசம் செய்ததே கிடையாது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். யோகத்தை நாம் பயில்வோமானால் இவைகளெல்லாம் வரலாம்; வரும். ஆனாலும் இவற்றுக்காக யோகப்பயிற்சி அல்ல என்பதைச் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நம்முடைய சாஸ்திரம் கூறுகிறது.

உபநிஷதத்திலே, நம்முடைய சரீரத்தைப்பற்றிய மேன்மைகளெல்லாம் யோகப் பழக்கம் ஆரம்பித்த சில காலத்திலே வரும். ஆனால் இது அல்ல யோகத்தின் நோக்கம் என்று சொல்லப்படுகின்றது. ஆரோக்கியம் வரும்; சரீரம் பளபளக்கும்; நமது வர்ணம் மிகவும் சிறந்ததாக ஆகும்; குரல் இனிமையாகும்; கந்தம் வீசும். ஆனால் இவைகளெல்லாம் அல்ல, யோகப்பயிற்சியின் நோக்கங்கள் என்பதை உபநிஷதத்திலிருந்து நாம் அறிகின்றோம்.

ஆசனங்கள் பயிற்சிசெய்வது, மூச்சை அடக்குவது, இதுதான் யோகமென்று பலர் எண்ணுகின்றார்கள். இவை மாத்திரமல்ல யோகம் என்பதைக் காட்டுவதற்குத்தான் அட்டாங்கயோகம் என்று வரையறுத்தார்கள். ஆசனம், பிராணாயாமத்தோடு அநேகர் நின்றுவிடுகிறார்கள். யோகிராஜர்கள் என்றும் ஹடயோகிகள் என்றும் உலகத்திலே அவர்கள் விளங்குகின்றார்கள். ஆசனமும் பிராணாயாமமும் யோகத்திற்குக் கீழ்ப்படியிலே இருக்கின்ற அங்கங்களேதவிர, இவற்றைப் பயின்றால் யோகசித்தி பெறலாகும் என்று நாம் நினைக்கக்கூடாது. யோகத்தை அப்பியாசம் செய்தால் சித்திகள் பெறலாம். அநேகவிதமான சித்திகள் ஒருவருக்குவரும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால், இந்தச்சித்திகளிலே அவர்கள் மயங்கிப் பல யோக அப்பியாசிகள் தவறிவிடுகின்றார்கள் என்பதை நாம் பார்க்கின்றோம். ஆகாசத்திலிருந்து பொருள்களை வரவழைக்கிறார்கள். அவற்றைப் பக்தர்களுக்கு அளிக்கிறார்கள். இதுதான் சித்தி - யோகத்தின் கடைசிப்படி என்று பிரமிக்கும்படிச் செய்கின்றார்கள். இதுவுமல்ல யோகத்தின் முடிவு என்பதை நாம் மனத்திலே வைக்கவேண்டும்.

யோகசூத்திரத்திலே பதஞ்சலி முனிவர் சொல்லுகின்றார்கள். சமாதியிலே ஒருவன் முன்னேற வேண்டுமானால் ஒரு நிலையிலே இந்தச் சித்திகள் எல்லாமே தோன்றும். ஆனால், அவை யோகப்படியிலே இன்னும் மேல் ஏறுவதற்குத் தடைகளாக ஆகின்றன என்று கூறுகிறார்கள். அணிமாதி அஷ்ட சித்திகளில் ஏதேனும் ஒன்று பெற்றாலுங் கூட, பல யோகிகள், மகாயோகிகள் என்று கருதிக்கொண்டு இந்தச் சித்திகளையே உலகுக்குக் காட்டிவருகின்றார்கள். இது அல்ல யோகத்தின் நோக்கம் என்பதையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். நம் திருமூலர் என்னசெய்தார் என்பதை நாம் சிந்தையிலே வைத்துக்கொண்டால் இது விளங்கும்.

கயிலாயத்திலிருந்து வருகின்றபோதே அவர் சித்தராகவேதான் வந்தார். கயிலாயத்திலிருந்து பறந்து வருவதே ஒரு சித்து. இங்கு வந்து மூலன் உடலிலே புகுந்து கொண்டார். பரகாயப் பிரவேசம் என்பது மற்றொரு சித்து. ஆனால், உலக மக்கள் பார்த்து வியக்கவேண்டும் என்று இவற்றைச் செய்தாரா? இமயத்திலிருந்து திருவாவடுதுறைக்கு வருவதற்கு யோகப் பழக்கம் தான் வேண்டுமா? இந்தக் காலத்தில் வான விமானத்திலே செல்லுகிறார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒருதடவை சொன்னார். யோகப் பயிற்சிபெற்றவர் ஒருவர் வந்தாராம். அவர் கங்கைக் கரையிலே நின்றுகொண்டு 'நான் படகில்லாமலே இதைக் கடந்துவிடுவேன்; நீர்மேல் நடப்பேன்' என்று சொன்னாராம். அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிரித்துக் கொண்டு பதில் சொன்னார்: 'எத்தனை வருஷங்கள் பயிற்சிசெய்து இந்தச் சித்தியை நீங்கள் அடைந்தீர்கள்?' என்று கேட்டார். 'இருபது வருஷங்கள்' என்று சொன்னார் அவர். 'இந்த இருபது வருஷங்கள் நீங்கள் செய்த பயிற்சியானது அரையணா விலையுள்ளது; அரையணா கொடுத்தால் தோணியில் நாம் அக்கரை சேரலாம். இதற்காகவா இருபதுவருஷங்கள் முயற்சிசெய்து இந்த ஒரு சித்தியைப் பெற்றீர்கள்' என்று கேட்டாராம் ராமகிருஷ்ணர்.

திருமூலர் மக்கள்வியப்பதற்காக இந்தச் சித்தைச் செய்தாரா? மூலனுடைய சரீரத்திலே புகுந்தாரே, அது எதற்காக? பரம கருணையின் காரணமாக அல்லவா? எவர் மாட்டுக் கருணை காண்பித்தார்? பசுக்கள் மாட்டு. பசுக்கள் அழுகின்றனவே என்று தயை கூர்ந்து இறந்துபட்ட மூலன் உடலிலே புகுந்து பசுக்களை ஆற்றினார். அதன் மூலமாக நமக்கு ஆறுதலை அளித்தார். மூலன் உடலிலே புகுந்து திருமந்திரத்தை நமக்கு அளித்தார். ஆகையினாலே உண்மையான சித்திகள் உலகப்பகட்டுக்காக அல்ல; உலகத்தை ஏமாற்றுவதற்காகஅல்ல; இவைகளே புருஷார்த்தங்கள் என்று எண்ணுவதற்காக அல்ல. சித்துக்கள் என்றால், இவற்றை நன்மைக்காகப் பயன்படுத்தலாம். அதுகூடப் பிறர் அறியும்வண்ணம் பயன்படுத்தக்கூடாது. இவைகளுக்கு மதிப்பே இல்லை என்பதுதான் மகாயோகிகளுடைய உபதேசம். ஆகையால் யோகம் எதற்காக என்றுகேட்டால் ஞானத்தை நமக்குத் தருவதற்காகத்தான். ஞானத்திற்குச் சாதனம் யோகம் என்பதை நாம் மறக்கக்கூடாது என்று 'அட்டாங்க யோகம்' என்ற தலைப்பிலே திருமூலர் ஒரு அழகிய பாசுரத்திலே நமக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

> அந்நெறி இந்நெறி என்னாது அட்டாங்கத்து
> அந்நெறி சென்று சமாதியிலே நின்மின்
> நன்னெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்
> புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே.

இந்த யோகத்திற்கு என்ன நோக்கம் என்றால், மறுபடியும் சம்சாரத்தில் வந்து உழலாவண்ணம் நம்மைச் செய்துகொள்வதுதான் நோக்கம். வீடு பெறுவதுதான் நோக்கம். அதற்கு எதைச் சம்பாதிக்க வேண்டும்? ஞானம் வேண்டும். சரியை, கிரியை, யோகம், ஞானம். ஞானத்தைப் பெறுவதற்கு யோகம் சாதனம் என்பதை ஸ்பஷ்டமாக உபதேசம் செய்கிறார் திருமூலர். இந்த ஒரு குறியை நாம் மறந்துவிட்டால், யோகப் பழக்கத்தினாலே பயன் இல்லை என்பதை நாம் மனத்திலே கொள்ளவேண்டும். யோகம் என்றாலே, மனத்தை அடக்குவது என்று பொருள். பதஞ்சலி, யோகத்திற்கு இலட்சணம் சொல்லும்போது, சித்தவிருத்திகளை அடக்குவதுதான் யோகம் என்று கூறுகின்றார். இந்த விளையாட்டுக்களிலே மனத்தை விட்டால், சித்தம் எவ்வாறு அடங்கும்? ஈசுவரனுடைய லீலை இது. அநேக பரீட்சைகளை வைக்கின்றார். அதிலும் கடுமையான பரீட்சை. சாமானியமான லோக விவகாரங்களிலே பரீட்சைகள் உண்டு. இவற்றை ஜெயிப்பது கடினம். ஆனால் யோக வழியிலே புகுந்த பிறகுகூட இதை விடக் கடினமான பரீட்சைகளைப் பகவான் நமக்கு ஏற்பாடுசெய்திருக்கிறார். அவற்றில் இவையெல்லாம் பரீட்சைகள்தான். பற்பல சித்திகளைக் காண்பிக்கின்றார். ஏனென்றால் அருகதை இல்லாதவர்கள், அதிகாரம் இல்லாதவர்கள் மேலேபோவதற்கு வழி இல்லை. அப்படி மேலே போகவேண்டும் என்ற ஒரு நோக்கமுடையவர்கள், இவற்றில் ஆழ்ந்து

போகமாட்டார்கள். ஆகையினுலே ஞானம் அடைய சிறந்த வழி அட்டாங்கயோகமே என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். 'இயம நியம ஆசனப் பிராணு யாம, பிரத்யாகார தாரணு' என்று பதஞ்சலி யோகசூத்திரத்திலே சொல்கிருர். அதையே திருமூலரும் சொல்கிருர் :-

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணுயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறும் அட்டாங்கமாவதும் ஆமே.

அதே எட்டு படிகளைத் திருமூலர் இங்கே இந்தப் பாசுரத்திலே அமைத்து நமக்கு அருளுகின்ருர். இந்த ஒவ்வொரு படியையும் நாம் ஆராய்ந்து பார்ப்போமாளுல் எவ்வாறு எல்லாம் சேர்ந்து நம்மை இறைவன் அடிக்கு அழைத்துச் செல்கிறது என்பதை நாம் உணரலாம். நம்மைப் பகவானிடத்திலேயிருந்து வேறு பிரித்து இழுத்துச்செல்வது என்னவென்ருல் மனந்தான். மனமே காரணம் பந்தத்திற்கும் மோட்சத்திற்கும். நம்முடைய மனதெல்லாம் ஒரு பந்தத்திலே ஆழ்ந்து இருக்கிறது என்ருல் எவ்வாறு? எதனுலே? விஷயங்களோடு பற்று வைத்ததனுலே. பல விஷயங்களோடு மனம் பற்றிக் கொண்டு இருப்பதினுலே நமக்குப் பந்தம். ஆனுல், இவ்விஷயங்களையெல்லாம் நமது மனதிலிருந்து விலக்கிவிட்டால் அதுதான் மோட்சம். விஷயங்கள் நிரம்பியுள்ளன. நம் மனத்தில் அநாதியாகவந்த மலங்களெல்லாம் ஆழ்ந்து கிடக்கின்றன. ஆகையினுலே நாம் அழுத்தப்பட்டிருக்கின்ருேம்.

இந்தப் பந்தம் எவ்வாறு விலகுமென்ருல், விஷயங்களை மனத்திலிருந்து எடுக்க வேண்டும்; விஷயங்களை மனத்திலிருந்து எடுக்க வேண்டுமென்ருல், கண்கள் குருடாக வேண்டுமா? காதுகள் செவிடாக வேண்டுமா? என்ருல் அவ்வாறு அல்ல. குருடாக இருக்கின்றவன் 'நான் பார்க்க மாட்டேன்' என்ருல் அதில் பயன் இல்லை. செவிடாக இருக்கின்றவன் நான் இந்த இனிய இசையைக் கேட்கமாட்டேன் என்ருல் அதில் பிரயோஜனமில்லை. கண்களும், காதுகளும், மற்றப் புலன்களும் சரியாகவே இருந்து, இந்த விஷயங்களாலே நமக்குப் பயனில்லை; இவைகளெல்லாம் ஈசுவரனின் விலாசங்கள்; என்னுடைய தனிப்பட்டமுறையிலே அநுபவிப்பதற்காக அல்ல என்ற உணர்ச்சி எவனுக்கு வருகின்றதோ அவன் தான் விஷயங்களிலிருந்து விடுபடுவான். இந்த விஷயங்களிலிருந்து பற்றுதல் நீங்குவதற்கு வழிதான் அட்டாங்கயோகம். சித்த விருத்திகளெல்லாம் பற்பலவாறு சிதைந்து போகின்றனவே, அவற்றைஒருமுகப்படுத்தி நம்முடைய ஒரு ஆட்சியில் வைத்துக்கொண்டால் ஈசுவரன் மாட்டு நாம் செல்லலாமென்ற ஒரு பிரயோஜனம்தான் யோகத்தினுடைய பிரயோஜனம்.

ஆனுல் நம்முடைய முன்னேர்கள், மனிதன் என்பது பல தத்துவங்கள் அடங்கிய ஒரு பொருள், இத்தத்துவங்களுக்குள்ளே பரஸ்பர சம்பந்தமுண்டு, ஒன்றை விலக்கி ஒன்றை மாத்திரம் நாம் திருத்தமுடியாது என்பதைக் கண்டார்கள். மனம் அடங்கி விட்டால் காயம்சலிக்காது; சஞ்சலப்படாது; மூச்சுக் காற்றும் ஒரே சமமாக இருக்கும். இதை நாம் நம்முடைய அனுபவத்திலே பார்க்கலாம். நல்ல ஒரு மாணவன் பரீட்சை சமயத்தில் கவனமாக வேறு விஷயங்களில் மனத்தைச் செலுத்தாமல் தன் புஸ்தகத்தை வாசிப்பாளுல், எதிரே வரும் பொருள்கள் அவனுக்குத் தெரியாது. காதுகள் கைகள் ஆடா. சுவாசமும் ஒரேநிலையில் இருக்கும். உபாத்தியாயர் தொழிலைச் செய்கின்றவர்களுக்கு இது அனுபவம். வகுப்பிலே ஒரு மாணவனைப் பார்த்தாலே 'இவன் கவனிக்கவில்லை' என்பதை நாம் சொல்லிவிடலாம். அவன் கால்களை ஆட்டிக்கொண்டிருந்தால், கைகளை அசைத்துக்கொண்டிருந்தால், தலையைத் திருப்பிக்கொண்டிருந்தால் 'இவன் கவனத்தைச் செலுத்தவில்லை என்று நாம் சொல்லிவிடலாம். ஆகையால்தான், மனம் நமக்கு அடங்கினுல் நம்முடைய ஸ்தூல தேகம் சூட்சும தேகங்களின் அவயவங்களாக இருக்கின்ற இந்திரியங்கள் பிராணன், இவை எல்லாம் அடக்கத்திற்குள் இருக்கும்.

ஒருவன் ஐந்து மைல் ஓட்டப் பந்தயத்தில் ஓடுகின்ருன். கடைசியில் அவனுடைய

நிலைமை எப்படியிருக்கும் என்று ஆலோசித்துப் பாருங்கள். மூச்சு வேகமாக வரும். ஒரே நிலையில் வராது. அவன் நிமிர்ந்து நிற்கவும் முடியாது; உட்காரவும் முடியாது, விழுந்து விடுவான். ஆகையினாலே மனத்துக்கும், பிராணனுக்கும், சரீரத்திற்கும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உண்டு என்பதை அந்தக் காலத்திலேயே நம்முடைய மகான்கள் கண்டுபிடித்தார்கள். நேராகச் சென்ற மனதை அடக்கிவிட்டால் பிராணனும் சரீரமும் தானாகவே அடங்கிப்போகும். இதைத் தெரியாதவர்கள் அந்த நிலையை அடைய வேண்டுமானால், இந்த யோகப் பழக்கத்தினாலே சரீரத்தை ஒருமுகப்படுத்தி, பிராணனையும் சமமாகச் செய்துகொண்டால், மனம் அடங்கலாம் என்பதுதான். ஆனால், சரீரம் நிலையாக நின்றால் பிராணனும் சமமாக ஆகிவிட்டால் மனம் நின்றுவிடும் என்று சொல்லமுடியாது. ஆனாலும் இவற்றைச் செய்துகொண்டால், மனம் நிலைநிற்பதற்கு இவைகள் அனுகூலமாக இருக்கும் என்றுதான் சொன்னார்கள். ஆகையினாலேதான், ஆசனம், பிராணயாமம் என்று வருணித்தார்கள். ஒருநிலையிலே அமர்ந்து இந்தப் பேருண்மையைச் சிந்திப்பதற்கு அவகாசம் செய்துகொள்ளவேண்டும்.

கீதையிலே பகவான், சுத்தமான பிரதேசத்திலே தனிமையை நாடி ஆசனத்தை அமைத்துக்கொள்ளவேண்டும், உயரவும் இருக்கக்கூடாது, தாழவும் இருக்கக்கூடாது என்று சொல்லுகிறார். ஏனென்றால் அப்பொழுதுதான் நமக்கு அமர்ந்து தியானம் செய்ய அவகாசம் ஏற்படும். இதேமாதிரிதான் உணவு விஷயத்திலும். அதிகமாகவும் சாப்பிடக் கூடாது, குறைத்தும் உணவு ஏற்றுக் கொள்ளக்கூடாது. சாப்பிடாமலும் இருக்கக்கூடாது. நெடுநேரம் நித்திரையில் இருக்கக்கூடாது. தூங்காமலும் இருக்கக் கூடாது. பகவான் மேலும் சொல்லுகிறார். இந்த ஒரு மிதமான வாழ்க்கையை நாம் கடைப்பிடித்து யோகத்தைப் பழகுவோமானால் மனம் ஒன்றுபடுவதற்கு ஏது இருக்கும். பிரத்தியாகாரம் என்றால், இந்திரியங்களை வெளி விஷயங்களிலிருந்து திருப்பி உள்ளே வைப்பது என்று பொருள். இவைகளுக்கெல்லாம் அடிப்படையாக இயமநியம சாதனங்களைப் புரிந்து கொள்ளவேண்டும். எவனொருவன் அஹிம்சை, சத்யம் முதலிய கர்மங்களைப் பெறவில்லையோ, எவனுக்கு ஈசுவர வழிபாடு முதலிய சாதனங்கள் கிடைக்கவில்லையோ, அவன் ஆசனப் பிராணயாமங்களாலே இந்த யோகத்தைப்பெற முடியாது என்று இவ்வாறு படிப்படியாக அமைத்து, கடைசியாக மூன்று படிகளிலே மனம் அடங்கும், விஷயங்களையெல்லாம் அகற்றலாம் என்று 'தாரணை தியானசமாதி' என்று கூறுகிறார்.

தாரணை என்றால் ஒரே இடத்திலே நம் மனதைச் சிலகாலமாவது வைப்பது என்று பொருள். தைலதாரை போல, இடைவெளி இல்லாமல் நம்மனோவிருத்தியானது ஓரிடத்திலே சென்று நிற்குமானால் அதற்குத் தாரணை என்று பெயர். இதையே இன்னும் பழக்கத்தினாலே தியானமாக மாற்றுகின்றோம். தியானத்தின் முதிர்ச்சிதான் சமாதி என்று யோகசாஸ்திரம் கூறுகிறது. இந்தத் தியானத்திலே இரண்டுவிதமாகச் சொல்வார்கள் சவிகல்பகம், நிர்விகல்பம் என்று. சவிகல்பம் என்றால் நம்முடைய மனத்தையெல்லாம் இழந்து, எது ஞானத்திற்கு விஷயமோ அதே ஒரு கருத்தாக இருப்பது. கடைசியில் அதுவும் மறைந்தபோது நிர்விகல்பம் என்று சொல்லுவார்கள். இப்படி மனத்தை அடக்கும் வழிதான் யோகவழி.

யோகவழியை யோகமார்க்கத்தை அனுபூதிவாயிலாக நமக்குத் திருமூலர் அருளியிருக்கின்றார் என்பது உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயம். ஆனால், இந்தப் பதஞ்சலி யோகத்தோடு ஆகமங்களிலே அந்தர் யோகம் என்று சொல்லப்படும் குண்டலினி யோகமானது இணைக்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் இங்குத்தெரிவித்துக்கொள்கின்றேன். பதஞ்சலி யோகத்திலே இந்த அந்தர்யோகம் அல்லது குண்டலினியோகம் சொல்லப்படவில்லை. ஆகமங்களினுடைய சாரத்தை அளித்த திருமூலர் அட்டாங்க யோகத்தைக் குண்டலினி யோகத்திற்குச் சாதனமாகவே அமைத்து நமக்கு அருளியிருக்கின்றார்கள். அந்தக் காலத்திலே நம்

சரீரத்திலே, இப்பரந்த வெளி உலகத்திலே காணப்படும் தத்துவங்களெல்லாம் கிடக்கின்றன என்று கண்டு பிடித்தார்கள். பிரும்மாண்டத்திலே எந்தத் தத்துவங்கள் உள்ளனவோ, அவையெல்லாம் பிண்டத்திலேயும் இருக்கின்றன என்று கண்டு பிடித்தார்கள். பரந்த வெளியுலகத்தில்தான் சூரியன், சந்திரன், அக்கினி என்பது கிடையாது. நம் சரீரத்திற்குள்ளும் இந்த மூன்று சக்திகள் உண்டு என்றும் கண்டுபிடித்தார்கள்.

ஆறு ஆதாரங்களை ஐந்து பூதங்களும் மனமும் இருக்கின்ற ஸ்தலங்களாக வகுத்தார்கள். நம்முடைய ஜீவசக்தி மூலாதாரத்தில் தூங்கிக்கிடக்கிறது. நாம் இந்த உலக விவகாரங்களிலே ஈடுபடும்போது, மூலாதாரத்திற்கு மேற்பட்ட இரண்டு ஆதாரங்களிலே வரலாம். இந்தப் பிராணசக்தி - இந்த ஜீவசக்தி அதோடு நின்றுவிடுகிறது. ஆனால் இன்னும் சற்று மேலே கிளம்பி, ஆறு ஆதாரங்களையும் துளைத்துக்கொண்டு சகஸ்ராரத்தில் சக்தியைச் சிவத்தோடுசேர்த்தால்தான் நாம் அனுபூதி பெறலாம் என்ற ஒரு மார்க்கத்தை ஆகமங்களில் நாம் காண்கின்றோம். ஆகமங்களின் இந்தக் கருத்து மிகவும் உயர்ந்தது. இது அபூர்வமானது என்பதை நாம் நினைத்து மகிழ்கின்றோம்.

ஸௌந்தரிய லஹரியில் ஒரு ஸ்லோகம். சங்கரர், இந்த ஆறு ஆதாரங்களையும் கடந்து, எவ்வாறு குண்டலினி சக்தியானது சகஸ்ராரத்தில் சேகரிக்கப்பட்டிருக்கின்றது என்று ஒரு சுலோகத்திலே சொல்லுகிறார். குண்டலினி சக்தியைப் பார்த்துச் சொல்லுகிறார். இந்த ஆறு ஆதாரங்களிலே ஆறு தத்துவங்களின் ஸ்வரூபங்கள் காணப்படுகின்றன. மூலாதாரத்திலே பிருத்விதத்துவம். மணிபூரகத்திலே ஜலம் என்ற தத்துவம். அதற்குப் பிறகு, ஸ்வாதிஷ்டானத்திலே அக்கினி தத்துவம். அனாகதத்திலே காற்று என்ற தத்துவம். விசுத்தியிலே ஆகாச தத்துவம். பூமத்தியிலே மனத் தத்துவம். இப்படி இதற்கு என்ன அர்த்தம் என்றால் நாம் ஜீவர்களாக வாழும்போது இந்தத் தத்துவங்களிலே உழன்று கிடக்கின்றோம். இந்தத் தத்துவங்களிலிருந்து ஜீவனை வேறு பிரித்துச் சிவத்தோடு சேர்ப்பதுதான் இந்த யோகத்தின் நோக்கம். இப்படிப் படிப்படியாக நாம் இந்தக் குண்டலினி சக்தியை, ஆறு ஆதாரங்களையும் துளைத்து, சுழுமுனைநாடி வழியாகச் சகஸ்ராரத்திலே சேர்த்தால், அங்கே சக்தியானவள் சிவத்தோடு சேர்ந்திருப்பதை நாம் அனுபவிக்கின்றோம். அந்த அனுபவத்திலிருந்து அமிர்த தாரையானது பொழிந்து நம்முடைய நாடிகளையெல்லாம் புதுப்பிக்கின்றன. இதை வைத்துத்தான் திருமூலர் நமக்கு இந்தஅட்டாங்கயோகத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்.

ஆனால் இந்த அட்டாங்கயோகத்தைச் சொல்வதற்கு முன்னாலே - இன்று ஏற்பாடு செய்த பிரகாரம் - பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல் என்பதை நமக்குச் சொல்லியிருக்கிறார். சாந்தி, க்ஷமை (பொறுமை) என்பது மிகவும் அவசியம். எவர்களுக்குப் பொறுமை இல்லையோ அவர்களுக்கு யோகம் சித்திக்காது. யோகம் பழக வேண்டுமானால், யோகத்தில் நாம் வெற்றிபெற வேண்டுமானால், பொறுமை மிக அவசியம். ஆகையினால்தான், இந்தப் பொறுமையைப்பற்றி, திருமூலர் உபதேசம் செய்கிறார் முதற்கண்ணாக என்று எனக்குத் தோன்றுகிறது.

கடோபநிஷத்திலே ஒரு மந்திரம் வருகிறது. ஞானத்தினால்கூட அவன் பரமாத்மாவை அடையமாட்டான். எவன்? கெட்ட காரியங்களிலேயிருந்து விலகவில்லையோ, எவனுக்குச் சாந்தி ஏற்படவில்லையோ, எவனுக்குச் சமாதியானது நிலைக்கவில்லையோ, எவனுடைய மனதானது சமத்துவத்தை அடையவில்லையோ, எவனுடைய மனதானது அமைதியைப் பெறவில்லையோ அவனாலே ஞானத்தினாலே கூட பரமாத்மாவை அடையமுடியாது என்றால் என்ன அர்த்தம்? அவனுக்கு ஞானமே வராதென்று அர்த்தம். எவனுக்கு அடக்கம் இல்லையோ, எவன் சாந்தியைப் பெறவில்லையோ, அவன் இந்த யோகப் பழக்கத்தைச் செய்தாலும் பிரயோஜனம் இல்லை, ஞானத்தைப் பெறமாட்டான் பரமாத்ம தரிசனம் அவனுக்குக்கிடைக்காது

என்பதுதான் அர்த்தம். ஆகையினால்தான் இந்தப் பொறுமை, சாந்தி, அடக்கம் இவை இருந்தாலொழிய, யோக முயற்சியினாலே நாம் புருஷார்த்தத்தை அடைய முடியாது என்றுதான் மகான்களெல்லாம் சொல்லுகிறார்கள். அதைத்தான் திருமூலரும் நமக்கு அருளியிருக்கின்றார்.

அடுத்தபடியாக, பெரியாருடைய அனுக்கிரகம் வேண்டும். சாதாரண உலகியல் படிப்பிலேயே ஆசாரியனுடைய அருள் வேண்டுமென்றால், இந்தப் பரமாத்ம வழியிலே செல்லவேண்டுமானால், பெரியவர்களுடைய அனுக்கிரகம் வேண்டும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. தைத்ரீயம் என்ற உபநிஷத்திலே ஒரு கான்வகேஷன் அட்ரஸ் இருக்கிறது என்று பலருக்குத் தெரிந்திருக்கும். படிப்பு முடிந்துவிட்டது, பையன்கள் தம் வீடுகளுக்குத் திரும்பிப் போகப்போகிறார்கள். அவர்களை அழைத்து ஆசாரியன் கடைசி உபதேசம் செய்கிறான். ஞான விஷயத்திலாவது, கர்ம விஷயத்திலாவது சந்தேகமேற்பட்டால் என்னசெய்ய வேண்டும் என்று அவர் கூறுகின்றார்.

எவர்கள் பிரும்மஞானிகளாக இருக்கிறார்களோ, எவர்களுக்கு இந்த ஆசாபாசக் கிலேசங்களெல்லாம் இல்லையோ, எவர்களுக்குத் தன்னலம் என்பது கிடையாதோ, எவர்களுக்கு அழுக்கெல்லாம் நீங்கி விட்டதோ, அவர்கள் எவ்வாறு நடந்துகொள்கின்றார்களோ, அதைப்பார்த்து அவர்களைப் பின்பற்றி நீங்கள் நடப்பீர்களாக என்று உபதேசிக்கின்றார். ஆகையால் பெரியவர்களுடைய ஒரு ஆசாரம் எப்படியோ அதை, அவர்களை அணுகி நாம் தெரிந்துகொள்ள வேண்டும். எந்தப் புருஷனுக்கு ஆசாரியன் கிடைத்தானோ அவன்தான் பரமாத்மாவை உணர்வான். ஆசாரியன் கிடைக்கவில்லையானால் பரமாத்மதரிசனம் துர்லபமென்று கூறுகிறது.

ஞானிகளாக, தத்துவத்தை உணர்ந்தவர்களாக யார் இருக்கின்றார்களோ அவர்கள் உனக்கு வழியைக்காட்டுவார்கள். அவர்களை நீ அடைந்து அவர்களுக்குச் சேவை புரிந்து அவர்களிடத்திலே பிரச்னங்கள் செய்து தெளிவாயானால் உனக்கு ஞானம் பிறக்கும் என்று கீதை சொல்லுகின்றது. இதை மகாபுருஷ சம்ஸ்ரயம் என்று சொல்வார்கள். மகாபுருஷர்களுடைய சேர்க்கை. இது மிக அத்யாவசியம் என்பதையொட்டித்தான் திருமூலர் அட்டாங்க யோகத்தைச் சொல்வதற்குமுன்னால் இந்தப் பெரியாரைத் துணைக்கோடல் என்று அமைத்திருக்கிறார் என்று எண்ணத் தோன்றுகிறது.

> அறிவார் அமரர் தலைவனை நாடிச்
> செறிவார் பெறுவர் சிலர் தத்துவத்தை
> நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
> பெரியாருடன் கூடல் பேரின்பமாமே.

பேரின்பம் கிடைக்க வேண்டுமானால், பெரியாரோடு கூடல் இருக்கவேண்டும் என்பதுதான் இதற்குப் பொருளாகும். பெரியாரோடு இணக்கம் இல்லாவிட்டால் கடைத்தேறுவதற்கு வழி தெரியாது. ஒரு அழகான உபமானம் உபநிஷதங்கள் கொடுக்கின்றன. காந்தர்வ தேசத்திலிருந்து ஒருவன் வந்துவிட்டான். அவனது கண்களை மூடி ஏதோ காட்டில் விட்டுவிட்டார்கள் குறும்புக்காரர்கள். அவன் கண்மீதிருந்த வஸ்திரத்தை எடுத்துவிட்டான். ஆனால் போகும் வழி தெரியவில்லை. அவன் எவ்வாறு காந்தார தேசத்தை அடைவான்? அங்குள்ள வழி தெரிந்தவர்களைக் கேட்டுத்தான் இவன் போகமுடியும். அவ்வாறு நாம் நம்முடைய ஸ்தானத்திலிருந்து வந்துவிட்டோம். மறுபடியும் போக வழி தெரியவில்லை. கண்கள் மறைத்து நிற்கின்றன. அருளாளன் ஒருவன் கிடைத்தான். கண்களை அவிழ்த்தான். அப்படியும் நம்மால் போகமுடியாது. அவன் வழியைக் காட்டவேண்டும். ஆகையால் பெரியவர்களை நாடி, அவர்களோடுசேர்ந்து அவர்களுடைய அருளைப் பெற்றால்தான் நாம் நம்முடைய புருஷார்த்தத்தை அடையலாம் என்று எல்லா மகான்களும் கூறியிருக்கிறார்கள். சாஸ்திரங்களெல்லாம் அப்படித்தான் கூறுகின்றன. சங்கரர் அற்புதமான ஒரு ஸ்லோகத்தில் இக்கருத்தைச் சொல்லியிருக்கிறார். சத்சங்கம்தான் முதல்படி என்று சொல்லுகிறார்.

சத்சங்கம் என்ருல் எவர்கள் பெரியவர் களோ, எவர்கள் மகான்களோ, அவர்க ளோடு சேர்க்கை என்று அர்த்தம். ஈசனே டாயினும் பற்றை அறுமின் என்ருல் என்ன? ஈசனேடு பற்று வைத்தால்தான் பிறகு இப் பற்றும் தொலையும். இராமகிருஷ்ணர் சொல் லுவார், காலிலே ஒரு முள் தைத்தால் அதை நீ இன்னெரு முள்ளைக்கொண்டு உள்ளே தைத்த முள்ளை விலக்கி, இரண்டையும் போட்டுவிடு என்று. அதுபோல, நல்லதில் பற்று வைத்தால், கெட்டது தானே விலகும். கெட்டதைத் தள்ளவேண்டும் என்று எவ் வாறு முயற்சிசெய்தாலும் நம்மால்முடியாது. அதைத்தான் மனேதத்வ விஞ்ஞானிகளெல் லாம் சொல்லுகிருர்கள். கெட்டதை விடு என்ருல் விடமாட்டான். நல்லதைப் பற்றிக் கொள் என்ருல் கெட்டது தாஞகவே வில கும். சத்தோடு நாம் சேர்ந்தால் அசத் தோடு சேர்க்கை நமக்கு விலகிப்போகும். ஆனல் இதுகூட விலகவேண்டும். சத்சங் கத்திஞலே ஒருவிதமான பற்றுதலும் இல் லாமல் போய்விடும். சங்கம் இல்லாமல் செய்துவிட்டால், நமக்கு மோகமேபோகும். இந்த சித்தமானது அமைதியாக சமாதி நிலையிலேயிருக்கும். இந்த நிஸ்சல சித்தம் நாம் பெற்ருல்தான் நமக்கு ஞானம் உண் டாகும். ஜீவன் முக்தியைப்பெறலாம் என்று சங்கரர் கூறியிருக்கின்ருர். ஆகையிஞலே அட்டாங்கயோகம் ஞானத்திற்குச் சாதனம் என்றும் ஞானத்திஞல் முக்திபெறலாம் என் றும், அட்டாங்கயோகத்தை நாம் அதிகாரத் தோடு அனுஷ்டானம் செய்வதற்கு சாந்தி யையும் மற்ற நல்ல குணங்களையும் பெற வேண்டும் என்றும் பெரியோர்களினுடைய இணக்கத்திஞலேயே அவர்களுடைய அரு ளையும் நாம்பெறவேண்டுமென்றும் எனக்கு இந்த மூன்று பகுதிகளின் தாத்பர்யமென்று தோன்றுகிறது. இதைச் சமர்ப்பித்து என் உரையை முடிக்கின்றேன்.

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை
சேயினும் நல்லன் அணியன் நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

—திருமந்திரம்.

'பொறையுடைமை'

## திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள், M. A.,

சென்னை.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிகளுக்கும், தலைவர் அவர்களுக்கும் பெரியோர்களுக்கும் வணக்கம்.

பொறையுடைமையின் அருமையை நான் அறிவேன். அரசாங்க அலுவல் பார்க்கும் பொழுது ஓரளவுக்கு அது சித்திக்கும் எப்பேர்ப்பட்டவர்களுக்கும். அம்முறையில் திருமூலர் இதைக்கூடச் சொல்லியிருக்கிறாரே என்ற பெரு மகிழ்ச்சியோடுதான் இதைத் திரும்பிப் பார்த்தேன். அற்புதமான உவமையினாலே அதற்கு விளக்கம் செய்தார்.

பொறையுடைமை கொஞ்சம் குறுகலானது. ஆனால், சில சீவன்களுக்கு நெடில் தான் பிடிக்குமே தவிர, குறில் பிடிக்காது. சீவனுமிருந்த நிலைமாறிச் சிவமாக ஆகின்றவர்களுக்குப் பொறையுடைமை பொருத்தம். ஆனால், 'சீவன்' என்று நீண்ட நிலையில் இருக்கின்றவர்கள் 'பொருமை' என்ற நீண்ட ஒன்றைத்தான் பற்றிநிற்பார்களே தவிர அது குறுகி, பொறையுடைமையாக ஆகும் நிலைமை சிலருக்கு ஒத்துக்கொள்ளாது. இது உலகியல்.

ஒரு பல்லி என்று சொன்னார். நினைத்து நினைத்து மகிழ்ச்சியும் ஆச்சரியமும்கொள்ள வேண்டிய ஒருவமை அது. பொருமையைப் பல்லியாக உருவகித்தார். திருமூலர் மெய்ஞ்ஞானத்தோடு விஞ்ஞானமும் அறிந்த மகன் ஆதலினாலேபோலும், பல்லியாகப் பொருமையை உருவகித்தார். ஒன்றைப் பற்றிக் கொண்டு விடாமலிருக்கும் இயல்பு பல்லிக்கு உரிய இயல்பு. வழவழ என்று இருக்கும் சுவரில் வேறு எந்தப் பொருளும் துணிந்து ஏறவே ஏறாது. எங்கும் வியாபித்திருக்கின்ற மூட்டைப்பூச்சிகூட அந்த வழவழ என்ற சுவரில் ஏறுவது கடினம். ஆனால், இந்தப் பல்லி அனாயாசமாக ஏறிவிடும். அப்படி ஏறியிருக்கும் பல்லியை விடுவிக்கவேண்டும் என்று பிடித்து இழுத்தாலும் அது வாலை மட்டும் விடுமேயல்லாது தான் வராது.

அதுமட்டுமல்ல; பல்லி எந்தப் பொருளைப் பற்றி நிற்கிறதோ அதனுடைய வண்ணமாக அது மாறிவிடும். ஆகவே அது பற்றிக்கொண்டிருக்கிறது என்று கவனித்துப்பார்த்தால்தான் தெரியுமே தவிர, பல்லி அங்கிருக்கிறது என்று எளிதாக அறிந்து கொள்ள முடியாது. அப்பாவிப் பூச்சிகள், இந்தப் பல்லி ஆடாது அசையாதிருக்கும் காரணத்தினாலே, கவலையில்லாமல் அருகே போய்விடும். போனால் பிறகு என்ன ஆகும் என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. ஆகவே பொருமையைப் பல்லியாக்கினார்.

என்போன்றவர்களையும் அந்தப் பல்லி பற்றிக்கொள்கிறது. நான் எவ்வளவுதான் இதிலிருந்து விடுபடவேண்டும் என்ற உறுதிப்பாட்டைக் கொண்டாலும், அவ்வுறுதிப் பாட்டையே தனக்கு ஒரு நுழைவழியாகக் கொண்டு இந்தப் பொருமை புகுந்துவிடுகிறது. அதுமட்டுமல்ல. பலசமயங்களில், தலைவர் அவர்களுடைய சொற்பொழிவு, நம் குருமகாசந்நிதானம் போன்ற பெரியவர்களுடைய இணக்கம் கிடைக்கின்றபொழுது கொஞ்சம் புத்தி வரும், நாம் இனிமேல் அம்மாதிரியான காரியங்களில் ஈடுபடக்கூடாது என்று. இது எவ்வளவு நேரம் நிற்கும்?

பேராசிரியர் ஒருவர், பொறுமையின் அவசியத்தைப்பற்றி விளக்கமாகச் சொற்பொழிவு செய்துவிட்டு, தானும் அந்நாளிலிருந்து கோபத்தைக் கைவிட்டுவிட்டதாகக் கூறினார். பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த மாணவனொருவன் பேராசிரியரைப் பார்த்து வினவினான். 'நீங்கள் நிச்சயமாகவே கோபத்தைக் கைவிட்டுவிட்டீர்களா?' என்று திரும்பத் திரும்பக் கேட்டான். அப்போது அப்பேராசிரியர் உண்மையிலேயே பொறுமையைக் கைவிட்டு, கோபத்திற்கு

ஆளானுர். ஆக, கோபத்தைப் போக்குதல் என்ற முயற்சியினடியாகவே அது புகுந்து விடும். அதுபோலத்தான் பொருமையும். பொருமை தெரியாமலேயே நம்மிடம் வந்து புகுந்துவிடும்.

பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிடுகிறவரும் தன்னைப்போலவே இரண்டு கரண்டி நெய் போட்டுக்கொண்டு சாப்பிட்டால், அதுகூடப் பொறுக்காது ஒரு சிலருக்கு. ஆகவே, பற்றிக்கொண்டு போக்கவேண்டும் என்று செய்யப்படுகிற முயற்சியின் அடியாகவே பிறக்கின்றது பொருமை. பல்லி இருக்கிறதே அதை உவமையாகக் காட்டியது மிக மிகப் பொருத்தமானது.

பற்றுள்ளம் கொண்டவர்கள் உள்ளத்தில் இப்பல்லி கொழுகொழு என்று வளருகிறது. ஆனுல், வளருகிறது என்ற தன்மையே அவர்கட்குத் தெரியாமல் வளர்ந்து விடுகிறது. ஆகவே, பொருமையை அற்புதமான ஒரு உருவகத்தின்மூலம் சொல்கிருர். சரியான பல்லி ஒன்று இருக்கிறது. அது முற்றிக் கிடந்தது. பல்லியைப் போக்கிவிட்டதாக நினைத்துக்கொண்டு சந்தோஷப்படுகிருர்களே, அவர்களையே அது பிடித்துக் கொண்டு அவர்களுக்குள்ளேயே வளர்ந்து கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட அப்பொருமை மிக மேலேபோகின்ற நிலையிலே இருக்கின்றவர்களைக்கூட விட்டுநீங்குதல் என்பது கடினம்.

பொருமையினுடைய பல்வேறு வடிவங்களுக்கு உதாரணம் கூறலாம். உலகியலில் மட்டுமல்ல; மேலே ஆன்மார்த்த முன்னேற்ற நிலைமையிலே இருக்கின்றவர்களைக் கூட இந்த எண்ணம் விடுவதில்லை. இதை எல்லாம் நினைத்துப் பார்த்துத்தான் அவர் முற்றிக் கிடந்தது அந்தப் பல்லி என்ருர். அவர்களையும் தெரியாமல் அந்தப் பல்லி கொழுகொழு என்று வளர்ந்துவிட்டது.

அப்படி இந்தப் பல்லி வாழ்கின்ற இடத்திலே இன்னும் ஒன்று வாழ்கிறது. பழமொழி சொல்வார்கள் தமிழ்நாட்டில், பூனை இருக்கிற இடத்தில்தான் எலிகள் பேரன் பேத்தி எடுக்கும் என்பார்கள். அதுபோல, முற்றிக் கிடந்த அந்தப் பல்லி வாழுகின்ற அந்த உள்ளத்திலே கமையும் வளருகிறது. ஆனுல், வெளியே துவாரபாலகர் மாதிரி நின்றுகொண்டு அதை வளர ஓட்டாமல், அதற்குச் சத்து போகவொட்டாமல் செய்கின்றது அந்தப் பல்லியினுடைய செயல். பற்றி வளருகின்ற - கமை - பொறுமை - வளருமானுல், தலைவர் அவர்கள் விரிவாகச் சொல்லிய பெரியாரைத் துணைக்கோடல் என்பது கிட்டும்.

சிவநிந்தை, குருநிந்தை, மகேசுவர நிந்தை இவற்றைப்பற்றி முன்னுல் பேசினுர். பின்னுலே பேசப்போகின்ருர் பெரியாரைத் துணைக்கோடல் என்று. நடுவில் எதற்காக இந்தப் பொறையுடைமை வரவேண்டும்? 'மகேசுவரநிந்தை செய்யாதே' என்று சொன்னுர். 'பெரியாரைத் துணைக்கொள்' என்று சொன்னுர். இடையிலே நிற்கிறது பொறையுடைமை. இது சற்று ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஆனுல், இதற்குச் சாவி திருவள்ளுவரிடத்தில் இருக்கிறது. துறவு என்னும் அதிகாரம் செய்துவிட்டார். துறவினது முழு இலக்கணங்களையும் அழகாகப் பேசிவிட்டார். அதற்கு அடுத்தாற்போல் 'அவா அறுத்தல்' என்ற அதிகாரம். அவாவை அறுத்த பிறகுதானே ஒருவன் துறவியாக முடியும்? அப்படி இருக்கத் துறவு என்ற அதிகாரத்தைப் பேசிவிட்டுப் பிறகு, அவா அறுத்தலை வைப்பானேன்? என்ருல், பரிமேலழகர் மிக அழகாக அதற்கு விளக்கம் தந்தார். 'பழைய வினைவயத்தால் ஓரோவழிப் புலன்கள்மேல் பற்றுச்செல்லுமன்றே'; என்ன துறவு நிலை அடைந்தாலும் தொடர்ந்து வருகின்ற இந்தப் பிறவி - பெருங்காயம் வைத்திருந்த பாத்திரத்தில் பெருங்காயம் இல்லாவிட்டாலும் மணக்கும். அதுபோல இந்தப் பொறிபுலன்களில்மேல் தவறுதலாகப் பற்றுச் சென்றுவிடும். துறவு மேற்கொண்டவன் இந்தப் பற்று எங்காவது தலைதூக்குகிறதா என்று தினம் தினம் பார்த்துப் பார்த்துக் களைந்துகொண்டே இருக்கவேண்டும். ஆகவே, துறவின் பின் அவா அறுத்தலை வைத்தார் என்ருர். அதுபோல 'பெரியாரைத் துணைக்கோடல்' என்பதற்கு முன் இந்தப் பொறையுடைமையை

வைத்தார். திருமூலர் அனுபவஞானத்திற்கு இதைவிட வேறு என்ன எடுத்துக்காட்டுக் கூற முடியும்? எனக்கு யோகநூல் தெரியாது. உலகியலில் இதைவிட மிகமிகப் பொருத்தமாகச் சொல்ல முடியாது. ஏன் என்றால் பொறுமை மட்டும் ஒருவனுடைய மனத்திலே இருந்துவிடுமானால், உலகத்தில் யாரையுமே பெரியார் என்று அவன் ஒத்துக் கொள்ளமாட்டான். ஆகையால், அனுபவ ஞானியாகிய அவர் 'பெரியாரைத் துணைக் கோடல்' என்று எழுதப் போகின்றார் பின்னால். யாரையாவது பெரியாரென்று ஒத்துக் கொண்டால்தானே அவரை நாம் துணை பிடிக்க முடியும்? தன்னைவிடப் பெரியவனே இல்லை என்று ஒருவன் நினைத்துக்கொண்டிருந்தால் அவன் யாரைத் துணையாகக் கொள்ளமுடியும்?

இராமகிருஷ்ணருடைய கதையில் 'தன் பாதமே சரணம்' என்று சொல்லி ஒரு குரு ஆற்றில் இறங்கிய கதை இங்கே நினைவு கொள்ளத்தக்கது.

ஆகவே, பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டியவன் பொறையுடையவனாக ஆனால் ஒழிய, தான்தான் பெரியவன் என்று நினைத்துக்கொண்டிருப்பான். ஆகவே, பெரியாரைத் துணைக்கோடலுக்கு முன்னே மிகமிகத் தேவை இந்தப் பொறையுடைமை. கமையை வளர்க்கவேண்டும். அதிலும், நாக்கையும் மூக்கையும் பற்றி நிற்கின்ற விந்தையைப் பக்கத்திலே வைத்து அதை வளர்க்கவேண்டும். பொறி புலன்களோடு கட்டுப்பட்டிருக்கின்ற சிந்தையைப் பிரித்துப் பொறுமையை வளர்க்கவேண்டும். நாக்கு மூக்கு என்ற இரண்டை மட்டும் சொல்லிவிட்டார். Tea tasters, wine tasters என்பவர்கள் நாக்கால் சுவைத்து, இவைகளுடைய தரத்தை அறியும் வல்லமை படைத்தவர்களாயிருக்கிறார்கள்.

நாக்கைவிட மிக மிக நுண்மையானது மூக்கு. ஒரு நோயாளி கொண்டுவரப்பட்ட ஆம்புலன்ஸ் வண்டியிலுள்ள காற்றலைகளை நுகர்ந்தே அந்நோயாளிக்கு என்ன நோய் என்று கண்டுபிடித்துச் சொன்ன வைத்தியப் பேராசிரியர் ஒருவரைப் பற்றிய கட்டுரை ஒன்று வந்திருந்தது. அவ்வளவு நுண்மையானது மூக்கு. நுண்மைக்கு ஒன்றும் பருமைக்கு ஒன்றுமாக எடுத்தார் மூக்கையும் நாக்கையும். மிகமிக நுண்மையானது மூக்கு. மிகமிகப் பருமையானது நாக்கு. இந்த இரண்டையும் பற்றிநிற்கின்ற சித்தத்தைப் பிரித்து, இந்தக் கமையைக் கொஞ்சம் வளர்த்தால் அதுவே பொறையுடைமையை வளர்ப்பதற்குரிய முறையாகும்.

அப்படி அதை வளர்த்துக்கொண்டு வருகின்ற முறையிலே இறைவனுடைய திருவருள் அப்போதே கிட்டத் தொடங்கிவிடுகிறது என்று சொல்கிறார்.

பற்றிநின் றார்நெஞ்சில் பல்லிதான் ஒன் றுண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையும்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்று தொழிவது மாகமை யாமே.

என்றும் அழியாது இருப்பதும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நம்மையும் மீறி உள்ளத்தில் நிலைத்திருப்பதும், மிகப் பிரசித்திபெற்றதும், மிகவும் போற்றப்படவேண்டியதுமாகிய ஒன்று கமை அல்லது பொறுமை என்று சொல்லுகின்றார். இனி, இந்தப் பொறுமையை வளர்த்துக்கொண்டு வருகின்றவர்கள் பெறுகின்ற பேற்றைப் பேசுகின்றார்.

வல்வகை யாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செய்யுங்
கொல்லையி னின்று குதிகொள்ளுங் கூத்தனுக்
கெல்லையி லாத இலயமுண் டாமே.

அவனுக்கு ஒரு இலயம் உண்டு என்று பேசுகின்றார். அதிலே ஒரு கருத்தைமட்டும் நான் கூறுகின்றேன். கூத்தப்பெருமானுக்கு இலக்கணம் சொல்லிக்கொண்டு வருகிறார். பரமன் உயிர்களைப் படைத்து, அவர்களை ஆடவிட்டு, தானும் கூத்தாடுகின்றான். ஒரு பெரிய உண்மைக் கருத்தை, விஞ்ஞானக் கருத்தை இங்கே வைத்துப் பேசுகின்றார்.

இந்த ஆடுதல் தொழில் இருக்கிறதே அது உலகம் அறிவில் வளரவளர ஒருவாறு ஏற்றுக்கொள்ளுகின்ற கருத்தாக ஆகிவிட்டது. அவனுடைய ஆட்டம் இல்லையானால்,

இந்த உலகம் அல்ல, அண்டபகிரண்டமும், சராசரங்களும் நிலைபெற்று வாழமுடியாது. ஆகவே, அனைத்தும் அவனுடைய ஆட்டத்தில் இயங்குகின்றன. இப்படி ஆட்டத்தை ஆட்டுவிக்கின்றானே மனையிலும் புறத்திலும், உள்ளிலும் வெளியிலும். அவன் கொல்லையில் நின்று ஆடுகின்றான். இந்த ஒரு உருவகத்தை மனத்திலே வாங்கிக்கொண்டால் ஆனாயருடைய வரலாற்றின் ஒரு பகுதி நம் மனதிற்கு வரும். ஆனாயர் குழல் வாசிக்கின்றார். அவருடைய உள்ளத் தூய்மையிலே இருந்து பஞ்சாக்கரம் புறப்பட்டுக் குழலின் வழி பேசுகிறது. இதைப் பாடுகின்றார் சேக்கிழார். அந்தக் குழலோசை நம்போன்றவர்கள் வாசிக்கின்ற குழலிலேயிருந்து புறப்படுகின்ற ஓசைபோல் அல்ல, இது ஒரு எல்லைக்குள் நிற்பது. ஆனால், அதற்கும் மேலாகப் போகவேண்டுமானால் அந்த ஒலிக்கு ஒரு சக்தி இருக்கவேண்டும். அது எந்தச் சக்தியாக இருந்தால் எல்லாவற்றையும் கடந்து செல்லும் என்ற பேருண்மையை அங்கே பேசுகின்றார்.

நிறைய மணி முதலானவற்றைக் கோத்திருக்கின்றோம். உள்ளே இருக்கின்ற ஒவ்வொரு மணியையும் தனித்தனியாக ஆட்டினால் ஒரு மணிதான் ஆடும். நான்கு மணிகளைச் சேர்ந்தாற்போல ஆட்டினால் நான்கு மணிகள் ஆடும். ஆனால், அந்த நூலையே பிடித்து ஆட்டினால் எல்லா மணிகளுமே ஆடும். இந்த உருவகத்தை மனத்திலே வைத்துக் கொண்டால், சேக்கிழாருடைய தத்துவத்தை ஒருவாறு நம்மால் விளங்கிக் கொள்ள முடியும். ஆனாயர் வாசித்த குழல் ஓசை இந்த உலகத்தையெல்லாம் நிறைத்தது. வானத்தையெல்லாம் நிறைத்தது. அப்படி மேலே மேலே போய்க்கொண்டிருக்கிறது. குழலினின்று தோன்றிய ஒலி இப்படிப் போகமுடியுமா? போகமுடியும். நாம் எழுப்புகின்ற குழல் ஒலி இந்த மாயா சம்பந்தம் உடையதாக இருப்பதால் இதற்கு அப்பால் போகவில்லை. ஆனால், அவர் வாசித்த குழல் ஒலிக்கு இலக்கணம் பேசுகின்றார் சேக்கிழார்.

மெய்யன்பர் மனத்து அன்பின்
விளைந்த இசைக் குழலோசை.

அவர் மெய்யன்பர். அந்த மெய்யன்பில் புறப்பட்ட ஓசை அது. மெய்யன்பர் மனத்து அன்பின் விளைந்த இசை, குழல் ஓசை. ஆகவே, நூலையே பிடித்து ஆட்டுகிறார் ஆனாயர்.

"வையம் தனையும் நிறைத்து
வானம்தன் வயமாக்கிப்
பொய்யன்புக்கு எட்டாத
பொற்பொதுவில் நடம்புரியும்
ஐயன்தன் திருச்செவியில்"

என்று பாடுகிறார். வானம்தனையும் நிறைத்தது. இன்னும் கொஞ்சம் மேலே கிளம்பிற்று. என்றாலும், நம்மவர்கள் ஓர் உண்மையை மறப்பதே இல்லை. ஆனாயர் சிறந்த அடியார். எவ்வளவு பெரிய அடியாராக இருந்தாலும் இந்த உலகத்திலே நின்று, பஞ்சபூதக் கட்டுப்பாட்டோடுகூடிய அசுத்த மாயையின் பயனாக இருக்கின்ற இந்த உலகத்திலிருந்து வாசிக்கின்ற குழலோசை, ஐயன்தன் திருச்செவியை அடைந்தது என்றால், நாத தத்துவம் தாண்டி நிற்கின்ற அவனுடைய செவிக்குப் போகின்றதை வர்ணிக்கவே முடியாது. ஆகவே, மிக ஜாக்கிரதையாகப் பாடுகிறார் சேக்கிழார். மெய்யன்பர் மனத்து அன்பின் விளைந்த இசைக்குழலோசை என்று. அது வையம் எல்லாம் நிறைத்தது. வானம் தன் வயமாக்கிற்று. பின் இன்னும் கொஞ்சம் மேலேபோயிற்று. எங்கே போயிற்று? 'பொய்யன்புக்கு எட்டாத பொற்பொதுவில் நடம்புரியும் ஐயன் தன் திருச்செவியில்அருகு அணைய'என்றார். 'அணைந்தது' என்று சொல்ல இல்லை. 'அணைவான் வேண்டி' என்றார். அந்தக் காரண காரியத்தை உண்டாக்கி, 'மழை பெய்யக் குளம் நிறைந்தது போல' அல்லாமல் ஐயன் திருச்செவியில் அருகு அணைவதற்காகப் புறப்பட்டது. ஆகவே, நாத தத்துவம் தாண்டியிருக்கின்ற அவனுடைய திருச்செவியில் அணைவான் வேண்டிப் போயிற்று என்றால், இலக்கணத்திற்கு ஒரு சிறிதும் மாறுபடாதபடி, ஆனால் நம்மைப் போன்றவர்களுடைய உள்ளத்தில் தோன்றுகிற ஒலிக்கும் அந்த ஒலிக்கும் உள்ள வேறுபாட்டையும் காட்டி, இதைவிட அது

பலமடங்கு மேம்பட்டது; என்ருலும் அவருடைய திருச்செவியில் அருகு அணைவான் வேண்டிப் போயிற்று. அங்ஙனம் அணைய வேண்டிப் புறப்பட்ட நிலைமையை அவன் அறிகின்ருன். ஓடோடி வருகின்ருன். அந்த அடிப்படையான படத்தை மனத்திலே வாங்கிக் கொண்டால் இந்தப் பாடல் நன்கு விளங்கும்.

மனையிலும் மன்றிலும் பல்வகையாலும் பயிற்றுகின்ருன் அவன். அவன் ஆடுகின்ற ஆட்டம், பிற உயிர்களினுல் சர அசரங்களினுல் பங்கிட்டு ஆடப்பெறுகின்றது. ஆனுல் ஆட்டுவிக்கவேண்டும் என்று நம்மைப் போல், பிள்ளைகளுக்குச் சொல்லித் தருவது போல் முயன்று செய்கிற காரியமல்ல அது. இச்சாமாத்திரத்திலே என்று சொன்னுலும் சரி; அதுவும்கூட அல்ல; அவன் ஆடுகின்ருன். இவை தாமே ஆடுகின்றன.

பல்வகையாலும் பயிற்றி

பல்வேறு வகையாக விஞ்ஞானரீதியாகச் சொல்லவேண்டுமானுல், எத்தனையோ விதமான *motions* என்று சொல்லுவார்கள். பல்வகையாலும் ஆட்டுகின்ருன். சிலவற்றை *simple hermonic motion* ஆக ஆட்டுகின்ருன். சிலவற்றை *transverse motion*-லே ஆட்டுகின்ருன். சிலவற்றை இன்னும் பலவகையான நுணுக்கமான வேகங்கள் கொடுத்து ஆட்டுகின்ருன்.

பல்வகையாலும்பயிற்றி அவன் கொல்லையில்நின்று குதிகொள்ளுகின்ருன். கொல்லை என்ற ஒரு சொல்லுக்கு இவர்கள் பொருள் எழுதுகிருர்கள். உலகியலிலேகூட, வீட்டினுடைய புழக்கடையைத்தான் 'கொல்லை' என்று சொல்வோம். திருமூலரே சொல்லுகிருர், "வள்ளற் பெருமாற்கு வாய் கோபுர வாசல்" என்று. அப்படிப் பார்த்தாலும் அவன் உள்ளே இருக்கிருன். எல்லாவற்றையும் ஆட்டுகிறவன், பல்வகையாலும் ஆட்டுகிறவன், நேரே காணமுடியாதபடி, முயன்று சென்று இடைவெளிகளையெல்லாம் கடந்து இத்தனையிலும் நாம் இடறிவிழாமற்போனுல், பார்க்கக்கூடிய சூழ்நிலையில் கொல்லையிலே நின்று ஆடுகின்ருன். ஆனுல் கொல்லையில் நின்று ஆடுகிருன் என்பதை அங்கேதான் போய்க் கண்டுபிடிக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லை. தலைவராக இருக்கின்ற ஒருவர் உள்ளே இருக்கும்போது வெளியிலுள்ள காவற்காரன்கூட ஒருமாதிரிதான் நடந்துகொள்வான். தலைவர் உள்ளே இல்லாதபோது அவன் எப்படி நடந்து கொள்வான் என்பது நமக்குத் தெரியும். ஆகவே, அம்முழுமுதற் பொருளானவன் கொல்லையில் நின்று ஆடுகின்ருன் என்பதை இந்த உயிர்கள் பல்வகையாலும் ஆடுகின்ற ஆட்டத்தினுலேயே காண்கின்ருேம். கமை உடையவர்கள் அதனேடு மட்டுமல்லாமல், உள்ளேசென்று அந்த ஆட்டத்தையும் காணமுடிகிறது என்ருல், அந்த ஆட்டத்தைக் காணப் புறப்படுகின்றவர்களுக்குத் துணைவேண்டியிருக்கிறது. அதுதான் பெரியாரைத் துணைக்கோடல். கொல்லையிலே இருக்கும் ஆசாமியைப் பார்ப்பதற்கு அந்த வீட்டிலே ஏற்கனவேபோய் அனுபவப்பட்டவர்களுடைய துணைவேண்டும்.

சாதாரண கட்டிடத்திலுள்ள ஒரு அதிகாரியின் அறையைக் கண்டுபிடிக்க எவருடைய துணையாவது வேண்டியிருக்கிறது. ஆனுல் அவன் கொல்லையிலே நிற்கின்ருன், அனைத்துயிர்களையும் ஆட்டுகின்ருன் என்ற உண்மையைத் தெரிந்து கொள்வதே கஷ்டம். அப்படிப்பட்டவர்கள், அவனுடைய ஆட்டத்தைத் தாமே முயன்று நேரே காணவேண்டுமானுல் பலபிறவி எடுக்கவேண்டும். ஆனுல் அதைவிடச் சுலபமானவழி பெரியாரைத் துணைக்கொள்வது. அவன் யுகயுகமாகக் காத்துக்கொண்டு நிற்கிருன். பெரியாரின் துணையே வேண்டாம் என்ருல் பல காலம் ஆகும். ஆனுல், புத்திசாலி என்ன செய்வான்? ஏற்கனவேபோய்வந்து நெளிவு சுளுவு தெரிந்தவர்களின் உதவியை நாடுவான். பெரியோர்களின் துணை கிடைத்து விட்டால், அவர்கள் கொண்டுபோய் விட்டு விடுவார்கள். ஆகையால், பெரியவர்களைத் துணைக்கோருவது முக்கியம். அதைவிட முக்கியம் பொறையுடைமை. பிறரைப்பெரியவர்கள் என்று ஏற்றுக்கொள்கிற பொறுமை வேண்டும். அவர்கள் வழிகாட்டிக்கொண்டு

போகும்போது, நடுவில் சந்தேகம் வரக் கூடும். சந்தேகம் என்கிற தொல்லே நீங்க வேண்டுமானுல் பொறையுடைமை வேண் டும். நம்பிக்கைவேண்டும். ஆகவே பொறை யுடைமை மிகத்தேவை. ஆழ்ந்து சிந்தித்து, கமையை வளர்த்து, பெரியார் இன்னுர் என்று சிந்தித்து முடிவுசெய்து, அவரிடம் சரண் அடையவேண்டும். 'குருபாதமே சர ணம்' என்று சொல்லி ஆற்றில் இறங்கிய கிழவிக்கு நம்பிக்கை வழிவிட்டது. ஆகவே, பொறையுடைமை உலகியலுக்கு மட்டுமல்ல, முழுமுதற்பொருளே அடைவதற்கும் தேவை.

பெரியாரைத் துணைக்கோடல் உலகிய லுக்கு மட்டுமல்ல; முழுமுதற் பொருளை அடைவதற்கும் மிகமிகத் தேவை என்ருல், பெரியாரைத் துணைக்கோடலுக்கு முன்னே பொறையுடைமையை வைத்ததை நன்ருக நாம் விளங்கிக்கொள்ளமுடியும். ஆகவே கொல்லேயிலே நட்டம் பயிலுகின்றவனேக் காண்பதற்கு நாம் பெரியாரைத் துணைக் கொண்டு, கொல்லேயிலே போகின்ற அள வுக்குப் பொறுமை வேண்டும். அதற்கு முதலாவது பல்லி சம்ஹாரம் செய்யவேண் டும். பல்லி சம்ஹாரம் பண்ணுவதிலேயே அனுபவத்தை மறந்துவிட வேண்டாம். சம்ஹாரம் பண்ணிவிட்டோம் என்று பிடித் துப் பற்றி இழுத்த நிலைமையிலே வாலே விட்டு அது போய்க்கொண்டே இருந்தது. அதுபோல், பொருமையை நீக்கிவிட்டேன் என்று மகிழ்ச்சி அடைகிறபோது, அந்தப் பொருமை எங்கேயிருந்தாவது தொல்லே கொடுக்கும். அதனையும் ஜாக்கிரதையாகப் பார்த்துப் போக்கவேண்டும் என்பதனுலே பல்லியாக, பொருமையை உருவகித்து அப் பல்லியை நீக்கிக் கமையை வளர்க்கவேண் டும் என்கிருர்.

ஓலக்கம் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனியன் பாதம் பணிந்துய்ய
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் மன்னவன்
ஞாலத் திவன்மிக நல்லன் என்ருரே.

—திருமந்திரம்.

'பெரியாரைத் துணைக்கோடல்'

## வித்துவான் திரு. தி. சா. தியாகராஜதேசிகர் அவர்கள்,

கடலூர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிமலர்களுக்கு முதற்கண் அடியேன் மனமார்ந்த வணக்கத்தைச் செலுத்திக்கொண்டு, இங்கு அமர்ந்திருக்கும் முனிபுங்கவர்கள் அவைத்தலைவர்முதலான பெரியோர்கட்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகதிக்கு வித்தாகும் திருமூலர் திருமந்திரம் கிடைத்தற்கரிய ஒரு பெருநிதியம் ஆகும். ஓரிடத்தே நிதியம் நிறைந்துள்ளது எனக் கண்டால் அதனை எப்படியாவது முயன்று அடைந்து அனுபவிக்கவே யாவரும் நினைப்பது இயற்கை. இப்படியே திருமந்திரஞானம் என்ற நிதியத்தைப் பெற்று அனுபவித்து இன்புறுதற்காக நாம் முயலக் கடமைப்பட்டுள்ளோம். இந்த ஞானநிதியத்தைப் பெற்று உலகமக்கள் பேரின்பப் பெருவாழ்வு பெறவேண்டுமென்கிற அருள் நினைவு கொண்டவர்கள் நமது குருமகாசந்நிதானமவர்கள். திருமந்திரம் என்னும் ஞானப் பெருநிதியத்தைச் சிவஞானபானுவாவாரே அளிக்கவல்லவர்கள். ஆதலால் திருமந்திரம் தோன்றிய தலத்தினின்றே, சகல வேதாகமங்களின் சாரமாக விளங்கும் இந்தத் திருமந்திர ஞான நூலின் அறிவை உலகமுற்றும் அடைந்துய்வதற்காகப் பல வகையில் உதவிகள் ஆற்றி அருளுகிறார்கள் நமது குருமகாசந்நிதானமவர்கள். இவர்களின் பெருங்கருணையால் 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற திருமூலர் பெருமான் அவா நிறைவுறுகிறது. அகில மக்களின் ஞானதாகம் தணிவுறுகின்றது. இந்த ஞான வள்ளன்மையினால் ஆண்டுதோறும் திருமூலர்பெருமான் வாழ்ந்தருளிய இந்த ஞானபூமியில் திருமந்திர மாநாடு நடைபெறுகிறது. இது பதினொன்றாவது திருமந்திர மாநாடு. புனிதம் நிறைந்த இம்மாநாட்டில் பெரியாரைத் துணைக்கோடல் என்னும் பொருள்பற்றிப் பேசவேண்டும் என்பது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் கருணைநோக்கம்.

பெரியோர்களே! இவ்வதிகாரம், திருமந்திரத்திலே இரண்டாம்தந்திரத்து 25 ஆவது ஆகும். இதுவே இத்தந்திரத்துக் கடைசி அதிகாரமாகும். அடியேற்கு முன் சொற்பொழிவாற்றிய அறிஞர், இதுகாறும் பொறையுடைமைபற்றித் திருமூலர் உரைத்துள்ளவற்றை உவந்தளித்தார். பொறையுடைமையைத் தழுவியதாகவே உள்ளது 'பெரியாரைத் துணைக்கோடல்' என்னும் அதிகாரம். சகல குணங்களையும் அவயவங்களாகக்கொண்டுள்ள உத்தமமான குணமே பொறையுடைமை என்பது. இவ்வளவு உத்தமமான குணத்தை எய்தப்பெற்றவர்களே பெரியோர் துணையினை நாடுவர்.

பொறுமையை அடையப்பெற்றபிறகும் அக்குணம் வளரவும் நிலைக்கவும் செய்துகொள்ள நல்லதொரு சூழ்நிலை இருந்தால்தான் இயலும். ஞானிகள் கூட்டுறவுதான் தக்கதொரு சூழ்நிலை ஆகும். அறிவும், இச்சையும், செயலும் கெட்டுவிடாமலிருத்தற் பொருட்டுச் சிவஞானபோதசாத்திரம், பன்னிரண்டாம் சூத்திரத்திலே அம்மலம் கழுவுதற்கண் அறிவையும், அன்பரொடு மருவுதற்கண் இச்சையையும், ஆலயவழிபாட்டின்கண் செயலையும் செலுத்துமாறு உபதேசிக்கின்றமை காண்கிறோம். இது சீவன்முத்தர்க்குக் கூறப்படும் சூழ்நிலையைக் குறிப்பதாகும். உலகியலில் காவற்சாகாடு உகைக்கும் மன்னர்களும் பெரியோரைத் துணைக்கொள்ளவேண்டுமென அறநூல் சாற்றுகின்றது. செல்வமுள்ளவராயினும் சிற்றினச் சூழலுக்குள் அகப்பட்டுக் கொள்வாராயின் அவர்கள் விரைவில் அனைத்துச்செல்வமும் அழியப்பெற்று அலமருவர். ஆதலின், பொறுமைப்பண்பாடு அடையப்பெற்றவரேயாயினும் பெரியோர்களை நன்றாகப்பேணித்

தமராகக்கொள்ளுதல் அவசியம். பெரியோரைத் துணைக்கோடல் எளியதொரு செயலன்று. இதனை 'அரியவற்றுள் அரிது' என்பர் வள்ளுவர்பெருமான். பொறுமைப் பண்பினின்றும் நாம் எப்போதேனும் சோர்வடைய நேரிட்டால் பெரியோர் துணையே கைகொடுத்து உதவும். "துப்புடையாரைச் சேர்வதெல்லாம் சோர்விடத் துணையாவர் என்றே" என்கிறது பக்திநூல். ஆகவே பொறுமைப் பண்பினின்றும் வழுவாமைப் பொருட்டாகவும், உசாத்துணைப் பொருட்டாகவும், உறுதுணைப் பொருட்டாகவும் நாம் பெரியோரைத் துணைக்கொள்ளுதலே சீரியதாகும் என்றுணரலாம். இதுபற்றியே ஆசிரியர் பொறையுடைமையின் பின்னர், பெரியாரைத் துணைக்கோடல் என்கிற இவ்வதிகாரத்தை அமைக்கலாயினர் எனலாம்.

பெரியோரைத் துணைக்கொள்ளுதலைக் குறித்து ஆசிரியர் திருமூலர் ஆறு மந்திரங்களை நமக்கு அருளியுள்ளார். ஆன்மாவுக்குரிய உய்திமார்க்கங்களை உபதேசிப்பது திருமந்திரம். ஆதலால், உலகியல்நெறியில் நின்று, எவரையும் பெரியோராக மதித்து ஒழுகுதல் நன்று அன்று. ஆன்ம உய்தியே நம் குறிக்கோளாகும். ஆகவே திருமூலர் கூறும் குணநலங்களைக்கொண்ட பெரியோரைத் துணைக்கோடல் சிறப்புடையதென்று உணரவேண்டும்.

ஓடவல்லார் தமரோடு நடாவுவன்;
பாட வல்லார் ஒலி பார்மிசை வாழ்குவன்;
தேடவல்லார்க்(கு) அருள்தேவர் பிரானொடும்
கூட வல்லார் அடி கூடுவன் யானே.

இந்த மந்திரத்தில் திருமூலர் தமது சொந்த அனுபவத்தைச் சொல்லிக்காட்டி நமக்கு அறிவூட்டுகின்றார். "யான் நடாவுவன்" "யான் கூடுவன்" என்ற சொற்றொடர்கள் திருமூலருடைய சொந்த அனுபவத்தினைக் கூறுகின்றன. இந்த மந்திரத்தில் பெரியோர்களாவார் எவர் என்பது தரப்பட்டுள்ளது. அவர்களாவார், ஓடவல்லாரும், பாடவல்லாரும், தேடவல்லாரும், கூடவல்லாரும் ஆவர். நம்முடைய தீச்சார்புகள் கெடுவதற்கு இந்த நால்வகையாளர்கள் இணக்கம் இருந்தாகவேண்டும்.

ஆன்மாவுக்கான உண்மைத்தவநெறியை நான்கு வகைப்படுத்தி நவில்வர் நல்லோர். அவை, சரியை - கிரியை - யோகம் - ஞானம் என்பன. இவற்றை முறையே சீலம் - நோன்பு - செறிவு - அறிவு என்றும் கூறுவர். 'மாலுங்காட்டி, வழிகாட்டி, வாராவுலகநெறி காட்டி, கோலம் காட்டி ஆளுபவர்களே' பெரியோர்களாவர் எனவும், 'சீலம் இன்றி நோன்பு இன்றிச் செறிவே இன்றி அறிவின்றித் தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை' எனவும் மணிவாசகர் கூறுவதுகொண்டு தெளிவு அடையலாகும்.

சரியைத்தவம் முற்றிய பெரியோர்களே ஓடவல்லாராவர். இவர்கள், 'எவரேனும் தாமாக இலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி - உவராதே அவரவரைக் கண்டபோது உகந்து அடிமைத்திறம் நினைந்து அங்கு உவந்து நோக்கி - இவர் தேவர் அவர் தேவர் என்றுசொல்லி இரண்டாட்டாது ஒழிந்து ஈசன்திறமே பேணிக் - கவராதே தொழும் அடியார்' ஆவர் என்பர் ஆளுடைய அரசர். இத்தகைய பெரியோர்கள், திருவேடம் கண்டாலே அவ்வேடத்தாரைச் சிவம் எனவே கருதி உவந்து பணிபுரிய ஓடுவர். பெரியபுராணத்தில், அப்பூதி அடிகள் நாயனர், தாதமார்க்கத்தில் தலைசிறந்த நாவுக்கரையரைக் காணப்பெற்ற அளவிலே, "உற்ற விருப்புடன் சூழ ஓடினர் பாடினர்" என்று கூறப்பட்டிருப்பதைக் காணலாம். இதனல் நாம், தாசநெறியில் தலைநிற்கும் சான்றோர்களையும் அவர்நம் அடிமைபூண்டோரையும் பெரியவர்களாகக் கொண்டு வழிபட்டுக் கூடி வாழவேண்டும் எனத் தெரியலாம். இத்தகைய பெரியோர்கள் கூறும் நல்வழியையும், ஒழுகிக்காட்டும் நல் ஆசாரத்தையும் நாம் கடமையாகக் கொண்டொழுக வேண்டும் என்பது 'ஓடவல்லார் தமரோடு நடாவுவன்' என்ற வாசகத்தின் கருத்தாம். செயற்கரிய செய்கை உடையோர் பெரியோராதலின், 'வல்லார்' எனலுற்றூர். திருமூலரும், பெரியவரான அகத்தியரை நாடியே கயிலையினின்றும் தென்னுடு நோக்கிப் போந்தார் என வரலாறு கூறுகின்றமையும் நாம் கருதலாம்.

இறைவனைத் தொழுவதோடு உள்ளத்தால் நினைந்து நைவதும், வாக்கினால் உருகிப் பாடுவதும் செய்வர் பெரியோர். இவர்கள் ஈசனைத் தம் தந்தையெனக் கொண்டொழுகுவர். இவர் பயனற்ற பாடலைப் பாடார். உறங்கும்போதும் இவர்கள் நாக்கு இறைவனைத் துதிக்கும் பாடல்களை ஓதும். இவர்களைப் புத்திரமார்க்கம் பேணுவோர் என்பர். ஆளுடைய பிள்ளையார் இந்நெறியின் தலைவரம்பாகியவர். இறைவனொருவனையே பாடும் பண்புடைய இவர்கள், பாட வல்லார் ஆவர். இறைவனை ஏத்தும் பாட்டொலியையே இவர்கள் கேட்டுக்கொண்டிருப்பர். ஏத்தொலியும் கூத்தொலியும் சூழும் தலங்களிலேயே இவர்கள் விரும்பி உறைவர். ஆன்ம உய்தியில் நாட்டமுடையோர்க்கு இந்த நோன்பு மிகவும் அவசியமானதாகும். ஆதலால், நாம், பயனற்ற பாடல்களைப் பாடுபவர்களிடம் கூடித்திரியாமல், இன்னிசை வீணையாலும், யாழாலும், இருக்கினாலும், தோத்திரத்தினாலும் இறைவர் பொருள்சேர் புகழையே விருப்பத்துடன் பாடும் பெரியோர்களுடன் கூடி வாழ்தல் நன்று. திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஞானசம்பந்தருடன் கூடியேவாழ்ந்தார் என்பதை திருத்தொண்டர்புராணத்தால் அறியலாம். ஆகவே நாம் மகாதேவனைப் பாடிப்பரவும் பெரியோர்களுடன் கூடியும் பாடியும் வாழ்தல் சீரிதாம். இக்கருத்தினைப் 'பாடவல்லார் ஒலி பார்மிசைவாழ்குவன்' என்றதொடரால் உணரலாம்.

சிவபெருமானை எப்போதும் அகத்திலே கொண்டு அவருடையதொடர்பு நீங்காவாறு ஒழுகுபவர்களும் பெரியவர்களாவர். இவர்களைத் தோழநெறியாளர் என்பர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இந்நெறிவழி ஒழுகிக் காட்டிய உத்தம நாயன்மார் ஆவர். இறைவனைப் புறத்தே தேடுவதோடு இவர்கள் அமையார். அகத்தே தேடுவர். சிவதரிசனத்தைத் தம் அகத்தே தெளிவுறக் காண்பர். சிவபெருமான் இப்படிப்பட்டவர்களுடன் தோழனைப்போன்று ஈடுபாடுடையவராவர்.

இவ்வித ஈடுபாடுடைய பெரியோர்கள் எஞ்ஞான்றும் சிவத்துடன் மருவியுறைபவர் ஆவர். இவர்களுக்கு இறைவன் எதனையும் அருளுவன். ஆளுடையநம்பிகட்கு ஆண்டவன் எல்லாவிதமான உதவிகளையும் செய்தருளிய தன்மையை நாமறிவோம். இவருடைய நட்பினாலே சேரமான் பெருமாள் நாயனார் சிவபதம் பெற்றாரெனவும் தெரிகிறோம். ஆதலால், சிவபெருமானை அகத்துட் கொண்டு வழிபடும் பெரியோர்களை நாமும் கூடி அடிபணிந்து வாழ்தல் நன்றாம். தேட வல்லார் சிவயோகியராவர். இக்கருத்தைப் புலப்படுத்துவது 'தேடவல்லாரடி கூடுவன் யானே' என்னும் வாக்கியம் என்னலாம்.

தேவர்பிரானொடும் இம்மையிலே கூடி வாழவல்லோர் சீவன்முத்தர் எனப்படுவர். இவர்கள் ஞானமார்க்க அனுஷ்டிதர்களாவர். இவர்கள் எப்போதும் முப்போதும் தம் அறிவால் சிவனுடைய சொரூபத் திருமேனியிலே அத்துவிதமாய் இயைந்து நிற்பர். இவர்களைக் கூடுவது தேவர்பிரானைக் கூடுவதை நிகர்ப்பதாகும். அறிவால் சிவமேயாகிய இவர்கள் கூட்டுறவை நாம் அடைந்து வாழ்தல் மிக்க சிறப்புடையதாகும். 'மூத்த அறிவுடையார்கேண்மை தேர்ந்துகொளல்' என்பது வள்ளுவர் வாக்காகும். இவர்களை நாம் மருவியுறையின் இறைவன் துணையினைத் தட்டாமல் அடையப் பெறுவோம். இதுவே இம்மந்திரத்தின் நான்காம் வாக்கியத்தின் நல்லுபதேசம். முடித்துக்கூறுவோமாயின் நாம் இம்மையில் ஆன்ம உய்தி அடையவிரும்பினால் மேலேகூறப்பட்ட நால்வகைப் பெரியோர்களுடன் கூடி அவர்கள் சொல்வழி படிப்படியாக நடந்து பிறவிப் பெருங்கடலைக் கடத்தல் கூடும் என்பது தெளிவாம்.

தாம் இடர்ப்பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத்து அங்கு அன்புவைத்த நிலையாகும்;
நீஇடர்ப்பட்டிருந்து என்செய்வாய்நெஞ்சமே!
போமிடத்து என்னொடும் போது கண்டாயே.

மேலே கூறப்பட்ட மாண்புடைய பெரியோர்களை நாம் கூடுவதற்கான உபாயத்தை இந்தப் பாடலில் ஆசிரியர் நமக்கு அறிவிக்கின்றார். ஆன்மாவுக்கு மிகவும் நெருங்கிய தொடர்புடைய கருவி நெஞ்சமே ஆகும். நெஞ்சம் ஆன்மாவுடன் கூடினால் நன்மை

விளையும். ஆன்மா நெஞ்சத்துடன் கூடினால் கீழ்மை நேரிடும். ஆன்மா என்பது அறிவு மயமானது. ஆகவே, அறிவு, மனத்தைத் தன் வழியில் கூட்டி நல்வழியில் செல்வதே சிறப்பளிக்கும். தீநெறியே பற்றித் தொடரும் நெஞ்சத்தின் வயப்பட்டு நம் அறிவு செல்லுமானால் நற்கதி நண்ணாது. ஆகையால், நாம் பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும்.

மனம் எளிதில் வசப்படாது. மனம் உண்மையாகவே பெரியோரிடத்து மருவ நாடினால் அதனிடம் அன்பு நிலைக்கவேண்டும். அப்போதுதான், நாம் பெரியோர் துணையை உண்மையில் நாடிக் கூடியவராவோம். துன்பம் உற்றபோது பெரியோருடைய உதவியை நாடிப் போலியன்பைச் செலுத்தி நடித்திடுதல் தீது. மனத்திலே அன்பு வைத்து அதனை நிலைக்கச்செய்து பெரியோரை மருவி நாம் வாழவேண்டும். பெரியோரல்லாதவரைப் பெரியோர் என எண்ணி மோசம்போவதும், உண்மையான பெரியோர்களிடத்தில் போலி அன்பினைப் பாராட்டிப் பிறகு துன்படைந்து செடியின் தளிரைப்போல் வாட்டமடைவதும் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளுவதாக முடியும். ஆகையால், நாம் தக்க பெரியோர்களை உண்மையன்போடு நாடி அவர்களாணைப் படி நடந்து இன்புறுதலே நன்றாம். 'அன்பு செய்வாரை அறிவன் சிவன்' என்பது திருமூலர் கருத்தாகும்.

அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்பம் ஆமே.

பழுத்த அன்போடும் தக்க பெரியோரை மருவி வாழ்வதனால் எய்தும்பயன் இன்னதென இப்பாடலில் திருமூலர் அறிவிக்கின்றார். நம்மிடம் இயல்பாகவே பாசஞானமும் பசுஞானமுமே உள்ளன. சுட்டறிவும் சிற்றறிவும் கொண்டு எவரும் பதிஞானத்தினால் மாத்திரம் அடையப்பெறுவதாகிய பேரின்பத்தை எய்த இயலாது. பாசஞான பசுஞானங்களை நீக்கி உண்மை தெரிவதற்குத் தத்துவங்களைப் பற்றிய அறிவு தலைப்பட வேண்டும். தத்துவஞானிகளால்தான் இவ்வுண்மை நமக்குஅறிவுறுத்தப்படும். ஆன்ம தத்துவங்களின் இயல்பையும் வித்தியாதத்துவங்களின் இயல்பையும் நாமறியும்போது தான் 'தத்துவங்கள் நாமல்லம்' என்ற உண்மை தெளியப்படும். இதற்குமேல் உள்ளது சிவதத்துவம். இதனைப்பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொண்டால்தான் நாம் பின்னர் படிப்படியாகப் பந்தம் கடக்கப் பெறுவோம்.

அறியாமையானது நம்மை இறைவனிடமிருந்து அகற்றுகிறது. அறிவு நம்மை இணைக்கிறது. பெரியோர்களைச் சார்ந்து தொழுகினால் பந்தமும் பிரிவும் அவற்றின் காரணங்களும் தெரியப்பெற்றுச் சரியை முதலான தவநெறியிலே ஒழுகிச் சாலோக மாதியான இன்பநிலைகளை நாம் எட்டப் பெறுவோம். இம்மையிலேயே பேரின்ப அனுபவத்தின் சுவையையும் துய்க்கப்பெறுவோம். இதனையே, 'நெறிதான் மிகமிக நின்று அருள்செய்யும்' என்றுள்ளார் திருமூலர். இதுவரை கூறியவற்றால் நாம், பெரியோர் கூட்டத்தைச் சார்ந்து வாழ்ந்தால் மெய்யறிவு பெற்றுப் படிப்படியாகப் பேரின்பப்பாதையில் செல்லலாகும் எனத் தெரியலாம். ஆகவே நல்லோர் தொடர்பினை நாம் கைவிடலாகாது என்பது தெளிவாகும்.

தார்சடை யான்தன் தமராய் உலகில்நிற்
போர்புகழா எந்தை பொன்னடி சேருவர்;
வாயடை யாஉள்ளம் தேர்வார்க்கு அருள்
[செய்யும்
கோஅடைந்து அந்நெறி கூடலும் ஆமே.

நாம் ஆணவமலத்தால் கட்டுண்டுழல்கின்றோம். நமக்கு உதவும் பொருட்டே திரோபவம் செய்கிறான் இறைவன். இதனால் நாம் உண்மை இன்னது என்பதைப் பட்ட அறிவினால் தெரியலுறுகின்றோம். இந்தத் தெளிவானது ஒருபிறப்பிலேயே ஏற்பட்டு விடாது. பல பிறப்புக்கள் எடுக்கவேண்டும். இது தொல்லையான வேலை. தெளிவு விரைவில் ஏற்படவேண்டுமானால் தெளிவு உடையவர் கூட்டத்தில் நாம் கூடவேண்டும். தொண்டர்களுடைய கூட்டத்தை விடாமல் கூடியொழுகுவோமாயின் நம்மிடத்திலே

தீவினை சேராது. நல்வினை மிகும். சிவபுண்ணிய சிந்தனை வளர்வுறும். இதன் பயனுக இறைவனருள் கிட்டும். எடுத்த பிறப்பிலே பேரின்பம் எய்தத் தகுதி பெற்றிடுவோம். இதனுலேயே பெரியோர்கள் "தொண்டரொடு கூட்டுகண்டாய்" எனவும், "அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்" எனவும் இறைவனை நயந்து வேண்டியுள்ளார்.

பெரியோர்கள் செந்நெறியே கடைப்பிடித்து ஒழுகுபவர் ஆவர். அதாவது, சித்தாந்தநெறியிலே செல்பவராவர் என்பதாம். இவர்களுடன் கூடியொழுகுவதனுல் நாமும் செந்நெறியிலே செல்வோம். 'நல்நெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்' என்பதற்கிணங்க நமக்கும் மெல்ல மெல்ல இறையருளும் பதிஞான வாய்ப்பும் தட்டாமல் கிட்டும்; பேசா அநுபூதிநிலை வாய்க்கும் என இப்பாடலாலும் திருமூலர், பெரியோர்களுடன் கூடுதலால் விளையும் பயனுணர்த்துகிருர்.

உடையான் அடியார் அடியாருடன் போய்ப்
படையார் அழல்மேனிப் பதிசென்று புக்கேன்;
கடையார நின்றவர் கண்டறி விப்ப
உடையான் வருகென ஓலம்என் ருரே.

பெரியோர்களாகிய ஞானிகள், தம்மை ஆண்டவன் அடிமையாகவே கருதி ஒழுகுபவர்கள். ஆண்டான் அடிமைத்திறத்தை அறிந்தவர்கள் அவர்கள். இறைவனை எவரும் ஏமாற்றிவிட முடியாது. தேவர்களும் அவனைச் சூழ்ச்சியால் அடையப்பெருர். இறைவன் வகுத்துள்ள ஆகமநெறியினையே பற்றுமாறு பெரியோர்கள், எப்பொழுதும் தம்மை அடைபவர்க்குப் போதிப்பர்; தாமும் அவ்வழியே செல்வர். இதனுல் இவர்கள் தற்போதம் அற்றவர்களாய்ச் சிவபோதம் எய்தப்பெற்றவர்களாய் எங்கும் சிவநிறைவையே காண்பர்; என்றும் சிவன்புகழே கேட்பர்; தாம் தட்டாமல் சிவக்காட்சியைக் காண்பர்; தாம் கண்டும் கேட்டும் அடையப் பெறும் இன்பத்தைத் தம்மைச் சார்ந்தாரும் அடையவேண்டுமெனக் கருதுவர்.

திருநாவுக்கரசுசுவாமிகள் திருவையாற்றுப்பதியிலே திருக்கயிலைக் காட்சியைத் தாம் காணப்பெற்றதை எடுத்துரைத்திடுகையில், சிவநெறியே செல்லும் அடியார்களாகிய பெரியோர்களைச் சார்ந்தே அடையப்பெற்றதாக நமக்குச் சொல்லிக் காட்டுகின்ருர். "போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர் பின் புகுவேன்" என்ற அவரது திருவாக்கு முன்னணிப்பட்டவராகிய நம் பெரியோரை உணர்த்துதல் தெரியலாம். மற்றும் அப்பெருமான், இங்ஙனம் தாம் அடிச்சுவடு பற்றித் தொடர்ந்து' ஏகியதனுல் 'கண்டறியாதன கண்டேன்' எனப் பன்முறையும் கூறி நமக்குத் தெரிவித்திடுகின்ருர்.

இம்முறையை நமக்கு ஆசிரியர் கூறும், 'உடையான் அடியார் அடியாருடன்போய்ப் படையார் அழல்மேனிப் பதி சென்று புக்கேன்" என்பதனுல் நாம் தெரிதல் கூடும். 'படையார் அழல்மேனிப் பதி' என்பதனுல் நமக்கு மரணபயமும், மலப்பிணிப்பும் இல்லாமற்போவதை அறியலாம். 'புக்கேன்' என்று தமது அனுபவ வாசகமாகவே ஆசிரியர் அறிவித்தலால் நாம் இப்பேறு பெறுவோமோ மாட்டோமோ என்று ஐயப்பட வேண்டுவதில்லை என்னலாம். ஆதலின் அடிமைப்பேற்றினை இயல்பாகவே அறிந்தொழுகும் பெரியோர்களைச் சார்ந்து அவர்கள் செல்வழியே நாமும் செல்வதனுல் சிவபதம் அடைதல் உறுதி எனத் தெரியலாம். எனவே பழ அடியார்களாம் பெரியோர்கள் கூட்டுறவே நமக்கு வழிகாட்டும் வாயிலாகுமென்பது திண்ணமாம்.

அருமைவல் லான்கலை ஞானத்துள்தோன்றும்;
பெருமைவல் லோன்பிற விச்சுழி நீந்தும் ;
உரிமைவல் லோன்உணர்ந்தூழி இருக்கும் ;
திருமைவல் லாரொடு சேர்ந்தனன் யானே.

பெரியார்கள் ஞானபூரண தபோதனர்களாவர். "எப்பொருளும் ஆக்குவான் ஈசனே" என்ற திட நம்பிக்கையும், "அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள்" என்ற பேரறிவும் கொண்டு ஒழுகுபவர்கள் சிவஞானிகள். தமக்கென இச்சை எதுவும் இவர்களிடம் இல்லை. "வேண்டி நீ யாது அருள்செய்தாய் யானுமதுவே வேண்டினல்லால், வேண்டும் பரிசொன்று உண்டு என்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே"

என்னும் கொள்கையாளர்கள் பெரியோர் ஆவர்.

சிவசாயுச்சியமே சிறந்த பேறு. இதனை நன்மார்க்க ஞானத்தை நாடிநின்றே பெற இயலும். இந்த நன்மார்க்க இயல்பினை நாம் பெரியோரை அணுகாமல் அறுவள வும் அடைதல் ஆகாது. பெரியாருடன் கூடி நிற்போர் நிர்விகற்பஞானம் நிலைத்திடப் பெறுவர். பெரியோர்களுடனே கூடி வாழ் வோர், தாம் எந்தப்பேற்றினை எய்தவிரும்பி னும் அதனைத் தட்டாமல் அடையப்பெறு வர். பெரியோர்களால் கலைஞான வல்லமை பெறுவிக்கப்பட்டுச் சிவனடியே சிந்திக்கும் தெளிந்த அறிவை அடைவர். 'அருமை வல் லான் கலைஞானத்துள் தோன்றும்' என்பது இதனை உணர்த்துவதாகும்.

மற்றும், பெரியோர்கள், சிவசொரூப இலக்கணமறிந்தோராதலால், இவர்களைக் கூடப்பெற்றோர், அவ்விலக்கணம் உணர்த் தப்பெறுவர். சிவனதுசொரூபஇலக்கணமே ஓங்கிய ஞானமாகும். இதனை எய்தினோர் பிறப்படையார். 'பாங்கினில் ஓங்கிய ஞானம் பவமதனை மாற்றும்' என்பர் மேலோர். இந்த ஞானம் அடையப்பெறுதல் பெரும் பேறும். 'பெருமை வல்லான் பிறவிச்சுழி நீந்தும்' என்ற அடி இதனை உணர்த்திடு கின்றது.

நாம் ஆண்டவன் அடிமை என எப் போதும் எண்ணப்பெற்று அவனடியே என்று ஞான்றும் பற்றி நிற்பதே நமது உரிமை ஆகும். இதனால் காண்பான்முதலிய மூன்று விகற்பங்களும் விட்டுப்போம். "ஞானப் பெருமை உடையோர் சிவனைப் பெறுவர் காணே" என்பது சித்தியார் வாக்கு. இதற் கிணங்கப் பெரியோரை எப்போதும் கூடி வாழும் குணங்கொண்டவர்கள், தம் உரி மையை உணரவல்லராகி ஊழிக்காலமள வும் இருப்பர்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

என்ற திருக்குறள் வாக்கும் இக்கருத்துக்கு அரண் செய்வதாகும். ஆகவே, பெரியோர்க ளாவார், தம்மை அடைந்து உறைவோரை ஆளுங்கொள்கையுடையராய்க் கலை அறிவு மூலமாகவும் - சொரூப இலக்கண உணர்வு அளித்தல் மூலமாகவும் - நிர்விகற்பஞானம் அடைவித்தல் மூலமாகவும் இம்மையிலேயே சீவன்முத்தராக வாழ்வித்துச் சிவபோகம் துய்த்திடச்செய்வர் என்பது மறுக்கமாட்டா உண்மையாம்.

திருமூலர் இங்ஙனம் தாம் தம்மினும் பெரியோரைச் சார்ந்தொழுகிப்பெற்ற நயங் களை நமக்கு உணர்த்தக் கருதியே 'திருமை வல்லாரொடு சேர்ந்தனன் யானே' என் றும் உறுதி உரைத்திடுகின்றார். ஆளுடைய பிள்ளையார் இங்ஙனம் திருமை எய்தப் பெற் றவராவர். திருமையாவது முற்றுப்பெற்ற சிவஞானமாம். "சன்மார்க்கம் சகல கலை புராண வேதசாத்திரங்கள்" எனத் தொடங் கும் சித்தியார்ப்பாடல் மேலே வகுத்துரைக் கப்பட்ட பொருள்களை விதந்து உரைத்திடு தல் காணலாம்.

"அன்பர்பணி செய்ய என்னை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந்து
எய்தும் பராபரமே"

என்னும் தாயுமானவர் பாடலும் பெரியோர் கூட்டுறவை நாம் நாடினால் போதுமெனத் தெரிவிப்பதாகும். "முத்திநெறி அறியாத மூர்க்கரொடு" பயிலுதல் கூடாது. முற் றுணர்ந்தோரே ஞானிகளாவர். இத்தகை யோரே பெரியோர். இவர்கள் நம் பிறவி யைச் சேதிக்கும்வன்மை வாய்ந்தோராவர். ஆகலின், கலைஞானப்பேறளித்தும் மெய்ஞ் ஞான அமுதம் ஊட்டியும், அனுபூதிஞானச் சுகவாழ்வில் வாழ்வித்தும் நமக்கு ஆக்கம் அளிக்கும் பெரியோர்களை இம்மையிலேயே தேடி அடையப்பெற்று மருவி உறைந்து நல்வாழ்வு அடைவோமாக!

**'அட்டாங்கயோகம்'**

ஆதீன வித்துவான்

## திரு. தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள்,

கடலூர்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கும், முனிபுங்கவர்களுக்கும், தலைவர் அவர்களுக்கும், பெரியோர்களுக்கும் எனது வணக்கம்.

மூன்றும் தந்திரம் முழுவதையுமே நாம் பார்த்தோமானால், ஒருவாறு ஞானத்திற்கு ஏதுவாக இருந்துகொண்டிருக்கின்ற முழு யோகத்தின் அடிப்படையையும் அதன் முடிவையும் முழுமையாக நாம் தெரிந்துகொள்வதற்குத் திருமூலர் வாய்ப்புச் செய்திருக்கிறார் என்பது தெரியவரும்.

இப்பொழுது நம்மிடத்திலே இருக்கும் விஷயங்கள் மூன்றே என்று வரையறுக்கப் பட்டிருக்கின்றன. ஒன்று வெளியில் காணப் படுகின்ற உடம்பு. இரண்டாவது, இதற்குள்ளே இருந்துகொண்டிருக்கிற அந்தக் கரணம் அல்லது அதற்குத் தலைமைதாங்கும் உள்ளம். இனி அதற்கும் உள்ளே நாமாகவேயிருந்து நம்மால் அறியப்படாமலிருக்கிற, ஆனால் தலைவனை அறியும்பொழுது, அவன் அருளால் தன்னையும் காணப்பெறுவதாயிருக்கின்ற ஆன்மா அல்லது அறிவு. இந்த மூன்றே பகுதிகளாக நாம் இங்கே உருக்கொண்டு நிற்கிறோம். இதில் வெளியிலிருக்கும் உடம்பை முதலில் அசையாநிலைக்குக் கொண்டுவரவேண்டும். சுரங்கத்திலே வெகுகாலம் அசையாத நிலையிலே அழுத்தப் பட்டுக்கிடக்கிற மரக்கட்டைகள் நிலக்கரிகளாகின்றன. கரிகள் அசையா நிலையாய்ப் பூமிக்குள்ளே அழுத்தப்பட்டுப் பல்லூழிக் காலம் இருக்குமானால் வைரங்களாக மாறிவிடுகின்றன. எனவே, கரி, ஒளிபொருந்திய வைரமாக மாறுகின்றது அசையா நிலையாலும், அழுத்தத்தாலும், அடக்கத்தாலும். அவ்வாறே மரக்கட்டை வெகுகாலம் அழுத்தப்பட்டிருக்கும் காரணத்தினாலே, ஒளியை வெளிவிடும் பொருள்களாக மாறுகின்றன. அசேதனமாய் இருந்து கொண்டிருக்கும் இப்படிப்பட்ட பொருள்களே அழுத்தத்தினாலும் அசையாமையினாலும் ஒளிவிடுகின்ற பொருள்களாயும் ஒளிப் பொருள்களாயும் மாறுகிறபோது நாம் அசையாநிலையில் நம் உடம்பை ஆக்கி, உள்ளத்தையும் ஆக்கி, உள்ளே அறிவையும் அகண்டாகாரத்தில் பொருத்திவிட்டோமானால், எவ்வாறு பரஞ்சோதியாய் விளங்கப்பெறுவோம் என்பதை சிந்தித்துப் பார்த்துக்கொள்ளலாம். அசேதனப் பொருள்கள் மூலமாக இதை நாம் தெரிந்துகொள்ளுதலும் கூடும் என்பதற்காகத்தானோ என்னவோ சுரங்கங்களிலே பல பொருள்கள் பொதிந்தும் மறைத்தும் வைக்கப்பட்டுள்ளன என்று நாம் கருதலாம்.

இனி, பெரியோர்களாலே சொல்லப் பட்டிருப்பது: உடம்பை அடக்குவதிலே இருக்கிற கஷ்டம், கர்ப்பப் பைக்குள்ளே ஒரு சிசுவை அடக்கிக் கட்டிவைத்திருப்பது போன்ற கஷ்டமாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவது, மனத்தை அடக்குவதிலே இருக்கிற கஷ்டம், ஒரு கண்ணாடி மாசு படிந்து கரி ஏறியிருந்தால் எப்படி இருக்கிறதோ அதுபோன்ற தன்மையாய் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இனி அதற்குள்ளேயிருக்கும் ஆன்மாவைப் பற்றிச் சொல்லியிருக்கும் காலத்தில் மேகமானது மறைத்துக்கொண்டிருக்கிற ஆகாயத்திலே தெரியாமல் மறைபட்டுக்கிடக்கின்றது போன்ற தன்மையதாய் இருக்கிறது. இப்படி மூன்று விதமான உபமானங்களினாலே, உடல் உள்ளம் உயிர் இவைபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கர்ப்பப் பையிலே சிசு இருப்பதில் எவ்வளவு கஷ்டம் இருக்குமோ அவ்வளவு கஷ்டத்தில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம் என்றும், அது எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறதோ, அது போன்று கஷ்டப்பட்டு நமது உடம்பில்

இருக்கிற அங்கங்களை - நூலில் பத்து அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிற பயிற்சிகளை மேற்கொண்டு நாம் பழக்கினேமானால், உடம்பு வசப்படுகிறது என்றும் தெரியலாம்.

இதற்கு மற்றொரு உபமானம் சொல்லுகிறவர்கள்' நமக்கு உடம்பு வசப்படுவதைப் பற்றிப் பேசுகிற இடத்திலே குதிரை ஓடிக்கொண்டேயிருக்கிறது; குதிரை குதிக்கின்ற சுவபாவமுடையது ; அதை அடக்கி ஒடுக்கி ஒழுங்குபடுத்தி, அதன் சரீரத்தை அமைத்தால்தான் நாம் அதன்மேல் ஏறிச் சவாரி செய்ய முடியும் அல்லது அதனை வண்டியில் பூட்டி, ஏறி உட்கார்ந்து சவாரி செய்ய முடியும். முரட்டுக் குதிரையாக அப்படியே விட்டுவிட்டோமேயானல் அது ஒருபோதும் நமக்கு உபயோகப்படாது. குதிரையை எப்படியும் நாம் வசப்படுத்தி, அதன் உடம்பை அதற்கு ஏற்றவாறு வணங்கும்படிச் செய்ய வேண்டும். அதுபோலத்தான் நம்முடைய உடம்பையும் நூலில் சொல்லப்பட்டிருக்கும் அங்கங்களாகிய இயமம், நியமம் முதலிய பயிற்சிகளால் ஒழுங்குபடுத்த வேண்டும். அவற்றுள், இயமமாவது தனக்குச் செய்து கொள்ள வேண்டிய நன்மைகள். நியமமாவது பிறருக்குச் செய்ய வேண்டிய நன்மைகள். இந்த இரண்டும் அமையப்பெற்றவர்களுக்கு விரோதம் இராது. இப்படி விரோத நிரசனம் செய்பவனுகவேண்டும். அதற்கு அப்பால் தன்னுடைய உடம்பு தனக்கு விரோதமாக இருக்கிற காரணத்தால் அதை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்திக்கொள்ளுவதற்காக நூலில் ஆசனுதிபேதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எண்ணில்லாத ஆசனங்கள் இருக்கின்றன என்று திருமூலர் சொல்லி, சிற்சில ஆசனங்களை மாத்திரம் தேர்ந்து எடுத்து, அவற்றின் லட்சணங்களோடு கூறுவதை 'ஆசனம்' என்ற தலைப்பிலே பேசிய அறிஞர்வாய்க் கேட்டோம். அடுத்தபடியாக, குதிரையைக் கட்டுவது போல, அதற்குச் சேணம்போட்டு, கண் பட்டையைக் கட்டி, கடிவாளம் போட்டு, இழுத்துப் பிடித்து, அதை மணல்வழியிலே ஓட்டி, அதன் கொழுப்பெல்லாம் அடங்கச் செய்து அப்பால் அதனை யோக்கியதையாய் உழைக்கச்செய்வதுபோல, ஆசனுதிபேதங்களினுலே நம் சரீரத்தில் எந்தெந்த அங்கங்கள் யோகநிலைக்கு'அல்லது தியானநிலைக்கு ஒத்துவரவில்லையோ அவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தி அடக்கவேண்டும். அவ்வாறு அடக்கி, அடையவேண்டிய முடிவாய் இருந்துகொண்டிருக்கிற பரம்பொருளோடு ஒன்றுதலாகிய அகண்டாகாரத் தியானத்திற்கு அனுகுணமாய் நம்முடைய உடம்பை ஆக்கிக்கொள்ளவேண்டும். 'உரைத்தன வற்கரி ஒன்று முடிய நிரைத்த' என்கிற பாடல் இப்படிச் சொல்கிறதென்று மாத்திரம் இங்கே சூசுப்பிக்கப்பட்டது.

அடுத்தபடியாக, உள்ளமானது கறுப்பு நிறமான தார் பூசினதுபோலவும் அல்லது புகை அடைந்ததுபோலவும் உள்ள கண்ணுடிபோல இருக்கிறதே; அதை நன்ருய்த் தண்ணீர் சுண்ணும்புபோட்டுத் தேய்த்து, மறுபடியும் தண்ணீர் ஊற்றிக்கழுவி, பக்குவமாய்த் துடைத்துக் காய வைத்தோமானல், சுத்தமான பளிங்காய் உள்ளே இருப்பதை வெளியே காட்டவும், வெளியே இருப்பதை உள்ளே காட்டவும் ஏற்ற அனுகுணமாக அது ஆகிறது. அதுபோலத்தான் உள்ளம் இவ்வாறு சுத்திசெய்யப்படுமானல், உள்ளே இருக்கிற பரம்பொருளை நமக்குக் காட்ட அது துணைசெய்யும். நாம் அதன்மூலமாக உள்ளே இருக்கும் பரம்பொருளை அறிவதற்கும் அது துணையாய் இருக்கும். ஆதலினல் நம்முள்ளே இருந்துகொண்டு அப்பாலும் இப்பாலும் காகத்தினது கண்மணிபோல யோகக்காட்சிக்கு உபயோகப்படுவதாயிருக்கிற உள்ளத்தை நாம் வசப்படுத்தவேண்டி இருக்கிறது என்று சொல்லியிருக்கிருர்கள். கண்ணுடி உவமை மன அடக்குமுறைக்கு ஏற்ற ஒன்ரும்.

அடுத்தபடியாக அம்மனத்தை ஒடுக்குவதற்குச் சொல்லப்பட்டிருக்கிற உபாயம்தான் பிராணுயாமம், பிரத்தியாகாரம் என்பன. தாரணையையும் அதில் சேர்த்துக்கொள்ளலாம். மனஅடக்கம் அடைதற்கு அவ்வளவு தூரம் பிரயாசைப்படவேண்டியிருக்கிறது. சாதாரணமாய் ஓடிக்கொண்டிருக்கிற தண்ணீரில் மிதந்து வருகிற ஒரு துரும்பை

அப்படியே நிற்கச்செய்ய நாம் விரும்பினால் அந்தத் தண்ணீரை நிறுத்தி விட்டால் துரும்பு நின்றுபோம். 'தோயம் நிற்கத் துரும்பு நின்றுபோம்' என்பது பழமொழி. ஆகவே, தண்ணீரை மடைகட்டி நிறுத்துவதுபோல மேலும்கீழுமாய் ஓடிக்கொண்டிருக்கிற, விரயத்தை நமக்கு உண்டாக்கிக் கொண்டிருக்கிற, லாபகரமானதாகச் செய்யப்பட வேண்டியுள்ள 'பிராணன்' என்று சொல்லப்படுகிற வாயு அமைக்கப்பட்டுள்ளது. இதனை நாம் மிகச் சிக்கனமாக வெளிவிட்டும் உள்ளே இழுத்தும் சிரமப்படுத்தியும் ஸ்தம்பித்தும் நாடிகளிலே பரப்பியும் மேலேற்றியும், இவ்வாறெல்லாம் நடத்தப் பழகவேண்டியிருக்கிறது. ஆகவே, வாயுவை நிறுத்தினால், அதோடுகூடச் சவாரிசெய்து கொண்டேயிருக்கின்ற மனம், தண்ணீரை நிறுத்தினால் அதிலே ஓடிக்கொண்டிருக்கிற துரும்பு நிற்பதுபோல நின்றுபோம் என்று கூறியிருக்கிறார்கள். மனத்தை நிறுத்துவதற்கான உபாயம் இதுவாம்.

அதற்கு அடுத்தபடியாயிருப்பது, ஞானமயமாய் இருந்துகொண்டிருக்கிற, உள்ளே இருக்கின்ற ஆன்ம ஒளி. அதற்குத் துணையாகப் பொறுமையும் கொடுக்கப்பட்டுளது. இறைவன் அதோடுகூட மிகப் பொறுமையாக இருந்துகொண்டிருக்கிறான். பொறையுடைமை அதிலே இருக்கின்றது. அதற்கு அப்பால் அதற்கு வழி காட்டுவதற்காகப் பெரியாரைத் துணைக்கோடல் உதவுகிறது. தன்னுடைய அம்சமான 'சித்' என்கிற ஒரு ஒளியை அதன் பக்கத்திலேயே அமைத்தும் வைத்திருக்கின்றான். இவ்வாறு அமைத்து வைத்திருக்கிற பக்கம்தான் 'கொல்லைப்புறம்' என்பது. மூலாதாரம் என்று சொல்லப்படுகின்ற இடமே இது. மூலாதாரத்திலே இவ்வாறு பொறுமைகொண்டும், தெய்வ ஒளியின் உதவியைக்கொண்டும் ஆன்மாவை · அறிவொளியை இருட்டிலே ஒளிப்பொருளாக இருந்து கட்டுப்பட்டிருக்கிற தன்மையிலிருந்து எவ்வாறு எழுப்பவேண்டுமோ அவ்வாறு எழுப்பிச் சகஸ்ராரம் என்கிற ஆயிரம் இதழ்க் கமலத்திலே · பிரம்மரந்திர மண்டலத்திலே அதைக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும்.

திருமூலர் ஓரிடத்திலே சொல்லுகிறார்: 'வானத்திலே இருக்கிற சந்திரனைப் போய் நீ எட்டி என்ன பயன்? உனக்குள்ளேயே சந்திரன் இருக்கிறது என்று. அண்டத்திலே இருக்கிறதெல்லாம் பிண்டத்திலுமிருக்கிறது என்று தலைவர் சொன்னார்கள். உள்ளத்திலேயே சந்திரமண்டலம் இருக்கிறது. அதில் நீ ஆராய்ச்சிசெய்வாயானால், அங்கேபோய் நீ கூடுவாயானால் உன்னை அறியாத இன்பத்தை நீ அடைவாய் என்றும் திருமூலர் கூறுகிறார். அப்படியின்றி, புவனவெளியிலே, ஆகாச மண்டலத்திலே தேய்வதும் வளர்வதுமாக இருந்துகொண்டிருக்கிற சந்திர மண்டலத்தை நீ அடைந்து என்ன பயன்? உலகத்தைச்சூழ வலம் வந்துதான் நீ என்ன பெறப்போகிறாய்? என்று பல பாடல்களில் அவர் கேட்டும் இருக்கிறார். ஆகவே இந்த, அகண்டாகாரமான ஜோதியோடு ஆன்ம ஜோதியை ஒன்றுபடுத்தி நாமும் அதோடு இரமிப்பதாயிருந்துகொண்டிருக்கிற இந்த வாசத்தை, உண்மையிலேயே ஜிதேந்திரியர்களாகி உண்மையான ஜீவன்முக்தர்களானால் அடையமுடியும். இவ்வாறு மூன்றுவதாயிருக்கிற அறிவைக் கட்டுப்படுத்துதல் உயிரைக் கட்டுப்படுத்திக்கொள்ளுதல், அல்லது உயிரை விகாசப்படுத்திக்கொள்ளுதல் என்கின்ற நிலை இருக்கிறதே, அதை அடைவதற்கும் மார்க்கங்களை அஷ்டாங்க யோகத்திலே நமக்குச் சொல்லிவைத்திருக்கின்றார் திருமூலர். அவர் கூறியிருக்கிற இம்மூன்று உபாயங்களும் ஓரிடத்திலேயே இருந்து கொண்டிருக்கின்றன.

குதிரையை அடக்குவதுபோல உடம்பை ஆசனத்தால் அடக்கு; கோலால் குரங்கை அடக்குவதுபோல, கோலை மாற்றிமாற்றித் தட்டிக் குரங்கை அடக்கி அதன் கையிலேயே கோலைக் கொடுப்பதுபோல, முன்னும் பின்னும் போய்க்கொண்டிருக்கிற காற்றினாலே நீ மனத்தை அடக்கி அதனிடத்திலேயே ஒப்படைத்துவிடு; இப்படிப் பிராணாயாமப் பயிற்சிக்குக் குரங்கை உபமானமாக வைத்தும் சொல்லியிருக்கிறார்.

அதற்கு அடுத்தபடியாக, யானையைப் பாகன் அங்குசத்தால் குத்தி அடக்குகிறது

போல, நீ உன்னுடைய ஆத்மபோதத்தை அல்லது ஜீவபோதத்தை ஒழிப்பதற்கு உபாயத்தை மேற்கொண்டு, சிவபோதம் அல்லது பதிஞானம் • அதை அங்குசமாகக் கொள்ளுகிற நிலைமைக்கு நீ வந்துவிட்டால் அது உன்னை அடக்கி நடத்தும்; அப்போது நீ பாகனைச் சுமக்கும் யானையைப் போல அடங்கிவிடுவாய்; அப்போதுதான் பாகனாலே நடத்தப்படுகிற யானை நல்ல பாதையிலே சென்று ஊறு ஒன்றும் அடையாமல் ராஜாவுக்குப் பயன்படுகிறதுபோல உன்னுடைய ஜீவனும் பயன்படும்; நீயும் பயனடைவாய் என்று நமக்கு அர்த்தமாகும்படி ஒரே வாக்கியத்திலே மூன்று உபமானங்களுக்கும் அந்தச் சொற்றொடர் பிரிமொழிச் சிலேடையாய்ப் பிரிந்து பிரிந்து அர்த்தமாகி, உடம்புக்கு ஒன்றும், உள்ளத்திற்கு ஒன்றும், உள்ளுக்குள்ளே இருக்கும் ஆன்மாவுக்கு ஒன்றுமாக அவற்றை ஒழுங்குபடுத்தும் நிலைக்குப் பயன்படும் உண்மைகளை மந்திரமாகவே கொடுத்து இருக்கிறார். ஆகவே, இப்படி ஒரே வாக்கியத்தில் பல செறிவுகள்கொண்ட கருத்துக்களை அடக்கிக்கொண்டிருக்கிற மந்திரங்கள் திருமந்திர நூலிலே இருக்கின்றன. அவ்வரிகளை நாம் நினைத்துக்கொண்டிருந்தாலே இந்தப் பிறப்பில் உய்வு கிடைக்கும். உய்திவழிகாட்டும். இந்த வரியைச் சிந்தனை செய்யவைத்த ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய திருவடிகளுக்கு நன்றியைச் செலுத்தி ·வணக்கம் தெரிவித்து உரையை முடிக்கிறேன்.

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவதும் ஆமே.

— திருமந்திரம்.

# இரண்டாம்நாள் பேருரைகள்

**தலைமையுரை :**

ஆதீன மகாவித்துவான்

## திரு. கே. ஆறுமுக நாவலர் அவர்கள்,

நாகர்கோயில்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கும் முனிபுங்கவர்களுக்கும் பெரியோர்களுக்கும் வணக்கம். என்னையும் பொருட்படுத்தி இந்தப் பெரும் பதவியை அளித்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் கருணைப் பிரவாகத்திற்கு என்னால் என்ன கடப்பாடு செய்யமுடியும்.

இந்த இரண்டாவது நாளிலே நடைபெறுகின்ற அருமையான பொருள் 'அட்டாங்கயோகம்' என்று சொல்லப்படுகின்ற, திருமந்திரத்தின் மூன்றாவது பகுதியாகும். அதிலும் இயமம், நியமம், ஆசனம் என்கிற மூன்று பகுதிகள்தான் இன்றைய ஆராய்ச்சியிலே இருக்கின்றன.

நம்முடைய ஒப்புயர்வற்ற சைவசமயத்திலே முக்தியை அடைவதற்குரிய மார்க்கங்களை நமது சாஸ்திரங்கள் வரையறுத்துப் பேசுகின்றன. அவையாவன : மற்றைய சமயங்கள் சொல்லுவதுபோல அல்ல நம்முடைய சமயம் பேசுகிறது. இகலோகபோகத்தை அனுபவிப்பதே முக்தி என்று உலகாயத மதங்கள் பேசுகின்றன. பெரிய புண்ணிய லோகங்களிலே சென்று இன்பங்களை அனுபவிப்பது முக்தி என்றும், அஷ்டகுண முக்தி என்றும், ஞானம் பெறுவதே முக்தி என்றும், சிவனைச் சேர்தலே முக்தி என்றும் பேச; நம்முடைய சைவசித்தாந்தம் என்ன பேசுகிறது என்றால், 'சிவன் அடியே சேரு முத்தி' என்று பேசுகின்றது. சிவபெருமானுடைய திருவடியை அடையத் தகுந்த முக்தியை நான் இங்கே கூறுகிறேன் என்று நமது சந்தானகுருதேவர் அருளிச்செய்து இருக்கின்றார். 'சிவனடியே சேரும் முத்தி செப்புவது இங்கு யாமே'. நமக்கு வேறு என்ன வேண்டும்? சிவபெருமானுடைய திருவடியை அடைகின்றதாகிய பேற்றை அளிக்கின்ற முக்தி இங்கே பேசப்படுகிறது.

உலகத்திலே தற்கால மனிதர்களுக்கு மோட்சம் என்று சொன்னால் கொஞ்சம் பிடிக்காது. மோட்சம் வேண்டுமா? என்று கேட்டாலும் 'அது இப்பொழுது அவசியம் இல்லை' என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். அந்த மோட்சத்தை அடைவதற்கு உரிய மார்க்கங்களைப் பலர் பலவகையிலே பேசுகிறார்கள். யுக்திக்கும் அனுபவத்திற்கும் பொருத்தமான முறையிலே நம்முடைய சமயம் பேசுகிறது. அதிலே தலைசிறந்த மார்க்கம் என்று சொல்வது, ஆரம்பநிலை - முதல் மார்க்கம் - சரியை என்பது. இரண்டாவது மார்க்கம் கிரியை என்பது. மூன்றாவது மார்க்கம் யோகம் என்பது. நான்காவதுதான் ஞானம் எனப்படுவது. ஆகவே, நான்கு வகையாக வகுத்தார்கள். சரியை தாசமார்க்கம் என்றும், கிரியை சத்புத்திர மார்க்கம் என்றும், யோகம் சகமார்க்கம் என்றும், ஞானம் சன்மார்க்கம் என்றும் கூறப்படுகின்றது. சரியையிலே நிற்கின்றபொழுது ஆண்டவன் நமக்கு எஜமான். நாம் அவனுடைய வேலைக்காரன். அதுதான் தாசமார்க்கம் என்று சொல்லப்படுவது. அதிலிருந்து நாம் ஏறிப்போகின்றபோது ஈசுவரன் நமக்குத் தந்தையாகிவிடுகிறான். நாமெல்லாம் அவனுடைய பிள்ளைகளாகி விடுகிறோம். அந்த மார்க்கத்திற்குச் சத்புத்திர மார்க்கம் என்று பெயர். அதற்கு அடுத்தபடியாக, மேலே ஏறிச் செல்லுகிறபோது ஈசுவரன் நமக்கு நண்பனாகிவிடுகிறான். அதுதான் படிப்படியாக மேல் ஏற்றம் என்பது. அப்படி ஆகிறபோது அந்த

மார்க்கம் சகமார்க்கம் அல்லது யோகமார்க்கம் என்று சொல்லப்படும். ஒரு யோகிக்கும் ஒரு சிவத்துக்கும் என்ன சம்பந்தம் என்றால் இருவருக்கும் நட்புத்தன்மை - நெருங்கிய தொடர்பு. ஒரு ஞானிக்கும் ஒரு மனிதனுக்கும் என்ன சம்பந்தம்? ஈசுவரனுக்கு என்ன சம்பந்தம் என்றால் ஒரு நாயகி-நாயகபாவம். ஒரு மனைவிக்கும் ஒரு புருஷனுக்கும் இருக்கின்ற இணைப்பு எத்தகையதோ அப்படி அவர்கள் இசைந்துவிடுகிறார்கள். அதைச் சன்மார்க்கமென்று நூல் வரையறைசெய்யும். இதுவரையில் நான் சொன்னது அத்தனையும் சேர்த்து ஒருபாடலிலே சிவஞான சித்தியிலே சொல்லப்படும்.

சாதாரண தாசமார்க்கத்திலே நிற்கின்றவர்களும் முக்தியை அடைகின்றார்கள். பரம ஞானியும் முக்தியை அடைகின்றான். ஆனால், அவரவர்கள் அடைகிற முக்திக்குப் பேதம் உண்டு. சரியை மார்க்கத்திலே நிற்கின்றவன் சாலோக பதவியை அடைகின்றான். கிரியை மார்க்கத்தில் நிற்கின்றவனே சாமீப்பிய பதவியை அடைகின்றான். யோகியோ சாரூப்பிய பதவியை அடைகின்றான். இனி, ஞானியோ சாயுஜ்யபதவியை அடைகிறான்.

ஞானமார்க்கம் சிறந்ததுதான். ஆனாலும், யோகமார்க்கமும் அதனோடு ஒப்பிட்டுப் பேசக்கூடிய பெருமையுடையதாகிறது. இதைச் 'சன்மார்க்கம், சகமார்க்கம், சத்புத்ர மார்க்கம், தாதமார்க்கம் என்றும் சங்கரனை அடையும் நன்மார்க்கம் நாலு' என்று வரையறை செய்தார். இதை மாற்ற யாராலும் முடியாது.

அழகிய உவமை இதற்குத் தாயுமான சுவாமிகள் கூறியிருக்கிறார். ஒரு தோட்டத்திலே ஒரு செடியை நாம் வைத்து வளர்த்தால் அதிலே உண்டாகிற அரும்பு மிக முக்கியமானது. அரும்பு முக்கியமா? பழம் முக்கியமா? என்ற ஒரு கேள்வியைக் கேட்டால் என்ன பதில் சொல்லுவது? அரும்பு வாராமற்போனால் பழமே காண முடியாது. அரும்பு பிடித்ததா? என்று கேட்டால் தோட்டக்காரன் மிக மகிழ்ச்சி அடைவான். நம்முடைய மனிதர்களைப் பார்த்து, உனக்கு அரும்பு பிடித்திருக்கிறதா? என்று கேட்டால் என்ன சொல்வார்கள்? நாலு பிள்ளைக் குழந்தைகள், ஐந்து பெண் குழந்தைகள் இவ்வளவுதான் அரும்பு என்று நினைக்கிறார்கள். அது அல்ல அரும்பு என்பது. அரும்பு என்பது தாசமார்க்கம் - சரியை மார்க்கம். அரும்பு பிடித்தால் அது மலரும். மலர்ந்தால் அது காய்க்கும். காய்த்தால் அது கனியாகும். மெஞ்ஞானச் செல்வராகிய தாயுமானசுவாமிகள் கூறுகிறார்கள் :

" விரும்பும் சரியை முதல்
மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய் கனிபோல்
அன்றோ பராபரமே."

ஒரு பட்சியானது ஆகாசத்திலே வேகமாகப் பறந்து செல்லுகிறது. பட்சியைப் பார்ப்பானேன்? இப்போது ஆகாய விமானம் பறந்து செல்லுகிறது. அதற்குக் கருவியாக இருப்பது எது? ஆகாய விமானம் செய்தவன் பறவையைக்கண்டுதான் படித்தான். பறவைக்கு இரண்டு பக்கத்திலும் இரண்டு சிறகுகள் இருக்கின்றன. அதைச் சரியானபடி ஓட்டுவதற்கு - அதற்கு வேண்டிய காரியங்களை நடத்துவதற்குச் சரியான ஓர் உறுப்புத்தான் வால் என்பது. பறவைகளுக்கு வால் ஏன் இருக்கிறது? நமக்கு வால் கடவுள் தரவில்லையே என்றால் நமக்கு ஆகாயத்தில் பறக்கவேண்டிய அவசியம் இல்லை. வேண்டுமானால் விமானத்திலே ஏறிப் பறக்கலாம். பறவை பறப்பதற்குச் சரியானபடி அதற்கு வேண்டிய வழியை வகுத்துக்கொடுக்கின்றது வால். இரண்டு சிறகும் அடிக்கிறது. பறவை குறிப்பிட்ட இடத்திலே சென்று சேர்ந்துவிடுகிறது. ஏன் அந்த உவமையைச் சொன்னேன் என்றால், நமக்கு யோகம் என்று சொல்வதுதான் ஒரு வால். அதில் இரண்டுபக்கத்துச் சிறகுகளும் பக்தியும் ஞானமும் ஆகும். பக்தியும் ஞானமும் இருந்தாலும் யோகம் இருந்து செலுத்தாமல் போய்விட்டால் ஞானத்தால் அடையக்கூடிய ஒருபேற்றினை அடையமுடியாது. ஆனதினாலே பக்தியும் ஞானமும் அந்த யோகமும் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவே இருக்கிறது. மூன்றும் ஒரு

பறவைக்குத் தேவைஎன்பதுபோல, நமக்கு யோகமும் பக்தியும் ஞானமும், அவசியமாக இருக்கின்றன. இதை நமது திருமூலதேவர்,

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே.

என்று சொல்லிக் காட்டுகிருர். அஷ்டாங்கங்கள் வேண்டும் என்று சொல்லுகின்ருர்கள். இதைப் பற்றிய சரியான விளக்கம்போல பதஞ்சலி யோகசூத்திரம் முதலியன இந்த யோகநிலையைப்பற்றிப் பேசுகிறது. அனேகமாக அவைகள் ஒருபுடை ஒத்திருக்கின்றன. 'யோகம்' என்று இப்பொழுது சொன்னல் சரீரத்தை வளைத்து, முறித்து, தலைகீழாக நின்று ஹடயோகம் செய்வதைத்தான் பிற நாட்டு வீரர்களும் நம் நாட்டுச் சூரர்களும் விரும்புகிருர்கள். அது வெறும் ஹடயோகம். உடம்பை மாத்திரம் இது வலுப்படுத்தி, அவர்களை நீண்டநாள் நோயற்ற வாழ்வில் இருக்க உதவும். இதைப் பற்றி மகிழ்ச்சி அடையலாம். ஆயினும், ஒரு மலை நீண்ட நாள் இருக்கிறது ; ஒரு மரம் நம்மைவிட அதிக நாள் இருக்கிறது என்ருல், அது என்ன பலனை அடைந்தது? நாம் இருக்கிற நாளை ஏற்றமுடைய நாளாக்கி இறைவன் திருவருளுக்கு ஆளாகின்ற ஒரு நிலைதானே நமக்கு அவசியமானது? மானிடப்பிறப்பின் மாண்பு என்பதும் அதுதானே. அப்படி ஹடயோகத்தைப் பார்க்கிலும் நமது சிவ யோகம் என்பது சிறந்த யோகமாகும்.

இந்த ஒரு யோகநிலையைப்பற்றி நமக்கு ஒரு யோகி சொல்லியிருக்கிருர். திருமூல தேவர் ஒரு யோகிதாஞ என்ருல் - அவர் சகல சித்திகளும் பெற்றவர் என்று தெரிகிறது. 'கயிலாயத்து ஒரு சித்தர்' திருமூலர். அஷ்டமாசித்தி கைவரப்பெற்றவர்.

அதுதான் உண்மையா? என்று கேள்வியைக் கேட்டால் எந்த விமானத்தினுடைய உதவியும் இல்லாமல் பறந்து வருகின்ருர் என்று சொல்கிற நிலைமையைப் பார்க்கிறபோது அவரிடத்திலே எத்தனை சித்திகள் இருக்கின்றன என்று தெரியும். திருமூலர் பசுமாடுகளுக்காக ஆயனுடலில் பிரவேசித்தார் என்கிறபோது கூடுவிட்டுக் கூடு பாய்கின்ற சித்தியும் அவருக்கு இருந்தது என்று தெரிகிறது. திருவாவடுதுறையைஅடைந்து மூவாயிரம் வருடம் உயிரோடு வாழ்ந்தார் என்று சொல்வதிலிருந்து அவர் சிறந்த யோகி என்று தெரியும். மூவாயிரம் வருடங்கள் வாழ்ந்திருந்து, ஒவ்வொரு ஆண்டிலும் கண்ட உண்மைகளை 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று நமக்காக அருளிச்செய்த அவருடைய கருணைக்கு நாம் என்ன நன்றி செய்யமுடியும்? அப்படி அற்புதமான செயல்களைச் செய்த அவர், யோகநிலைகளைப்பற்றி நமக்குக்காட்டுகிருர்.

நம்முடைய அடியார்களிடத்திலும் இன்னும் சில பெரியவர்களிடத்திலும் பெண்களிடத்திலும் யோகநிலை இருந்தது என்று பெரியபுராணம் முதலிய நூல்களிலே தெரிகிறது. அப்பர்சுவாமிகளைக் கடலிலே தள்ளியபோது கல்லையே தெப்பமாகக்கொண்டு கரையேறி இருக்கிருர். நமது திருவாவடுதுறை ஆதீனத்தைச்சேர்ந்த குருமூர்த்திகள் எங்கள் பக்கத்திலே சுசீந்திரத்திலே மடத்திலேயிருந்து கோவிலுக்குச் சென்று வழிபடுவதற்குப் போகிறவழியிலேயுள்ள குளத்தின் மேலுள்ள தண்ணீரின் வழியாக நடந்து செல்லுவார்கள் என்று கேட்டிருக்கிறேன். இப்படியுள்ள சித்தர்கள் நம் ஆதீனத்தில் சிறந்தகுருமார்களாக இருந்திருக்கிருர்கள். அப்படி அவர்களுக்கு அத்தனை சித்திகளும் இருந்தது என்று தெரிகிறது. தண்ணீரின் மேலே நடக்கிறது என்று சொல்வது ஏன் முடியவில்லை? என்று ஒரு கேள்வி கேட்டால் அந்தச் சித்திகளால் உடம்பைத் தன் வசப்படுத்தி, உடம்பையும் இலகுப்படுத்தி உடம்பு என்பது துரும்பிலும் கனம் குறைந்ததாக ஆக்குகிற ஒருவல்லமை யாரிடத்தில் வந்ததோ அவர்களே அந்த உடம்பைக் கொண்டு அப்புறத்திலே போவார்கள். சின்ன உடம்பாக நம்முடைய உடம்பை ஆக்க முடியும். பெரிய உடம்பாகவும் ஆக்க முடியும். அனுமான் விசுவரூபத்தைச் சீதா தேவிக்குக் காட்டினுர் என்று கேட்டிருக்கிரேம். அதற்கு முன்னே சின்னக் குரங்குக் குட்டியாகத்தான் இலங்கையைச் சாடினுர்.

இந்தப் பெரிய அபாரமான உயர்ந்த வடிவமும், சின்ன வடிவமும் எடுக்கக்கூடிய ஒரு சித்தி அனுமனிடத்திலே இருந்தது என்று தெரிகிறது.

நம்முடைய அப்பர்சுவாமிகளை ஒரு கல்லோடு கட்டி, கடலிலே தள்ளியபொழுது கல்லையே தெப்பமாகக்கொண்டு அவர் கரை ஏறினரென்றால் இந்தக் காலத்திலே உள்ளவர்கள் நம்பமாட்டார்கள். அது எப்படி முடியும்? என்று கேட்ட கல்லூரி மாணவன் ஒருவனுக்கு நான் ஒரு உதாரணம் சொன்னேன். ஒரு ஆணியை எடுத்து கார்க்கிலே செருகித் தண்ணீரில் போட்டேன். அது மிதந்தது. ஆணியை மாத்திரம் தண்ணீரில் போட்டேன். ஆணி அமிழ்ந்துபோயிற்று. கார்க்கிலே ஆணியைச் செருகிப்போட்டால் தான் அது மிதக்குமென்ற உதாரணத்தைச் சொன்னேன். ஆணி எப்படி மிதக்கிறது? கார்க்குக்குள்ளே ஆணி நுழைந்துகொண்டால்தான் அது மிதக்கிறது. அது தன்னை இலகுப்படுத்திக்கொண்டது. இதுபோன்ற மகான்கள் செயற்கரிய செயல்களைச் செய்கிறார்கள் என்றால், திருவருள் என்று சொல்லுகிற கார்க்குக்குள்ளே அவர்கள் புகுந்து கொண்டதால் அது மிதக்கின்றது என்று அந்த மாணவனுக்குச் சொன்னேன்.

சிரசாசனம் என்று ஒரு ஆசனம் போடுவார்கள். சிரசாசனத்திற்குத் தலைவி யார்? சிரசாசனத்தின் தலைவி நமது காரைக்கால் அம்மையார். காரைக்கால் அம்மையார் தலையாலே நடந்து கயிலையிலே ஏறினர். முடியுமா இப்பொழுதுள்ள சிரசாசனக்காரர்களுக்கு. எங்கள் ஆசனச்செல்வி, காரைக்கால் அம்மையார் தலையாலே நடந்து கயிலையங்கிரியிலேசென்றாள். என் அப்பன் பரமேசுவரன் 'அம்மா! வந்தனையோ' என்றார். அவர்களைத்தான் அம்மா! என்றானே தவிர வேறு எந்தப் பெண்மணியைச் சொன்னார்? அப்படிச் சிரசாசனத்திலே பயின்ற காரைக்கால் அம்மையார் தலையாலே நடந்து கயிலைக்குச் செல்லும்படியான பாக்கியத்தைப் பெற்றார். காலினாலேகூட நடக்கமுடியாத நமக்கு அந்தப் பதவி எப்படிக் கிடைக்கும் என்பதை நாம் யோசிக்கவேண்டும். இதற்கெல்லாம் முதல்காரணமாயிருப்பது எது?

சரியையில் சரியை. சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் உண்டு. கிரியையிலும் கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் உண்டு. யோகத்திலும் யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் உண்டு. ஞானவான்கட்கும் கிரியை உண்டு. ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் உண்டு. ஆரம்பத்திலே சொல்லுகிற இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம் நான்கும் சரியையில் சேர்ந்தது.

அதற்கு அடுத்தபடியாயுள்ள பிரத்யாகாரம், தாரணை என்ற இரண்டும் கிரியையைச்சேர்ந்தன. யோகத்தில்யோகம் என்று சொல்லப்படுவது. அதுதான் யோகத்தில் யோகம். தியானம், சமாதி என்று சொல்லுகிறோமே, அதில்தான் ஞானத்தை அனுபவிப்பது. ஆரம்பநிலையிலே ஒருவன் யோகி ஆகிவிடமுடியாது. ஒருவன் பள்ளிக்கூடப் பரீட்சையிலே தேறவேண்டுமானால் அவன் ஒவ்வொரு வகுப்பாகத் தானகவே சிரமப் பட்டுத்தான் மேலே போகவேண்டும்.

யுக்திவாதம் எதற்கும் இடம் கொடுக்காமல், இராஜாங்கத்தில் அமர்ந்த நம் சைவ சித்தாந்தம் என்ன சொல்லுகிறது. 'முயற்சி செய், கிடைக்கும்' என்று சொல்லுகிறது. பள்ளிக்கூடத்தில் சின்ன பிள்ளைகளைப் படிக்கச் செய்வதுபோல, படிக்கச் செய்தார்கள் சரியை மார்க்கத்திலே. கிரியை மார்க்கத்தில் நடுத்தரமான வகுப்பு. யோக மார்க்கத்தில் கல்லூரிப்பாடம். இத்தனையும் படித்தால்தானே அவருக்கு ஒரு பி. ஏ. பட்டம் கிடைக்கும். அதுபோல், படிப்படியாக சைவ சித்தாந்தம் சோபானக் கிரமமாக மேலே ஏறிச்செல்ல நம்மைக் கற்பிக்கிறது. வெறும் குருட்டுத்தனமாக, நீ நம்பு, இல்லையானல் கெட்டுப்போவாய் என்று சொல்லவில்லை. 'உன் யுக்தியை இங்கே வை, உன் உள்ளத்தை இங்கே கொடு; தருகிறேன் உனக்கு அறிவு' என்று பேசுகிறது. மறுத்துப் பேசுகிறவனுக்குத் தக்க பதிலையும் கொடுத்து அவனை மனம் திரும்பும்படிச் செய்கிற ஒரு சமயம் உலகத்திலேயே உண்டு என்றால்

அது நமது சைவசமயம் என்பதிலே எங்கும் எப்போதும் ஆட்சேபம் கிடையாது. எத்தனையோ எதிர்வாதக்காரர்களோடு நேரில் பேசியும் நம்முடையசமயத்தின் அருமையை அவர்களுக்குப் புகட்டியபோது தலைவணங்கிச் செல்லத்தான் முடிந்ததேதவிர, வெற்றி கொள்ள முடியவில்லை. அத்தகைய சிறப்பு வாய்ந்தது நம் சமயம்.

ஒருவன் யோகியாக வேண்டுமானால் அவனுக்குச் சில குணங்கள்வேண்டும். இயமம் என்ற ஒன்றை முதலிலே நடைமுறையில் கொண்டுவரவேண்டும். இயமம் என்ன என்றால் எந்த உயிருக்கும் எந்தவிதமான ஆபத்தும் உண்டாக்காமல் இருக்கவேண்டும். எல்லா உயிர்களிலும் நம் ஆண்டவன் உயிர்க்கு உயிராய் இருக்கின்றான். எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருக்கவேண்டும். இதைத்தான் நம் சைவசித்தாந்தம் வற்புறுத்துகின்றது. இயமத்திலே முதல்படி அஹிம்சை - கொல்லாமை. கொல்லாமை ஏன் வரவேண்டும் என்றால், சர்வ ஜீவராசிகளிடத்திலும் ஒரே கடவுள் வியாபித்திருக்கிறான். இந்த எண்ணம் வரவேண்டும். அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகளைக் கண்டுபிடித்து, உயிர்களைக் கொலைசெய்துதான் வாழவேண்டும் என்று சொல்லுகிற அந்தக் கொள்கை அடிபட வேண்டுமானால் நம்முடைய சமயம் வேற்றுநாடுகளிலேயும் பரவவேண்டும். முதல்படியாக அஹிம்சையைக் கடைப்பிடிக்கவேண்டும். அதாவது உயிர்கட்கு இம்சை செய்யக்கூடாது. கொல்லவும் கூடாது. கொன்றதைத் தின்னவும் கூடாது. மாமிசக்கொழுப்பு ஏறினால், அவன் ஒரு யோகியாக வரமுடியாது. கொல்லுகிற வலுத்த உள்ளம் படைத்தவன் ஒரு நிரந்தரமான யோகியாக இருக்கமுடியாது என்று கொண்டுதான் யோகாப்பியாசத்தில் சரியை நிலைக்கு வருகிறவன் முதலிலே கொல்லாமையைக் கைக்கொள்ளவேண்டும் என்று சொன்னார். அதுபோலத்தான் நம்முடைய வாழ்க்கையில் உண்மைத்தன்மை இருக்கவேண்டும் என்கிறார்.

உள்ளத்தின் தன்மை உண்மை என்று வியாக்கியானம் சொல்வார்கள். அகிம்சை மாத்திரம் இருந்தால் போதாது. சத்திய சந்தனாக இருக்கவேண்டும். வாயின் தன்மையே வாய்மைதான். உள்ளத்தின்தன்மை உண்மை. மெய்யின் தன்மை மெய்ம்மை. திரிகரணங்களினாலும் சுத்தனாக இருக்க வேண்டும் என்று காட்டத்தான் உண்மை, வாய்மை என்ற சொல்லை 'சத்தியம்' என்ற ஒரு சொல்லுக்கு வைத்தார். ஆகையால், அந்தத் தன்மையில் அவன் வாழவேண்டும். அது மாத்திரமல்ல. அவன் தன்னுடைய உடம்பை உலகியலில் அலைக்கழிக்காமல் பிரம்மசரிய விரதத்தை மேற்கொண்டவனாக விளங்கவேண்டும். பிரம்மசரியம் என்றால் மனைவியோடு வாழக்கூடாது என்ற அர்த்தத்திலே அல்ல. ஒரு மனைவியைக் கல்யாணம் செய்துகொண்டு லௌகீகத்திலேவாழலாம். ஆனால், இராமச்சந்திரன் - சீதையைப்போல் வாழ்ந்துகொள்ள வேண்டும். பிரம்மசரியத்தை நன்றாக அனுஷ்டித்து வந்தால் அவனுடைய உடம்பு நீடித்து இருப்பதற்கும், உடம்பானது யோகநிலையிலே பழகுவதற்கும் பயன்படும். ஆகையால், பிரம்மசரியம் அவசியம் என்றார்.

இந்த மாதிரியான பல நற்குணங்களை இனிமேலே வருகிற சொற்பொழிவாளர்கள் பேசப்போகிறதை நான் கவர்ந்துகொள்ள விரும்பவில்லை. நான் அதனுடைய எல்லைக் கோட்டை மாத்திரம் காட்டிவிட்டால்தான் என் பின்னால் பேச இருக்கின்றவர்களுக்கு வரையறை செய்துகொடுத்ததாகும்.

நம்முடைய கருணைசமுத்திரமான ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஒவ்வொரு தலைப்பையும் நன்றாக விசாரணை செய்து, உள்ளே நுழைந்து, அதில் இருக்கும் அரும் பொருள்களை உலகத்திற்குச் சொல்லத் திருவுளம் பற்றிய அந்தத் திருவுளத்திற்கு நாம் என்ன கைம்மாறு செய்ய முடியும்? இப்போது கொஞ்சகாலத்திற்கு முன்னால் திருமந்திரம் என்று சொல்கிற நூலையே யாரும் அறிந்திருந்தார்களோ? அறியவில்லையோ? சில அங்கங்கே மறைந்து கிடந்தது. இப்பொழுது எங்கு பார்த்தாலும் திருமந்திரத்திற்குக் கட்டுரைகளும் நூல்களும் விரிவுரைகளுமாகத் திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து நிறையப் பெருகி, கருணைவெள்ளம்

போலப் பெருக்கெடுத்துப் போவதனுலே குழந்தைகள்கூடத் திருமந்திர உதாரணங் களை வீடுகள்தோறும் சொல்கிருர்கள் என் பதை நான் செல்லும் இடங்களிலெல்லாம் கண்டிருக்கிறேன். திருமந்திரம், திருமந்தி ரம் என்று எல்லோரும் சொல்லுகிருர்கள். திருமந்திர நூல் எல்லோர் கையிலும் இருக் கிறது. குறிப்பெடுத்துப் படிக்கின்ருர்கள். திருமந்திரம் ஒன்றுதான் நம்முடைய சமய வாதத்தில் எவனையும் எதிர்த்து நிற்பதற்குச் சரியான ஆற்றல் வாய்ந்த ஒரு அறிவைத் தருகின்ற பெரிய தெய்வீகநூல் ஆகையால் தான் அஹிம்சை, சத்தியம், பிரம்மசரியம், வேருெருவன் பொருளைத் திருடவேண்டும் என்ற எண்ணம் வராமல் இருப்பது, இவை யெல்லாம் சதாசாரத்தில் சேரும். ஆனுலும், ஒரு யோகிக்கு இந்த இலட்சணங்கள் அத் தனையும் அவசியம் என்று காட்டுகிருர்.

அடுத்தபடியாக நியமம் என்று சொன் ஞர்கள். நியமம் என்று சொல்வதிலே, நல்ல சுத்தத்தன்மை, சந்தோஷம், தபஸ் இதெல் லாம் அவனுக்கு இருக்கவேண்டும். அகந் தூய்மை புறந்தூய்மை என்று சொல்லுகிற இரண்டு தூய்மைகள் - பரிசுத்தத்தன்மை - அவனுக்கு இருக்கவேண்டும்.

"புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்"

என்றபடி அவன் பரிசுத்தனுக இருக்கவேண் டும். கள்ளங்கபடமற்ற சுத்தத்தன்மை இருக் கிறதா என்று அறிவதற்கு ஆண்டவன் ஒருவன் தயாராய் இருக்கிருன். அது வரா மற்போனுல், நாம் யோகி ஆகமுடியாது. ஆகையால்தான் சுத்தத்தன்மை வேண்டும் என்கிருர். மிகச் சந்தோஷமாக இருக்கப் பழகவேண்டும். ஒரு சின்ன காரியத்துக்குங் கூட நாம் பெரிய கவலைப்படுவது வழக்கம். பெரிய துறவிகளும் பெரிய ஞானிகளும் நீங்கலாக இலௌகீகத்திலே இருக்கிற நம் போன்றவர்கள் எல்லாரும் சின்ன காரியத் திற்குப் பெரிய கவலைப்படுவதுண்டு. நட ராஜப்பெருமானைப் பார்த்தால் அவன் எப் போதும் ஆனந்தநடனம் பண்ணிக்கொண் டிருக்கிருன். முருகப்பெருமான் மயில்வா கனத்தில்ஏறி ஓயாமல் ஆடுகிருன். எல்லாத் தேவதைகளுமே சந்தோஷமாக இருப்பத ஞல், சின்னச்சின்ன சங்கடங்களை விட்டு விட்டு, ஒரு யோகி எப்போதும் ஆனந்த மாக இருக்கப் பழகவேண்டும். சிரித்த முகத் துடன் மலர்ந்த வதனத்துடன் இனிய சொற் களைப் பேசுவதோடு மற்றவர்களிடத்தும் சினமே கொள்ளாத ஒரு தன்மையும் அவ னிடத்தில் இருக்கவேண்டும்.

தபஸ் என்ருல் இமயமலையிலே போய், தலைகீழாய் நின்று தவம் செய்யும்படியாகச் சொல்லவில்லை, எவரெஸ்டு முதலிய கொடு முடியைக் கண்டுபிடிக்கச் சென்ற வெள்ளைக் காரர்களில் சிறந்த டாக்டர் சாமுவேல் என் பவர் இமயமலை ஏறி வந்திருக்கிருர். தாம் சென்று கண்ட காட்சிகளைப் படம் பிடித்துக் கொண்டு வந்திருக்கின்ருர். எத்தனையோ மகரிஷிகள் அங்கேயிருந்து தவம் ஆற்றிக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் முன்னிலை யிலே பெரிய கொடிய மிருகங்கள் நாய்க் குட்டிகளைப்போல அங்கே வசிக்கின்றன. உடம்பு தினவு ஏற்பட்டால் அவர்கள்மீது உராய்ந்து கொள்கின்றனவாம். அப்படிப் பார்த்துப் படம் பிடித்து வந்திருக்கிருர். பாம்புகள் மேலே நெளிகின்றன. அப்படி யுள்ள யோகிகள் பலர் இமயமலைச் சாரலில் இருக்கிருர்கள் என்று கிறித்தவராகிய டாக் டர் சாமுவேல் என்பவர் படம் பிடித்துவந்து காட்டுகிருர். அப்படியானுல் நம்முடைய யோகிகள் எண்ணிறந்த பேர்கள் அங்கே இருக்கிருர்கள்; காற்று இல்லாத இடத்திலே இருக்கிருர்கள்; புல் பூண்டுகள் உண்டா காத இடங்களிலே இருக்கிருர்கள் என்றெல் லாம் சொல்லப்படுகிறது.

அப்படியுள்ள மகத்தான ஒரு சமயம் நம்முடைய சமயம். அந்த யோகிகள் அந்த நிலையில் இருக்கிருர்கள். அப்படிப் பெரிய தபஸ் நம்மால் செய்ய முடியாமற்போனுலும், தினசரி, தவம் செய்கிறதாகிய ஒரு பழக்கம் - சீலம் - நம்மிடம் வரவேண்டும். அதைத் தான் தபஸ் என்கிருர். எல்லாவற்றையும் ஈசுவரனுக்கே அர்ப்பணம் செய்வது. எல் லாம் அவனது உடைமை. அவன் நம்மை ஒரு ஆளாக வைத்திருக்கிருன். நம் வீட்டுக் குழந்தைகூட நம்குழந்தை அல்ல குழந்தை

அவன் குழந்தை. வளர்க்கத் தந்தான் நம்மிடத்தில். அந்தக் குழந்தை ஆண்டவனுடைய சொத்து என்று எண்ணுகிறதன்மை வேண்டும். எல்லாம் ஈசுவரனுக்கே உரியது என்ற நிலையிலே வந்தானானால் அவன் நியம கர்த்தன் ஆகிறான்.

இயமம் நியமம் ஆகிய இந்த இரண்டையும் கடந்தால் அடுத்தபடியாக வருவது ஆசனம். ஆசனம் என்பது ஹடயோகம் அல்ல. மனத்தை ஒருமுகப்படுத்துவதற்குப் பலவிதமான ஆசனங்களைத் திருமூலதேவர் சொன்னார். ஆனாலும், நமக்கு எந்த ஆசனம் பொருத்தமாக இருக்கிறதோ நாம் அந்த ஆசனத்தைக் கைக்கொள்ளலாம். அந்த ஆசனந்தான் மனதை ஒருமுகப்படுத்துவதற்கு நமக்கு உதவும். அதனால்தான்,

> ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
> காற்றைப் பிடிக்குங்கணக்கறி வாரில்லை
> காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
> கூற்றை யுதைக்கும் குறியது வாமே.

இப்படித் திருமூலர் திருமந்திரத்திலே சொல்கிறார். மரணமில்லாப் பெருவாழ்வில் அவர்கள் வாழ்வார்கள் என்றுசொல்கிறார். எமன் நேரே வந்தாலும் 'நாம் யார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என்று அப்பர் சுவாமிகள் பாடியதுபோல, நாம் எமதர்மனுக்கும் பயப்படத் தேவை இல்லை என்று சொல்லும் நிலைமைக்கு அந்த யோக நிலை நமக்கு உண்டாகவேண்டும். அப்படி உடலைச்சரிப்படுத்தி வைத்துக்கொண்டார்களானால் அவர்களுக்கு மூச்சை ஏற்றவும் இறக்கவும், நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தவும், அதிலிருந்து உண்டாகின்ற ஆனந்தவெள்ளத்தை உடம்பு முழுவதும் தேக்கவும், அந்தத் திவ்விய அமிருதத்தைப் பருகவும் பாக்கியம் கிடைக்குமானால், அவன் 3000 வருஷங்கள் ஏன், 30,000 வருஷங்கள் உயிரோடு வாழலாம் என்று சொல்கிற பெரிய யோகநிலையை நமக்குத் தந்திருக்கிறார். உடம்பை அடக்கின பிறகு, இனி மனத்தை அடக்கவேண்டும். இராமலிங்க சுவாமிகள் மனதைப் பார்த்து,

> " மனமெனுமோர் பேய்க்குரங்கு
> மடப்பயலே! நீதான் மற்றவர்போல்
> எனை நினைத்து மருட்டாதே"

என்று சொல்கிறார். அறிவாகிய கடிவாளம் போட்டு அடக்கவேண்டும். மனது போகிற இடங்களில் எல்லாம் நாம் அதை விட்டுக் கொடுக்கக் கூடாது. ஆமை தன் உறுப்புக்களை ஓட்டுக்குள் அடக்கிக்கொள்ளுவது போல ஐந்து இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கிக்கொள்ளவேண்டும் மனத்தை அடக்கும் வல்லமைவேண்டும். மனம் அடங்கினால்தான் தியானம் சித்திக்கும். சேரமான் பெருமாள் நாயனார் பெரிய யோகி. அவர் சுவாமியைப் பூசித்துக்கொண்டிருந்தார். பூசையின் மத்தியிலே நடராஜப்பெருமானுடைய சிலம்பொலி கேட்கும். அந்தச் சிலம்பொலி கேட்கும்வரை, தீபாராதனை கொடுக்காமல் இருந்து தியானிப்பார். இத்தகைய லட்சணத்தோடு கடவுளைத் தியானிக்கிறவருடைய முன்னிலையிலே கடவுள் வருகிறார். சேரமான்பெருமாள் நாயனாருக்குச் சிலம்பொலி கேட்டது என்றால் பெரிய தத்துவங்கள் அதிலே அடங்கிக் கிடக்கின்றன.

ஞானசம்பந்தர், 'சமணர்களை வெல்வதற்குக் கிளம்புகின்றேன்; சொக்கேசா! ஆலவாய் அப்பா! உனக்குச் சம்மதமா?' என்று கேட்டார். பதில் வந்தது. பதில் வராமல் இருந்திருந்தால் போயிருக்கமாட்டார். ஆண்டவன் 'சம்மதம்' என்று சொன்னது அவருக்குக் கேட்டதா? என்றால் அவருக்குக் கேட்டது. ஆனதினால்தான் அவர்களை மகத்துவம்பொருந்திய பெரியோர்கள் என்று சொல்லுகிறோம்.

தியானத்திலே இருக்கின்ற ஒரு பெரிய சக்தி வருகின்றபோது தன்னை மறந்த ஒரு நிலையிலே இருந்தார் பட்டினத்து அடிகள். அப்படியிருந்த அவருடையகழுத்தில் முத்து மாலையைக் கொண்டுபோட்டார்கள் கள்ளர்கள். அவருக்கு ஒன்றுமே தெரியாது. அவர் திருட்டுக்குற்றம் சாட்டப்பட்டு அரசருடைய சபைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவரைக் கழுவில் ஏற்ற ஆணை பிறப்பித்தான் அரசன். அதுவரையில் அவருக்கு, நடந்தது ஒன்றுமே தெரியாது. 'உன் செயலாவது யாதொன்றும் இல்லை அப்பனே!' என்று இருந்தார் அவர். அவர் கழுத்தில் மாலை வந்தது எப்படி என்றே அவருக்கே

தெரியாது. அந்த அளவுக்குத் தன்வசம் இழந்து ஆண்டவனிடத்திலே தன்னை ஒப்பித்து, தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அது தான் தியானம். கழுமரத்தின் அடியிலே இருந்தபோதுதான் அவருக்குத் தெரியவந்தது. 'முன்செய்த தீவினையோ' என்றார். தியான வல்லமை உடையவர்களுடைய சக்தியான வார்த்தை அப்படியே பலித்துவிடும். கழுமரம் சாம்பலாகிவிட்டது.

தாயுமான சுவாமிகள் யோகநிலையிலே இருந்தபொழுது, செத்துவிட்டார் என்று நினைத்து, அவரைக் கட்டையில் வைத்து நெருப்பையும் வைத்துவிட்டார்கள். அப்படி உடல் தீப்பிடிக்கின்றவரையில் அவருக்குத் தெரியாமலிருந்தது என்றால், அவருடைய தியானசக்தி எத்துணை வலுப்பெற்றுளது என்பதைப் பார்க்கவேண்டும்.

தியானத்தின் நூறுமடங்குதான் சமாதி நிலை கைகூடுவது. அவர்கள், இருக்கின்ற போதும் சமாதியில்கூடி ஆனந்த நிலையை - பரமானந்தத்தை அனுபவித்து வாழ்வார்கள். அந்த ஆத்மா நித்திய ஆனந்தத்தை எய்தி இறைவனோடு ஒன்றுபட்டிருக்கும்.

இத்தனையும் கொண்டது யோகநிலை. அந்த யோகநிலையைக் கைக்கொண்டவர் நமது திருமூலர். அப்படிக் கைக்கொண்ட யோகி, அந்த யோகநிலையைச் சொல்லித் தந்தால்தான் நமக்கு அது பயன்படுமே தவிர, யோகநிலை அப்பியாசம் தெரியாதவர்களுக்கு அதிகமாகப் பயன்படாது.

ஆகையால், அப்பேர்ப்பட்ட திருமூலருடைய மகத்துவம் பொருந்திய திருவடிபட்ட இடம் திருவாவடுதுறை. அதில் நம்முடைய காலை வைத்து நடப்பதற்கே நமக்குத் தகுதி இல்லை. காரைக்கால் அம்மையார் போலத் தலையாலே நடக்கவோ நமக்கு வல்லமை இல்லை. ஆனாலும், குழந்தைகள்போலுள்ள நம்மை எல்லாம் அவர் ஆசீர்வதிப்பார். என்றைக்கும் அவர்களுடைய திவ்ய ஆத்ம சொரூபம் இங்கேநின்று அனுக்கிரகிக்கும். அவர்களது அருள்வார்த்தையினாலேதான் திருவாவடுதுறை இப்பொழுது சிவஞான பீடமாக உலகமெல்லாம் போற்றும்படியாக எல்லா மக்களும் ஏற்றும்படியான நிலைமைக்குப் பிரகாசித்துக்கொண்டு இருக்கிறது. எல்லா ஜனங்களும் திருவாவடுதுறை ஆதீனத்தின் அருமையான சைவச் செயல்களையும், தொண்டுகளையும் செந்தமிழ் வளர்ச்சிக்குச் செய்துவருகிற பணிகள்பற்றியும், இத்தகைய நூல்களை வெளியிடுவதுபற்றியும், சிவஞான சாஸ்திரங்களை எல்லா மக்களும் அறிந்து கொள்ளவேண்டும் என்று செய்கின்ற பெரிய கருணைவெள்ளத்தையும் அரசாங்கம் முதற்கொண்டு ஏழை ஜனங்கள் வரையில் எல்லோரும் அறிந்து மகிழ்கிறார்கள். இத்தகைய அருமையானநிலை ஆதிகுருமூர்த்தி ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள் அருளாலும் யோக ஞானியாகிய திருமந்திரம் அருளிச்செய்த நமது பெரியாராகிய திருமூலருடைய அனுக்கிரகத்தாலும் நமக்கு வாய்த்தது. அப்படிப்பட்ட பேறு என்றும்நிலைத்து நிற்கவும், இந்தத் திருவாவடுதுறை ஆதீனம் உயர்ந்த சைவபீடமாய் விளங்கி, சைவ சமயத்தை உலகம் எல்லாம் பரவும்படிச் செய்து வெற்றிக்கொடி பரப்பி வாழவும் குருமூர்த்திகள் அனுக்கிரகம்கொண்டு நம் மகாசந்நிதானம் அவர்கள் செய்தே முடிப்பார்கள். அதற்கு வேண்டிய வேலைகளைச் செய்ய அவர்கள் அஸ்திவார வேலையெல்லாம் சரியான முறையிலே செய்துகொண்டு வருகிறார்கள். அவை வெற்றிபெற்று வாழ அவர்களுடைய திருவடிகளை வாழ்த்தி, இத்தகைய அருஞ்செயல்களெல்லாம் செய்து, நம்மையெல்லாம் வாழ்விக்கச் செய்கின்ற மகாசந்நிதானம் அவர்களுடைய திருவடிகளுக்குப் பல்லாயிரம் வணக்கம் செலுத்திக்கொண்டு அடியேன் தலைமை உரையை இத்துடன் முடிக்கின்றேன்.

'இயமம்'

ஆதீன வித்துவான்

## திரு. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்,

திருவாவடுதுறை.

சிவஞானத் திருவுருவாய் நம்முன்னே எழுந்தருளிக் காட்சிதந்து நம்மையெல்லாம் ஆட்டுவித்துப் பணிகொள்ளும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவடித்தாமரைகளை அடியேன் - மீளா அடிமை பல்காலும் சிந்தித்து வந்தித்து வாழ்த்தி என்பணியிலே செல்கின்றேன். இங்குள்ள பெருமக்களுக்கும் முனிபுங்கவர்கட்கும் என் வணக்கம்.

இன்று அடியேனைப் பேசப்பணித்தது இயமம் என்னும் பொருள்பற்றி. அதுவும் திடீரென உத்தரவு கிடைத்தது. ஏன் தெரியுமா? ஆண்டுகள்தோறும் ஆதீனத்திலே எத்தனையோ நூல்களை ஆராய்ந்து பதிப்பிக்கச்செய்து இலவசமாக அன்பர்களுக்கு வழங்குகிறோம். வித்துவான்களும் அல்லாதவர்களும் பெற்றுச் செல்லுகின்றார்களே! ஒரு தடவையாவது புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தார்களா? பார்த்துப் படித்தவைகளை ஒரு ஆண்டு முடிய ஏதேனும் சிந்தித்திருக்கிறார்களா? எளியமுறையில் எல்லாரும் திருமந்திரக் கருவூலத்தைத் திறந்து பொருள் கொள்ளும் முறையிலே உரைவரையச் செய்தும், உரைநடை எழுதச்செய்தும், உபந்நியாசங்கள் முகமாக விளங்கச்செய்தும் இத்தனை வகைகளிலெல்லாம் வழங்குகிறோமே! சாமானிய மக்கள் இருக்கட்டும், வித்துவான்களாவது அதிலும் ஆதீன வித்துவான்களாவது அவைகளை ஏதேனும் படித்திருக்கிறார்களா? என்ற பரீட்சைக் குறிப்புப்போல இன்று எனக்குக் கிடைத்துள்ளபணியாகும். அடியேனும் புத்தகத்தைவாங்கி வீண்செய்யவில்லை என்று விண்ணப்பம் செய்வதுமட்டும் போதாதே. உரையை - உரைநடையை நன்கு கற்று அநுபவித்துள்ளேன் என்று எனது பேச்சிலே தொட்டுக்காட்ட வேண்டாமா? அதனையே தொடங்குகின்றேன்.

இத்தலைப்பாகிய இயமம், அட்டாங்க யோகம் என்னும் அதிகாரத்தில் மூன்றும் தந்திரத்தில் உள்ளது. மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்திலே இடையறாமல் வீற்றிருந்தருளிய திருமூலதேவர் இதனை நமக்கென உணர்த்தியருளுகின்றனர். ஒரு மந்திரத்திலே அட்டாங்க யோகத்தின் பெருமை கூறுகின்றார்கள். உலகத்திலே மன ஒருப்பாடின்றிப் பலபடியாய் அலைந்து திரியும் மக்களுடம்புடையீர்! அந்த நெறி நல்லது, இந்த நெறி நல்லது என இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்பதுபோலக் கண்டபடி மனத்தடுமாற்றமடைகின்றீர்கள். எந்நெறியிலாவது உங்கள் மனம் அடங்கிற்றில்லை. அடங்குதற்குரிய நெறி ஒன்றுண்டு, அந்த நெறியை வழிதுறைபற்றிக் கடைப்பிடிக்க வேண்டும். வழி தப்பினால் பயன் வாய்க்காது. பயன் இல்லையானாலும் குற்றமில்லை.

நல்ல பயனுக்கு மாறாகக் கெட்ட பயன் உண்டாகலாகாது. அதிலேதான் உங்கள் கண்ணும் கருத்தும் தடுமாறாமல் உறுதிப்பட நிலைக்கவேண்டும். அதுதான் யோக நெறி, அதுவே சிவயோகநெறி. அஃது அட்டாங்கயோகநெறி. 'யோகமே தியானம் கூட்டம்' என்பதாம். ஒருமையுள்ளுறத் தியானம் உற்றிருப்பது யோகம் என்பர். இந்த யோகநெறியும் எட்டுறுப்புக்களுடன் கூடியது. இவ்வுறுப்புக்களுள் ஒன்று குறையினும் பயன்முற்றாது. பூரணபயன் சித்திக்க வேண்டுமாயின், உறுப்புக்களில் குறைவு வரலாகாது. அந்த உறுப்புக்கள் முற்றிய நெறியே அட்டாங்க யோகம் என்பது. அந்த நெறியே சென்று சமாதியில் நிலை பெறுங்கள். அத்தகைய நன்னெறியிலே செல்லுவோர் தவறாமல் ஞான நெறியை அடையலாம். ஞானநெறி - சன்மார்க்கம். அது நன்னெறி எனவும் படும். மற்றது புன்னெறி, அஃது இழிந்த நெறி. அதுவே கருவாய்ப்பட்டு இறந்து பிறந்து உழலுதல். ஞானநெறியிற்புக யோகநெறி நன்றுதவும்.

ஆகலின், யோகநெறி தோழமார்க்கமென்று சொல்லப்படும். இதனைத் திருமூலதேவர்,

அந்நெறி இந்நெறி என்னாது, அட்டாங்கத்து
அந்நெறி சென்று, சமாதியிலே நின்மின்;
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்,
புன்னெறி ஆகத்தில் போக்கு இல்லையாகுமே.

என்று அருளிச்செய்தார்கள். அதனடுத்து, யோக உறுப்புக்கள் எட்டனையும் தொகுத்து உணர்த்தினர். அவ்வெட்டனுள் முதலாவது இயமம். இயமமாவது தீய எண்ணங்கள் வாராமல் மனத்தைக் கட்டுப்படுத்தல், தீயசொற்கள் வாராமல் வாக்கைக் கட்டுப்படுத்தல், தீயசெயல்கள் நிகழாமல் உடலுறுப்புக்களைக் கட்டுப்படுத்தலாம். இத்தலைப்பிலே இரண்டு பாடல்களே உள. எட்டு வரிகள்தாம், படித்தற்கு மிக எளிதுதான். செயல்வகையிலேதான் அவை எட்டாதன. அவ்வெட்டும் இவை என உணர்த்துகிறார்.

1. கொல்லான், 2. பொய்கூறான், 3. களவில்லான், 4. அடக்கமுடையான், 5. நடுச்செய்ய வல்லான், 6. பகுந்து உண்பான், 7. கள் இல்லான், 8. காமம் இல்லான் ஆகிய நல்லான் எண்குணன் ஆவான், என்குணன் நல்லான் ஆவான். நல்லான் X பொல்லான். எண் குணன் - மதிக்கத்தக்க குணமுடையான். கொல்லாதவனும் பொய் கூறாதவனும் களவில்லாதவனும் எண்ணத்தக்க குணங்களையுடையான்; அடக்கமுடையான், நடுச்செய்ய வல்லான், பகுந்துண்பான் நல்லான் ஆவான்; கள், காமம் இல்லான் மாசு இல்லான் என மூன்று கூறாகக் கூறிட்டுக் கூறியருளினர். இவைகளையெல்லாம் கூர்ந்து சிந்தித்து உணரவேண்டும்.

தாயுமானவ சுவாமிகள் ஒரு சிவராஜ யோகி. மூலன் மரபில்வரு மௌனகுருவிடத்து உபதேசம் பெற்றவர். அவர் இதனை விளக்குகின்றார். "கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்(று), அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே" என்று இரங்குகின்றார். நல்லார் மக்கட் பிறப்பினர், அல்லார் விலங்கினத்தினையொப்பார்; அவ்வாறு சொல்லவும் சுவாமிகள் கூசுகின்றார்கள். ஆகலின் அவர் யாரோ? என்கிறார். எனினும், அவர் கருத்து இழிந்த நாய் நரிகள் போன்றதே அப்பிறப்பு என்பதுதான் என்று எண்ணவேண்டியிருக்கிறது. மேலும் அவர், "கொலை களவு கள் காமம் கோபம் விட்டாலன்றோ, மலையிலக்காம் நின் அருள்தான் வாய்க்கும் பராபரமே" என்று பெரிதும் இரங்குகிறார். அதனோடு அமைந்திலர். "கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும், அக்குணமொன்றும் ஒன்றிலேன்" என்று அதனைத் தன்னிடத்து வைத்தே விளக்குகின்றார். "கொல்லா விரதியர் நேர் நின்ற முக்கட் குருமணியே" என்று இறைவரை விளிக்கின்றார். சிறிய வயதிலேயே நாம், "கொலை களவு செய்வாரோ டிணங்க வேண்டாம்" "புலையும் கொலையும் களவும் தவிர்" என்று நீதிநூலில் பயின்றிருக்கின்றோம். இன்று செயலில் காணோம்.

நம் திருக்குறள் ஆசிரியர், "அறவினை யாதெனில் கொல்லாமை கோறல், பிறவினை யெல்லாம் தரும்" எனவும், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" எனவும் கூறுதல் காண்க. மற்றும், சிவஞானதீபம்: "கொலையாதி நெறியகன்ற ஞானம்" என்னும் பாடலையும், "எவ்வுயிரும் பராபரன் சந்நிதிய தாகும்" என்னும் பாடலையும் கூறி வற்புறுத்தும்.

இனி, இயமமாவது யாது? கொல்லாமை வாய்மை கள்ளாமை காமமின்மை பொறை உறுதியுடைமை கருணையுடைமை பொதுமை அளவானஉணவு தூய்மை என்பனவாம். நாடோறும் சிவபூசையில் நாம் எல்லோரும் அட்டபுட்பம் சாத்துகிறோம். அதன் கருத்து யாது? நினைக்கின்றோமா? இல்லை, இல்லை. புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்பன அட்டபுட்பங்களாம். "எட்டு நாண்மலர் கொண்டவன்" என்பது தேவாரம். கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு இவைகளே அட்டபுட்பங்களாகப் பாவித்து அருச்சிக்கப்படும்.

இனி, வேறுவகையாகவும் சிறிது சிந்திப்போம்.

1. கொல்லாமை என்பது வேள்வி முதலியவைகளில் செய்யும் கொலையேயன்றி மற்றை உயிர்களைக் கொலை செய்ய மனத்தாலும் நினையாமையாம். அன்றியும், உடல் பொறி கரணம் முதலியவற்றை நான் என மதித்தலும் கொலையேயாம். ஆதலால், உயிரின் உண்மை அறிவதாகிய கொல்லாமையைப் பெரிதும் பாதுகாத்தல்வேண்டும்.

2. சத்தியம்: கண்ணால் கண்டவைகளையும் காதால் கேட்டவைகளையும் பிறழாமல் கூறுதல். அன்றியும், செத்துப்பிறக்கும் சிறு தெய்வங்களைத் தெய்வமாகக் கொள்ளாமல் நித்தியமாகிய பரம்பொருள் இறைவனே எனக் கொண்டொழுகுதல்.

3. களவு செய்யாமை: பிறர் பொருளைச் சிறிதாயினும் கவர்ந்துகொள்ளக் கருதாமையாம். தேகம் முதலிய பிரபஞ்சத்தை நான் என்று மதியாத தெளிவும் அதனைச் சார்ந்ததே. இதனை அத்தேயம் என்பர்.

4. காமமின்மை: பிறர்மனை விழையாமை, வரைவின்மகளிர் விழையாமை முதலிய ஆண்மைத்தன்மையாம். இது பிரமசரியம் எனப்படும். முதல்வனுடைய திருவடிப் பத்தியே சிந்தையில் கொண்டொழுகுதலும் அதுவாம்.

5. பொதுமை: இது ஆர்ச்சவம் எனவும் படும். மனைவி மக்கள் முதலியோரிடத்தும் உறவினரிடத்தும் பகைவரிடத்தும் தன்னிடத்தும் சமபாவனை பண்ணுதலாம்.

6. பொறை: பகைவர் முதலியோரால் துன்பம்நேரினும் பொறுத்துக்கொண்டிருத்தலாம்.

7. உறுதியுடைமை: முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானல் அருளிச்செய்யப்பட்ட வேதசிவாகமங்களை முத்திபெறுதற்கு ஏது என நம்பி ஒழுகுதல். முதல்வனது அட்டமூர்த்தசொரூபங்களில் ஆன்மா வேறு அல்ல என்று எண்ணுதலும் அதுவே.

8. கருணையுடைமை: தன்னுயிர்போல் பிற உயிர்களையும் ஒப்பக் காணுதலாம்.

9. அளவான உணவு: அமுதமாயினும் இழிந்த கூழாயினும் ஒப்பக்கொண்டு உண்ணுதல். அன்றியும், உணவு அரைவயிறும் நீர் கால்வயிறும் உண்டு காற்கூறு வாயுவானது சஞ்சரிக்கவிடுதலாம்.

10. சவுசம்: உடம்பை மண் முதலியன கொண்டு விதிப்படி நீரினல் சுத்திசெய்வதாகிய புறச்சுத்தமும்; வேத முடிவாகிய சித்தாந்தப் பொருளை மனத்தில் உறுதியாகக் கொண்டு பாசம் நீங்குமாறு நிற்பதாகிய அகச்சுத்தமும் என இருவகையாம். இதனை,

"புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்"

என்று அருளினர் பெருநாவலர். இதனுள் வாய்மையாவது மெய்ப்பொருளாகிய செம்பொருளை நினைந்திருத்தல் என்பர்.

செழுந்தணியமங்கள் செய்மின்

என்பது குறிப்பிடத்தக்கது. செழும் தண் இயமங்கள், செழும் தண் நியமங்கள் எனப் பிரிக்கலாம்போலும். இது இரட்டுற மொழிதலாக நின்றது. 'இயம நியமங்கள்' எனச் சேர்த்தே கூறுதலும் காண்க. 'அழுந்திய நால்வர்' என்றது சனகாதி முனிவர்களை. ஈண்டு அழுந்துதலாவது திருவருளிலே தோய்ந்திருத்தலாம் என்க. இந்த இரண்டு மந்திரங்களும் அட்டாங்க யோகத்துக்கு மிக இன்றியமையாத இயமத்தைக் கூறியமை கருதத்தக்கது. உலகநெறி நிற்போருக்குரிய நீதிகளைப் பல அதிகாரங்களாக வகுத்துத் திருவள்ளுவநாயனர் கூறியருளினர். திருமூலதேவர் அவற்றை எல்லாம் ஒரு மந்திரத்திலே பெறவைத்து வீட்டின்பத்தை அடைதற்குரிய முதற்படியை வற்புறுத்தியருளினர்.

**'நியமம்'**


## திரு. ச. சிவகுமார் அவர்கள், M. A.,

சென்னை.


ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய பொன்னார் திருவடிகட்கும், அவைத் தலைவர் அவர்களுக்கும், இங்கே வந்திருக்கும் பெருமக்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பகுதி 'நியமம்' என்பது. அன்றாட வாழ்க்கையை ஒட்டிய பழமொழிகளில் 'இயம நியமம்' என்ற சொற்கள் வரும். இயமத்தைப்பற்றி முதலில் பேசினார்கள். நியமம் என்பது நல்ல காரியத்தை ஒரு ஒழுங்குமுறையாகச் செய்வது. அருணகிரிநாதர், "தவமுறை தியானம் வைக்க" என்றும், "அரை நிமிஷ நேர மட்டில்" என்றும் சொன்னார்கள். "தவமுறை" என்ற சொற்கள், நின்று நிதானித்துப் பொருள் பண்ணும்படியாக அமைந்திருக்கின்றன.

நாம் மனம்போன போக்கிலேபோனால் ஒன்றும் காரியத்தைச் சாதிக்க முடியாது. இந்த மனத்தை அடக்கவேண்டும். அப்படி மனத்தை அடக்குவது எப்படி? இந்த மனமாகிய குதிரையிலே சவாரி செய்கின்றது ஆன்மாவாகிய புருஷன். ஆன்மா, மனமாகிய குதிரைமேலே சவாரி செய்கிறது. இக்குதிரையை அடக்குவதற்கு ஒரு கடிவாளம் வேண்டும். அதுதான் இந்த மூச்சுக் காற்று. மூச்சு இல்லையென்றால் மனிதன் இல்லையே; மனம் இல்லையே. ஆக இந்த மூச்சுக் காற்றாகிய கடிவாளத்தாலே அடக்கி ஆண்டால் அக்குதிரை ஒழுங்காக ஓடும். அப்போது நம்முடைய குதிரைச் சவாரியும் சரியாக இருக்கும். இல்லாவிட்டால், குதிரைபோகிற போக்கிலே போய் அது தள்ளுகிற இடத்தில் நாமும் விழவேண்டும். இப்படி ஒரு பெரிய ஆபத்து வந்துவிடும். மூச்சுக் காற்றினை மடைபாய்ச்சி, நமக்கு வேண்டியபடி அதை அமைத்துக்கொள்ளுகிற முறையைச் செய்துகொள்வோமானால், இந்தக் குதிரைச்சவாரி செய்கிற ஆன்மா, தனது இலட்சியத்தை - தான் போய்ச்சேரவேண்டிய ஓர் இடத்தை, அடையும். அந்தமுறைதான் யோகம். அதற்குச் சில பயிற்சிகள் வேண்டும். சாதாரண ஒரு பி. ஏ. பட்டம் வாங்குவதற்கே படிப்படியாகப் படித்து அதற்காகப் பதினைந்து வருஷங்கள் காத்திருக்கவேண்டி இருக்கிறது என்றால் ஆண்டவன் திருவருள் கிள்ளுக்கீரை அல்ல. கண்ணப்ப நாயனாருக்கு ஆறு நாட்களிலே முத்திப்பேறு கிடைத்தது என்றால், கிடைக்கலாம். அதற்கு முன்கூட்டியே சில தகுதிகள் - பரிபக்குவம் - வந்திருக்கிறது அவருக்கு. அன்பின் பிழம்பாக விளங்கினார் கண்ணப்பநாயனார். அன்பின்முதிர்ச்சி, அன்பின் எழுச்சி கண்ணப்பநாயனார். அவர் அன்பின் திருவுருவமாகவே ஆகிவிட்டார்; அன்பே சிவமாக ஆகிவிட்டார். முன்பு செய் தவத்தின் ஈட்டம் இருந்தது. அதனால் அவர் ஆறுநாளிலே ஆண்டவன் அருள் கைவரப்பெற்றார்.

" கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில்
என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்து என்னை
வாஎன்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே
சென்றூதாய் கோத்தும்பீ "

என்று நம் மாணிக்கவாசகப் பெருந்தகை சொல்கிறார்.

அந்த அன்பு நெறியிலே ஆண்டவனை நாம் பெறமுடியும். இறை அருளை, இறை அனுபவத்தை, அன்பினாலே எளிதாகப் பெற முடியும். தோத்திரத்தினால் மனமுருகி ஆண்டவன் திருவருளைப் பெறமுடியும். மீராபாய் போன்றவர்கள் பஜனை மூலமாகவே பக்தி செய்து ஆண்டவன் அருளைப் பெற்றார்கள். ஆண்டவன் நல்லதுதான் செய்வான் என்ற

அழுத்தமான நம்பிக்கையில் பக்தி, பஜனை முதலியவைகளில் மனம் தோய்ந்து தோத்திரத்தின் வழியாக ஆண்டவனை அடைவது ஒரு பாதை. தோத்திரம் வேறு. சாத்திரம் வேறு. நமக்கு மனிதப்பிறவி ஆண்டவன் கொடுத்த நோக்கம் நம்முடைய அறிவை நல்ல வழியிலே பயன்படுத்தி, இறைவனைப் பற்றித் தெரிந்துகொண்டு போய்ச் சேருவதற்குத்தான். தெரியாமலும் போய்ச்சேரலாம். ஆனால் தெரிந்துபோவது சிறப்புடையது. பலன் ஒன்றுதான். அன்பினாலேதான் ஆண்டவனை அடையமுடியும். இந்தஇயமம் நியமம் தபம் இவைகளினாலும் ஆண்டவனை அடையமுடியும்.

இங்கே நாம் பேசுவதெல்லாம், சாஸ்திர ரூபமாக - சாஸ்திரோக்தமாக . நம்முடைய வயது வளர, அறிவு வளர, ஒழுக்கநெறிகள் ஒழுங்குமுறைப்பட, இயமம் நியமம் என்கிற இரண்டு தண்டவாளங்களில் - யோகநெறியிலே சென்று, இறைவனை உணர்ந்து, அறிந்து சென்று சேருவதைப்போல ஒரு வழியைப் பெரியவர்கள் நமக்கு ஆக்கித் தந்திருக்கிறார்கள்.

இது அவசியமா? என்று கேட்டால், வாழ்க்கையில் ஒரு இலட்சியம் குறிக்கோள் - வேண்டும். நாம் மனிதர்களாகப் பிறந்து, நன்முறையில் உடலும், அறிவும் அமைந்து, சூழ்நிலையும் நமக்குச் சௌகரியமாயிருந்து, ஒருவிதமான எதிர்மறையான நிலைமையில் நாம் இல்லாமலிருந்தும், அதில் லட்சியம் நம்மால் கொள்ளவில்லையானால், அது மிக வருந்தத்தக்கதுதான். 'திருவாசகத்தை இப்பொழுது எடுப்பானேன்; சிவபூஜையை இப்போது தொடங்குவானேன்; பின்னால் பார்த்துக்கொள்ளலாம்' என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் நம் சௌகரியம்போலவே எல்லாம் நிகழும் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. நமக்கு எதிர்பாராமல் என்ன என்னவோ நிகழும். பிறகு வருத்தப்பட்டுப் பிரயோசனம் இல்லை.

எல்லோரும் மனிதர்களே. ஆனாலும் மனிதர்களுக்குள் தலையாய மனிதர்கள் என்று சிலரைத்தான் சொல்லுவார்கள். அவர்கள் சிவ சிந்தனையாளர்களாக இருப்பார்கள். அவர்கள் காலத்தை வீணாக்கமாட்டார்கள். வீணாக்கினபொழுதையும், இழந்த கற்பையும் ஈடுகட்டவேமுடியாது. அதை ஞாபகத்தில் வைத்துத்தான் திருநாவுக்கரசர்,

" பாலனாய்க் கழிந்த நாளும்
    பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும்
    மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்
    குறிக்கோள் இலாது கெட்டேன் "

என்று சொல்கிறார். பிறந்ததன் பயன் என்ன என்பதைக் கொஞ்சமாவது நினைக்காமல் காலத்தை வீணாக்கக்கூடாது என்கிறார்.

மனிதரில் தலையாய மனிதராக நாம் வாழவேண்டுமானால், இறைவனை நம்பி வழிபடுகிற நிலைமை வரவேண்டும். உண்பது, உறங்குவது, வம்சவிருத்தி செய்வது என்ற அளவிலே எல்லா மிருகங்களுமே செய்கின்றன. நாம் அவற்றைத் தனியாகச் செய்துவிடவில்லையே! இருத்தல், சிரித்தல் என்ற இரண்டும் நமக்கே அமைந்தன. இதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? இறைவனுடைய திருவருளைச் சாஸ்திரத்தின் வழிநின்று உடம்பை, உள்ளத்தை, உரையை, உணவை, உடையை, நடையை நம்வசப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த உடம்பு நம்முடையது அல்ல, இது வெறும் சட்டை. இது நம்மோடு கொஞ்ச நாள் இருக்கிறது. நமக்கும் இந்த உடம்புக்கும் தற்காலிகமான தொடர்பு என்கிற உண்மையான நிலையை அறிந்துகொள்ளவேண்டும். தலைவர் அவர்கள் சொன்னதுபோல, இறைவன் நம்மிடத்திலே அந்தக் குழந்தையை வளர்க்க ஒப்படைத்திருக்கிறான். அம்மையும் அப்பனும் ஆண்டவனே என்கிற இப்படிப்பட்ட எண்ணத்தின் அடிப்படையிலே வாழ்கிற முறை இருக்கிறதே அதுதான் வையத்து வாழ்வாங்கு வாழும் முறை.

அது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற இந்நான்கு படிகளாலே வளர்ச்சி அடையவேண்டியதாக இருக்கிறது. அதில் யோகத்தைப்பற்றி வருகின்ற மூன்றாவது தந்திரத்திலே, மூச்சுக்காற்றை அடக்கி அளந்து மடைமாற்றிப் பாய்ச்சுதல்செய்யும்

ஒரு முறையைப்பற்றி விளக்கிப் பேசுகின்ற மாநாடாக இப்போது அமைந்திருக்கிறது. இந்த மூச்சு கடிவாளம், இந்த ஆன்மா குதிரைச் சவாரி செய்கிற புருஷன், மனம் குதிரை, மூச்சை அடக்க மனம் அடங்கும், மனம் அடங்கப் பொறி அடங்கும், பொறி அடங்குவதுதான் தவ ஒழுக்கம், தவ ஒழுக்கமே யோகம், அதுதான் சிவத்தியானம் என்று இப்பொழுது நாம் சுருக்கமாக மனத்திலே கொண்டிருக்கின்றோம். இந்த நியமம் என்பது கட்டுப்படுத்துதல் - நல்நெறியில் நிற்றல் என்று கொள்ளவேண்டும்.

ஆண்டவன் தோற்றத்தில் ஒரு ஜோதியாய்க் காணப்படுகிறார் என்றாலும், அந்த ஜோதி நம்முடைய இருவினை ஒப்பு மலபரிபாகம் ஏற்படுகின்றபோது நமக்கு அபயம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. தீவினைகளைச் சுடக்கூடியதாக இருக்கிறது. இப்படி இருக்கிற பரம்பொருள் உமையொருபாகனாக இருக்கிறான்; சிவமும் சத்தியுமாக இருக்கிறான்; அருளும் அருளிப்பாடுமாக இருக்கிறான் என்ற பொருளை அமைத்து வருகிறதுதான் பின்வரும் திருமந்திரப் பாடல்.

ஆதியை வேதத்தின் அப்பொரு ளானைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னும் பராசக்தி யோடுடன்
நீதி யுணர்ந்து நியமத்தன் ஆமே.

நியமத்தோடு எவன் வாழ்கின்றான்? உமையொருபாகனைப் புரிந்துகொள்பவன், ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் ஜோதியாகிய பரம்பொருள் பராசக்தியுடன் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்கிற நிலையிலே நியமத்தனாக ஆகின்றான்.

தூய்மை அருளூண் சுருக்கம் பொறை செவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமம் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்தன் ஆமே.

யோகப்பயிற்சியிலே பத்து நியமங்கள் உண்டு. எது எது வேண்டியது என்பதை ஒரு தொகுப்பாகவும், எது எது வேண்டாதது என்பதை இன்னொரு தொகுப்பாகவும் சொல்கிறார். தூய்மை, அருள், ஊண் சுருக்கம், பொறை, செவ்வை, வாய்மை, நிலைமை இவை வேண்டியவை. காமம், களவு, கொலை ஆகியவை தவிர்க்கப்படவேண்டியவை. இப்படிப் பத்து நியமங்களை வைத்திருக்கிறார். இவை ஒவ்வொன்றுக்கும் திருக்குறளிலிருந்து மேற்கோள்கள் காட்டலாம். புறந்தூய்மை, அகந்தூய்மையைப் பற்றித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"பால் நினைந்து ஊட்டும்
தாயினும் சாலப்பரிந்து"

என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார். தாய் அன்பைவிடச் சிறந்தது கிடையாது. அப்படிப்பட்ட தாயினுடைய அன்பினைக் காட்டிலும் சிறந்தது ஆண்டவனுடைய அன்பு. சிலசமயங்களில் தாய் தன் மகவைச் சற்று மறந்தாலும் அம்மையப்பனாயிருக்கும் தாய் எப்போதுமே நம்மை மறப்பதில்லை. எப்போதும் நம்மைப்பற்றிய சிந்தனையாகவே ஆண்டவன் இருந்துகொண்டிருக்கிறான். ஆண்டவனைப்பற்றி நாம் ஒருமுறை சிந்தித்தால், ஆண்டவன் ஒன்பதுமுறை நம்மை நினைந்து ஓடிவருகிறான். ஆண்டவனுடைய கோயிலுக்குச் செல்லுகிற பழக்கம் நமக்கு இருக்குமேயானால், ஆண்டவன் கோயிலுக்குச் செல்லமுடியாத நிலையிலும் ஆண்டவன் நம் உள்ளே குடியிருப்பான்.

"பாவியேனுடைய ஊனினை உருக்கி"

என்று மாணிக்கவாசகர் சொல்லுகின்றார். நாம் ஊனினை உருக்கினால் உள்ளொளியைப் பெருக்கமுடியும் என்று திட்டவட்டமாகச் சொல்லுகிறார். தாய் வளர்த்த இவ்வுடலைத் தேனினைச் சொரிந்து உள்ளொளி பெருக்குகிறான். ஊணினைச் சுருக்குவது என்பது நியமத்தில் வருகிறது. ஊணினைச் சுருக்கினால்தான் உள்ளொளி பெருகும். முதலாவது நாம் அடிகோலிக்கொள்ளவேண்டியது உணவைச் சுருக்குதல் ஆகும்.

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்"

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை"

என்ற இரு குறள்களையும் பொறையுடைமைக்கும், வாய்மைக்கும் மேற்கோளாகக் காட்டலாம்.

நிலைமை என்பது உறுதி என்ற பொருள் படும். எது நிலையானது என்பதை அறிந்து நிதானபுத்தியுடன் இருப்பதைத்தான் இங்கு 'நிலைமை' என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

" நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

என்ற குறளும் இங்கே சிந்திக்கத்தக்கது.

" இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்"

என்கிறார் திருவள்ளுவர். தவம் செய்தவர் சிலரே. தவம் செய்யாதவரோ பலர். தவம் பண்ணினவர்கள் இந்த ஜன்மத்திலே நன்றாக இருக்கிறார்கள். தவம் பண்ணாதவர்கள் நிறைய இருக்கிறார்கள் என்று சொல்கிறார்.

" தாளாற்றித் தந்த பொருளெல்லாம்
தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு."

நல்ல வழியில் பொருளைச் சம்பாதித்து அதையும் நல்ல வழியில் தக்கவர்களுக்குச் செலவுசெய்யவேண்டும். அதுதான் தானம் என்று சொல்வது.

கிடைத்ததைக் கொண்டு மன அமைதி கொள்ளுதல் வேண்டும். சிவஞானப்பேறு ஒன்றையே விரும்பி இருத்தல்வேண்டும்.

தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகம் தானம்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீர் ஐந்து
நிவம்பல செய்யின் நியமத்தன் ஆமே.

இந்த மந்திரத்தில் பத்து நியமங்கள் சொல்கிறார். இத்தகுதிகள் இருக்குமானால் ஆண்டவன் நம்மிடத்தில் அருள் பண்ணி நம்மை அதற்குத் தக்கவனாகக்கொள்வன். அவனுடைய திருவருட்சத்திநிபாதம் நமக்கு வரும். இறையருள் வீழ்ச்சி நமக்கு வரும். இந்தத் தகுதிகளையும் மனத்திலே வைத்து அப்பர்சுவாமிகள்,

" மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையும் அன்றே "

என்று பாடுகிறார். மணிவாசகத்தில் ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கின்றேன்.

"சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே."

பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவர் எதிர்வரத்
தெற்றுஞ் சிவபதம் சேர்தலும் ஆமே.

—திருமந்திரம்.

'ஆதனம்'

ஆதீன வித்துவான்

## திரு. வீர. சிவசுப்பிரமணியம் அவர்கள்,

மதுரை.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் அருளாட்சி நடாத்துகின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவருட்பேற்றினால் நடைபெறுகிற இந்த மாநாட்டிலே 'ஆதனம்' என்ற தலைப்பிலே பேசும்படி அருள் ஆணை பிறந்திருக்கிறது. அந்த அருளாணையைச் சிரமேற்கொண்டு குருமகாசந்நிதானத்தினுடைய பொன்னார் திருவடிப் பேற்றினாலே, இங்கே அருளாட்சி நடாத்துகிற ஸ்ரீ நமசிவாயமூர்த்திகளுடைய கருணைப் பெருக்கினாலே 'ஆதனம்' என்ற தலைப்பிலே சில கருத்துக்களைப் படைக்க முன்வந்துள்ளேன்.

'ஆதனம்' என்ற சொல் திருமந்திரத்திலே காணப்படுகின்ற ஒரு சொல். இந்த ஆசனம் என்ற சொல்லை நாம் நிரம்பக் கேட்டிருக்கிறோம். இச்சொல்லைப் பெரியபுராணத்தில் அழகாகச் சேக்கிழார் சுவாமிகள் பயன்படுத்துகிறார்கள். உடம்பை அசையா நிலைக்கு உட்படுத்துவதும் உள்ளத்தை அசையாநிலைக்கு வசப்படுத்துவதும் யோக அப்பியாசத்தின் அவசியமான ஆரம்பங்களாம். நாம் மேற்கொள்ளும் யோகம் சித்தி பெறுவதற்கு உடம்பின் அசைவற்ற நிலை தேவைப்படுகிறது. அசைவை உண்டாக்காததாகவும் சுகத்தை உண்டுபண்ணக் கூடியதாகவும் எது ஒன்று உள்ளதோ, அதுவே ஆசனம் எனப்படும்.

இந்த உடம்பு அசையாநிலை பெறுவதற்காக, நல்ல நலம்பெறுவதற்காக ஆசனப் பயிற்சி தேவை. உடல் முதலில் வசதியான ஒரு நிலையில் அமையவேண்டும் என்பது ஆசனத்தின் கொள்கை. உடம்பு அசையா நிலை பெற்றால் அடுத்து உள்ளதான உள்ளம் அசையாநிலை பெறும். சரீரத்திற்கும் உள் அறிவிற்கும் இடையில் நின்று பணியாற்றுவதே உள்ளம். உள்ளம், உள்முகமாகத் திரும்பவேண்டுமானால், அதனை வெளிமுகமாக இழுக்காதவிதமாக உடம்பு துணைபுரியவேண்டும். அவ்விதம் உடம்பு துணைபுரியும் வழியில் சில பயிற்சிகளுக்கு உடம்பை உள்ளாக்கவேண்டும். இவ்விதமான உடம்புக்குரிய பயிற்சி, ஆசனங்களாகக் கூறப்படுகின்றன. ஆசனத்தின் முக்கிய பலன் உள்ளம் வெளிமுகமான எந்தச் சலனத்திற்கும் ஆட்படாவாறு உள்முகப்பட வேண்டும் என்பதே.

எல்லோருக்கும் சரீரக் கூறுபாடு ஒரே விதமாக அமையவில்லை. ஆதலால் அவரவர் உடற் கூறுபாட்டுக்கு இயைந்தவிதத்தில் ஆசன பேதங்கள் கூறப்படுகின்றன. நாம் நமக்கு வாய்ப்பானதும், உயர்ந்தது மாக உள்ளதுமான ஆசனப் பயிற்சியைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதே முறையாகும். எல்லாவிதமான ஆசன வகைகளையும் நாம் தெரிந்துகொள்வதிலேயே நமது ஆயுளைக் கழித்துவிடல் ஆகாது. திருமூலதேவ நாயனார் இந்தப் பகுதியில் ஆசனவகைகளை வடிகட்டி நமக்குத் தந்திருக்கிறார். நூல்களிலே கூறப்பட்டிருக்கும் ஆசன வகைகளைத் தத்தம் உடற்கூறு இன்னது என்று அறியாமலேயே மேற்கொள்ளத் தலைப்பட்டுக் கேடு அடைவதும் உண்டு. எதற்கும் ஆசன முறைகளை அனுட்டிப்பதில் நல்ல பயிற்சியுடையவர்களின் உதவியையும் நாம் மேற்கொள்ளவேண்டும். அதனோடு நமது உடல் நிலையையும், தேக நோய், ஊனம் முதலிய நிலைகளையும் கவனித்து நடக்கவேண்டும். கண்மூடித்தனமாக பொருத்தமில்லாததான ஆசனத்தை அவசரமான புத்தியில் மேற்கொண்டு முடிவில்லாத வருத்தத்திற்கு நாம் ஆளாகக்கூடாது.

நாம் ஆசனப்பயிற்சியில் முதன்முதல் கால்களுக்கு வேலை கொடுக்காமல் இருக்க வேண்டியுள்ளது. இதனாலேயே கால்கள்

மடிக்கப்படுவது, இப்பயிற்சியில் முக்கிய மானதாக ஆகிறது. கால்களைச் செயலறச் செய்துவிட்டால் ஒரு மனிதன் தானிருந்த இடத்திலேயே இருக்கவேண்டிவரும். கால்களை இவ்வாறு செயலற்று இருக்கும்படி மடக்கிவிட்டால் சுவாசவுறுப்புக்கள் அமைதியாகத் தங்கள் பணியைச்செய்யும். இதனால் மனத்தை ஒருமைப்படுத்துதலில் சிரமம் இருப்பதில்லை.

நம்மைச் சத்வகுண வயப்படுத்துவது ஆசனம் என்று யோகசூடாமணிகூறுகிறது. வியாதி முதலியவற்றைப் போக்கி உபகரிப்பது ஆசனம் என்று பதஞ்சலி யோக சாஸ்திரம் பகர்கிறது. ஆசன வகைகள் எண்ணில்லாதன. அசுத்தமான இடம், ஆசனம் இருத்தற்கு உரிய இடம் அன்று. நறுமணம் கமழும் புனிதமான ஓரிடத்தில் அமர்ந்து ஆசனத்தைப் பயிலல்வேண்டும்.

பெரும்பாலும் யோகநூல்களில் பத்மாசனமே முதலில் பேசப்படுகிறது. திருமூலர் இந்தப் பகுதியிலே குறிப்பிடத்தக்க ஆசனங்களைப்பற்றிப் பேசுகிறார்.

ஒவ்வொரு ஆசனத்தையும் எப்படிச் செய்யவேண்டும் என்ற குறிப்பை நாம் இங்கே காண்கிறோம். இந்த ஆசனப்பயிற்சியிலே நேர்முகமான அனுபவ அறிவில்லாத காரணத்தினாலே அதைப்பற்றித் திருமூலர் தருகின்ற குறிப்பையே பணிவோடு இங்கே விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

பத்திராசனம்: வலது காலை வெளியில் பாதம் தெரியுமாறு இடது தொடையின் மேல் வைத்துக்கொள்ள வேண்டும். அடிவயிற்றிலே குடல்மூலத்திற்கு ஊறு நேராதிருக்கும்பொருட்டு வலதுகாலை இவ்வாறு அமைக்கச் சொல்லியுள்ளார். பாதம் நன்றாகத் தெரியுமாறு மேல்நோக்கியிருக்கவேண்டும். பின், அருமையான இரண்டு முழங்கால்களின் மேலேயும் தங்கியிருக்கும் விதமாக உள்ளங்கைகளை மேல்நோக்கி இருக்கும்படி விரைப்பாக நீட்டி அமைத்திடல் வேண்டும். முழங்கால்கள் இறுக்கமாக மடிக்கப்படவேண்டும் என்பதை 'அரிய' என்னும் பதம் தெரிவிப்பதாகும். இந்த நிலையிலும் உடம்பு தளர்ச்சி இல்லாதபடி நேராக நிமிர்ந்து தராசுமுள்போல இருக்க வேண்டும்.

குக்குடாசனம்: இந்த ஆசனத்தைப் பயில்கின்றவர்கள் இவ்வாசனத்தின் பயனை நன்றாகத் துய்க்கிறார்கள். முதலில் தரைமேல் உட்காரவேண்டும். உடம்பை நேராக வைத்துக்கொள்ள வேண்டும். கால்கள் முன்புறமும் புஜங்கள் இரு மருங்கிலும் இருக்கவேண்டும். குக்குட ஆசனம் என்கிற பெயருக்கேற்றாற்போல், கோழி எப்படி இருக்கிறதோ அதுபோல் இருக்கிற ஒரு ஆசனம் என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். இந்த ஆசனத்திலே இரண்டு கைகளையும் இரண்டு கால்களுக்கு நடுவே வைத்து உடம்பை முழங்கை உயரத்திற்குத் தூக்கவேண்டும். அப்படித் தூக்குகின்ற காலத்திலே அந்தச் சுவாசங்கள், இன்னும் உடலினுள்ளேயிருக்கிற அக உறுப்புக்கள் இவையெல்லாம் ஒழுங்குபெறுகின்றன.

சிம்மாசனம்: காலை மடித்து பாதங்களின் நுனி பூமியிலே பொருந்தி இருக்க, மடிக்கப்பெற்ற முழந்தாள்களின் மேலே அவ்வப்பக்கத்துக் கைகளை நீட்டி மடக்கி அமைத்திடல்வேண்டும். கைகள் மடிக்கப் பெறாமல் நேராக நீட்டியிருக்கவேண்டும். பாதங்கள் பூமியில் படிந்திருக்க, முழந்தாள்கள் அப்பாதங்களின்மேல் அமையப்பெற்றிருக்கவேண்டும். முகம் நிமிர்ந்து, நேராய் வாய் இருக்கும்படி அமையவேண்டும். இது அரிமா அமரும் தோற்றம்போலக் காணப்படும். சிங்கம் எப்படி அமர்ந்திருக்கிறதோ அதுபோல் அமர்ந்திருக்கிற ஒரு தோற்றமாகும். இதை உடனே நினைவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் ஸ்ரீ ஐயப்பனுடைய படத்தை நினைவிற்குக் கொண்டுவந்தால் இதை ஓரளவு நாம் மனத்திலே அமைத்துக் கொள்ளமுடியும். இனி, கண்களின் பார்வை மூக்கினுடைய நுனியைப் பார்க்கவேண்டும். கண்களின் பார்வை பொருள்களின்மேல் செல்லக்கூடாது. கண்கள் இரண்டும் கீழ் நோக்கமுடையனவாய் மூக்கினுடைய நுனியைப் பொருந்தின பார்வை கொண்டிடல் வேண்டும்.

பசியாறிய சிங்கமானது பரபரப்பு ஏதும் இன்றி, கால்களை நேரே நீட்டிப் பின்கால்களை மடித்துக்கொண்டு தரைமேலே சாந்தமாக அமர்ந்து இருப்பதைப்போல இந்த இருக்கை தோற்றமளிக்க வல்லதாகும்.

யாவகை ஆசனங்களும் ஏழுவிதமான உத்தம ஆசனங்களில் அடங்கியுள்ளன. பத்திராசனம், கோமுகம், பங்கயம், கேசரி, சொத்திரம், வீரம், சுகாசனம் என்பன அவை.

இனி, கோமுகம் என்பது இடது பின் பாகத்தில் வலது பரட்டையும், வலது பின் பாகத்தில் இடது பரட்டையும் மாறிச் சேர்ப்பது. இவ்வாசனம் பசுவின் முகம்போன்று காட்சி தருவதாதலின் இப்பெயர் பெற்றது. அதாவது, கம்பீரமாக இருத்தல்வேண்டும்.

அவரவர் தமக்கு எங்ஙனம் அமர்ந்திருத்தல் சிரமம் தராமல் உள்ளதோ அவ்வாறு அமர்தலே சுகாசனம் ஆகும்.

ஓடிக்கொண்டே எவரும் யோகாப்பியாசம் செய்ய இயலாது. அசையாத நிலைக்கு உடம்பை அமைத்துக்கொள்வதே ஆசனத்தின் சிறந்த நோக்கம். உடம்பை நேராக நிற்க வைக்கலாம். குறுக்காகப் படுக்க வைக்கலாம். இவையன்றித் தலைகீழாகவும் உடம்பை நிறுத்திடும் வகையும் ஒன்று உள்ளது. அசையாதநிலையில் உடம்பை நான்கு வகைகளில் அமைத்திடுதல் கூடும். உட்கார வைக்கும் நிலையே மனத்தைச் சலனம் இன்றி வைப்பதற்கு மிகவும் உபகாரப் படுவதாகும். மந்திரயோகம், லயயோகம், ஹடயோகம், ராஜயோகம் ஆகிய யோக வகைகள் யாவும் ஆசனப்பயிற்சியால் ஏற்படும் மன ஒருமையை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வனவே ஆகும். ஆசனப் பயிற்சி நம் உடம்பைச் சுகநிலைப்படுத்தி நமக்கு வயப்பட்டு நடக்குமாறு செய்யவல்லதாகும். நாம் நம் உடற்கூற்றினுக்கு ஏற்றதோர் ஆசனப் பயிற்சியை மேற்கொண்டு அதனை நன்கு வழிக்கொள்வது நன்றாம்.

வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வன் இவனெனத்
தருந்தண் முழவம் குழலும் இயம்ப
இருந்தின்பம் எய்துவர் ஈசன் அருளே.

—திருமந்திரம்.

# மூன்றும்நாள் பேருரைகள்

**தலைமையுரை :**

*பேராசிரியர்*

## திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்,

M. A., B. L., M. O. L.,

*அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.*

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களுடைய பொன்னார் திருவடிகளுக்கும், இங்கே குழுமியிருக்கின்ற அன்பர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வணக்கம். என்றும்போல் இன்றும் குருமகாசந்நிதானம், என்னைத் தடுத்தாண்டு, இந்த நல்ல கூட்டத்திலே பங்கு கொள்ளுமாறு ஆணையிட்டருளினார்கள். அந்தத் திருவருளுக்கு என்னுடைய நன்றி உரியதாகும்.

திருமந்திரத்தில் இந்த ஆண்டு எடுத்துக் கொண்ட பகுதி மிக இன்றியமையாத பகுதியாகும். இந்தக் காலத்திற்கும் ஏற்ற ஒரு பகுதியாகும். ஏதோ இந்திய நாட்டுச் சமயங்களும் தத்துவங்களும் உலகை அடியோடு மறந்துவிட்டு, ஏதோ வானத்திலே பறக்கின்றமாதிரி சிற்சில உண்மைகளைக் கற்பிக்கின்றன; அதனாலே போதிய பயன் இம்மையிலும் இல்லை, மறுமையிலும் இருப்பதாக நம்புவதற்கு இல்லை என்று புதிதாக நம் இந்து சமயங்களை ஆராயவருகின்ற பிற நாட்டு அறிஞர்கள் கருதுவது உண்டு. ஆனால், திருமந்திரத்திலே அடிப்படையாக முதலிலே வற்புறுத்தப்படுகின்ற உண்மை இந்த உடலை வளர்க்கவேண்டும் என்பது. உடலை அருள்காரணமாக வளர்க்க வேண்டும், ஆண்டவன் இங்கே கோயில்கொண்டிருக்கின்றான் என்ற ஒரு காரணத்தினாலே இந்த உடலை வளர்க்கவேண்டும், உடலின் உள்ளே அந்த ஆண்டவனை வளர்க்கின்றோமென்ற எண்ணத்தோடு இந்த உடலைப் பாதுகாக்கவேண்டும் என்ற அரிய குறிப்பு நமக்கு இங்கே புலப்படுகிறது.

இப்பொழுது பல பல்கலைக்கழகங்கள் அறிவை வளர்ப்பதோடு அந்த அறிவுவளர்வதற்கு நிலைக்களனாக இருக்கின்ற உடலை வளர்த்தல் வேண்டும் என்று வற்புறுத்துகின்றன. ‘உடல்வகைக் கல்வி’ என்று அதற்குப் பெரிய பட்டம் சூட்டியிருக்கிறார்கள். உடல் வளமாக இல்லாமற்போனால் மனவளம், அறிவுவளம் முதலியன எழுவதற்கில்லை என்ற உண்மையை அவர்கள் கண்டு, இப்படி அமைத்திருக்கின்றார்கள். இந்த உண்மையை நம்முடைய முன்னோர்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள். உடல் நோயில்லாமல் இருப்பதற்கு வகைசெய்து கொண்டால்தான் ஆண்டவனை எளிதாக நினைக்கமுடியும். ஆகவேதான், உடலைத் தூய்மையாக வைத்திருப்பதோடு தூய்மை பெருகுவதற்கு அது வளமாகவும் அமைதல் வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, உடல் ஏதோ புறக்கணிக்கத் தக்கது அன்று; நம் ஆண்டவன் கோயில் கொண்டிருக்கின்ற ஒரு தூய்மையான நிலையம்; இந்தக் கோயிலை வைத்துக்கொண்டுதான் அதனுள்ளே ஆண்டவனைக் கண்டு மகிழ்தல்வேண்டும்; அவனோடுகூடிக் குலாவுதல்வேண்டும் என்று அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அவர்கள் உணர்ந்த அந்த அனுபவத்தை நமக்குத் திருமந்திரத்திலே திருமூலர் அருளிச்செய்திருக்கிறார். உடலில் உள்ளத்தூய்மையும் தெய்வத் தன்மையும் வளரவேண்டுமானால் அதற்கு வேண்டிய சில வழிமுறைகளை அவர் கையாண்டிருக்கின்றார். அந்த உண்மைகளெல்லாங்கூட ஏதோ கனவுகண்டாற்போல, இக்காலத்தில்

மேலைநாட்டார் அறிந்து வருகின்றார்கள். ஆறு சக்கரம், அந்தச் சக்கரத்தை எல்லாம் பேதித்துக்கொண்டு குண்டலினி சக்தியை எழுப்பி, மேலே கிளப்பிவிட்டு, அங்கே காணக்கூடிய உண்மைகளை, அற்புதங்களை, இன்பத்தை அனுபவிக்கவேண்டும் என்று பேசுகின்றார்கள். இவற்றின் உண்மையை இன்னும் விளக்கமாக மேலைநாட்டார்கள் அறிந்தார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஆனால், நான் சொல்லியபடி ஏதோ கனவு கண்டாற்போல, இந்த உண்மைகளை அவர்கள் இப்பொழுதுதான் தடவிப் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இருட்டிலே தடவுவதுபோல அவர்கள் இந்த உண்மைகளைப் பற்றி ஆராய முற்பட்டிருக்கின்றார்கள்.

நம்முடைய உடம்பிலே இரத்தமண்டலம்போல நரம்புமண்டலமும் இருக்கிறது. இந்தச் சுவாசமண்டலம், இரத்தமண்டலம் இவற்றையெல்லாம் ஆள்கின்ற சக்தி அந்த நரம்புமண்டலத்திற்குண்டு. அந்த நரம்பு மண்டலத்தினுடைய சிறந்த ஒரு பகுதி நம்முடைய தலையில் இருக்கிறது. அந்த நரம்பு மண்டலத்தின் அடி, வீணாதண்டம்போல் இருக்கிற முதுகெலும்போடுகூட இணைந்து ஓடுகிறது என்றெல்லாம் அவர்கள் இப்பொழுது கண்டுபிடிக்கின்றார்கள். இது பழங் கதைதான். இருந்தாலுங்கூட அந்த நரம்பு மண்டலத்தில் சில நரம்பு முடிச்சுகள் இருப்பனவற்றையும், அவை அற்புதமான, வியத்தகு செயல்களையெல்லாம் செய்துவருகின்றன என்பதையும் அவர்கள் கண்டார்கள். அது நம்முடைய இருதயத்துடிப்பையுங்கூட ஆளுகின்றது. நம்முடைய உணவு செரிக்கின்ற அந்த நிலைமையையும் ஆளுகிறது. அதற்குமேலே நம்முடைய தூக்கநிலைமை, அங்கே காணும் கனவுநிலைமை, நினைவாற்றல் எல்லாவற்றையும் அது ஆளுகிறது. ஆனால், அந்நரம்புச் சக்தியை ஆளக்கூடிய ஒரு பெரிய ஆற்றல் நமக்கு வருமானால், நம் குழந்தைப் பருவத்தில் நடந்தது முதல் இன்று வருவனற்றை எல்லாம் நினைவுக்குக் கொண்டுவருதல் கூடும். அப்படியே நாம் புதிதாக அறிவனவற்றை எல்லாம் அறிந்து கொள்ளக்கூடும்.

நரம்புமண்டலங்கள், அவற்றிலே இருக்கின்ற பலப்பல முடிச்சுநிலைகள் இவற்றை ஆள்கின்ற திறன்வேண்டும். பல நூல்களை இப்பொழுது ஆங்கிலத்திலே அறிந்தவர்களும் எழுதுகிறார்கள். ஏமாற்றி ஏதோ புத்தகத்தை விற்றுப் பணம் சேர்ப்பதற்காகவும் எழுதுகிறார்கள். ஆனால், அறிஞர்கள் இவற்றைப்பற்றி ஆராய மேல்நாடுகளிலே-ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர்தல்வேண்டும். ஆகவே, இந்த ஷட்சக்கரங்களினுடைய அற்புதங்களை அவர்கள் ஆராயாமற் போனாலும் 'ஏதோ இருக்கிறது' என்று இப்பொழுதுதான் அந்த ஆராய்ச்சியிலே அவர்கள் தொடங்கியிருக்கின்றார்கள். இந்த ஷட்சக்கரங்களை எல்லாம் கைவரப்பெற்று, அங்கங்கே இருக்கும் அற்புதத் தெய்விக சக்திகளை வணங்கி வாழ்த்தி, அவற்றின் அருளைப்பெற்று, மேலே மேலே நம்முடைய சக்தி ஓங்குவதற்கு, முடிவாக இறைவனுடைய அருளைப் பெற்று, அந்த ஆனந்த நிலையை அடைவதற்குச் சொல்கின்ற வழிகளிலே முதலில் நம்மை நாம் கைவரப்பெற வேண்டும். இத்தனை அங்குலந்தான் மொத்தமாக ஒரு மனிதன் மூச்சுவிட வேண்டியது என்று இவர்கள் நம்முடைய நாட்டிலே சொல்லியிருக்கின்றார்கள். அத்தனையும் வீணாகச் செலவழிந்து போகாமல் அதனை நாம் ஒரு நியதியிலே அடக்கி ஆள்வோமானால், நீண்டநாள் வாழக்கூடும் என்றும் சொல்கிறார்கள்.

யோக சக்தியிலே பிராணாயாமத்தினுடைய உண்மையின் ஆழத்தை இன்னும் விளக்கிக் காட்டுவதற்கு இல்லை. அதை அப்படி விளக்கிக்காட்டும்நிலையிலே அதைக் கொண்டு வரவேண்டும் என்றுதான் விஞ்ஞானிகள் முயல்கிறார்கள். அந்த முயற்சி இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறது. ஆனால், நம்முடைய நாட்டிலே ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அந்த அறிவு பரந்து வந்தது மட்டுமல்ல, அனுபவத்திலுங்கூட பலர் அதனை அனுபவித்தும் வந்திருக்கின்றார்கள். இப்படி யோகம் முதலியவற்றைச் சொல்லுகிறபோதெல்லாம் மேல்நாட்டு அறிஞர்கள், மேல்நாட்டுத் தத்துவப்புலவர்கள்

நம்முடைய நாட்டைப்பற்றியும், நம்முடைய நாட்டு மதங்களைப்பற்றியும், நம்முடைய நாட்டின் தத்துவ ஆராய்ச்சியைப்பற்றியும் ஒரு குறை கூறுவதுண்டு.

கடவுள் அருள் வாய்த்தவனுக்கு அவனுடைய கரணங்கள் எல்லாம் பதிகரணங்கள்; பசுகரணங்கள் என்பதில்லை. அவன் செய்வதெல்லாம் ஈசுவரனுடைய செயல். 'தான்' என்பது அவனிடத்தில் இல்லை. அதனால் அவன் பேச்செல்லாம் ஆண்டவன் பேச்சு. அவனுடைய மூச்செல்லாம் ஆண்டவன் மூச்சு. அவனுடைய செயலெல்லாம் ஆண்டவன் செயல். அப்படிப்பட்டதொரு நிலையிலே அறம், மறம் என்பதில்லை. இது தான் செய்யவேண்டும். இதுதான் செய்யலாகாது என்று தன்னுடைய நிலைமையிலே, 'தான்' என்ற முனைப்பிலே அவன் ஒன்றும் செய்வது இல்லை. அந்த முனைப்பற்ற திருவருள் நிலையிலே அவன் நல்லது செய்தாலும் சிவப்பேறுதான், தீயது என்று மற்றவர்களுக்குத் தோன்றுவதைச் செய்தாலும் அதுவும் சிவனுடைய செயல்தான். சண்டேசுவர நாயனர் காலை வெட்டினர் என்று சொன்னல், அவர் வேண்டுமென்று கொலை செய்யவேண்டும் என்ற எண்ணத்தினலே செய்தவரல்ல. ஆண்டவன் திருவருளினல் நிகழ்ந்தது. அதனலேதான் "பாதகமே சோறு பற்றியவா தோள்நோக்கம்" என்ற அந்த அற்புதத்திலே தன்னையும் மறந்து நம்முடைய மணிவாசகப்பெருமான் கூத்து ஆடுகின்ருர். இந்தக் கதையை மேல்நாட்டார்கள் கேட்டால் புரிந்துகொள்ள முடியவில்லை. 'தர்மமே இல்லாத, பாவத்தையே கட்டிக்கொள்கிற சமயம், பாவத்தைப் பெரிதாகப் புகழ்கிற தத்துவ ஆராய்ச்சி' என்று நம்முடைய நாட்டு மதங்களையும் தத்துவங்களையும் இகழ்ந்துரைப்பது மேலை நாட்டாருக்கு ஒரு இயல்பாகவே போய்விட்டது. ஆனல், இந்நிலைக்குப் போவதற்கு முன்னே ஒவ்வொருவனும் கடைப்பிடிக்க வேண்டியவை இயமம், நியமம் முதலியன. இயமம், நியமம் என்பது தொடக்கம். இயமம், நியமம் என்ற இரண்டையும்விட்டு, யோகத்தை ஆறு அங்கங்களாகச் சொல்லுகின்ற கொள்கையாளர்களுங்கூட இந்தியாவில் உண்டு. ஆனல், திருமந்திரத்தில் சொல்லப்படுகிற அஷ்டாங்க யோகமான இயம நியமத்தை விட்டு, வெறும் ஷடாங்கமாக இருப்பதில்லை. பொறியடக்கம், புலனடக்கம், மன அடக்கம் என்பதையும் வற்புறுத்துகின்ருர். மனத்தைப் போனவாறு விட்டுவிடுவது அல்ல. மனத்தை முன்னே அடக்கவேண்டும். நல்ல வழியிலே, அஹிம்சை வழியிலே, குறள் சொன்ன வழியிலே போன ஒருவன்தான் இயம நியமத்திலே கைதேர்ந்தவன். தர்மத்தையே அடிப்படையாகக்கொண்டு மனிதன் மனத்தை அடக்கவேண்டும். கண் முதலிய புலன்களையும் பொறிகளையும் அடக்கவேண்டும். நல்ல வழியிலே இவற்றைத் திருப்ப வேண்டும்.

எல்லாவற்றையும் சொல்லுவதற்குமுன் நம் திருமூலர் 'பொறையுடைமை' என்று சொல்கிருர். இவர் பல்லியை உவமையாகச் சொல்கிருர். பல்லியின் காலிலே ஒரு சூனியம் இருக்கிறது. அந்தச் சூனியத்தை உண்டாக்கிக் கொண்டு அது பிடிக்கிறது. 'எல்லாம் எனக்கே' என்று வருகின்ற பற்றுள்ளம் வருமானல், மேலே இயமம் நியமம் கூடத் தோன்றுவது இல்லை. அந்தப் பற்று உள்ளத்தினலே என்னநேருகிறது? வேண்டியது வராமற்போனல் எரிச்சல், வெறுப்பு, கோபம் இவை. இஃதெல்லாம் ஒருவனுக்கு வரும். ஆகவே, முதல் தொடக்கம் பற்றை அடக்குவதுதான். அது எந்த வகையிலே வரவேண்டும் என்ருல், எவ்வளவு துன்பம் வந்தாலும் அதைப்பொறுத்துக்கொள்கின்ற நிலையிலே வரவேண்டும். அதைக் 'கமை' என்கிருர் நம் திருமந்திரக்காரர். ஆகவே, நமக்கு ஏதாவது ஆசை முதலியன வந்தாலும், அவற்றை அடக்கும்போது துன்பம் முதலியன வந்தாலும், அவற்றைப் பொறுத்துக்கொள்வது பொறையுடைமை.

தவம் என்று வள்ளுவர் சொல்கிருர். "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு" என்கிருர். இந்தப் பொறையைத்தான் பெரிய 'கமை' என்கிருர் திருமூலர். எனவே, இதனல் என்ன நமக்கு விளங்குகிறது என்ருல் இந்தியநாட்டிலே இருக்கின்ற எத்தகைய

சமயமானாலும், எந்தத் தத்துவ ஆராய்ச்சி முறையானாலும், இந்த இயம நியமங்களை இந்தப் பற்று அற்ற நிலைமையை இந்தத் தூய்மையான நிலைமையை வற்புறுத்தாமல் இருப்பதில்லை. ஆகவே 'தர்மத்தைப் புறக் கணிக்கின்றவர்கள்; பாவத்தைப் பாராட்டு கின்றவர்கள்' என்ற பழியானது நமக்கு ஒத்ததல்ல. அறியாமையினாலேதான் மற்ற வர்கள் புறங்கூறுகிறார்கள். அவர்கள் திரு மந்திரத்தில் இந்தப் பகுதியைப் படிப்பார்க ளானால் நன்கு விளங்கிக்கொள்ளமுடியும்.

இன்று பேச எடுத்துக்கொண்ட மூன்று தலைப்புகள் தற்கால உலகம் சிறிது சிறிதாக உணர்ந்து வருகின்ற சில உண்மைகள் ஆகும். எந்த எந்த உண்மைகளையெல்லாம் இருபதாவது நூற்றாண்டின் உண்மைகள் என்று பாராட்டுகின்றார்களோ அவையெல் லாம் திருமந்திரத்திலே மிகப்பழமையான உண்மைகளாகக்கூட இருக்கின்றன. திரு மூலர்போன்ற பெரியோர்கள் அனுபவித்து அறிந்த உண்மைகளாக நமக்கு இங்கே விளங்குகின்றன.

இந்த அனுபூதிப் பாடல்களாக இருக் கின்றவற்றையெல்லாம் படிக்க வருகின்ற வர்கள், அவற்றினுடைய மேலான சொற் றொடர்களிலே மட்டும் ஈடுபட்டு, பொருள் ஆழத்திலே போகமுடியாமல் வருந்துகிறார் கள். கடவுள் அனுபவம் சொல்லொணாது; மாற்ற மனம் கடந்து நிற்பது. அதைச் சொல்ல வருகிறவர்கள், அதை அனுபவித்த திருமூலர், மணிவாசகப் பெருமான், ஞான சம்பந்தர், நம்மாழ்வார் போன்றவர்கள். அந்த அனுபவத்திலே மூழ்கியிருந்து அதை அடக்கமாட்டாமல் அருள் பொங்கி வழிய, அவர்களின் அனுபவம் பாடலாகப் பொங்கி வழிகிறது. அந்த நிலையில், 'வானாகி, மண் ணாகி, ஒளியாகி, உண்மையுமாய், இன்மையு மாய்' என்று சொல்லுகிறார். 'உண்மையு மாய் இன்மையுமாய் எப்படி இருக்கமுடியும்? முரணாக இருக்கிறதே; உளறலாக இருக் கிறதே என்று தங்கள் அறிவிலே இருந்து சிலர் ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். இங்கு ஆராயவேண்டுவது நமக்கு விளங்கு கிறதா என்பதல்ல; பாடுகின்ற பெருமான், பாடுகின்ற புலவன், பாடுகின்ற ஞானி அனு பவித்த அனுபவம் என்ன? அந்த அனு பவம் நாம் அறிந்ததற்கு முரணாக இருக்கு மானால் நம்முடைய அறிவை, நாம் படித்த படிப்பை மாற்றிக்கொள்ளவேண்டும்.

1919-வது ஆண்டு வரையில் கடிகாரம் காட்டுகிற காலமும், கெஜக்கோல்கொண்டு அளக்கிற இடமும் வேறுவேறு என்று கருதி வந்தார்கள். சில சோதனைகளைச் செய்து பார்த்த ஐன்ஸ்டீன் என்பவருக்கு, சோதனை களிலே சிற்சில முட்டுப்பாடுகள் வந்தன. அப்பொழுது அவர் சொன்னார்: 'காலம் வேறு, இடம் வேறு என்று நாம் நினைத்துக் கொண்டிருந்தோம். அதனாலேதான் இந்தச் சோதனையெல்லாம் புரியவில்லை. ஆகையால் காலம் இடம் என்ற இரண்டையும் ஒன்று என்று கொண்டதால் இப்பொழுதுள்ள சோதனை அத்தனையும் விளங்கிவிட்டது' என்றார். அதுவரையில் படித்தபாடத்தைத் தப்பு என்று விட்டுவிட்டு, அனுபவத்தைக் கைப்பற்றினார் அவர்.

அதேமாதிரி, 'உண்மையும் இன்மையும் உளறல்' என்று நாம் படித்திருக்கிறோம் இத்தனை நாளாக. எப்படிக் காலமும் இட மும் ஐன்ஸ்டீனுக்கு ஒன்றாகிவிட்டதோ அது போல, அந்த அனுபவ நிலையிலே உண்மை யும் இன்மையும் உளறலாக அல்லாமல், ஒன்றாகிப்போகிறநிலை வருகிறது. ஆகவே அனுபவந்தான் நமக்கு முக்கியமே தவிர படித்த படிப்பு அல்ல. 'இந்த அனுபவம் உண்மையா என்று நீங்கள் பாருங்கள்' என்று இப்பொழுது விஞ்ஞானிகள்கூடச் சொல்லுகிறார்கள். இருபதாவது நூற்றாண் டிலே தங்களுடைய பழைய பாடத்தை அனு பவத்திற்கு ஒத்தாற்போல அவர்கள் பேச வந்திருக்கின்றார்கள். எனவே, 'உளறல்' என்று ஒதுக்கித் தள்ளுவதற்கில்லை.

மனிதன் முக்காலத்தைப் பற்றியும் கற் பனை செய்துதான் பார்க்கமுடியும். ஆனால், இப்பொழுது நம்முடைய சாஸ்திரக்காரார் கள் சொல்லுவதுபோல, சுட்டறிவு நிலையி லேயே இருக்கிறோம். நாம் எதைப் பார்க்கி றோமோ அதைத்தான் பார்த்துக்கொண்டு

இருப்போம். ஒவ்வொன்றையும் சுட்டிச் சுட்டி அறிகின்ற ஒரு சிற்றறிவு நிலையிலே நாம் இருக்கின்றோம். ஆனால் ஞானிகளோ, அனுபவத்தை அறிந்தவர்கள்; முற்றறிவு பெறுகிறார்கள். உலகம் முழுமையும் அண்ட சராசரங்கள் எல்லாவற்றையுமே ஒன்றாகப் பார்க்கின்ற ஒரு முற்றறிவு அனுபூதிமான்க ளுக்கு வருகிறது. ஆகவே, அந்த நிலையிலே என்ன நிகழும் என்று நமக்குத் தெரியாது. அதை விளக்குகிறார்கள் நம்முடைய அனு பூதிப் பெருமக்கள். நாம் இறந்த காலத் தையும் நிகழ்காலத்தையும் கற்பனை செய்து தான் பார்க்க வேண்டியிருக்கிறது ஆனால், அவற்றைக் காட்சியாகவே காணக்கூடிய ஒரு பேராற்றல் அனுபூதிப் பெருமக்களுக்கு இருக்கிறது. அதனால்தான் உண்மையும் இன்மையும் எல்லாம் அவனாக இருக்கின்ற, எல்லாம் ஒன்றாகத் திரண்டு பேரின்பப் பிழம்பாக இருக்கின்ற நிலையிலே, முழுமை யாக இருக்கிற நிலையிலே, எல்லாவற்றையும் அங்கே காணுகின்றார்கள். அப்படிப்பட்ட ஒருநிலை - அனுபவநிலை உண்டு என்பதை எப்படி அறிகிறோம்.

நம் இந்தியாவில்மட்டும் சொல்லியிருந் தால், அதைத் தள்ளிவிடலாம். இந்தியாவி லுள்ள அனுபூதிமான்கள் சொல்வதுபோ லவே அராபியநாட்டு அனுபூதிமான்களும், ஐரோப்பிய நாட்டு அனுபூதிமான்களும், சீனநாட்டு அனுபூதிமான்களும் பேசுகிறார் கள். பழங்காலத்து அனுபூதிமான்களும், இந்தக்காலத்து அனுபூதிமான்களும் பேசு கிறார்கள். எனவே அனுபூதிமான்களிடத் திலே இந்த ஒற்றுமையைப் பார்க்கும்போது அவர்கள் உளறவில்லை; ஏதோ ஒரு பேரனு பவத்தை, யோக சக்தியினாலேயும் ஞான சக்தி நிலையிலேயும் கைவரப்பெற்ற நிலை யிலே ஒரு அகண்டாகாரமாய் விளங்குகிற, அப்பாலுக்கப்பாலான, இன்னது என்று சொல்லமுடியாத, பேரின்பமான, பேரறிவு மயமான, ஒளிமயமான, என்றும் மாறாத, ஒரு நிலையை அவர்கள் கண்டு மகிழ்ந்து அதிலே மூழ்கிப் பாடுகிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கின்றது. பல அனுபவங்களைச் சொல்லும்போது, ஒன்றும் தெரியாத குழந்தைகள்போல இருக்கின்ற நமக்கு, கதைகள்போலவும், நாம் சொல்லிப் பாடுகிற பாடல்கள் போலவும், ஆடல்கள் போலவும் அவர்கள் பேசுகிறார்கள்.

பார்ப்பாரகத்திலே பாற்பசு ஐந்து உண்டு

என்று அவர் பாடும்போது ஏதோ கதை மாதிரி சொல்லுகின்றார். குழந்தைகள்கூட உணர்ந்துகொள்ளும் நிலையிலே, பெண்க ளெல்லாம் பாடி இன்புறக்கூடிய நிலையிலே அவர்கள் பாடிக்கொண்டு போகிறார்கள். அவர்களுடைய பேரருள் இருந்த நிலை அது. நம்முடைய மணிவாசகப்பெருமான் ஞானிக்குமட்டுமா பாடுகிறார்? ஏன்? பெண் குழந்தைகள் விளையாடும்போது பாடுகிற பாட்டுப்போலவே பாடுகிறார்; ஏன்? சொல்ல முடியாத ஒன்றை, குழந்தைகளும் சொல்லிச் சொல்லி ஆடிப்பாடவேண்டுமென்ற ஒரு பேரருளினாலே அவர்கள் அப்படிப் பாடி நமக்கு உண்மைகளை உணர்த்துகின்றார். இவற்றை அவர்கள் சொல்லுகிற பாஷை, அதற்கென்று எடுத்துக்கொள்கின்ற சொல் நடை இவையெல்லாம் அந்த அனுபவத்தை உணர்ந்தபோதுதான் - அந்த அருளின் ஆழத்தை உணர்ந்தபோதுதான் நமக்கு விளங்கும். குழந்தைகள் அறிவு, அனுபவம் பெருகப்பெருக ஒரே பொருள் ஆழமுடைய தாக, போய்க்கொண்டேயிருக்கிறது. அது போல, உலகத்திலே இருக்கும் தோற்றம்.

நம்முடைய திருநாவுக்கரசர் கயிலைக் காட்சியைக் கண்டுவந்தார். அதற்கு முன் என்ன கண்டார்? நம்மைப்போல, பசுவை யும் மாட்டையும் பார்த்திருக்கலாம்; பெண் யானையையும் ஆண் யானையையும் பார்த் திருக்கலாம்;பெட்டைக்கோழியையும் சேவற் கோழியையும் பார்த்திருக்கலாம். கயிலைக் காட்சி என்கிற சிவானுபவப்பேறு முழுவ தும் பெற்றபோதுங்கூட நம்மைப்போலத் தான் அவர் மாட்டையும் பசுவையும் பார்க் கிறார். ஆண் யானையையும் பெண் யானை யையும் பார்க்கிறார். ஆனால் அப்பொருள் கள் இப்பொழுது பேராழம் உடையனவாகி விட்டன. மாடுதான்; பசுதான்; ஆனால் "கண்டேன் அவர் திருப்பாதம்" என்கிறார். அங்கே அம்மையும் அப்பனுமாகக் கோயில்

கொண்டிருக்கின்ற சிறந்ததோர் அனுபவக் காட்சியை இன்று காண்கிறேன். அது வெறும் மாடும் அல்ல. அது வெறும் பசுவும் அல்ல. அந்த ஞானுனுபவம் பெற்றபோது, யோகசக்தியும் ஞானசக்தியும் மீதூர்ந்து பேரானந்த சிவானுபவம் பழுத்துக்கனிந்து இனிக்கின்றபோது, அந்தச் சிவம் எங்கும் தோன்றுகிறது. முன்புகண்ட காட்சியெல்லாம் சிவக்காட்சியாக மாறுகிறது. எல்லாம் அம்மையப்பனுகக் காட்சி அளிக்கின்ற ஒரு காட்சியைக் கண்டார். அதனுலேதான் 'மாதர்பிறைக்கண்ணியானை' என்னும் பதிகத்தைப் பாடி, தான் கண்ட கயிலைக்காட்சியின் அற்புதத்தை ஆழத்தை நமக்கெல்லாம் காட்டுகிருர். ஆகவே, உலகக்காட்சி மறைந்துபோவது இல்லை. பசுவும் தோன்றும்; மாடும் தோன்றும். ஆனுல், பசுவிற்குள்ளே அம்மை, மாட்டுக்குள்ளே அப்பன், பெண் யானைக்குள்ளே அம்மை, ஆண் யானைக்குள்ளே அப்பன். அருளும் அறிவும் ஆனந்தத்தாண்டவம் ஆடுகின்ற அற்புதக் கயிலைக் காட்சியை எங்கும் காணுகின்ருர். ஆகவே, அறிஞர்கள் அனுபூதி அடைகின்ற காலத்தில் நம்மைப் பாராமல் இருக்கிருர்கள் என்பது அல்ல. நம்மைப் போலவே பார்க்கிருர்கள். ஆனுல் அதிலே ஆழம் - அந்தப் பொருளின் நுட்பம் - பொருளின் உண்மை - மாறிவிடுகிறது. அதற்கென ஒருபாஷை. நமக்கு விளங்கக்கூடிய வகையிலே அவர்கள் எவ்வளவோ முயன்று பார்க்கிருர்கள். முயற்சியில் அந்த அருளின் பெருக்கினுலே பாட்டாக ஓடிவருகிறது. எனவே, இனிமேல் 'உளறல்' 'நம்முடைய அனுபவத்திற்கு ஒட்டாமை' என்றெல்லாம் பேசிப் பயன் இல்லை.

கடல்தண்ணீரை ஆழாக்கினுல் அளக்க முடியாது. அதுபோல இதையெல்லாம் உணரப் பேரறிவு வேண்டும். நம்முடைய அனுபவத்தை வைத்துக்கொண்டு இந்த அனுபூதி மகான்களுடைய அனுபவத்தை எடையிட்டோ, அளந்தோ பார்த்துப் பயன் இல்லை. அந்தப் பேரனுபவத்தை நமக்கு உணர்த்த வந்த அந்தப் பெருமகனுரின் அருளைத் தேக்கித்தேக்கி அவற்றை நம்ம தாக்க முயலவேண்டும். அதற்கு வழியும் சொல்கிருர். அந்த வழியைத்தான் மந்திரம் பலவித தந்திர சாஸ்திர சக்கரங்கள், முத்திரைகள் முதலியவையோடு இவற்றுக்கெல்லாம் அடிப்படையான யோக சக்தியைப் பெருக்கிக்கொள்ளக்கூடிய ஒரு நிலையைத் தான் இயமம், நியமம், ஆதனம் முதலின தெரிவிக்கின்றன. இவைகளைப்பற்றி மூன்று பெருமக்கள் பேசப்போகின்ருர்கள். அந்த அனுபவத்தை நமது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களுடைய திருவருளால் நாமெல்லாம் பெற்று உய்வோமாக.

மன்னு மலையோன் மதவா ரணத்தின்மேல்
இன்னிசை பாட இருந்தவர் ஆர்எனின்
முன்னியல் கால முதல்வனுர் நாமத்தைப்
பன்னினர் என்றே பாடறி வீரே.

— திருமந்திரம்.

'பிராணுயாமம்'

## திரு. மீ. ப. சோமு அவர்கள்,

சென்னை.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய திருவடிகளுக்கு என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். தலைவர் அவர்களுக்கும், இங்கே கூடியுள்ள பெரியோர்களுக்கும், அன்பர்களுக்கும் என் வணக்கத்தைச் செலுத்திக்கொள்கிறேன்.

இன்று நான் பேசவேண்டும் என்று பணித்துள்ளபொருள் பிராணுயாமம். இது, திருமந்திர நூலிலே மூன்ரும் தந்திரத்தில் ஐந்தாம் பகுதியாக அமைந்துளது. இந்த அதிகாரத்திலே பதினுன்கு திருமந்திரப் பாடல்கள் உள்ளன. இந்த அதிகாரத்திற்குள் செல்வதற்கு முன்னுல், இந்த அதிகாரத்தின் சிறப்பைப்பற்றி ஓர் உண்மையை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மற்ற ஞான நூல்களுக்கும் சித்தர்களின் ஞான நூல்களுக்கும் அடிப்படையிலே ஒரு வித்தியாசம் இருக்கிறது. இந்த உலகம் அநித்தியமானது, இந்த உடம்பு அநித்தியமானது என்ற கருத்துக்களை நம்முடைய தமிழ் நூல்கள் பலவற்றிலும் நாம் காணுகிருேம். இந்த அழிகின்ற உலகத்திலே அழிகின்ற இந்த உடலை அழியாதவாறு காப்பாற்றுவது எப்படி? என்ற அடிப்படையில் அமைந்ததுதான் சித்தர்களின் நூல்கள். இந்த உடம்பைக்கொண்டு நாம் செய்ய வேண்டிய மகத்தான காரியங்களோ பல உண்டு. எனவே, இந்த உடம்பை உதாசீனம் செய்யவேண்டாம்; காயசித்தி உபாயங்களைக் கற்று இந்த உடலினுல் ஆக வேண்டிய மகத்தான காரியங்களை நாம் செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே அமைந்ததுதான் சித்தர்களுடைய ஞான நூல்கள். சித்தர்களிலெல்லாம் பெரியசித்தர் திருமூலர். அவருடைய திருமந்திர நூலிலே இந்தப் 'பிராணுயாமம்' என்ற அதிகாரத்தில் இந்த அடிப்படை பேசப்படுகின்றது. எனவே, இந்த அதிகாரத்திற்கு ஒரு முக்கியம் ஏற்படுகிறது.

அமெரிக்கா தேசத்திலே அண்மையில் நடந்த ஒரு வரலாறு எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு வைத்தியர். அவர், நரம்பின் முடிச்சுக்களை எல்லாம் ஆராய்ந்ததோடு அல்லாமல், நாளங்கள், சுரப்பிகள் இவற்றையும் நன்ருக ஆராய்ந்த வல்லுநர். அவர் தீர்த்துவைக்காத நோயே இல்லை எனலாம். அப்படி ஒரு புகழ் அவருக்கு, அமெரிக்கா தேசத்திலே. ஒரு பெரிய தொழிற்சாலையிலே வைத்தியராக அவரை அமர்த்தினுர்கள். தொழிலாளர்களுக்கு வருகின்ற நோயையெல்லாம் ஆராய்ந்து மருந்து கொடுக்க வேண்டும் என்று பணித்து அவரை அங்கே நியமித்தார்கள். அவருக்குத் தெய்வ நம்பிக்கை கிடையாது. ஏனென்ருல், தன்னுடைய சாமர்த்தியத்தினுலும், தன்னுடைய மருந்துகளின் ஆற்றலினுலும் எந்த நோயையும் அவரால் தீர்க்கமுடிந்தது. எனவே, இந்த ஆற்றல்களுக்கு அப்பால் ஒரு சக்தி இருக்கிறது என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை. அவரும் ஒரு பெரிய விஞ்ஞானி. அதோடு அனுபவத்திலே வெற்றியைக் கண்டவர். மரணத்தை வெல்லக்கூடிய ஆற்றல் கூட தன்னுடைய மருந்துகளுக்கு உண்டு என்று நம்பியவர். அவர் அந்தத் தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்தார். வந்தால் தினந்தோறும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களைப் பரிசோதிக்கக்கூடிய அவசியம் நேர்ந்தது. ஏனென்ருல், தொழிற்சாலைக்குள்ளே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு என்ன நோய் வந்தாலும், அந்தத் தொழிற்சாலை வைத்தியர்தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும். எனவே, இவர் நாள்தோறும் தமது நோயாளிகளையெல்லாம் ஆராய்ந்தார். ஆராய்ந்து, குறிப்புக்கள் எழுதினுர். தொழிலாளியினுடைய வயது, அவனுக்கு நேர்ந்துள்ள நோய், அவனுடைய பழக்க வழக்கங்கள், அவன் குடும்பத்தில் பரம்பரையாக ஏதாவது நோய்கள் உண்டா? என்ற கேள்விகளையெல்லாம் கேட்டு, அவற்றை

யெல்லாம் குறிப்புப் புத்தகத்திலே எழுத ஆரம்பித்தார். அந்தந்த தொழிலாளிகட்கு, அந்தந்த நோய்களுக்கு உகந்தமுறையில் மருந்தையும் கொடுத்துவந்தார். 20, 25 ஆண்டுகள் இப்படியாக அவரது தொழில் நடந்தது. ஒருநாள் அவருக்குத் தோன்றியது ஒரு யோசனை.

ஐந்து தொழிலாளிகளுக்கு ஒரேவித நோய் இருந்தாலும், அந்த மருந்துகள் அந்த ஐந்து உடம்பிலும் செயல்படுகின்ற முறையில் சில மாறுபாடுகள் இருக்கின்றன; இந்த மாறுபாடுகளுக்கு என்ன காரணம்? என்று உடனே யோசனைசெய்ய ஆரம்பித்தார். அன்றுமுதல் அவர் சில புதிய புதிய கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார். தொழிலாளர்களை, காலையிலிருந்து, இரவு படுக்கும் வரையில் தினசரி வழக்கமான முறைகள் என்ன? என்று நோய்க்குப் புறம்பான பல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார். ஐந்து ஆண்டுகள் இப்படி ஆராய்ச்சி செய்தார். செய்தபிறகு, இந்த ஆராய்ச்சியின் பலனாக, அவருக்கு ஓர் உண்மை புலனாயிற்று. தொழிலாளிகளிலே எவர்கள் ஞாயிற்றுக்கிழமை தோறும் மாதாகோயிலுக்குச் செல்லுகின்றார்களோ அவர்களுக்கும், மாதாகோயிலுக்குச் செல்லாதவர்களுக்கும் உடல் அமைப்பிலும் மன அமைப்பிலும் ஒரு வேறுபாடு இருப்பதைக் கண்டார். யார்? அந்த அமெரிக்க தேசத்துப் புகழ்பெற்ற விஞ்ஞான நிபுணராகிய வைத்தியர். மேலும் நான்கு ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆராய்ச்சிசெய்தார். செய்து, ஈசுவரனிலும் தெய்வத்திலும் கோயிலிலும் நம்பிக்கையில்லாத அந்த வைத்தியர் ஒரு அழகான ஆங்கிலநூல் வெளியிட்டிருக்கிறார். "நான் சமயத்திற்கு மீண்ட கதை" என்று அந்த நூலுக்குப் பெயர்.

ஒருகாலத்தில் தெய்வ நம்பிக்கை இல்லாத நான் எப்படி மீண்டும் சமய உலகத்திற்கு, தெய்வவழிபாட்டுக்குத் திரும்பினேன் என்பதையே ஒரு தலைப்பாகக் கொடுத்தான் அந்தப் புத்தகத்திற்கு. அந்த நூலிலே ஏதேதோ முடிவுகள் சொல்கிறார். கடைசியாக, ஒன்று சொல்கிறார். அதுதான் நமக்கு முக்கியம். "நான் என்னுடைய நாற்பது ஆண்டு ஆராய்ச்சிகளின் பயனாகக் கண்ட முடிவு என்னவென்றால், ஞாயிற்றுக்கிழமை தோறும் மாதாகோயிலுக்குச் செல்லுகின்ற தொழிலாளியினுடைய முகத்திலே மற்றத் தொழிலாளிகளின் முகங்களில் காணாத ஒரு ஒளியைக் காண்கிறேன்" என்று அமெரிக்க தேசத்து அந்த விஞ்ஞானி சொல்லுகிறார். அதுமட்டுமல்ல, "உடலுக்கு மருந்து செய்கிற வேலையைவிட, அவர்களுடைய வழிபாடு செய்கிற வேலை பெரிதாயிருக்கிறது; மனத்திற்கும் உடலுக்கும் ஏதோ என்னால் கண்டுபிடிக்க முடியாத ஒருவிதத் தொடர்பு இருக்கிறது" என்று அந்த நூலிலே முடிவு கண்டிருக்கிறார் அந்த அமெரிக்க டாக்டர்.

பல நூறு ஆண்டுகட்கு முன்னாலேயே நம்முடைய நாட்டுப் பெரியவர்கள் இந்த உண்மைகளெல்லாம் கண்டார்கள் என்று தலைவர் அவர்கள் சொன்னார்கள். உடம்புக்கும் மனத்திற்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்னால் 'ஹிந்து' பத்திரிகையில் ஒரு அழகான கட்டுரை வந்திருந்தது. இருதயநோயை ஆராய்ந்த ஒரு பெரிய வைத்தியர், ஒரு அழகான கட்டுரை எழுதியிருந்தார். அவர் என்ன சொன்னார்? மூளை மனம் இந்த இரண்டும் ஒன்றல்ல என்பது தெரிகிறது. ஆனால் இவற்றுக்கு உள்ள தொடர்பு என்ன? இதை ஆராய்ந்தவர்கள் சித்தர்கள். சித்தர்களுடைய நூலே இந்த அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. மனம் என்றால் அது மூளையா? அல்லது மூளையினின்றும் வேறுபட்டதா? மின்சாரசக்தி இருக்கிறது. கண்ணுக்கு அது தெரிவதில்லை. ஆனால், எங்கிருந்தோ ஓர் இடத்திலிருந்து அது புறப்படுகிறது. அதுபோல மனம் என்கிற அருபமான சக்தியும், ஏதோ ஓர் இடத்திலிருந்துதான் புறப்பட வேண்டும். அதற்கு ஆணிவேர் எங்கோ இருக்கவேண்டும். அது எங்கே இருக்கின்றது? மூளையில் இருக்கின்றதா? அல்லது மூளைக்குப் புறம்பாக இருக்கிறதா? அது எந்த இடம்? இவற்றை ஆராய்ந்து கண்டவர்கள்தான் நம்முடைய சித்தர்கள்.

அவருடைய நூலின் அடிப்படையே, இந்த உடம்புக்குள் இருக்கும் தத்துவங்கள்,

சக்திகள், ஆகிய இவற்றினுடைய இயல்பு களைப் பற்றியதுதான். சித்தர்களுடைய தீட்சைமுறையிலே முதலாவது தீட்சையே மனம் என்ற இடத்தைக் காண்பதுதான். மனம் எங்கே இருக்கிறது? இந்தச் சரீரத் திலே. அதனுடைய ஆணிவேர் எங்கே இருக்கிறது? அதைக் கெல்லவேண்டும். இதுதான் ரகசிய தீட்சை; ஞான தீட்சையி னுடைய அடிப்படை. முதலாவது பாடம் இதுதான். மனம் எங்கே இருக்கின்றது? சிந்தித்துப் பார்க்கவேண்டும். மூளை என் பது அல்ல மனம். ஆனல் மனத்தினுடைய ஆணிவேர் எங்கே இருக்கிறது? சென்ற வாரம் அந்த நாளிதழிலே அந்த வைத்தியர் எழுதினர். மூளையினுடைய மத்திய பாகத் திற்கும் நம்முடைய சுவாசத்திற்கும் ஏதோ தொடர்பு இருக்கின்றது. மூளையினுடைய மத்திய பாகத்தின் அடித்தளத்திற்கும் மற்ற நாளங்களுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. இவைதான் ஒருவனை அறிவு உள்ளவனு? அல்லது அறிவு இல்லாதவனு? என்பதை நிர்ணயிக்கிறது என்று எழுதியிருக்கிருர்.

திருமூலர் இந்த உண்மையைச் சொல் லும்போது, தொண்ணூற்றுருறுவிதமான தத் துவங்கள் இந்த உடம்பில் இருக்கின்றன என்கிருர். அவற்றை மூன்றுவிதமாகப் பிரிக் கின்ருர். முதல் முப்பது, அடுத்து முப்பது, பிறகு முப்பத்தாறு.

பிரக்ஞையின்போது பல படிகள் இருக் கின்றன. வியாக்கிரம்: இப்பொழுது நாம் பேசுகிருேம். காதில்விழுகிறது. காரியங்கள் செய்கின்ருேம். தூங்குகின்றபோது என்ன ஆகிறது? என்ன நேர்ந்தது? இவை நமக் குக் கேட்பதில்லை, ஏதோ சில தத்துவங்கள் குறைந்திருக்கின்றன. அதனுல்தான் நமக்கு வெளியே நடப்பது கேட்பதில்லை. பிறகு தூங்குகிருேம். சொப்பனத்தில் ஏதேதோ கேட்கின்றது. இல்லாத பல விஷயங்கள் கேட்கின்றன. வெளியே ஒலிபெருக்கியிலே வருகிற சப்தம், தூங்கும்போது நம்முடைய செவியில் கேட்பது இல்லை. ஆனல் நிகழாத பேச்சுக்கள், ஏதேதோ காட்சிகள், சொப்ப னத்தில் கேட்கின்றன. இமை மூடியிருக் கிறது. வெளியேயுள்ள புறப்பொருள்கள் தெரிவது இல்லை. ஆனுல், சொப்பனத்தில் ஏதேதோ தெரிகிறது. இந்த ரகசியங்களை யெல்லாம் ஆராய்ந்தார்கள். இந்த ரகசியங் களிலெல்லாம் முக்கியமான ஒரு ரகசியம் பிராணுயாமம். மூச்சைக் கட்டுப்படுத்துவத ஞல் இந்த உடம்பிற்குள்ளே ஒரு பெரிய கிளர்ச்சியைச் செய்துவிடலாம். எதற்காகச் செய்யவேண்டும்? இந்த அழிகின்ற உடம்பு அழியாதவாறு சில மகத்தான காரியங்களைச் செய்யவேண்டும். அதற்குச் சாதாரண நிலை யிலேயுள்ள சாமானியமான உடம்பால் முடி வது இல்லை. ஒரு பெரிய மூட்டையைத் தூக்குவதற்கே நமக்குத் தெம்பு இருப்ப தில்லை. அப்படியானுல் ஏதேதோ மூட்டை களைச் சுமந்து என்ன என்னவோ காரியங் கள் நுட்பமான உலகத்தில் செய்யவேண்டி யிருக்கிறது. அந்தக் காரியங்களுக்கெல்லாம் இந்த உடம்பை ஆயத்தம் செய்வதற்காகப் பல பயிற்சிகள்வேண்டும் என்கிருர்.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நின்மலம் ஆக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

—திருமந்திரம்.

**' பிரத்தியாகாரம் '**

## திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், M. A.,

சென்னை.

யோகம் என்பது சித்த விருத்தியை நிரோதம் பண்ணுவது என்று பதஞ்சலி மாமுனிவர் தம் யோக சாத்திரத்தில் கூறினார். மனத்தை ஒருமைப்படுத்தி இறைவனுடைய திருவுருவத் தியானத்தில் ஈடுபடச் செய்து, எல்லாம் மறந்த சமாதி நிலையை அடைவதே யோகத்தின் இலட்சியமாகும். அதனை அடைய எட்டு வகையான படிகள் உள்ளன. இந்த யோகம் எட்டு அங்கங்களை உடைமையினால் அட்டாங்க யோகம் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். நற்குணங்கள், சீலங்கள் நிறைந்திருப்பது இயமம். வரையறையான பழக்கங்கள் உடையது நியமம். அதன் பின்பு உடம்பைச் சரிப்படுத்தித் தியானத்திற்கு ஏற்றபடி அமைவதற்கான பழக்கங்கள் வருகின்றன. மூன்றுவது ஆசனம். நல்லபடி அமர்ந்து பின்பு பிராணாயாமம் செய்து மனத்தை அலையாமல் நிற்க வைக்க வேண்டும். அதன் பிறகு வருவது பிரத்தியாகாரம். அதைப்பற்றி இங்கு இன்று பேசும்படியாக மகாசந்நிதானத்திடமிருந்து உத்தரவாகியிருக்கிறது. அவர்களுடைய திருவடியை வணங்கி, அன்பர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துப் பேசத்தொடங்குகிறேன்.

பிரத்தியாகாரம் என்பதைத் தமிழில் 'தொகைநிலை' என்று கூறுவார்கள்.

"பொறப்புணர் வெல்லாம் புலத்தின் வழாமை
ஒருவழிப் படுப்பது தொகைநிலையாமே"

என்பது ஒரு பழம் சூத்திரம். பிராணாயாமம் செய்து மனத்தை ஒருவழி நிறுத்த முயல்கின்றவனுக்கு அந்த மனம் பலகாலம் உண்டான பழக்கத்தால் நுகர் பொருளிலேயே செல்லாமல் ஒடுக்கி நிறுத்தும் பழக்கமே பிரத்தியாகாரமாகும். ஐந்து பொறிகளின் வழியாகத் தன்னுடைய அரசை நடத்தும் மனமானது அப்பொறிகளின் நுகர்ச்சியினாலே அமைந்த வாசனையால் அழுந்திக் கிடக்கிறது. அதனைத் திருப்பி ஒருமைப்பாடு உண்டாகச்செய்து இறைவனுடைய திருவுருவத் தியானத்தில் நிறுத்திப் பின்பு அதனை அடக்கவேண்டும். புறத்திலே மனம் போகாமல் உள்முகமாக நிறுத்தப் பழகவேண்டும். இதுதான் பிரத்தியாகாரம்.

முரட்டு மாடு பல இடங்களில் மேய்ந்து தன்னை உடையவனுக்குப் பயன் படாமல் இருக்கிறது. அதனையடக்கி, புறத்திலிருந்து இழுத்து வந்து, வீட்டில் நிறுத்திப் பின்பு பாலைக் கறக்கவேண்டும். நிறுத்துகின்ற செயல்போன்றதுதான் மனத்தைப் புறத்தே போகவொட்டாதபடி அகத்தே நிறுத்தும் பிரத்தியாகாரம் என்பது.

இந்த அங்கத்தைப்பற்றித் திருமூலர், பத்துத் திருமந்திரங்கள் சொல்லுகிறார். புறத்திலே உள்ள பொருள்களைக் கண்டு அவற்றை நுகர்ந்து அவற்றில் அழுந்திப் போன மனத்திற்கு வேறு ஒன்றைக்காணும்படி பழக்கவேண்டும். கருத்தை உள்ளே வாங்கி, அது மீறிச் செல்லச்செல்ல மீட்டும் மீட்டும் இழுத்துவைத்துப் பிரத்தியாகாரம் செய்தால் மனத்தினால் உண்டாகும் குணம் பல உண்டு. இறைவனை அதன்மீது ஏற்றி வைக்கும் அற்புதத்தையும் செய்துவிடலாம். நரியைப் பரியாக்கி அதன்மேல் ஏறி நடத்துகின்ற சித்தரைப்போலப் பிரபஞ்சக்காட்டில் திரியும் மனம் என்னும் நரியைக் கம்பீர நடைபோடும் குதிரைபோல ஆக்கி அதன் மேல் இறைவனை ஏற்றி வைத்துவிடலாம். பலமுறை தேடிக்கொண்டிருக்கின்ற எமது பெருமானை இந்தப் பிரத்தியாகாரப் பழக்கத்தினால் எந்த நாளிலும், எந்த இடத்திலும் கண்டு களிக்கலாம். இந்த உண்மையை முதல்பாட்டில் திருமூலர் அருளுகிறார்.

கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடில்
கொண்டு கொண்டுள்ளே குணம்பல
காணலாம்

பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே இருக்கலு மாமே.

இறைவன் நம்முடைய உடம்பின் ஆறு ஆதாரங்களிலே வெவ்வேறு திருவுருவத்தோடு இருக்கிறான். ஒவ்வோர் ஆதாரத்திலும் ஒவ்வொரு வகையான சக்கரம் இருக்கிறது. அந்த அந்த ஆதாரத்தில் வெவ்வேறு இதழ்களை உடைய கமலம் பொருந்தி இருக்கிறது. அவற்றைப் பற்றி மேலே பேசுகின்றார் திருமூலர். கொப்பூழுக்குக் கீழே பன்னிரண்டு விரல் அளவு சென்றால் மூலாதாரத்தை அடையலாம். அங்கே மூலாதாரக் கணபதி குடி கொண்டிருக்கிறார். இங்கே அமைந்த மந்திரம் நான்கு எழுத்தை உடையது. நாலிதழ்க்கமலம் அங்கு இருக்கிறது. அங்கே உச்சரிக்க வேண்டிய மந்திரத்தை அறிந்து உச்சரித்தால் நன்மை உண்டாகும். இதை ஒரு பாட்டில் சொல்லுகிறார்.

மூலாதாரத்திற்கு இரு விரல் மேலுள்ளது சுவாதிட்டானம். யோனிக்கு இருவிரல் ஆழத்தில் உள்ள ஆதாரம் இது. நாபிக்கு நால்விரல்கீழே உள்ள இடம் மணிபூரகம். யோனி மூலமாகிய சுவாதிட்டானத்தில் ஒரு கமலம் இருக்கிறது. அது ஆறு இதழ்களை உடையது. அங்கே திருமால் இருக்கிறார். வட்டமாகச் சுருண்டு கிடக்கும் குண்டலினி என்னும் சக்தி, நாகப்பாம்பு போல அவ்விடத்தில் இருக்கிறது. மூலாதாரத்தில் உள்ள அக்கினியை எழுப்பி, அக்குண்டலினி ஓடும்படிச் செய்து வாசி யோகத்தை நிறைவேற்றிக்கொள்ளவேண்டும்,

நாபிக்கும் கீழே, உள்ளே மணிபூரகச் சக்கரம் இருக்கிறது. அது பத்து எழுத்துக்களை உடைய பத்து இதழ்த்தாமரை வடிவமாக இருக்கிறது. அந்த இடத்தில் உருத்திர மூர்த்தி அமர்ந்திருக்கிறார்.

அடுத்தது இதயமாகிய அநாகத சக்கரம். அது நாசிக்கும் கீழே பன்னிரண்டு அங்குல தூரத்தில் உள்ளது. அங்கே மனத்தை நிறுத்திப் பிரத்தியாகாரம் செய்தால் மகா சித்திகளும், மகா யோகங்களும் வந்து கைகூடும். இந்த உடம்பு வச்சிர சரீரமாகநின்று பலகாலம் அழியாமல் இருக்கும். இந்த இதயத்தானமாகிய அநாகத சக்கரம் பன்னிரண்டு இதழ்த்தாமரை வடிவமாக உள்ளது. அங்கே பன்னிரண்டு எழுத்துக்கள் இருக்கின்றன. அந்தச்சக்கரத்தின் தெய்வமாக மகேசுவரர் விளங்குகிறார்.

அடுத்தது விசுத்தி என்னும் சக்கரம். அது கழுத்துத் தானத்தில் அமைந்தது, அங்கே சுத்த சத்துவ வடிவான சந்திர ரேகை ஒளி தோன்றும். அந்தத் தோற்றத்தினால் மிகச்சிறந்த ஆனந்தம் உண்டாகும். பதினாறு இதழ்க்கமல வடிவாய்ப் பதினாறு எழுத்துக்களை உடையதாக உள்ளது விசுத்திச் சக்கரம். அங்கே சதாசிவமூர்த்தி எழுந்தருளியிருக்கின்றார். அவருடைய திருமுடியில் சந்திரன் எப்பொழுதும் அமுதத்தைப் பொழிந்துகொண்டேயிருக்கிறது. அங்கே பிரத்தியாகாரம் செய்தால் அந்த அமுத தாரையை உண்டு ஆனந்த அனுபவம் அடையலாம்,

மூலாதாரத்தை அடைத்து, பிரம்மரந்திரமாகிய லட்சியத்தைக்கொண்டு கண்ணை விழித்தபடியே பிரத்தியாகாரம் செய்தால் ஆஞ்ஞா சக்கரத்தில் நிற்க முடியும். அது புருவநடுவிலிருப்பது. இரண்டு எழுத்துக்களைஉடைய ஈரிதழ்க்கமலவடிவாய் விளங்குவது ஆஞ்ஞாசக்கரம். அங்கே ஹாகினி என்னும் சக்தி எழுந்தருளி இருக்கிறாள்.

இவ்வாறு ஆறு ஆதாரங்களையும், அங்கங்கே பிரத்தியாகாரம் செய்யும் முறையையும் சொன்ன திருமூலர், மேலே இன்னும் சில உண்மைகளைச் சொல்கிறார். குதத்திற்கு மேலே இரு விரலும், கருவாய்க்குக் கீழே இருவிரலும் உள்ள மூலாதாரத்தில் சோதி வடிவாய் உள்ள இறைவனைத் தியானித்து மனத்தை நிறுத்த வல்லார்க்கு இறைவன் தோன்றி நம்முடன் கலந்து இன்பம் சேர்ப்பான். இறைவனைக் காண்பதற்குத் தடையாய் இருக்கிற உபாதியையும், இறைவனையும் வெவ்வேறு பிரித்துணர்ந்து, ஆன்மாவாகிய தன்னையும் நன்றாக உணர்ந்து, பின்பு உபாதியை மாய்த்து, ஆன்மாவை இறைவனோடு கரைத்துத் தியானம் செய்து பழகவேண்டும். இவ்வாறுசெய்யும்பழக்கமே பிரத்தியாகாரத்தின் பெருமை. தினந்தோறும் விடுகின்ற மூச்சை மனம் போனபடி

செலுத்தாமல், அளவாக உள்ளே இழுத்து அடக்கி, பின்பு அளவாக வெளிவிட்டால் உள்ளம் நிலைபெறும். இறைவனுடைய திருவுருவம் சலனமின்றித் தெளிவாக உள் மனதில் தோன்றும். இப்படிப் பிரத்தியா கார முறையிலே பழகினல் பிண்டமாகிய உடலுள் அண்டத்தைக் கண்டுவிடலாம். இருளாகிய அறியாமை போய், இறைவனை நாடும் சிந்தையைத் திண்மையாக நிறுத்தி உணர்ந்தால் அறியவேண்டிய காட்சியை அறிந்து கொள்ளலாம். மரணம் இல்லாத நிலை பெறலாம். இவ்வாறு பிரத்தியாகாரத்தைப் பற்றிய பலகருத்துக்களைச் சொல்லி முடிக்கிறார் திருமூலர்.

உடம்பினைப் பெற்ற மனிதன் அந்த உடம்பை அற்புதமான ஓர் இயந்திரமாகக் கொண்டு, அதிலுள்ள ஆதாரங்களில் நின்றிருக்கும் இறைவனுடைய பல்வேறு உருவங்களைத் தரிசித்து, மெல்ல மெல்ல மேல் ஏறிப் பிரம்மரந்திரத்தை அடைந்து உடம்பையும் தூய்மைப்படுத்தி, உள்ளத்தையும் கரைத்து உயிரை இறைவனோடு ஒன்றவிட்டு ஆனந்தப் பெருவாழ்வு அடையவேண்டும். அதற்கு உரிய அரிய பழக்கங்களை யோக முறைகளாக இந்த நாட்டில் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். வேறு எந்த நாட்டிலும் இத்தகைய அற்புதமுறை காணப்பெறுவது இல்லை. இதனை நமக்குத் தந்த யோக பரம்பரையில் சிறந்து நிற்பவர் திருமூல நாதர்.

திருமூலர் அருள் வாழ்க.

கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடில்
கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே இருக்கலும் ஆமே.

—திருமந்திரம்.

'தாரணை'

ஆதீன மகாவித்துவான்

## திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள்,

அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

சிவானுபூதிச்செல்வருடைய குருபூஜா மகோற்சவத்தைச் சிவானுபவத் திருநாளாகச் செய்யத் திருவருள்பாலித்து நடத்துவிக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவடிகட்கு வணக்கம்.

மெய்யன்பர்களே! பிராணாயாம பிரத்தியாகாரங்களைச் சிந்தித்தொழுகிய நாம் இப்போது தாரணையில் இருக்கிறோம். தாரணை தரித்தல் அல்லது தாங்குதல் எனப் பொருள்படும். நமக்குத் தரிக்கும்வன்மை உண்டா? இதனைப்பற்றிப் பேச இருக்கின்ற அடியேனுக்காவது தரிக்கும்வன்மையுண்டா என்று ஆராய்வதும் சிந்திக்கப்போகும் தாரணையைச் சித்தத்தில் தரிக்க வாய்ப்பாகும்.

நமது தாய், குழவியாய்ப் பாயில்கிடந்து கை கால்களை நீட்டி உதைத்துக்கொண்டு அழும்போது நமக்குத் தாரணைச்சத்தியை உண்டாக்குகிறாள். நாம் வயிற்றுப் பசியால் வெறுங்கூச்சலாகக் கத்தினோம் அல்லவா! அவள் அப்படிக் கத்தாதேயடா தம்பி! எதையாவது விரும்பிக் கேட்டு அழு; உனக்கு இப்போது இந்த நிலையில் வேண்டியது வயிற்றுக்குப் பால். இந்நிலையும் உனக்கு வரும். எளியமொழி; அடித்தொண்டையைக் கூட்டுவதனால் மட்டும் பிறக்கும் "ங்ங்ங்" என்ற மொழி; அதைச் சொல்லு. நாங்கள் அதைக் கொண்டு உனக்குப் பால் தேவை என்பதை அறிந்து கொள்ளுகிறோம் என்று அடிக்கடி ங்ங்ங் என்றும் பால் மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தாள். நாம் அதனைத் தாரணை செய்து கொண்டோமா? மறந்து மறந்து போனோம். நம் மனத்தில் அது தரிக்கவில்லை. தாய் விடாப்பிடியாய்க் கற்றுக் கொடுத்தாள். தாரணைச்சித்தி தொடங்கியது. நாலைந்து நாட்களில் 'குவா குவா' என்று நான்கு மாதம் அழுத நாம், அம்மா முகத்தைக் கண்டவுடன் ங்ங்ங் கேட்கத் தொடங்கினோம். பால் தவறாமல்கிடைத்தது.

இதைக் கண்டு மகிழ்ந்த தாய், ம்மா, அம்மா என்று தன்னைக் குறிக்கும் மொழியைக் கற்றுக் கொடுத்தாள். அதுவும் சில நாட்களில் சிந்தையில் தாரணையாகி வெறும் கூச்சலைவிட்டு, அம்மா அம்மா என்று அலறத் தொடங்கினோம்; ங்ங்ங் என்ற பால்தரு மந்திரம் அகன்றது. அம்மா என்ற பாலுதவும் பராசத்திமந்திரம் தாரணையாயிற்று.

பின், முகமறியக் கண்டுகொண்டபோது அம்மா, 'அப்பா' என்னும் பரம்பொருள் மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தாள். அப்பா பக்கத்து வந்ததும் அப்பா அப்பா என்றாள். நாமும் தாரணைச்சத்தி வளர்கின்றமையால் அம்மாவைக் கண்டால் அம்மா என்றும், அப்பாவைக் கண்டால் அப்பா என்றும் வேறுபாடு கண்டு தாரணைசெய்து அழைக்கத் தொடங்கினோம். அப்படியே படிப்படியாக அண்ணா, அக்கா முதலான மொழிகளும்; காக்கா, குருவி, கிளி, நாய், பசு முதலான மொழிகளும் அவற்றின் பொருள் வேறுபாடுகளும் மனத்தில் தாரணையாகி அவை அவைகளைக் கண்டபோது அந்தச் சொற்களும், அவ்வச் சொற்களைக் கேட்டபோது அவ்வப் பொருள்களும் தாரணையாய்ச் சிந்தைக்குப் புலப்பட்டன. இப்படி வளர்ந்த தாரணைப் பயிற்சி உலகமாய், உலகப் பொருள்களாய், பொறிபுலன்களாய் உணர்ச்சியாய்ப் பரந்து விரிந்து கிடந்தது. இதனால் விளைவன அறிகின்றகாலத்து இன்பம் போலத் தோன்றினாலும் பின்னர் துன்பம் பயப்பவாயின.

இந்த நிலையை உணர்ந்து நம்மீது இரக்கம் காட்டும் ஞானாசாரியன், விரிந்த தாரணையால் இவ்வுலகம் அனைத்தையும் தாங்கி வருந்தும் மனம் விரிந்த முறையே ஒடுங்கி ஒன்றிற்பற்றினால் அல்லது உருப்படாது என்று எண்ணினார். எல்லாம் ஒன்றாென்றாய் ஒடுங்குவதானால் எத்தனை

ஆண்டாகும். விரிகின்றபோது தூய்மையான உள்ளத்தில் தரித்து விரிந்தது. விடுகின்றபோது இலேசில்விடுமா. பற்றியதைப் பற்றி நிற்பதல்லவா மனவியல்பு. ஆகையால், விரைவில் விடுவிக்கும் உபாயம் என்ன என்று எண்ணினர். ஒரு நாள் என்னை அழைத்தார். ஒரு நாளைக்கு எத்தனை தரம் மூச்சுவிடுகிறாய் என்று தெரியுமா? என்றார். நான் யார் எண்ணிப் பார்த்தது என்றேன். நான் சொல்கிறேன் கேள்; இருபத்தோராயிரத்து எண்ணூற்றுறு தடவை மூச்சுவிடுகிறாய். வேறு கடினமான காரியங்கள் செய்தாயானால் இன்னும் வேகமாக மூச்சுவிடுகிறாய். நீ மூச்சுவிட மூச்சுவிட உன் ஆயுள் கழிந்துவிடுகிறாய், நீ சீக்கிரம் செத்துப் போவாய். நீண்டகாலம் வாழ வேண்டுமானால் நான் சொல்கிறபடி செய் என்று மூச்சு அடக்கும்முறையாகிய பிராணயாமத்தைக் கற்றுக்கொடுத்தார். எனக்குச் சாகாமல் வாழ ஆசை. அதனால் அதிற்பழகினேன். 'எரிகிறதை இழுத்தால் கொதிப்பது நிற்பதுபோல' மூச்சடக்கம் சித்திக்கச் சித்திக்க மனம் அடங்கி வந்தது. மனம் அடங்கிய நிலையே பிரத்தியாகாரம் என முற் பேசப்பட்டது. அடங்கிய மனம், ஐந்து நாழிகை வரையில் உச்சியாகிய ஆயிரம் இதழ்த்தாமரையில் ஒளிவடிவாகிய இறைவனிடமே ஒன்றியிருக்குமாகில் அதுவே தாரணையாம்.

கோணு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணுத்தன் டூடே வெளியுறத் தானேக்கிக்
காணுக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணுள் அடைக்கும் வழியது ஆமே.

அத்தகைய தாரணை பலநாள் சித்திக்குமானல் என்ன அடையாளங்கள் காணக்கூடும் என்பதைச் சிவயோக குருநாதராகிய திருமூலதேவர், உச்சிமுதல் உள்ளங்கால் வரை ஆனந்தநீர் பாயும்; அந்த மலர்ச் சோதியை அடையலாம் என்கிறார்.

மலையார் சிரத்திடை வானீர் அருவி
நிலையாரப் பாயும் நெடுநாடி யூடுபோய்ச்
சிலையார் பொதுவில் திருநடம் ஆடும்
தொலையாத ஆனந்தச் சோதி கண்டேனே.

நமது உச்சியில் இருக்கிறாள் மனிதனைத் தெய்வமாக மாற்றும் பராசத்தி. ஆகக்கீழே மூலாதாரத்தில் இருக்கிறான் அவள் கணவனாகிய மகேஸ்வரமூர்த்தி. அவனை எழுந்தருளச் செய்யவேண்டும். அவளைச் சந்திக்கச் செய்யவேண்டும். அவர்கள் இருவரும் சந்தித்தால் பாலன் ஆவான்.

மேலை நிலத்தினுள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே.

நீ நீண்டகாலம் எடுத்த தேகத்துடன் இன்பமாக வாழவேண்டுமா? வா. கடைவாசலைச் சாத்து; காற்றை மேலே எழுப்பு; ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருக்கும் கொக்குபோலச் சிவ ஒளியைச் சிந்தித்திரு.

எவ்வளவுக்கு எவ்வளவு வாய் அடைக்கிறாயோ அவ்வளவுக்கு அவ்வளவு உன் மனத்தில் செல்வம் பெருகும். வாய் மூடக் காற்று மண்டையை முட்டும்; உன் உடல் பள்ளியறை. அதற்கு ஏழு ஜன்னலும், இரண்டு வாசலும் உண்டு. அவற்றை அடைந்தால் இன்பம் பெருக என்றும் இருக்கலாம் என்கிறார்.

இந்த உபதேசங்களை உணர்ந்து பழகி வந்தால், மனம் பரஞ்சோதியினிடமே பதிந்திருக்கும். அதனால் உடலும் உயிரும் உறவாடி இன்பமயமாய்ப் பல ஆண்டு வாழும். பரமனைத் தரிசிக்கலாம் என்கின்றார் என்று குழந்தையில் தாயின் முகமாக உணர்ந்த தாரணை ஆசாரியன்மூலமாகச் சித்தாந்த தாரணையானது.

இதுகாறும் நாம் சிந்தித்தவாற்றல் தாரணை விரிந்துவிரிந்து உலகமானவாறும் ஒருகணத்தில் உபதேசவழி நின்று பிராணயாமம் செய்யச் சுருங்கித் தாரணையானவாறும் தாரணையில் நிலைக்கச் சிவச்சோதி தரிசனம் சித்திக்குமாறும் அதனால் அழியா உடலும் மாருத இன்பமும் எய்தலாம் என்பதும் விளக்கப்பெற்றன. வணக்கம்!

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை. —